## அணிந்துரை

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் திருக்குறள் தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்கும் கிடைக்கப்பெற்ற அரும் பொருளாகும். திருக்குறள் உலகப்பொதுமறை. தனிமனித வாழ்வியலையும், உலகப் பொது வாழ்வியலையும் பற்றி இயம்புகின்றது. இதன் காரணமாக உலகின் பல நாட்டவரும் விரும்பிப் படிக்கின்றனர்.

மனித வாழ்வியலுக்கு வேண்டிய கருத்துக்கள் அனைத்தையும் இரண்டு அடிகள் கொண்ட கவிதைகளாக அமைத்துத் தந்தவர் வள்ளுவர். இரண்டு அடிக் கவிதையானாலும் செறிவும் ஆழமும் அமைந்த நுண்ணிய கருத்துக்களைக் கொண்டது.

திருக்குறளுக்குக் காலத்துக்குக் காலம் பலர் உரை எழுதியுள்ளனர். பல்வேறு மொழிகளில் மொழிபெயர்த்துள்ளனர். திருக்குறளுக்குக் கவிதைகளும் கதைகளும் தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் வெளிவந்துள்ளன. இந்த வரிசையில் திரு. கே. வி. குணசேகரம் அவர்களின் பணி குறிப்பிடத்தக்கது. திருக்குறள் கருத்துக்களைச் சிறிய கதைகளினூடாக பதிவு செய்துள்ளார். இதுவரை 1030 குறள் பாக்களுக்குக் கதைகள் எழுதியுள்ளனர்.

இன்றைய உலகம் நவீன தொழில்நுட்ப சாதனங்களின் வளர்ச்சிப் பாதையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் திருக்குறள் பாக்களைக் கற்பதற்கும் அவற்றின் நுட்பமான கருத்துக்களை அறிவதற்கும் போதிய அவகாசம் கிடைப்பதில்லை. வேகமான வாழ்வியலுக்கு ஈடுகொடுக்கும் வகையிலும் நுட்பமான கருத்துக்களை அனைவரும் அறிந்து உணர வகை செய்தல் காலத்தின் தேவை. திரு.கே.வி. குணசேகரம் அவர்கள் காலத்தின் தேவையை உணர்ந்து திருக்குறளை சிறிய கதைகளாக்கித் தந்துள்ளார். கதைகளின் இறுதியில் குறட்பாக்களும் அவற்றிற்குரிய விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை குறள் பாக்களின் நுண்ணிய கருத்துக்களைக் கதை மூலம் விளங்கிக் கொள்வது இலகுவானதாகின்றது. கதைகளைப் படித்துச் சுவைப்பதன் மூலம் இறுதியில் வழங்கப்பட்டுள்ள குறள் பாக்களையும் மனதிலே பதிய வைப்பர்.

தன்னுடைய வாழ்வியல் அனுபவங்களையும், சமூக யாதார்த்தங்களையும் கதைக் கருவாக்கி கண் முன் நடமாடும் பாத்திரங்கள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். குறள்பாவின் பொருளும் நயமும் சிதைவுறாமல் மூன்று பக்கங்களுக்குள்ளேயே நின்று கதையை அமைத்துச் செல்லும் பாங்கு தனித்துவமானது. ஒவ்வொரு கதைகளும் தனித்தனியானவை. ஆனாலும் அவற்றிடையே ஒரு தொடர்ச்சியை மிகநுட்பமாக அமைத்துள்ளார். குறள் பாக்களின் அடியொற்றி கதைகளுக்குரிய தலைப்புக்களை வழங்கியுள்ளமை இன்னுமொரு சிறப்பு. இதற்கு ஒரு எடுத்துக்காட்டு தரலாம்.

“நுண்மான் நுழைபுலம் இல்லான் எழில் நலம்
மண்மான் புனைபாவை யற்று”

என்ற குறள் கதைக்கு ‘மண் பொம்மை’ எனத் தலைப்பிட்டுள்ளார். இவ்வாறே மற்றவையும் அமைகின்றன.

தமிழையும் தமிழரையும் உலகளவில் நிலைநிறுத்திய நூல்களில் ஒன்றாகத் திருக்குறள் அமைகின்றது. அதனாலே தான் பாரதி “வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு” என்று பாடினான். தமிழ் இலக்கியக் கருவூலமான திருக்குறள் மக்களுக்குச் சென்றடையும் வகையில் பணி செய்பவர்களுள் திரு. குணசேகரமும் ஒருவர். தமிழ் கூறும் நல்லுலகம் இவரின் தமிழ்ப் பணியைப் போற்றி நிற்கின்றது. இவரின் தமிழ்ப்பணி தொடர நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியை வேண்டி, நாமும் வாழ்த்துகின்றோம்.

செல்வி. செல்வ அம்பிகை நடராஜா,
விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாண பல்கலைக் கழகம்.
ஸ்ரீலங்கா.

நாவலரது கல்விப்பணியை நல்ல முறையில் செய்து முடித்துள்ளேன். அதன்பின் நாவலரது இலக்கிய, சமயப்பணியைகளைத் தொடர்கின்றேன். அதற்கு மக்களின் ஆதரவு என்றும் வேண்டும்.

எனது கல்விப் பணிக்கு உதவிய ஆசிரியர்கள் பலர். மாவட்ட மட்டத்திலும், மாகாண மட்டத்திலும், அகில இலங்கை மட்டத்திலும், ஆங்கில மொழியில் பல பரிசில்களைப் பெற்றுத்தந்தவர் திருமதி. M. J. S முத்துக்குமாரசாமி அவர்கள். தமிழ் மொழித் தினத்தில் மேற்கூறப்பட்ட மாவட்ட, மாகாணமட்டப் பரிசில்களைப் பெற்றுத் தந்தவர்கள் திருமதி. J. சற்குணபாலன், திருமதி க. பாஸ்கரநாதசர்மா ஆகியோர். விளையாட்டுத்துறையில் பல பரிசில்களைப் பெற்றுத் தந்தவர் திரு. இரா. மதியழகன். பெற்றோர் சார்பில் திரு. சந்திரலிங்கம். திரு. சிவதாசன் ஆகியோரின் உதவி அளப்பரியது. பாடசாலைக்கு மண் நிரப்பிய நிகழ்வில் இருவரது பங்களிப்பும் மறக்க முடியாதது.

பண உதவி செய்தோர் பலர். லயன் கவனர் எஸ். சிவானந்தன், லயன் டாட்டர் வை. தியாகராஜா, லயன் பி. அன்ரன் சில்வஸ்டர், பேராசிரியர் க. சூரியகுமாரன், செல்வி பு. முத்துக்குமாரசாமி போன்றோர் பல்லாயிரக் கணக்கில் பணம் உதவியோர். இவர்களை சிரந்தாழ்த்தி வணங்குகின்றேன்.

பதினாறு வருடகாலம் பாடசாலையின் முகாமைத்துவ உதவிபுரிந்து, பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவி, தற்பொழுது நாவலர் வித்தியாலயத்தின் அதிபராக நியமனம் பெற்றிருக்கும் திருமதி சாந்தினி வாகீசன் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

திருக்குறள் கதைகள் என்ற எனது நூலுக்கு ஆதரவு பெருகிவருவதை எண்ண மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. தழிழகத்திலும் இலங்கையிலும் உள்ள அறிஞர்கள் பலர் திருக்குறள் கதைகளைப் போற்றியுள்ளனர். அதற்குச் சான்றாக மணிமேகலைப் பிரசுரத்தின் பதிப்புரை விளங்குகிறது. பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ், பணிப்பாளர்,

ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம். பேராசிரியர் நா. சுப்பிரமணியன், பேராசிரியர், எஸ். சிவலிங்கராசா, தமிழ்துறைத் தலைவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புறநிலைப் பிரிவுத் தலைவர் டாக்டர் மா. வேதநாதன், கல்வியியல் கல்லூரி உபபீடாதிபதி, திரு. பா. தனபாலன் போன்றோரும், ஈழத்தின் தலைசிறந்த நாவலாசிரியர் செங்கை ஆழியான் அவர்களும் தந்த அணிந்துரைகள் சாட்சியாக மிளிர்கின்றன.

இக்கதைகளை நல்ல முறையில் கணினியில் பதிவு செய்து தந்த கந்தர்மடம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராஜ் கொம்பியூட்டர் பிறிண்டிங் சென்ருக்கும், கணனி வடிவமைப்புச் செய்து தந்த இலங்கையின் முதல்தர பதிப்பகமாக ஹரிஹணன் பிறிண்டேசுக்கும், அதன் உரிமையாளர் திரு. சி. ராஜ்குமார், கணனி விற்பனர் திரு. சுஜன் அவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன். இதை உலகெங்கும் பெரு விழாக்களில் வெளியீடு செய்து வரும் மணிமேகலைப் பிரசுரத்தினருக்கும், அதன் முகாமைப்பணிப்பாளர் திரு. ரவி தமிழ்வாணன் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

கே.வி. குணசேகரம்.
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்,
ஸ்ரீலங்கா.

### *ஆண்சிங்கம்*

செண்பகத்திடல் என்ற நாட்டை ஆண்ட குலசிங்கவர்மனின் வரலாற்றை எடுத்து வாசித்தான் கஜேந்திரன். சேனாதிராஜர் செண்பகத்திடல் நாட்டின் அரசவைப் புலவர். அரசனோடு எந்நாளும் அவையில் இருப்பதால் அரசனது பலம், பலவீனம் ஆகிய இரண்டையும் நன்கு அறிந்தவர். செண்பகத்திடல் நாட்டின் அரசன் குலசிங்கவர்மன் கொடுங்கோலன். தன்னைப் பற்றிய சிறு சிறு செய்திகளையும் பெரிய வரலாறு போலப் பாடுமாறு சேனாதிராஜாருக்குக் கட்டளையிடுவான். சேனாதிராஜர் கவிவல்லமை உடையவர். அவரது பாடல்களை மக்களும் அயல்நாட்டு மன்னர்களும் விரும்பிப் படிப்பார்கள். நிலப் பிரபுக்கள், குறுநில மன்னர்கள் அயல்நாட்டு அரசர்கள் சேனாதிராஜரைத் தமது அவைக்கு அழைத்து அவரைக் கவிபுனையச் சொல்வார்கள். அவர் புனையும் கவிதைகளை இரசித்துப் பரிசுகள் கொடுப்பார்கள். இது குலசிங்கவர்மனுக்குப் பிடிப்பதில்லை. இதனால் சேனாதிராசரை அழைத்துக் குலசிங்கவர்மன் சொன்னான்; ‘‘புலவரே நீர் எமது நாட்டவர். அத்துடன் எமது அவைப்புலவர். இந்நாட்டினது வரலாற்றை நல்ல முறையில் எழுதி எதிர்கால சந்ததியினரிடம் ஒப்படைக்க வேண்டியவர். அதை மறந்து நீர் பொருள் தேடும் ஆசையில் எனது எதிரிகளிடமெல்லாம் சென்று அவர்களைப் புகழ்ந்து பாடுகிறீர். இது இராஜத்துரோகமாகும். நீர் எனது அன்புக்குப் பாத்திரமானவர் என்பதால் உம்மை நான் மன்னித்து விடுகிறேன். இனிமேல் அரசவையை விட்டு நீர் எங்கும் செல்லக் கூடாது. குறுநில மன்னர்களையோ, வேற்று நாட்டு அரசர்களையோ புகழ்ந்து பாடக்கூடாது. உமக்குத் தேவையான பொருட்களைக் கொடுக்கும்படி நான் திறைசேரிக்குக் கட்டளையிடுகிறேன். அத்துடன் நீர் வல்லிபுரதேச மன்னன் வல்லிபுரமார்த்தாண்டனை இழிவு செய்து பாடுதல் வேண்டும்’’.

‘‘வல்லிபுர மன்னன் மிகவும் பலசாலி. சிறந்த வீரமுள்ள நாற்படைகளை உடையவன். அவனது நாட்டு மக்கள் உயர்ந்த பண்புகளை உடையவர்கள். மன்னனின் சொல்லுக்காக எதையும் செய்வார்கள். மண்ணுக்காக உயிரை விடத் தயங்காத மக்கள் பலர் அந்நாட்டில் வாழ்கிறார்கள். மக்களே சிறந்த போர் வீரர்களாக இருக்கும் போது, போர் வீரர்கள் எப்படி இருப்பார்கள். என்பதைத் தாங்கள் சற்றுச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். அங்கு குளங்களும் கிணறுகளும் நீர்நிலைகளும் குறைவின்றியிருப்பதால் உணவுக்குப் பஞ்சமில்லை. பத்து ஆண்டுகள் தொடர்ந்து போர் நடைபெற்றாலும் அங்கு உணவுக்குப் பஞ்சமேற்படாது. அமைச்சர்கள் புலமைமிக்கவர்கள். இப்பொழுது நாம்

கதைத்துக் கொண்டிருப்பதையே அறிந்து கொள்ளும் வல்லமை உள்ளவர்கள். அத்துடன் மன்னனான வல்லிபுரமார்த்தாண்டன் அந் நாட்டின் வாழும் கற்றவர்களை மதிப்பவன். அவர்களின் ஆலோசனைகளைக் கேட்பவன். உயர்ந்தவர்களிடம் நட்புப் பூண்டுள்ளவன். குறுநில மன்னர்களிடமிருந்து திறையாக எதையும் பெறாமல், தனது நாட்டின் வருமானத்தில் ஒரு பகுதியை அவர்களுக்கு வழங்குபவன். அத்துடன் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்பவன். அதனால் அவர்கள் எல்லோரும் அவனைத் தெய்வமாக மதிக்கின்றனர். அத்துடன் வல்லிபுரம் மிகவும் பாதுகாப்பு மிகுந்த நாடு. வல்லிபுர நாட்டுப் போர்வீரன் ஒருவனுக்கு எமது நாட்டில் உள்ள நூறுபோர்வீரர்கள் கூடச் சமமாக மாட்டார்கள். அப்படியிருக்க தாங்கள் அவர் மீது வீணாகக் கோபப்பட்டால் அழிவைத்தான் தேடிக் கொள்வீர்கள்'' என்றார் சேனாதிராஜர்.

சேனாதிராஜரது பேச்சின் உள்ளர்த்தம் குலசிங்கவர்மனுக்குப் புரிந்த போதும் அதைப் புரிந்து கொள்ளாதவன் போலச் சொன்னான்; ''புலவரே வீரம் என்பது ஒருவனது பரம்பரைச் சொத்தல்ல. எம்மிடமும் நீர் கூறிய சிறந்த படை, உயர்ந்த குடி மக்கள், போதியளவு உணவுப் பொருட்கள், புத்திக்கூர்மை மிக்க அமைச்சர்கள், உயர்ந்த கல்விமான்களுடைய நட்பு, பாதுகாப்புப் போன்ற ஆறு அங்கங்களும் உண்டு''

''மன்னருக்கு நான் எதுவும் சொல்லத் தேவையில்லை. மாற்றான் வலியறிந்து தான் நாம் அவனோடு பொருந்துதல் வேண்டும். மார்த்தாண்டன் உங்களுடன் நல்லுறவு வைத்துள்ளான். அதைக் கெடுக்க விரும்பாதீர்கள். அத்துடன் மார்த்தாண்டன் மிகவும் நல்லவன்; பலசாலி; மக்களில் பேரன்பு பூண்டவன் அவனைப் பற்றித் தவறாகப் பாடினால் எனது நாவில் இருந்து நாமகள் விலகிச் சென்று விடுவாள். அதனால் எனக்குக் கேடும் தீமையும் உண்டாகும். அத்துடன் மார்த்தாண்டன் எனது நண்பன். அவனைப் பற்றி இகழ்ந்து பாட என்னால் முடியாது'' என்றார் சேனாதிராஜர்.

''புலவரே நன்றாக யோசித்துச் சொல்லும். வேண்டியளவு பொன்னும் பொருளும் திரவியமும் அள்ளித்தருகிறேன்.''

''பொன்னுக்கும் பொருளுக்கும் திரவியத்திற்கும் ஆசைப்பட்டவனல்ல நான்'' என்று எழுந்தார் சேனாதிராஜர்.

''புலவரே, இரண்டு தினங்கள் உமக்கு அவகாசம் தருகிறேன். யோசித்துச் சொல்லும்'' என்றான் குலசிங்கவர்மன்.

வீட்டுக்கு வந்த சேனாதிராஜர் தனது மகனை அழைத்து, அன்று அரசன் கூறியதைக் கூறினார். பின்; ''மூசிகா, குலசிங்கவர்மன் மிகவும் கொடியவன் என்று உனக்குத் தெரியும். வல்லிபுரமார்த்தாண்டனைப் பழித்துப் பாடுவதன் மூலம் அவன் என்னைப் பகைத்துக் கொள்வான். அத்துடன் பெரும் வீரனைக் கோளையென்று பிற்கால சந்ததியினரை நினைக்க வைக்கிறோம். இது துரோகமான செயல் ஆனால் நான் இதைச் செய்யாவிட்டால் என்னை அவன் கொன்று விடுவான்'' கவலைப்பட்டார் சேனாதிராஜர்.

''கவலைப்படாதீர்களப்பா நாளைக்கு அரச சபைக்குச் சென்று வல்லிபுரமார்த்தாண்டனை இழிவுபடுத்திப் பாடுவதாகக் குலசிங்கவர்மனுக்குக்

கூறுங்கள். நீங்கள் பாட மறுத்தால் அவன் உங்களைக் கைது செய்து பாதாளச் சிறையில் அடைத்து விடுவான். அதன் பின் வருந்துவதால் பிரயோசனமில்லை. துட்டனை நாம் புத்திக் கூர்மையால் தான் வெல்ல வேண்டும்'' என்றான் மூசிகன்.

பலமுள்ள படை, உயர்ந்த குடிமக்கள், தேவையானளவு உணவுப் பொருட்கள், சிறந்த அமைச்சர்கள், உயர்ந்தவர்களின் நட்பு, பலமான பாதுகாப்பு என்று ஆறு அங்கங்களை உடையவன் தான் அரசர்களுக்குள் ஆண் சிங்கத்தைப் போன்றவன். இந்த ஆறு அங்கங்களுள் ஒன்றையேனும் நிறைவாகப் பெற்றிராத குலசிங்கன் விரைவாக அழியப் போகிறான். அவனது அழிவு எனது கண்களுக்குத் தெரிகிறது'' என்றார் சேனாதிராஜர்.

''படைத்தளபதிகளைத் தனது நலனுக்காக அவரவர் விரும்பியது போலச் செயலாற்றவும், அவர்கள் குடிமக்களைக் காரணமின்றி வருத்தவும் விவசாயிகளிடமிருந்து அளவுக்கதிகமாகப் பொருட்களைக் கொள்ளையிடவும் அனுமதித்த குலசிங்கன் விரைவில் கொல்லப்படுவான்'' என்று கர்ஜித்தான் மூசிகன்.

''மூசிகா, தற்பொழுது குலசிங்கன் என்னைக் கண்காணிக்க ஒற்றர்களை அனுப்பியிருப்பான். எனவே கண்டபடி யாருடனும் கதைக்காதே. கதைப்பதை விடக் காரியமாற்றுவது தான் வீரனுக்கு அழகு'' என்றார் சேனாதிராஜர்.

**381. படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரன் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு**

வீரமான படை, நன்மக்கள், நிறைத்த உணவு,சிறந்த அமைச்சர்கள், நல்ல நண்பர்கள், பாதுகாப்பு மிக்க அரன் ஆகிய ஆறு அங்கங்களையும் உடையவனே ஆண் சிங்கம் போன்ற அரசனாவான்

## *சிறப்பான நான்கு*

மறுநாள் அரசவைக்குச் சென்ற சேனாதிராஜரை அரண்மனையிலேயே தங்கியிருந்து கவிபுனையும் படி கட்டளையிட்டான் குலசிங்கவர்மன்; ''புலவரே நீர் வீட்டில் இருந்து கவிபாட மாட்டீர். வீட்டில் இருந்து கவிபாடுவதைப் போல பாசாங்கு செய்வீரே தவிரக் கவிபாட மாட்டீர். என்னிலும் பார்க்க உமக்கு வல்லிபுரமார்த்தாண்டன் மீது தான் அன்பு அதிகம். அதனால் அவனை இழித்துப் பாட உமக்கு மனம் வராது. நீர் இங்கிருந்து பாடும் கவிதைகளை நான் தினமும் படித்து இன்புறலாம்''.

''மன்னா கலைஞர்கள் சுதந்திரமானவர்கள். அவர்களைச் சுதந்திரமாக விட்டால் தான் ஞானம் பிறக்கும். மயிலைக் கூண்டில் அடைத்து வைத்து நாட்டிய மாடச் சொன்னால் அது ஆடுமா? சோலைகளிலும் வயற்கரைகளிலும் ஆற்றங்கரைகளிலும் தான் கவிஞர்களுக்கு உற்சாகம் பிறக்கும். நான் செய்யக் கூடாத காரியத்தை அரசனின் கட்டளைக்காக ஏற்றுக் கொண்டுள்ளேன். வாக்குத் தவற மாட்டேன். என்னைச் சுதந்திரமாகக் கவி இயற்ற அனுமதித்தால் தான் நல்ல கவிதைகளை நீங்கள் எதிர்பார்க்க முடியும். மனமில்லாத இடத்தில் இருந்தால் அரசமாளிகையும் சிறைக்கூடம் தான்'' என்றார் சேனாதிராஜர்.

‘‘நீர் சொல்வதை என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. அரண்மனை நந்தவனத்தில் சென்று அமருங்கள். பூலோகத்தில் உள்ள அத்தனை பூ மரங்களையும் கொண்டு வந்து நாட்டியுள்ளேன். குளிர்மையான மரங்களோடு சேர்ந்த நீச்சல் தடாகங்கள் உள்ளன. நீர்ப்பூக்கள் மலர்ந்த பல குளங்கள் இருக்கின்றன. அங்கு ஏராளமான விதம் விதமான பறவைகள் வாழ்கின்றன. சொர்க்க புரியைப் போல ஒரு நந்தவனம் அரண்மனையுள் இருக்க, நீர் வேறெங்கோ அதைத் தேடிச் செல்கிறீர். நானும் அரசியும் உலாவி இன்பமாகப் பொழுதைக் களிக்கும் அந்த நந்தவனத்தில் எந்நேரமும் இருக்க நான் உமக்கு அனுமதியிளிக்கிறேன். அத்துடன் உம்முடன் கூடிக் குலாவ அழகிய அயல் நாட்டுப் பெண்களையும் அனுப்புகிறேன். பொற்கிண்ணத்தில் திராட்சை ரசமும், விதம் விதமான உணவு வகைகளும் உமது விருப்பத்திற்கேற்றபடி அனுப்பும் படி கட்டளையிடுகிறேன்’’ என்ற குலசிங்கவர்மன் பேச்சை நிறுத்தி விட்டுப் புலவரைப் பார்த்தான்.

சேனாதிராஜர் சில கணங்கள் பேசாமல் இருந்தார். அவரால் எதையும் சிந்திக்க முடியவில்லை. வல்லிபுரமார்த்தாண்டனை நினைத்துப் பார்த்தார். அவனது அழகான முகம் அவரது கண்களுக்குள்த் தோன்றியது. வல்லிபுரமார்த் தாண்டன் எதற்கும் அஞ்சமாட்டான். புலவர்களுக்கு மட்டுமன்றி அயல் நாடுகளில் இருந்து வந்து இரப்போர் மீதும் கருணை காட்டி அவர்களுக்குத் தேவையான பொருட்களை வழங்குவான். ஆயிரக்கணக்கான அயல் நாட்டவர்கள் அங்கு வந்து அவனிடம் நிலம் பெற்றும், பொருள் பெற்றும், தொழில் பெற்றும் வாழ்கிறார்கள். சேனாதிராஜர் அவனைச் சந்திக்கும் போதெல்லாம் சொல்வான்; ‘‘புலவரே நீர் அயல் நாட்டவரானாலும் எனது சிறந்த நண்பர். சிறந்த நண்பரான உம்மை நான் வற்புறுத்தக் கூடாது. விரும்பினால் நீர் உமது குடும்பத்தவர்களை அழைத்து வந்து எமது நாட்டில் குடியேறும். உமக்குத் தேவையான அத்தனை வசதிகளையும் நான் உமக்குச் செய்து தருகிறேன். எனது மனம் எந்நேரமும் உம்மையே நினைக்கிறது. எனக்கோ அல்லது எனது நாட்டு மக்களுக்கோ எந்தவிதமான குறைகளும் இல்லை. பெரும் அறிஞனான உம்முடைய தொடர்பை இழக்க என்னால் முடியவில்லை. இது எனது அன்புக்கட்டளை ஆறுதலாக இருந்து யோசித்துப் பாரும்’’. ‘‘முன்பே வல்லிபுரத்திற்குச் சென்றிருக்கலாம்’’ என்று நினைத்தார் சேனாதிராஜர். வல்லிபுரத்தில் எல்லாச் செல்வமும் நிறைந்திருந்தாலும் மார்த்தாண்டன் பொருள் தேடுவதில் ஊக்கமாகவே இருந்து வந்தது சேனாதிராஜருக்கு வியப்பைக் கொடுத்தது.

‘‘என்ன புலவரே யோசிக்கிறீர்?. இன்னும் ஏதாவது தேவையானால் சொல்லும்’’ என்றான் அரசன்.

‘‘என்னைச் சுதந்திரமாக இருந்து கவிபாட அனுமதித்தால் நல்லது. நான் எனது வீட்டில் மனைவி மக்களுடன் குதூகலித்திருப்பதையே பெரும் இன்பமாகக் கருதுகிறேன்’’. என்றார் சேனாதிராஜர்.

‘‘அப்படியானால் வீட்டாரை இங்கு அழைத்து வாரும். மிகவும் ஆடம்பரமான மாளிகையொன்றை உமக்கு ஒதுக்கித் தருகிறேன்’’.

‘‘மன்னா, நீங்கள் நான் கவிதை பாட மாட்டேன் என்று அச்சமடைகிறீர்கள். அத்துடன் வறியவனான எனக்கு, நான் விரும்பிய உதவியைச் செய்து தர மறுக்கிறீர்கள். நன்றாக யோசித்துப் பாருங்கள். கவிஞர்கள் தாம் விரும்பியபடி வாழ்ந்தால் தான் நல்ல இலக்கியங்களைப் படைப்பார்கள். கிளியைப்

பொற்கூண்டில் அடைத்துப் பொற்கிண்ணத்தில் பாலும் பழமும் வைத்தால் அதுமகிழுமா...? அது உணவு கிடைக்கா விட்டாலும் எங்கும் பறந்து திரிந்து சுதந்திரமாக உணவு தேடுவதையே விரும்பும். ஓர் அரசன் அச்சமில்லாதவனாகவும், வறியவனுக்கு உதவுபவனாகாவும், அறிவுள்ளவனாகவும், ஊக்கம் உள்ளவனாகவும் இருத்தல் வேண்டும். அப்படிப்பட்டவன் தான் சிறந்த அரசன். தயவு செய்து என்னை எனது போக்கில் விடுங்கள். ஆறு மாத காலத்துள் உங்களுக்கு நான் வல்லிபுரத்தானை இழிவுபடுத்திக் கவிதை படைத்துத் தருகிறேன்'' என்றார் சேனாதிராஜர்.

குலசிங்கன் சில கணங்கள் யோசித்தான்; ''அரசே ஏன் யோசிக்கிறீர்கள். நான் நாட்டை விட்டுச் செல்ல மாட்டேன். சிறந்த படையும் பலத்த பாதுகாப்பும் உள்ள உங்களது நாட்டை விட்டு வெளியேறுவது சுலபமான காரியமா?'' என்றார் சேனாதிராஜர்.

குலசிங்கனின் உதடுகள் விரிந்தன. முகம் பிரகாசித்தது; ''சரி புலவரே உம்மை நான் மதிக்கிறேன். நீர் சொன்னபடி செய்யும்'' என்றான் சேனாதிராஜரின் மனம் உவகையால் பூரித்தது.

**382. அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தற்கு இயல்பு.**

அஞ்சாமை,ஈகை, மிகுந்த அறிவு, ஊக்கமுடைமை என்ற நான்கும் குறைவுபடாதிருத்தலே சிறந்த அரசனின் பண்பாகும்.

***நீங்காதவை***

வீட்டுக்கு வந்த சேனாதிராஜரால் எதையும் சிந்திக்க முடியவில்லை. ஏட்டையும் எழுத்தாணியையும் எடுத்துக் கொண்டு சென்று, தான் வழமையாக இருந்து எழுதும் மகா கணபதி ஆலயத்திற்கு வந்தார். கோயிலின் வடக்கு வீதியில் நின்ற ஆலமரத்தின் கீழ்ச் சென்று அமர்ந்தார். செண்பக நாட்டின் முப்படையும் தங்கியிருந்து ஆறக்கூடியளவு தூரம் அதன் கிளைகள் வியாபித்துப் பரந்திருந்தன. பெரும் கிளைகளை விழுதுகள் பல தாங்கிக் கொண்டிருந்தன. மென்மையான தென்றல் காற்று அவரின் உடலை மெல்ல வருடிய போதும் அதன் குளிர்மை தெரியவில்லை. எதிரே கோயிலில் நிற்கும் நான்கு மயில்கள் வந்து நின்றன. அவர் தினமும் அம்மரநிழலில் வந்தமரும் போது ஏதாவதொரு தானியம் கொண்டு வருவார். தான் கொண்டு வந்த நெற் பொட்டலத்தைப் பிரித்தார். நான்கு மயில்களும் அவருக்கருகில் ஓடி வந்தன. ஆண்மயிலின் தோகையை மெல்ல வருடினார். ஆண்மயில் நெல்லைக் கொற்றாது சில கணங்கள் அவரை உற்றுப் பார்த்தது; ''என்ன பார்க்கிறாய்? சாப்பிடு'' என்றார் சேனாதிராஜர். பின்னால் ஏதோ உரசியது. திரும்பிப் பார்த்தார். கோயில் மான் அவரது முதுகைத் தேய்த்தபடி நின்றது. அதை இடது கையால் வருடிய படி தான் கொண்டு வந்த கரும்புத்துண்டை வலது கையால் எடுத்து நீட்டினார்.

மானின் வாயால் கரும்புச் சாறு ஒழுகியது. அது கரும்பைச் சுவைத்துச் சாப்பிடும் அழகை ஒரு கணம் மெய்மறந்து இரசித்தார். மனதில் எதுவும் இல்லாத ஒரு வெறுமை நிலை தோன்றியது. பிள்ளையார் சுழியைப் போட்டு விட்டு மனதுக்குள் மகா கணபதியை வேண்டினார். அவரது கண்களுக்குள் வல்லிபுர மார்த்தாண்டன் தோன்றிச் சிரித்தான்; ''புலவரே நீர் நான் கேட்ட போது

என்னுடன் வந்திருந்தால் உமக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்குமா? எனது நண்பரான உம்மால் என்னைப் பற்றி ஒரு வரி கூடக் கேவலமாக, உண்மைக்குப் புறம்பாக எழுத முடியாதென்று எனக்குத் தெரியும். அதனால் உம்மைக் காப்பாற்றும் பொறுப்பு எனக்கிருக்கிறது. ஆகையால் மகா கணபதியை வணங்கிக் கொண்டிரும். பயப்படாமல் தைரியமாக இரும்''.

''புலவரே...'' யாரோ அழைக்கும் சத்தம் கேட்டு திடுக்கிட்டுக் கண் விழித்தார் சேனாதிராஜர். அவரின் முன் இதுவரை அவர் காணாத இருவர் நின்றனர்.

''யார் நீங்கள்?'' என்று கேட்டார் சேனாதிராஜர்.

''உமக்குத் தெரிந்தவர்கள் தான், எங்கே எனது கண்களைப் பார்த்துச் சொல்லும் நான் யாரென்று'' வந்த ஒருவன் சொன்னான்.

சேனாதிராஜர் எழுந்து அவனது முகத்தைப் பார்த்தார். குறுந்தாடி வளர்த்து இடையில் வாளைச் செருகியிருந்த அவனை அவரால் அடையாளம் காண முடியவில்லை. அவன் சிரித்தான்; ''கண்களைப் பார்த்து இளம் பெண்களைப் பற்றித்தான் கவிபாடுவீர்களோ...?'' எங்கோ கேட்ட குரல். அடுத்த கணம் புலவர் திகைத்துப் போனார்; ''சேனாதிபதி''.

''குரலில் இருந்து என்னைக் கண்டு பிடித்து விட்டீர்கள். பயப்பட வேண்டாம். குலசிங்கனின் சேனாதிபதியாக இருக்கும் விஜயரகுநாதன் வந்திருப்பதைக் கண்டு பயப்படுகிறீர்களா...? நீங்கள் பயப்பட வேண்டாம். குலசிங்கனின் ஆட்சி இன்னும் சில தினங்களில் முடிந்து விடும். நீங்கள் வல்லிபுர மார்த்தாண்டனைப் பற்றி எழுதத் தேவையில்லை''.

சேனாதிராஜருக்குப் பயமாக இருந்தது. விஜயரகுநாதன் குலசிங்கனின் நம்பிக்கைகுரியவன். ''தன்னைச் சோதனை செய்வதற்காக வந்து நடிக்கிறான். என்றே அவர் நினைத்தார்; ''இல்லை இல்லை நான் எழுதத் தொடங்கி விட்டேன். இப்பொழுது ஓர் அருமையான கற்பனை எனது மனதில் எழுந்தது. எழுத முன்பு வந்து விட்டீர்கள். பாடிக்காட்டவா..''

''புலவரே, நீர் என்னைத் தவறாக நினைக்கிறீர். என்னுடன் வந்திருப்பவர் யாரென்று பாரும்'' சேனாதிராஜர் திரும்பி அவனைப் பார்த்தார். அவன் தனது கோலத்தைக் கலைத்தான். சேனாதிராஜர் திகைத்துத் திகிலடைந்து போனார்; ''இளவரசே நீங்களா?'' என்று அவரது உதடுகள் முணுமுணுத்தாலும் அவரால் தனது கண்களை நம்ப முடியவில்லை; ''எனது தந்தையார் நீங்கள் அஞ்சாமல் இருப்பதற்காக ஒரு மோதிரம் தந்தார்'' என்று கூறிய வல்லிபுரமார்த்தாண்டனின் மகன் சுந்தரசிங்கமார்த்தாண்டன் சேனாதிராஜரது வலது கையைப் பிடித்து அவரது மோதிர விரலில் அதை அணிந்தான்.

''புலவரே, காலம் தாழ்த்தாமல் விழிப்புடன் இருப்பது, கல்வி அறிவுடன் இருப்பது, மிகுந்த துணிவுடன் இருப்பது சிறந்த அரசர்களின் அணிகலமாகும். உங்களுக்குத் துன்பமேற்பட்டதை அறிந்த எனது தந்தையார் காலம் தாழ்த்தாமல் நன்கு ஆலோசித்துத் துணிவுடன் சில முடிவுகளை எடுத்துள்ளார். அஞ்சாமல் துணிவுடன் இருங்கள். காலம் தாழ்த்தாது அப்பா உங்களை மீட்பார்''

என்றான் சுந்தரசிங்க மார்த்தாண்டன். அவனது குரலில் கோபம் கொப்பளித்தது. கண்கள் சிவந்து உதடுகள் துடித்தன.

**383. தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன் ஆள் பவர்க்கு.**

காலம் தாழ்த்தாமை, கல்வியறிவுடைமை, துணிவு ஆகிய மூன்றும் அரசனிடம் நீங்காது இருத்தல் வேண்டும்.

## *சிறந்த அரசன்*

குலசிங்கவர்மனின் அரசசபையில் அமைச்சர்களும் சேனாதிபதியும் வீற்றிருந்தனர். அப்பொழுது வாயிற்காவலன் ஒருவன் உள்ளே வந்து பணிந்து நின்றான்.

‘‘என்ன விஷயம்’’ அதட்டினான் குலசிங்கன்.

‘‘அரசே வாசலில் வல்லிபுர நாட்டின் அரச தூதுவனொருவன் கையில் ஓலையுடன் வந்து நிற்கின்றான். நான் அதைக் கேட்டேன். தான் நேரில் உங்களைச் சந்தித்துக் கொடுக்க வேண்டும் என்கிறான்’’ என்றான் வாயில் காப்போன்.

‘‘அவனை உள்ளே விடு’’ என்றான் குலசிங்கன்.

‘‘சற்று நேரத்தில் செண்பக நாட்டு வீரர்கள் இருவருடன் ஓர் உயர்ந்த பலசாலியான வீரன் வந்து அரசனைப் பணிந்து விட்டுத் தான் கொண்டு வந்த செய்தியடங்கிய ஓலைச் சுருளை இரு கைகளாலும் நீட்டினான். அதைப் பெற்றுக் கொண்ட குலசிங்கவர்மன் சுருளுக்குள் இருந்த ஓலையை எடுத்து விரித்துப் படித்தான்.

‘‘பேரன்பு மிக்க செண்பகத்திடல் தேசத்தின் மன்னர் கௌரவ குலசிங்க வர்மன் அவர்கட்கு, வல்லிபுர மன்னன் வல்லிபுர மார்த்தாண்டன் எழுதிக் கொள்வது. ஒரு நாட்டின் மன்னன், ஆட்சி முறையில் அறம் தவறாது நீதியில்லாதவற்றை நீக்கி, வீரம் குறையாது மானத்தைப் போற்றல் வேண்டும். இந்த நடை முறையின் படி தாங்கள் இதுவரை காலமும் நடந்து வந்துள்ளீர்கள்.

சேனாதிராஜா் ஒரு பெரும் கல்விமான்; சிறந்த கவிஞர்; எனது ஆப்த நண்பர். அவரின் மனம் புண்படும்படியாகத் தாங்கள் நடந்து கொள்வதாக நான் எனது ஒற்றர்கள் மூலம் அறிந்து கொண்டேன். நல்ல அரசன், தனது ஆட்சியின் போது அறம் தவறாமல் நடந்து கொள்ளல் வேண்டும். அறமென்பது தான தர்மங்கள் செய்து இரப்போனது மனதை மகிழ்விப்பது மட்டுமல்ல. தன்னை அண்டியிருக்கும் கல்வியலாளர்கள், கவிஞர்கள், நண்பர்களது மனம் புண்படாமல் அவர்களுக்கு நல்வார்த்தைகள் கூறுவதும் அறத்திற்குட்பட்டதே. எனவே தயவு செய்து பெருங் கவிஞனான சேனாதிராஜரின் மனதைப் புண்படுத்தாதீர்கள்.

அத்துடன் அரசனொருவன் நீதியில்லாத செயல்களில் ஈடுபடக்கூடாது. தனது நாட்டில் நீதியில்லாத செயல்களேதாவது நடைபெற்றால் அதை அரசன் நீக்குதல்

வேண்டும். சேனாதிராஜர் உமது கட்டளையை நீதியில்லாதது எனக்கருதுவதால் தயவு செய்து அதை நீக்கவும்.

வீரமுள்ள அரசன் எதிரியைப் போர்க்களத்தில் சந்திக்க விரும்புவானேயல்லாமல் கவிஞர்களது உள்ளத்தில் சந்திக்க விரும்பமாட்டான். வீரனுக்கு அழகு துணிவு; துணிவான செயல்; மெலிந்தோரை வருத்தாமை. எனவே என்னில் ஏதாவது குறைகள் கண்டிருப்பின் அதைக் கற்றவர் மூலம் எனக்குத் தெரியப்படுத்தவும். அது தான் வீரர்களுக்கு அழகு, சிறந்த அரசன் ஒருவன் தனது மானத்தை உயிராகப் போற்றுவான். மானமுள்ள ஓர் அரசன் வாளுடன் மோதுவானே தவிர எழுத்தாணியுடன் மோத மாட்டான். ஏனெனில் ஆயிரம் வாளை விட ஓர் எழுத்தாணி பலம் மிக்கது; அரசனது மானத்தைக் கப்பலேற்றவல்லது; இன்று மட்டுமல்ல உலகம் உயிருடன் இருக்கும் வரை மானத்தைப் போக்கவல்லது. எனவே தயவு செய்து தங்கள் கட்டளையை நீக்கவும்.

இப்படிக்கு
அன்புள்ள
வல்லிபுரமார்த்தாண்டன்.

குலசிங்கவர்மனின் இரத்தம் கொதித்தது; ''இது எனது நாடு. இதை ஆளும் உரிமை எனக்கு மட்டும் தான் உண்டு. இதில் தலையிட வல்லிபுரத்தானுக்கு என்ன உரிமை உண்டு?''.

''அரசே, புலவர்ளை உண்மையைப் பாடச் சொல்வது தான் மரபு. தயவு செய்து மரபை மீறாதீர்கள்'' என்றார் இளம்பூரணர் என்ற புலவர்.

''ஏய் கிழட்டுப் புலவா, இதற்கு மேல் கதைத்தாயானால் அரசசபையிலேயே உனது தலையைத் துண்டித்து விடுவேன்''. என்ற குலசிங்கன் விஜயரகுநாதனின் பக்கம் திரும்பி; ''ரகுநாதா, சேனாதிராஜரைக் கண்காணிக்கச் சொன்னேன்''. என்று சொல்லும் போது விஜயரகுநாதன் குறுக்கிட்டுச் சொன்னான்; ''அரசே புலவர் காவியம் பாடத் தொடங்கி விட்டார். நேற்று ஒரு கவிதையைப் படித்துப் பார்த்தேன் மிகவும் பிரமாதமாக இருந்தது'' என்றான்.

குலசிங்கன் இறுமாப்புடன் சிரித்தான். பின்; ''வல்லிபுரத்தின் தூதுவனே! உமது மன்னரை உமது நாட்டின் விஷயங்களைக் கவனிக்கச் சொல்லும். எமது நாட்டின் பிரச்சினை எமக்குத் தெரியும்'' என்றான். சபை ஒரு கணம் பிரமித்தது.

**384. அறன் இழுக்காது அல்லவை நீக்கி மறன் இழுக்கா
மானம் உடையது அரசு.**

அறம் தவறாமல் நீதியில்லாதவர்களை நீக்கி, வீரம் குறையாது,மானத்தைப் போற்றுபவனே, சிறந்த அரசனாவான்.

***நல்ல அரசன்***

வல்லிபுரமார்த்தாண்டனது அரசசபையில் முதல் மந்திரி கஜேந்திர முதலியும் தலைமைச் சேனாதிபதி கஜானதேவரும் வல்லிபுரமார்த்தாண்டனுக்கு அருகே இருந்தனர்.

''அரசே எச்சரிக்கப்பட்ட எதிரி உங்களுக்கெதிராகச் சூழ்ச்சி செய்வதில் தீவிரமாக இருப்பான். அல்லது பக்கத்து அரசர்களின் துணையோடு எம்மைத் தாக்க முயல்வான். எனவே இனியும் தாமதிக்காது தாக்குதலுக்குத் தயாராதல் வேண்டும்'' என்றார் கஜானதேவர்.

''பலமான எதிரி தூரத்தில் இருந்தாலும் மாற்றானின் பலத்தை அழித்து விடுவான். குலசிங்கன் பலமானவன் அல்லன். ஆனால் புத்திசாதுரியம் மிக்கவன். பராக்கிரமத்தால் சாதிக்க முடியாததை உபாயத்தினால் செய்து முடித்து விடுவான். சேனாதிராஜர் மிகுந்த புலமை உள்ளவர். தங்களின் மீது பேரன்பு பூண்டவர். அதனால் தான் அவரை உங்களை இகழ்ந்து காவியம் பாடும் படி சொல்கிறான். அவர்பாடமாட்டார் என்று அவனுக்குத் தெரியும். பாடாவிட்டால் அவரைச் சிறையில் அடைப்பான் அல்லது சிரச்சேதம் செய்வான். இதன் மூலம் நாம் தம்மீது படையெடுப்போமென எதிர் பார்க்கிறான். அதனால் மேற்கொண்டு பேச்சு வார்த்தைகளில் ஈடுபடாது. உடனடியாக நாம் படையெடுக்க வேண்டும்'' என்றார் கஜேந்திர முதலி.

''பவளபுரியின் சேனாதிபதி சென்ற வாரம் செண்பகத்திடலுக்குச் சென்று குலசிங்க வர்மனைச் சந்தித்துள்ளான். இது நல்லதல்ல. பவளபுரிமன்னனுக்கு வெகு நாட்களாக எம்மீது பகையுண்டு. ஒப்புக்கு நட்புள்ளவனைப் போல நடிக்கிறான்'' என்றார் கஜானதேவர்.

வல்லிபுரமார்த்தாண்டன் சிங்காசனத்தில் இருந்து எழுந்து உலாவினான். முதல் மந்திரியும் தலைமைச் சேனாதிபதியும் அரசனைப் பார்த்துக் கொண்டு நின்றனர். அவன் சிங்காசனத்தில் இருந்து எழுந்து உலாவினால் முக்கியமானதொரு முடிவை எடுக்கப் போகிறான் என்று அவர்களுக்குத் தெரியும்.

சேனாதிராஜரைச் சாட்டாக வைத்து நாடகமாடுகிறான். எனவே முதலில் பவளபுரியைத் தாக்குவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். இதைப்பவளபுரி அரசன் எதிர் பார்க்க மாட்டான். அத்துடன் பவளபுரியைத் தாக்கினால் குலசிங்கன் பலவீனப்பட்டு விடுவான். எனவே நாளை அதிகாலை எமது படைகள் பவளபுரியைத் தாக்க வேண்டும்'' என்றான் வல்லிபுரமார்த்தாண்டன்.

ஐந்து தினங்கள் போர் உக்கிரமாக நடைபெற்றது. ஆறாவது நாள் பவளபுரி மன்னன் கைது செய்யப்பட்டான். பவளபுரி அரசனாக அந்நாட்டு சேனாதிபதி கனகராஜன், வல்லிபுர மாத்தாண்டனால் மூடிசூட்டப்பட்டான். அந்த நன்றிக்காகக் கனகராஜன் செண்பகத்திடல் மீது படையெடுத்தான். பவளபுரிப்படை தனது நாட்டைக் கைப்பற்ற முற்றுகையிட்டதை அறிந்த குலசிங்கவர்மன் தலைமறைவானான்.

பவளபுரியிலிருந்தும் செண்பகத்திடலில் இருந்தும் ஏராளமான திரவியங்கள் வல்லிபுரத்திற்குக் கொண்டு வரப்பட்டன.

அன்று அரசசபை கூடியது. மந்திரிகள் சேனாதிபதிகள், கல்விமான்கள் பலரும் அவையில் கூடியிருந்தனர்.

“நானும் தலைமைச் சேனாதிபதியும் செண்பகத்திடலைக் கைப்பற்றுமாறு ஆலோசனை கூறினோம். ஆனால் அரசர் தனது மதிநுட்பத்தால் பவளபுரியைத் தாக்கிக் கைப்பற்றுமாறு கூறினார். முதலில் எனக்கு மன்னரின் திட்டம் புரியவில்லை. பவளபுரியைக் கைப்பற்றிய பின்பு தான் புரிந்தது” என்றார் கஜானதேவர்.

“எதிர்பார்த்ததை விட நாம் மிகவும் இலகுவாக இரண்டு நாடுகளையும் கைப்பற்றி, ஏராளமான பொருள்களைத் தேடிக் கொண்டு வந்து திரவியசாலையை நிரப்பி விட்டோம். இவ்வளவு பொருள்கிடைக்கு மென்று நாம் எதிர் பார்க்கவில்லை” என்றார் கஜேந்திர முதலி.

“தேடிய பொருள்களைப் பாதுகாத்து மக்களுக்கும் பகிர்ந்து கொடுத்தல் வேண்டும். சம்பாதித்த பொருள்களை மக்களுக்குப் பகிர்ந்தளித்தலே அதைக் காப்பாற்றும் சிறந்த முறை. பவளபுரியிலும் செண்பகத்திடலிலும் கைப்பற்றிய பொருள்களில் ஒரு பகுதியை அந்நாட்டு மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுங்கள். அதன் மூலம் அம்மக்களின் நன்மதிப்பைப் பெறலாம். மக்கள் எப்பொழுதும் எமது பக்கம் இருந்தால் தான் அந்நாடுகளை ஆண்ட மன்னர் மீது அவர்களுக்குப் பற்றிராது. கிடைக்காத செல்வத்தைச் சம்பாதிக்க வேண்டும். சம்பாதித்ததைக் கவனமாகப் பாதுகாத்தல் வேண்டும். அவ்வாறு காப்பாற்றுவதை விருத்தி செய்தல் வேண்டும். விருத்தி செய்ததை மக்களுக்குப் பகிர்ந்தளித்தல் வேண்டும்” என்றான் வல்லிபுர மார்த்தாண்டன்.

**385. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்லது அரசு.**

பொருள் சேர்க்கும் வழி வகைகளைப் பெருக்குதல், சேர்த்த பொருட்களைப் பாதுகாத்தல், பாதுகாத்த பொருட்களைப் பாகுபாடின்றிப் பகிர்ந்தளித்தல், ஆகிய பண்புகளை உடையவனே சிறந்த அரசனாவான்.

### *உலகம் புகழும்*

வல்லிபுரமாத்தாண்டனின் அரன்மனைக்கு முன்பாகப் பவளபுரியின் மக்களும் செண்பகத்திடலின் மக்களும் கூடி நின்றனர். ஏராளமான மக்கள் கூடிநின்றமையால் பலத்த பாதுகாப்பு அரண்மனைக்குப் போடப்பட்டிருந்தது. அதிகாலையில் இருந்து மன்னன் இருநாட்டினதும் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்துக் கொண்டிருந்தான். இரண்டு நாடுகளையும் சேர்ந்த கல்விமான்களும், நிலச் சுவாந்தர்களும், உள்ளூர் அதிகாரிகளும், புலவர்களும், அறிஞர்களும் அரசசபையில் கூடியிருந்தனர். செண்பகத்திடல் நாட்டின் சேனாதிபதியான விஜயரகுராமன் அந்நாட்டின் அரசனாக முடிசூட்டப்பட்டான்.

அவனும் சேனாதிராஜரும் அவரது மகன் ஏரம்பனும் மற்றும் முக்கியஸ்தர்களும் இருந்தனர். பவளபுரியின் சார்பாக அந்நாட்டின் அரசன் கனகராஜனும் மந்திரி பிரதானிகளும், அறிஞர்களும் இருந்தனர். அவர்களுக்குச் சுவையான உணவு வகைகளும் பானங்களும் வழங்கப்பட்டன. வல்லிபுரமார்த்தாண்டன் காண்பதற்கு மிகவும் எளியவனாக இருந்தான். எதையும் மிகவும் இலகுவானதாக எண்ணிச் சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்தான்; “நீங்கள் எதற்கும் பயம் கொள்ளத் தேவையில்லை. எப்பொழுது ஒருவன் ஒரு

நாட்டின் அரசனாகிறானோ அப்பொழுதிலிருந்து அவன் மக்களின் கஷ்டங்களைப் பற்றியோசிப்பதிலேயே தனது கவனத்தைச் செலுத்த வேண்டும். அவனுக்கு அபிஷேகம் செய்யும் குடநீரோடு ஆபத்துக்கள் பலவும் சேர்ந்தே பொழியப்படுகின்றன. என்னைப் பொறுத்தவரை நெறிமுறைகளில் இருந்து தவறுகின்றவன் சொந்தக்காரனோ, நண்பனோ, மந்திரிபிரதானிகளோ, சிற்றரசனோ அல்லது ஆசிரியர்களோ யாராக இருந்தாலும் பொதுமக்களைப் போலவே தண்டிக்கப்படுவர். யாருக்காவது கேடு வருமென்று தெரிந்தால் அதை அவரிடம் நான் சொல்லுவேன். அது தான தர்மம். சேனாதிராஜா் எனது ஆத்ம நண்பர். அவருக்குக் கேடு செய்வதன் மூலம் குலசிங்கன் என்னைத் தாக்க முயன்றான். அதனால், நான் குலசிங்கனுக்கு அவரை விடுவிக்கும்படி செய்தி அனுப்பினேன். அவன் ஆணவமாகப் பேசினான். அவனது திமிரான பேச்சிலிருந்து சேனாதிராஜருக்கு அவன் பெருந்தீங்கிளைக்கப் போகிறான் என்று எனக்குத் தெரிந்தது. அதனால் செண்பகத்திடலின் அப்போதைய சேனாதிபதி விஜயரகுநாதனையும் வல்லிபுரநாட்டு இளவரசனையும் அனுப்பி சேனாதிராஜரது குடும்பத்தினரை எமது நாட்டிற்கு அழைப்பித்தேன். அந்த வேளையில் பவளபுரியின் மீது போர் தொடுக்கப்பட்டதால் அதை அறிந்து கொள்ளும் வாய்ப்புக் குலசிங்கனுக்கு இருக்கவில்லை. நாம் பவளபுரியைத் தாக்காது செண்பகத்திடலைத் தாக்கியிருந்தால் பவளபுரியின் படையில் ஒருபகுதி குலசிங்கனுக்கு உதவிக்கு வந்திருக்கும் மறுபகுதி வல்லிபுரத்தைத் தாக்கியிருக்கும். இரு நாட்டுப் படையினரும் எமது தாக்குதலை எதிர் பாராமையால் வெற்றி சுலபமாக எமக்குக் கிடைத்து விட்டது. ஒரு நாட்டின் செல்வம் மக்கள் தான். அவர்கள் ஒரு போதும் கஷ்டப்படாது இன்பமாக இருக்க நாம் வழிவகைகளைச் செய்தல் வேண்டும். அதற்கான பணிகளை நான் வகுத்துள்ளேன். அதன்படி செயற்படுங்கள்'' என்றான்.

சபை கலைந்ததும் பொது மக்களை அழைத்தான் வல்லிபுர மார்த்தாண்டன்; ''என் இனிய மக்களே உங்களுக்கு எந்தக் குறையும் வராது. உங்கள் நாட்டை எனது பிரதிநிதிகள் ஆண்டாலும் எனது கண்காணிப்பு எந்நேரமும் இருக்கும். உங்களின் நலன் ஒரு போதும் பாதிக்கப்பட மாட்டாது. உங்களது தேவைகள் உடனுக்குடன் ஆராயப்பட்டு உங்களது குறைகள் யாவும் நீக்கப்படும். நீங்கள் சட்டதிட்டங்களை மீறாமல் சுதந்திரமாக வாழலாம். உங்களது குறைகளைக் கேட்டுத் தீர்ப்பதற்காக வல்லிபுரத்தின் அரண்மனைக் கதவுகள் எந்நேரமும் திறந்திருக்கும்'' என்றான் வல்லிபுர மார்ததாண்டன்.

மக்கள் கலைந்து சென்றனர். அதன் பின் மக்களுக்கு எந்தக் குறைகளும் இருக்கவில்லை. நடுச் சாமவேளையில் கூடத் தன்னைச் சந்திக்க விரும்பி வந்தவர்களைச் சந்தித்து அவர்களின் குறை நிறைகளை ஆறுதலாகக் கேட்டு, அவர்களின் குறைகளைத் தீர்த்து வைத்தான் வல்லிபுரமார்த்தாண்டன். அதனால் மூன்று நாட்டு மக்களும் பெருமகிழ்வுடன் வாழ்ந்தனர். அயல்நாட்டவர்கள்; ''தாமும் அப்படி வாழ மாட்டோமா?'' என்று ஏங்கினர்.

**386. காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம்.**

பழகுவதற்கு எளியவனாகவும், கடுஞ் சொற்களைப் பேசாதவனாகவும் இருந்து ஆளும் அரசனின் நாட்டை உலகம் புகழும்.

## *கருதியவாறு அமையும்*

வல்லிபுரமார்த்தாண்டனது அரசசபைக்குப் பவளபுரியின் வணிகனான மணிசேகரன் வந்தான். அவனது முகம் சோகத்தால் கறுத்துச் சுருங்கியிருந்தது. வல்லிபுர மார்த்தாண்டன் மந்திரிமாருடனும் சேனாதிபதிகளுடனும் கலந்துரையாடிக் கொண்டிருந்ததால் வெளியே மக்கள் தங்குவதற்காகக் கட்டப்பட்டிருந்த மாளிகையில் அவன் அமர்ந்திருந்தான். அம்மாளிகை சகல வசதிகளையும் கொண்டது. அவனும் இன்னும் சிலரும் வந்த ஒழுங்கின் படி அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு முதலில் குடிப்பதற்குப் பானம் வழங்கப்பட்டது. அரசன் இரண்டு மணியாகியும் அரசசபைக்கு வராமையால் அங்கிருந்தவர்களுக்குச் சுவையான உணவு வகைகள் வழங்கப்பட்டன. அதை உண்ட பின் மணிசேகரன் சற்றுக் கண்ணயர்ந்தான்.

‘‘அரசர் சபைக்கு வந்து விட்டார் எழுந்து சென்று சந்தியுங்கள்’’ என்று சொல்லியவாறு மணி சேகரனைத் தட்டி எழுப்பினான் அரண்மனைச்சேவகன்.

சிங்காசனத்தில் கம்பீரமாக வீற்றிருந்த வல்லிபுர மார்ததாண்டனைப் பணிந்த மணிசேகரன்; ‘‘அடியேன் பவளபுரியின் வணிகன் மணிசேகரன்’’ என்றான்.

‘‘உம்மைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ளேன். ஆசனத்தில் அமரும்’’ என்றான் மார்த்தாண்டன்.

‘‘நன்றி அரசே’’ என்ற மணிசேகரன் சற்றுத் தயங்கினான். அவனது கண்கள் கலங்கின; ‘‘எமக்கு யாவும் தெரியும். உமது கப்பல் கவிழ்ந்தால் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான திரவியங்களை இழந்து விட்டீர். இப்பொழுது கடன்தொல்லையோடு கடன்காரரின் தொல்லையும் சேர்ந்திருக்கிறது. திரும்பவும் வாணிபம் செய்ய விரும்புகிறீர். பொருள் இல்லை. அப்படித்தானே’’ மார்த்தாண்டன் சிரித்தான்.

மணிசேகரன் அதிர்ந்து போனான். தனது வரலாறு முழுவதையும் தெரிந்து வைத்துள்ள அரசரின் மதி நுட்பத்தைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை; ‘‘மதிநுட்பமுள்ள மன்னா! நான் கூறாமல் எனக்கு நேர்ந்த துன்பங்களைக் கேள்விப்பட்டுள்ளீர்கள். அதை நினைக்க எனக்கு வியப்பாக உள்ளது’’ கண்கலங்கினான் மணிசேகரன்.

‘‘இயற்கையின் அனர்த்தத்தால் கோடீஸ்வரனும் ஏழையாகி விடுவன். நீர் பெரும் வர்த்தகர். நீதி நியாயமாக நடப்பவர். நாட்டின் மீதும் மக்களின் மீதும் மதிப்பும் மரியாதையும் கொண்டவர் என்பது எனக்குத் தெரியும். அதனால் உமக்குத் தேவையான உதவிகளை வழங்குகிறேன். நீர் தொழிலை ஆரம்பியும்’’ என்றான் மார்த்தாண்டன்.

‘‘நன்றி அரசே! மிகவும் நன்றி’’ என்று கூறி விட்டு எழுந்தான் மணிசேகரன்.

அடுத்துச் செண்பகத்திடலில் இருந்து ஒருவர் வந்திருந்தார்; ''அரசே நான் செண்பகத்திடலில் இருந்து வருகிறேன். நான் ஒரு போர்வீரன். எனது நாட்டிற்காகப் பல போர்க்களிலீடுபட்டு வெற்றியீட்டியுள்ளேன். இப்பொழுது போரினால் ஏற்பட்ட காயங்களின் காரணமாக என்னால் தொழில் செய்ய முடியவில்லை. முன்னைய அரசர் சிறிதளவு மாணியம் கொடுத்தார். அது பத்து நாட்களுக்குக் கூடப் போதாது. இப்பொழுது அதுவும் வழங்கப்படுவதில்லை. நானும் எனது குடும்பத்தினரும் பசியால் தவிக்கிறேன்'' அழுதார்.

''உமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுச் செல்லும். போர்வீரனான உமக்கு எல்லா வசதிகளும் அளிக்க ஏற்பாடு செய்கிறேன். உமது மனம் வாடினால் நாடு செழிக்காது'' என்றான். அவரின் முகம் மலர்ந்தது.

அடுத்ததாக பவளபுரியின் புலவர் ஒருவர் அவைக்கு வந்து வல்லிபுரமார்த்தாண்டனைப் புகழ்ந்து ஒரு செய்யுளைப் பாடினார்; ''மிகவும் அற்புதமான கவிதையைப் பாட பெரும்புலவரான தாண்டவராயரால் தான் முடியும். நீங்கள் தாண்டவராயர் தானே''

''ஆம் அரசே எப்படிக் கண்டு பிடித்தீர்கள்''

''உமது செய்யுள்கள் பலவற்றை நான் படித்துச் சுவைத்துள்ளேன். நீர் ஒரு காவியம் பாட எண்ணியுள்ளீர். தாராளமாகப் பாடலாம். மனிதனை மனிதனாக வாழ வைப்பவை கலை இலக்கியங்கள். அவை மனித மேம்பாட்டுக்குப் பெரிதும் உதவுவன. மக்களைத் துன்பங்களில் இருந்து விடுவித்து நாடு, இனம், உறவு எனப் பற்று வைக்கத் தூண்டுகின்றன. எதிர்காலச் சந்ததியினருக்கு நாம் வாழ்ந்த வாழ்க்கையை எடுத்துச் சொல்கின்றன. அதனால் போதியளவு பொருளை உமக்குத் தருகிறேன். நீர் விரும்பிய படி காவியத்தைப் பாடலாம்'' என்றான்.

புலவர் மகிழ்வின் உச்சியில் இருந்தார்; ''மன்னா! எனது மனதுள் இருந்து சதா அரித்துக் கொண்டிருக்கும் விஷயங்களை வெளியே சொல்ல முடியாது எனது வறுமை தடுத்தது. அதனால் எனது குடும்பத்தைச் சுமக்க முடியாது அல்லற்பட்டேன். இனி எனக்குக் கவலை இல்லை. இன்றிலிருந்து ஆறுமாத காலத்துக்குள் எனது காவியத்தைத் தங்களின் அவையில் சமர்ப்பிப்பேன். தங்களைச் சந்திப்பவர்களை அன்பாக வரவேற்று இனிய சொல் பேசி தக்கவர்களுக்கு வேண்டிய பொருட்களை வழங்கும் அரசனை எந்த எதிரியாலும் வெல்ல முடியாது. அவனுக்குப் புகழ் சேரும். அவனது விருப்பம் போல மக்கள் அமைவார்கள். வாழ்க மன்னா! நீ நூறாண்டு காலம் வாழ்ந்து மக்களின் நலன்களைப் போற்றி வாழ எல்லாம் வல்ல இறைவன் உனக்கு உறுதுணையாக இருப்பான்'' என்று வாழ்த்தினார்.

**387. இன்சொலால் ஈத்து அளிக்க வல்லாக்குத் தன் சொலால்**
**தான் கண் டனைத்து இவ் வுலகு**

மக்களோடு இன் சொல்பேசி, வேண்டிய உதவிகள் செய்யும் அரசனுக்குப் புகழ் சேர்வதோடு அவனது விருப்பப் படி ஆட்சியும் அமையும்.

### *தலைவன்*

வல்லிபுரமாாத்தாண்டனின் இரகசிய ஆலோசனை மண்டபத்தில் முதல் மந்திரி கஜேந்திர முதலியும் சேனாதிபதி கஜானதேவரும் அமர்ந்திருந்தனர். செண்பகத்திடலின் எல்லையில் உள்ள வல்லிபுர நாட்டின் கிராமங்களில் அடிக்கடி கொள்ளைகள் இடம்பெற்றன. யார் செய்கிறார்களென அறியாதளவிற்கு மிகவும் திட்டமிட்டு அக் கொள்ளைகள் நடைபெற்றன. பட்டத்து இளவரசியின் தம்பியான கணேசன் என்பவனின் தலைமையில் இயங்கும் படையணியை வல்லிபுரமார்த்தாண்டன் எல்லைப் புறக்காவலுக்கு நியமித்திருந்தான். மிகுந்த பலசாலியும் போர் நுட்பங்கள் அனைத்தையும் கற்றறிந்தவனான கணேசனது திறமையில் முழு நம்பிக்கை வைத்திருந்தான் வல்லிபுரமார்த்தாண்டன். மைத்துனன் மீது அதிக நம்பிக்கை வைத்திருக்கும் அரசனுக்கு எப்படி விஷயத்தை எடுத்துக் கூறுவது என்று நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார் கஜானதேவர்.

‘‘தேவரே செண்பகத்திடலின் எல்லையில் உள்ள எமது கிராமங்களில் இதுவரை காலமும் கொள்ளைகள் தான் நடைபெற்று வந்தன. ஆனால் சில தினங்களாக எமது எல்லைக் கிராமங்கள் தீயிடப்படுவதால் மக்கள் இடம் பெயர்ந்து கோயில்களிலும் ஆச்சிரமங்களிலும் மரநிழல்களிலும் தங்கியுள்ளனர். அவர்களுக்கு நாம் நட்ட ஈடும், நிவாரணங்களும் குறைவின்றி வழங்குகிறோம் ஆனால் அப்படிச் செய்பவர்களைக் கைது செய்து தண்டனை வழங்காததால் மக்கள் பயத்துடனும் பீதியுடனும் வாழ்கின்றனர். இதை உடனடியாக நிறுத்தியாக வேண்டும்’’.வல்லிபுரமார்த்தாண்டனின் குரல் கடுமையாக ஒலித்தது.

‘‘அரசே! இதை நிறுத்துவது சிரமமான செயலென்று நான் நினைக்கவில்லை. நீங்கள் அனுமதித்தால் உடனே செயற்பட நான் தயாராக இருக்கிறேன்’’ என்றார் கஜானதேவர்.

‘‘உமது தயக்கத்திற்கான காரணம் எனக்குப் புரியாததல்ல. நீதிமுறை செய்து குடிமக்களைக் காப்பாற்றாத மன்னவன் பேயை ஒத்தவன். மக்கள் மனம் மகிழும்படி அரசாள்பவன் கடவுளுக்குச் சமமானவன். எனவே உடனடியாகக் கணேசனைக் கைது செய்து சிரச்சேசதம் செய்யுங்கள்’’.

கஜேந்திர முதலியும் கஜானதேவரும் திகைத்து விட்டனர்; ‘‘தேவரே, கணக்கற்ற யாகங்கள் செய்தும், அனேக தானங்களை வழங்கியும், தவம் செய்தும் ஒருவன் அடையக் கூடிய சுவர்க்கத்தை, பாகுபாடின்றித் தீர்ப்பு வழங்கும் மன்னன் ஒரு கணத்தில் அடைந்து விடுவான். பட்டத்தரசியாரும் நானும் பாசத்துடன் வளர்ந்த கணேசன் இன்று துட்டர்களின் போதனையால் நாட்டிற்கும் விசுவாசமுள்ள மக்களுக்கும் துன்பஞ் செய்கிறான். சட்டத்தையும் ஒழுங்கையும் நீதியையும் நியாயத்தையும் காப்பாற்ற வேண்டுமானால் குற்றம் செய்பவன் தன் மைந்தனென்றாலும் மரணதண்டனை விதித்தே தீரவேண்டும்’’ வல்லிபுரமார்த்தாண்டனின் குரல் உறுதியாக ஒலித்தது.

கஜேந்திர முதலியும் கஜானதேவரும் எதுவும் பேசவில்லை; ‘‘தேவரே, ஆறு மாதங்களுக்கு முன்பே ஒற்றர்கள் மூலம் நான் அறிந்து கொண்டவற்றை உமக்குச் சொன்னேன். நாட்டில் குழப்பத்தை உண்டாக்கிக் குலசிங்கவர்மனோடு சேர்ந்து வல்லிபுரத்தைக் கைப்பற்றக் கணேசன் திட்டமிட்டான். செண்பகத்திடலை

நாம் கைப்பற்றியதும் நாட்டில் குழப்பத்தை விளைவித்து மக்கள் மத்தியில் எனக்கு கெட்ட பெயரை உண்டாக்க நினைத்தான் கணேசன். இனி அதை அனுமதிக்க முடியாது. நீர் சென்று நடவடிக்கை எடும்''.

மறுநாள் கணேசனது குற்றச்சாட்டுக்கள் அறிவிக்கப்பட்டு கணேசனுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. அன்று வல்லிபுரமார்த்தாண்டன் மாறுவேடம் பூண்டு தலைநகருக்குச் சிறிது தூரத்திலுள்ள கோயிலுக்குச் சென்றான். அவன் சென்ற போது பூசை முடிந்து விட்டது. மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று கணேசனுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தனர்; ''எமது அரசர் கடவுள். அவருக்கு விருப்பு வெறுப்பே இல்லை. கைக்குழந்தையாக இருக்கும் போதே கணேசன் அரசரின் வளர்ப்பு மகனானான். அப்பிடியிருந்தும் அவனைக் குற்றவாளியாகக் கருதி மன்னர் தண்டனை அளித்து விட்டார். நீதிமுறை தவறாது குடிகளைக் காப்பாற்றும் மன்னன் கடவுளாகவே கருதப்படுவான். மக்கள் அவனைத் தன்னிகரில்லாத் தலைவன் எனப் போற்றுவார்கள்'' என்றான் ஒருவன்.

வல்லிபுரமார்த்தாண்டனுக்கு அதைக் கேட்க மகிழ்ச்சியாக இருந்தது; ''அரசர் எமக்கு எந்தக் குறையும் வைப்பதில்லை. நமது குறைகளை நாம் நினைக்க அவர் தீர்த்து விடுவார். அவர் நெடுங்காலம் வாழ வேண்டும்'' என்றான் இன்னொருவன்.

**388. முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறை என்று வைக்கப்படும்.**

நீதி நெறி முறைகள் தவறாமல் ஆட்சி செய்யும் அரசனை, மக்கள் இறைவனின் இடத்தில் வைத்துப் போற்றுவார்கள்

### *தங்கும் உலகு*

இருள் மெல்ல மெல்ல கறுத்துக் கொண்டிருந்தது. வல்லிபுரமார்த்தாண்டன் கோயிலை விட்டு மெதுவாக எழுந்து நடக்க ஆரம்பித்தான். கோயிலின் சிறிது தூரத்தில் ஒரு மண்டபமும் அதன் அருகே ஒரு சந்தையும் இருந்தது. அச்சந்தை விடியும் வரையும் நடைபெறும். பொருட்களை வாங்குவோர் இரவு பன்னிரண்டு, ஒருமணிவரை சந்தைக்கு வருவார்கள். மண்டபத்துள் இரவு பகலாகச் சனக் கூட்டமாக இருக்கும். வயோதிபர்கள், வேலைகளில் இருந்து ஓய்வு பெற்றோர் அங்கு எந்நேரமும் கூடியிருந்து வம்பளப்பார்கள்.

வல்லிபுரமார்த்தாண்டன் இரவுக் கடையொன்றில் உணவு கட்டிக் கொண்டு வந்து மண்டபத்தில் இருந்து சாப்பிட்டான். அப்பொழுது கணநாதன் என்ற புலவர் ஒருவர் அரசனின் அருகில் வந்து அமர்ந்து; ''பெரியவரே, நீங்கள் யார்? ஊருக்குப் புதியவரா?'' என்று கேட்டார்.

மார்த்தாண்டனுக்குச் சிறிது அச்சமாக இருந்தது. தினமும் அவைக்கு வரும் அவர் தனது குரலை அடையாளம் கண்டு விடுவாரோ எனப்பயந்தான்; ''நான் அயலூரவன். வாணிபம் செய்து நட்டமடைந்து விட்டேன். அரசரைச் சந்தித்து அரண்மனையில் ஏதாவது வேலை கேட்டுப் பார்க்கப் போகிறேன். அரசர் எப்படி? நல்லவரா? உதவி செய்வாரா..?'' என்று கேட்டான்.

கணநாதன் சிரித்தார். பின்; ‘‘அரசரைப் பற்றி நன்றாகப் புழுகுதல் வேண்டும். நீர் அவரை எவ்வளவு உயர்த்திப் பேசுகிறீரோ அவ்வளவிற்கவ்வளவு உதவி செய்வார். அரசரின் அருகில் முதல் மந்திரியான கஜேந்திரமுதலி எந்த நேரமும் இருப்பார். அவரின் சொற்படி தான் அரசர் நடப்பார். அரசருக்குச் சிந்திக்கும் திறன் இல்லை. முதலி சொல்வதைத் தான் கேட்பார். அதை விடச் சேனாதிபதியான கஜானதேவர் கொடியவர். மிகவும் தந்திரசாலியான தேவர், அரசனுக்கு மைத்துனனைப் பற்றி இல்லாதது பொல்லாததுகள் யாவும் சொல்லி அவனைச் சிரச்சேதம் செய்வித்து விட்டார். சேனாதிபதி சொல்வதை ஆராய்வின்றி அரசர் செய்யலாமோ?’’.

வல்லிபுரமார்த்தாண்டனுக்குக் கோபம் வந்தது. அவன் யாருக்கும் தெரியாதவாறு ஒற்றர்கள் பலரை அனுப்பிச் செய்திகளைச் சேகரித்து, அவர்களின் செய்திகளைத் தொடுத்துப் பார்த்துத் தான் முடிவெடுத்தான். ஒரு நாள் அரசவைச் சமையல்காரனான லம்போதரன் அரசர் சாப்பிட்டு விட்டு ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் வேளையில் அங்கு பழரசத்துடன் வந்தான். அந்த நேரம் அரசி நீராடச் சென்று விட்டாள்.

‘‘அரசே’’ தயங்கினான் லம்போதரன்.

‘‘சொல்லு’’ மீண்டும் தயங்கினான்; ‘‘ஏதாவது பணம் தேவையா? இல்லை விடுமுறை தேவையா?’’ மிகவும் விசுவாசத்துடன் வேலை செய்யும் லம்போதரனைக் கனிவுடன் கேட்டார்.

‘‘இல்லை அரசே.... எனது மனதில் உள்ள சந்தேகத்தை தங்களின் மீதுள்ள விசுவாசத்தினால் சொல்லப் போகிறேன். அது தவறென்றால் எனக்குத் தண்டனை தரக் கூடாது’’ அவனது குரல் பிசிறியது.

‘‘கடுஞ் சொற்களால் கூட நான் ஏசமாட்டேன். பயமில்லாமல் சொல்’’.

‘‘அரசே பரம்பரைபரம்பரையாக எமது குடும்பம் அரசர்க்கு சமையல் வேலை செய்து வருகிறது. இதன் மூலம் ஒரு இறுக்கமான தொடர்பும் நம்பிக்கையும் இருக்கிறது. எனக்குத் தளபதி கணேசன் மீது சந்தேகமாக உள்ளது’’.

முன்பு அவரது ஒற்றர்கள் சொன்னதை லம்போதரன் சொன்னான். அதன் பின் அவன் கணேசனைக் கண்காணிக்க ஒற்றர்களை நியமித்தான்; ‘‘எப்படி இருந்தாலும் அரசர் செய்தது மகா தவறு. அரசர் ஆராயத் தவறி விட்டார். யாராவது அவரைப் புகழ்ந்தால் அளவில்லாமல் அள்ளிக் கொடுப்பார். நம்பிக்கையானவர்களைப் போல நடிப்பவர்களின் சொல்லையும் கேட்டு விடுவார். நான் பல தடவை அவரைப் புகழ்ந்து பொன்னும் மணியும் பெற்றுள்ளேன். அத்துடன் எனக்கு வேண்டாதவர்களைப் பற்றிப் புகாரும் இட்டுள்ளேன்’’.

வல்லிபுரமார்த்தாண்டனுக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது. கணநாதனைப் பிடித்துச் சிறையில் அடைக்க வேண்டும் என்ற நினைவு மேலோங்கியது; ‘‘அரசே! மனம் புண்படும்படியாகப் பேசுவோரைப் பொறுத்துக் கொள்ளும் பண்புடைய அரசனின் குடை நிழலில் உலகம் தங்கும்’’ என்று அவைக்கு வந்த

முதியவர் கூறிய வார்த்தைகள் அவனின் காதில் ஒலித்தன. பொறுமையுடன் அவ்விடத்தை விட்டுச் சென்றான் மார்த்தாண்டன்.

ஒருவாரம் கழிந்து அன்று அரசபைக்கு கணநாதன் வந்தார்; ''அரசே! தாங்கள் தருமப்பிரபு. தங்களின் நீதியான ஆட்சிக்குச் சாட்சியாக விளங்குவது கணேசனுக்குத் தாங்கள் கொடுத்த தண்டணை''.

மார்த்தாண்டன் முறுவலித்தான். தேவரும், முதலியும் சேர்ந்து சிரித்தனர்.

''புலவரே, வேலை செய்யாது சோம்பியிருந்து கொண்டு அரசனின் நன்கொடையில் வாழ்வது கேவலமானது. புலவர் என்று சொல்கிறீரே தவிர உருப்படியான எந்த ஒரு செய்யுளையும் நீர் பாடியதாகத் தெரியவில்லை. நல்லதொரு செய்யுளைப் பாடும். இல்லாவிட்டால் நிலம் தருகிறேன் வேளாண்மை செய்யும்'' என்றான் மார்த்தாண்டன்.

அரசன் அப்படிச் சொல்லானென எதிர்பாராத கணநாதன் திகைத்துப் போனார்.

### 389. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
### கவிகைக் கீழ்த் தங்கும் உலகு

குறை கூறுபவர்களின் சொற்களைக் கேட்டுப் பொறுத்துக் கொள்ளும் அரசனின் பண்பில் உலகம் தங்கியுள்ளது.

***விளக்கு***

''அரசே செண்பகத்திடல் நாட்டிற்குப் படையெடுத்துச் சென்ற போது எனது புத்திரர் இருவர் காயப்பட்டனர். அவர்களால் தற்பொழுது வேலை செய்ய முடியவில்லை...'' பெரியவர் ஒருவர் பேசிக் கொண்டிருக்கும் போது மார்த்தாண்டன் குறுக்கிட்டான்; ''தேவரே, அவர்களுக்கேன் உதவு தொகை வழங்கப்படவில்லை''.

தேவர் சொன்னார்; ''மாதா மாதம் உதவு தொகை வழங்கப்படுகிறது. பெரியவர் தற்பொழுது அவர்களால் வேலை செய்ய முடியவில்லையாம். மருத்துவ உதவி தேவையாம். மாணியமாக நெடுகப் பணம் பெற தாம் விரும்பவில்லை என்கிறார்''.

மார்த்தாண்டன் உருகிப்போனான். அவனால் பேசமுடியவில்லை. சிங்காசனத்திலிருந்து இறங்கி வந்து அப் பெரியவரைத் தழுவி முத்தமிட்டான்; ''பெரியவரே, உம்மைப் போன்றவர்களால் தான் நாடு சிறந்து விளங்குகிறது. மானியம் பெறுவதைக் கேவலமாகக் கருதக்கூடாது'' என்றவன் தேவரின் பக்கம் திரும்பி; ''தேவரே உதவி கோரி வந்த மக்களுக்குத் தேவையானவற்றை அறிந்து கொடுங்கள்'' என்றான்.

அன்று அரசசபைக்குப் பத்து விவசாயிகள் வந்திருந்தனர். அவர்கள் ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்குத் தலைமை தாங்கி வந்த சிவபூதணன் என்ற விவசாயி எழுந்து சொன்னான்; ''அரசே நாம் எல்லோரும்

ஜெயபுரத்தில் இருந் வந்துள்ளோம். எமது கிராமத்தில் உள்ள கிணறுகள் கோடை காலத்தில் வற்றிவிடுவதால் எம்மால் பயிர் செய்ய முடிவதில்லை. அத்துடன் நாம் ஏழைகள். மானியமாக எமக்கு விதைகளும் பசளையும் தந்துதவவேண்டும்''.

''உங்கள் கிராமத்துக் கிணறுகள் ஆழமாக்கப்படும். தேவையான விதை தாணியங்களும் பசளையும் பணமும் கொடுக்கும் படி கட்டளை இடுகிறேன்'' என்றான். அவர்கள் மகிழ்வுடன் விடைபெற்றுச் சென்றனர்.

காட்டின் கரையோரக் கிராமத்திலிருந்து சிலர் வந்திருந்தனர்; ''அரசே கடுங்கோடை நிலவுவதால் காட்டு மிருகங்கள் தண்ணீருக்காகக் கிராமத்துள் நுழைகின்றன. அவற்றின் அட்டகாசங்களைத் தாங்க முடியவில்லை. அவற்றை வேட்டையாட வீரர்களை அனுப்புங்கள்'' என்றனர்.

''நீரில்லாவிட்டால் மிருகங்கள் நாட்டுக்குள் நுழையத்தான் செய்யும். அறிவு படைத்த மனிதன் கூட தனது பற்றாக்குறையைத் தீர்க்கக் களவெடுக்கிறான். அறிவில்லாத சீவன்கள் என்ன செய்யும்?. முதலில் காட்டில் உள்ள விநாயகருக்கு மழை வேண்டிப் பூசை செய்ய ஏற்பாடு செய்யுங்கள். அத்துடன் காட்டிலுள்ள குளங்கள் யாவற்றையும் ஆளமாக்குங்கள். வாய்க்கால்களைத் துப்புரவு செய்யுங்கள். அது வரை மிருகங்களுக்குக் காட்டோரங்களில் கிணறுகள் வெட்டி பாத்திரங்களில் நீரை நிரப்பி விடுங்கள்'' என்றான் மார்த்தாண்டன்.

வந்தவர்கள் திகைத்து விட்டனர். சில கணங்கள் பேசமுடியாது தத்தளித்தனர். பின்; ''மக்கள் மீது கருணையுள்ள தாங்கள் மிருகங்களின் மீதும் கருணை வைத்துள்ளீர்கள். உங்கள் ஆட்சியில் நாங்கள் வாழ்வதைப் பாக்கியமாகக் கருதுகிறோம்'' என்றனர்.

சபையில் இருந்த புலவர் கணநாதன் திகைத்துப் போனார்; ''அரசே நான் தங்களிடம் வந்து நிறையப் பொருட்களைப் பெற்றுச் சென்ற போதும், பொருட்களைக் கொடுப்பது அரசனின் கடனென நினைத்து சில வேளைகளில் தங்களை இகழ்ந்தும் பேசியுள்ளேன். அது தவறு என்று இப்பொழுது தான் எனக்குப் புரிகிறது. செண்பகத்திடலின் அரசவைப் புலவர் சொல்வார்; ''கணநாதா, மார்த்தாண்டன் மகாவீரன் மட்டுமல்ல செங்கோல் தவறாதவன்; கொடைவள்ளல்; உயிர்களிடத்து அருள்மிகுந்தவன்; தளர்ந்த குடிகளைக் காத்து இரட்சிப்பவன். இந்த நான்கு தன்மைகளும் ஒரு சேரக் கொண்டவன் அரசர்க்கெல்லாம் விளக்குப் போன்றவன். அத்தகைய மன்னனை இழிவுபடுத்திப் பாடச் சொல்லி குலசிங்கவர்மன் என்னைத் தொல்லைப்படுத்தினான். ஏராளமான பொன்னும் திரவியமும் தருவதாகச் சொன்னான். நான் அப்படிப்பாடவில்லை. புலவர்கள் நாணயமுள்ளவர்களாக இருக்க வேண்டும். உண்மைக்கும் பிறம்பான செய்திகளைப் பொருளுக்காகப் பாடக் கூடாது. ஏனென்றால் அது தான் பிற்காலத்தில் வரலாறாகும். உத்தமமான ஒருவனைப் பற்றி மக்கள் தவறாகப் புரிந்து கொள்வர். அதனால் சரித்திரம் திரிபு பட்டு விடும்'' என்றார். அது எவ்வளவு உண்மை. நான் தங்களின் புகழைப் பாடப் போகின்றேன்'' என்றார் கணநாதன்.

“மிகவும் மகிழ்ச்சி புலவரே. நாம் எந்த ஒரு விடயத்தைப் பற்றிப் பேசும் போதும் மிகவும் அவதானமாகப் பேசுதல் வேண்டும். நிலத்தில் சிந்திய அமிழ்தத்தை மீட்டெடுக்க முடியாது. அதே போலப் புலவனது வாய்ச் சொற்களும் அமிழ்தம் தான்” என்றான் மார்த்தாண்டன்.

கஜமுகனுக்கு வல்லிபுரமார்த்தாண்டனை நினைக்க ஆச்சரியமாக இருந்தது. ஓய்வுள்ள வேளைகளில் அவனின் வரலாற்றை வாசித்து ரசிப்பான்.

**390. கொடை அளி செங்கோல் குடி ஓம்பல் நான்கும்
உடையான் ஆம் வேந்தர்க்கு ஒளி**

கொடை, கருணை, நீதி தவறாமை, குடிகளைக் காத்தல் ஆகிய நான்கு தன்மைகளையும் உடைய அரசன், அரசர்க் கெல்லாம் விளக்குப் போன்றவன்.

***நிற்க***

“ஐயா, நான் பருத்தித்துறையைச் சேர்ந்தவன். நாவலடியில் எனது இனத்தவர்கள் இருக்கிறார்கள். எனது தம்பியும் குடும்பத்தினரும் குடத்தனைப் பகுதியில் வாழ்ந்து வந்தனர். எனது தம்பி ஆசிரியர். நான் கடை வைத்திருக்கிறேன். சுனாமிப் பேரலை வந்தன்று எனது தம்பியின் மகன் எனது வீட்டிற்கு வந்திருந்தமையால் தப்பி விட்டான். தம்பியையும், மனைவியையும் மூன்று பிள்ளைகளையும் அந்தப் பேரலை அள்ளிக் கொண்டு போய்விட்டது” சிலகணங்கள் அவன் அழுதான். விக்னேஸ்வரமூர்த்தி விம்மி விம்மி அழும் அந்தப் பெயர் தெரியாத மனிதனைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது மனதுள் சுனாமிப் பேரலை அடித்துக் கொண்டிருந்தது.

“இனிமேல் எனக்குப் பருத்தித்துறைக்குப் போக விருப்பமில்லை ஐயா. கடையை மூடிவிட்டேன். யாழ்ப்பாணம் பஸ்நிலையத்திற்கு முன்பாக எனது மாமா கடை வைத்திருக்கிறார். அங்கு கொண்டு சென்று எனது கடைச் சாமான்களை வைத்துள்ளேன். மாமியின் வீடும் பட்டணத்தில் தான் இருக்கு”. விம்மினான். விக்னேஸ்வரமூர்த்தி எதுவும் பேசவில்லை. அவன் என்ன உதவியைத் தன்னிடம் கோருகிறான் என்று புரியாததால் அவன் பேசி முடிக்கட்டும் என்று காத்திருந்தார்.

“ஐயா, எனக்குப் பிள்ளைகள் இல்லை. தம்பீன்ரை மகனை என்ன கஷ்டப்பட்டென்றாலும் நல்ல நிலைக்குக் கொண்டு வரவேண்டு மென்று விரும்பிப் பட்டணத்தில் உள்ள பிரபல பாடசாலைகளுக்குச் சென்று எனது நிலையை எடுத்துக் கூறினேன். நான்கு பாடசாலைகளின் அதிபர்கள் என்னுடைய கதையைக் கேட்கவே இல்லை. பிள்ளைத் தொகை கூடிவிட்டதாம் வேறுபாடசாலைகளைப் பார்க்கச் சொன்னார்கள். நான் நாயாய் அலைந்தது தான் மிச்சம். மாமாவுக்குத் தெரிந்த பிரமுகர் ஒருவரைக் கொண்டு சமயங்களின் பெயரால் நடத்தப்படும் பாடசாலைகளைக் கேட்ட போது நன்கொடையாகப் பணம் கேட்கிறார்கள் ஐயா, அரசாங்கம் எல்லாப் பாடசாலைகளுக்கும் நிதியை அள்ளிக் கொடுக்கிறது. வேண்டிய வசதிகளைச் செய்கிறது. பிறகேன் ஐயா பணங் கேட்கிறார்கள். நான் கேட்ட பாடசாலைகளில் எமது ஊரில் இருந்து வந்து பலர் படிக்கின்றனர். இதைத் தட்டிக் கேட்கப் புறப்பட்டேன். அப்பொழு ஒரு புண்ணியவான் சொன்னார்; ‘தம்பி நாவலடிலை கணபதி மத்திய மகாவித்தியாலயம் என்றொரு பாடசாலை இருக்கு. அங்கே போ. அதிபர் தங்கமான மனிசன். பாடசாலைக்கென்று காசுபணங் கேட்க மாட்டார். வசதிக்கட்டணங் கூட வாங்குவதில்லை. இங்குள்ள பாடசாலைகள்

ஆயிரக்கணக்கில் காசு கொடாமல் பிள்ளையை எடுக்கமாட்டினை'' என்றார். உங்களை நம்பித் தான் வந்திருக்கிறேன். நீங்கள் அனுமதி தந்தால் இந்த ஊரில் ஒரு வீடு எடுத்திருப்பன். வேலைக்கு நான் யாழ்ப்பாணம் போய்வருவன்''.

''அனுமதி தரலாம். பிள்ளை எத்தனையாம் வகுப்புப்படிக்கிறது''.

''ஐந்தாம் வகுப்பையா. இந்த முறை புலமைப்பரிசில் பரீட்சை எடுக்கிறான். தம்பீன்ரை செத்த மூன்று பிள்ளைகளும் புலமைப் பரிசில் பரீட்சையிலை சித்தியடைந்ததுகள்'' விம்மி விம்மி அழுதார்.

அப்பொழுது அங்கே தணிகாசலம் வந்தார். விக்னேஸ்வரமூர்த்தி தணிகாசலத்திற்கு அவரைப் பற்றிய விபரங்களைச் சொன்னார்; ''நான் அப்பிள்ளையின் கல்விச் செலவை ஏற்கிறேன்'' என்றார் தணிகாசலம்.

வந்தவர் திகைத்துப் போனார்; ''ஐயா மற்றப்பாடசாலைகளில் என்னை 'இரு' என்று கூடச் சொல்லவில்லை. நீங்கள் அனுமதியும் தந்து கல்விச் செலவையும் தருகிறீர்கள். எனக்கு உங்களைப் பற்றிச் சொன்னவர்; ''அவர் தெய்வம். போய் வந்து சொல்லு'' என்றவர். உண்மையில் நீங்கள் தெய்வம் தான்''.

''பிறப்புச் சான்றிதழ்....'' விக்னேஸ்வரமூர்த்தி கூறிக் கொண்டிருக்கும் போது வந்தவர் குறுக்கிட்டுச் சொன்னார்; ''எல்லாத்தையும் அந்தப் பாழாய்ப் போன அலை அள்ளிக் கொண்டு போயிட்டுது.''

''பரவாயில்லை பிள்ளையைக் கூட்டியாருங்கோ'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''ஐயா ஒரு மனிதன் கற்கத் தகுந்த நூல்களைத் தெளிவாகக் கற்க வேண்டும். அவ்வாறு கற்ற பின் கற்றவாறு வாழ்க்கையில் அவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். நான் சந்தித்த கற்றவையெல்லோரும் உழைப்புக்காகத் தான் கற்றவை. புத்தகங்களைப் படித்து பரீட்சையில் சித்தியடைந்து சான்றிதழைப் பெற்று சம்பளமாகவும் இலஞ்சமாகவும் பணம் பெறத்தான் கற்றவை. நீங்கள் ஒரு மனிதன் தான் கற்றபடி வாழ்க்கையை நடத்துறியள். நீங்களும் உங்கள் குடும்பமும் பரம்பரை பரம்பரைபரம்பரையாக நல்லாயிருப்பியள்'' வந்தவன் தடுமாறினான்.

**391. கற்க கசடறக் கற்பவை;. கற்றபின்**
**நிற்க அதற்குத் தக**

கற்கத் தகுந்த நூல்களைத் தெளிவாகக் கற்க வேண்டும். கற்றுணந்த பின் அதன்படி வாழ வேண்டும்.

### *இரண்டு கண்கள்*

கைலாயபிள்ளை நாவலடிக் கிராமத்தில் பெரியதொரு பலசரக்குக் கடை நடாத்தி வந்தார். அவரது ஊழியனாக நாகராஜா கடமை புரிந்து வந்தான். கைலாயபிள்ளையின் தந்தை வீரகத்திப்பிள்ளை. ஊரில் பெரிய பணக்காரன். ஏராளமான தோட்ட நிலங்களுக்கும் வயல்நிலங்களுக்கும் சொந்தக்காரன். அவருக்குக் கைலாயபிள்ளை ஒரே ஒரு மகன். அவர் திருமணம் செய்து பல

வருடகாலம் பிள்ளையில்லாதிருந்ததால் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதியின் ஆலயத்தில் விரதங்கள் பிடித்து, ஸ்ரீனிவாசன் சுவாமிகளின் அறிவுரைகளைக் கேட்டு, இரவும் பகலும் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதியே தஞ்சமென இருந்தமையால் பல வருடங்களுக்குப் பின் பிறந்தவன். அதனால் அவனை அவர் மிகவும் செல்லமாக வளர்த்து வந்தார். சிறுபிள்ளையாக அவன் இருக்கும் போது விளையாடக் கூட அவனைக் கீழே இறக்கி விட மாட்டார்.

மிகவும் செல்லமாகக் கைலாய பிள்ளை வளர்ந்தமையால் அவன் பாடசாலைக்குச் செல்ல விரும்பவில்லை. செல்லமாக வளர்ந்ததால் அவன் படிப்பதற்கும் விரும்பவில்லை. அதனால் ஆசிரியர்கள் அடிக்கடி கண்டித்தனர். அதனால் அவன் பாடசாலைக்குச் செல்லாது நின்று விட்டான். அதை அறிந்த தணிகாசலம் அவனின் வீடு தேடி வந்தார்.

‘‘வீரகத்தியண்ணை, உங்களது மகன் பல நாட்களாகப் பாடசாலைக்கு வரவில்லை யென்று பாடசாலை அதிபர் சொன்னார். தயவு செய்து அவனைப் பாடசாலைக்கு அனுப்புங்கோ. நீங்கள் பெரும் பணக்காரன். நீங்கள் தேடி வைத்த சொத்து மூன்று தலை முறைக்குத் தொழில் செய்யாமல் இருந்து சாப்பிடப் போதும். இருந்த போதும் ஒரு மனிதனுக்குக் கல்வி மிகவும் முக்கியமானது’’ என்றார்.

‘‘உண்மை தான் தணி. பலவருட காலம் பிள்ளையில்லாமல் தவமிருந்து பெற்றதாலை அவனைக் கண்டிக்க முடியவில்லை. செல்லங் கொடுத்து வளர்த்தால் அவனுக்குத் தாயின் நெருக்கம் கூடுதலாகத் தேவைப்படுகிறது. அத்துடன் படிக்கக் கள்ளப்படுத்துகிறான். என்ன செய்யிறது. எனது தொழிலைப் பழக்கி விடுவோம்’’ என்றார் வீரகத்திப்பிள்ளை.

‘‘வியாபாரம் செய்ய எண்ணைப் பற்றிய அறிவும் எழுத்தைப் பற்றிய அறிவும் தேவை. அதோடு கல்வியறிவில்லாது எந்தத் தொழிலையும் செய்ய முடியாது. அதுவும் வியாபாரத்திற்கு இரண்டினது அறிவும் தேவை. அதை விடப் புத்திக் கூர்மையும் தேவை. இதெல்லாம் உங்களுக்கு நான் சொல்லித்தான் தெரிய வேண்டு மென்பதில்லை. ஒரு மனிதன் வாழ்க்கையை நல்ல முறையில் நடத்தக் கல்வி தேவை. அறிவில்லாத மனிதர்களால் நல்ல முறையில் வாழ முடியாது’’ என்று கூறிவிட்டுச் சென்றார் தணிகாசலம்.

வீரகத்திப்பிள்ளை, தனது மகனுக்கு புத்திமதிகள் கூறினார்; அறிவான கதைகளை கூறினார். அவற்றை அவன் கேளாததால் தண்டனை கொடுத்தார். அவற்றிற் கெல்லாம் கைலாய பிள்ளை மசியவில்லை. அதனான் விதிப்படி நடக்கட்டு மென்று நினைத்தார்.

காலம் உருண்டது. வீரகத்திப்பிள்ளை நல்லதொரு குடும்பத்தில் பெண்ணெடுத்தார். லையாபிள்ளையின் மனைவி கீர்த்தி மிகுந்த அறிவுள்ளவள் அதனால் கைலாய பிள்ளையின் வாழ்வில் பிரச்சினைகள் அதிகம் இருக்கவில்லை. திடீரென்று நாகராசா கடுஞ் சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். இரண்டு மாதங்கள் கழிந்தும் அவனது நோய் சுகமடையவில்லை. அதனால் கடையைக் கைலாயபிள்ளை நடத்தி வந்தார்.

அவருக்கு எழுத வாசிக்கத் தெரியாது. பொருட்களின் விலையைப் போட்டுக் கூட்டத் தெரியாது. பணம் கொடுத்தால் மிகுதிப் பணம் கொடுக்கச் சிரமப்படுவார். அதனால் கடையைத் தற்காலிகமாக மூடிவிட முடிவு செய்தாள் கீர்த்தி.

இரண்டு மாத காலமாக கடை மூடப்பட்டிருந்தமையால் அக் கிராமத்தவர் மிகவும் கஷ்டப்பட்டனர். கடனுக்குப் பொருட்களை வாங்குவோர் மிகவும் சிரமப்பட்டனர். பலர் வீட்டுக்குச் சென்று கடையைத் திறக்குமாறு மன்றாடினர்.

அன்று தணிகாசலம் கைலாயபிள்ளையின் வீட்டுக்கு வந்தார்; ‘‘அண்ணை நீங்கள் எனக்கு எவ்வளவு புத்திமதிகள் சொன்னனீங்கள். அதை யெல்லாம் நான் கேட்கவில்லை. படிக்காதத்தாலை நான் படுற கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமில்லை. எழுத வாசிக்கத் தெரியாத தாலையும் கணக்குப் பார்க்கத் தெரியாதத்தாலும் என்னைப் பலர் ஏமாற்றி விட்டனர். எண்ணும் எழுத்தும் எமது இரண்டு கண்களைப் போன்றவை’’ என்று அழுதான் கைலாயபிள்ளை.

**392. எண் என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும்**
**கண் என்ப வாழும் உயிர்க்கு**

எண், எழுத்து என்ற இரு வகைக் கல்வியும் மக்களுக்கு இரு கண்களைப் போன்றவை.

### ***கண்உடையார்***

‘‘மூன்று பிள்ளைகளுக்குத் தகப்பனான பின்பு உனக்கு அழவெட்கமில்லையே?’’ கல்வி கற்கக் காலம், வயது, எதுவும் தேவையில்லை. நாற்பது வயதில் தான் உனக்கு ஞானோதயம் வந்திருக்கு. அதுவும் நாகராசாவுக்கு நோய் வந்த பின்பு தான் அதை நீ உணர்ந்திருக்கிறாய். நீ கடையைத் திறக்காததால் கிராமமக்கள் பலர் கஷ்டப்படுகிறார்கள். அன்றன்று உழைத்துச் சீவிக்கிற மக்கள் அன்றன்று தான் பொருட்களை வாங்குவார்கள். மாதச் சம்பள மெடுப்பவர்களில் பலர் கடனுக்குப் பொருட்களை வாங்கி விட்டு மாதம் முடியப் பணத்தைத் தருவார்கள். கடையை மூடியதால் எல்லோரும் கஷ்டப்படுகிறார்கள். வேறு யாரையாவது கூலிக்கு அமர்த்தி வியாபாரம் செய்யக் கூடாதா...?’’ என்று கேட்டார் தணிகாசலம்.

தணிகாசலம் கேட்ட கேள்விக்குச் சில கணங்கள் கைலாயபிள்ளை மறுமொழி கூறவில்லை. சற்று நேரங்கழித்துச் சொன்னார்; ‘‘நான் முதலாளி என்று சொல்லி கதிரையில் இருக்க, நாகராசா மற்றைய எல்லாத் தொழில்களையும் செய்யிறவன். பொருட்களை நிறுத்து கணக்குப் பார்த்துப் பணத்தை வாங்கித் தருவான். நான் மிகுதிப் பணத்தைக் கொடுத்தால் அதை எண்ணிச் சரி பார்த்து விட்டுத் தான் கொடுப்பான். சில சமயம் நான் கூடவும் கொடுப்பன், சில சமயம் குறையவும் கொடுப்பன். இதெல்லாம் நாகராசாவுக்குத் தெரியும். இன்னொரு வரை நியமித்தால் கரைச்சல். அத்துடன் அவனுக்கு நோய் சுகமாகி விட்டால் புதிதாக நியமித்தவனை விலக்க முடியாது’’ என்றார் வைலாயபிள்ளை.

தணிகாசலத்திற்குக் கைலாயபிள்ளை சொல்வதில் நியாயமிருப்பதாகத் தெரிந்தது. இருப்பினும் கைலாயபிள்ளை கடையை மூடியிருப்பதால் மக்கள் தணிகாசலத்திடம் அடிக்கடி பண உதவி கேட்டுக் கொண்டிருந்தனர். முன்பை விட பல மடங்கு வசதியோடு அவர் இப்பொழுது வாழ்ந்தாலும், அவர் உழைத்து

அவ்வசதிகளைப் பெறாமையினால் மகளிடமோ அல்லது மருமகனிடமோ பண உதவி கேட்க வெட்கப்பட்டார். அதனால் தனது உழைப்பிலேயே அவர் தன்னை நாடி வருவோர்க்கு உதவி செய்து கொண்டிருந்தார்.

‘‘என்ரை நிலை எனது பிள்ளைகளுக்கு வரக் கூடாது. அவர்களை நான் கற்பிக்க வேண்டும். நல்ல முறையில் கற்பிக்க வேண்டும்’’ என்றார் கைலாயபிள்ளை.

‘‘தாழ்ந்தவர்களின் வாழ்வை மட்டுமல்ல, கல்வியறிவில்லாத உன் போன்றவர்களின் வாழ்வைக்கூடச் சிறப்பிப்பது கல்வி தான். கல்வியை ஒருவன் கற்றால் அதன் விளைவாக மற்ற நன்மைகளெல்லாம் அவனை வந்து சேரும். கல்வி உன்னை நாடி வந்த போது, நீ கல்வியைப் புறக்கணித்தாய். இப்போதுள்ள நிலையில் நீ தான் கல்வியை நாடிச் செல்லல் வேண்டும். கல்வியில்லாத வாழ்வு கண்ணில்லாத வாழ்வைப் போன்றதென்று உனக்குத் தெரியும். கற்றவர்களின் முகத்தில் தான் கண்கள் உள்ளன. கல்லாதவனின் முகத்தில் இருப்பது இரண்டு புண்கள் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே நீ கடையை நடத்துவதற்குரிய அறிவைப் பெறும்வரைபடி’’ என்றார் தணிகாசலம்.

‘‘என்னண்ணை நான் இனிப்படிக்க முடியுமே..?’’

‘‘படிப்புக்கு வயது தடையில்லை. பல பெரியவர்கள் இளமையில் படிக்கவில்லை. பின்பு தான் படித்து மேதாவிகளாக வந்துள்ளனர். இன்னும் பல பெரியவர்கள் இறக்கும் வரை படித்திருக்கிறார்கள். கல்வி என்பது புத்தகங்களைப் படித்துப் பரீட்சை எழுதி சித்தியடைந்து சான்றிதழ் பெறுவதல்ல. தான் தான் செய்யுந் தொழிலைச் சிறந்த முறையில் பிறரின் உதவியில்லாமல் செய்யப் பழகிக் கொள்ளும் பயிற்சியும் கல்வி தான். ஆரம்பத்தில் எழுத வாசிக்கக் கற்றுக் கொண்டாயேயானால் பல துறைகளாலும் உமது அறிவை வளர்த்துக் கொள்வாய். உனது மனைவி கீர்த்தி கற்றவள். அவளிடம் எழுத்துப் பற்றிய அறிவையும், எண்ணைப் பற்றிய அறிவையும் கற்றுக் கொள். எமது சமயத்தில் முருகனிடம் சிவன் பிரணவமந்திரத்தின் பொருளைக் கற்றவரலாறு உண்டு. இது உண்மையோ பொய்யோவென எண்ணத் தேவையில்லை. வாழ்க்கையில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் பலவரும் என்பதையும் அவற்றை தீர்த்துக் கொள்ளும் முறைகளைப் பற்றியும் சமயம் சாதாரணமகனுக்கு எடுத்துக் கூறும் வழி அதுவென்று தான் நான் கொள்வேனே தவிர அதைச் சமய உண்மையாக ஏற்றுக் கொள்ள மாட்டேன்’’ என்றார் தணிகாசலம்.

தணிகாசலம் கூறிய எதுவும் கைலாயபிள்ளைக்கு விளங்கவில்லை. அவர்; ‘‘எப்படிக் கீர்த்தியிடம் பாடங் கேட்டுக் கற்பது’’ என்று யோசித்துக் கொண்டிருந்தார்.

**393. கண் உடையார் என்பவர் கற்றோர்; முகத்து இரண்டு**
**புண் உடையர் கல்லாதவர்**

கண்களுடையவர்கள் என்று கூறப்படுபவர்கள் கற்றவரே ஆவர். கல்லாதவர்களின் முகத்தில் உள்ளவை இரண்டு புண்களே ஆகும்.

### *புலமை*

பரமேஸ்வரனால் தனது மகன் வத்சல்யனுக்கும், மருமகள் நாமகளுக்குமென வாங்கப்பட்ட வீடு திருத்தப்பட்டு வர்ணப்பூச்சுக்கள் பூசி அழகுபடுத்தப்பட்டு அன்று குடிபுகுதலுக்கான சமயச் சடங்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயப் பிரதமகுரு இராஜசங்கரக் குருக்கள் மதச் சடங்குகளைச் செய்து கொண்டிருந்தார். அரசமாளிகை போலப் பெரிதாகவும் அழகாகவும் அமைக்கப்பட்டிருந்த அவ் வீட்டைக் கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார் தணிகாசலம். அவரின் மனதில் என்றுமில்லாத ஆனந்தம் குடி கொண்டிருந்தது. இப்படியான ஒரு வீட்டில் தான் குடியிருப்பேன் என்று அவர் கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை.

அவரது வீட்டில் ஊர்ப்பிரமுகர்கள் எல்லோரும் கூடியிருந்தனர். விக்னேஸ்வரமூர்த்தியும் சிவசுந்தரமூர்த்தியும் தனபாலசிங்கமும் பரமேஸ்வரனும் கூடியிருந்து கதைத்துக் கொண்டிருந்தனர். மணிவண்ணன் அவர்களைப் பற்றி ஏற்கனவே பரமேஸ்வரனுக்குக் கூறியிருந்தார். பெரும் கோடீஸ்வரரான பரமேஸ்வரன் மிகவும் கலகலப்பாகக் கதைத்துக் கொண்டிருந்தார்.

‘‘வாழ்க்கை, மனிதனுக்கு நிம்மதியைத் தரல் வேண்டும். மறு உலகத்தில் இன்பங் கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்த உலக வாழ்க்கையில் துன்பங்களை அனுபவிக்கக் கூடாது. அளவுக்கதிகமான பணமிருந்தாலும் நிம்மதி இருக்க மாட்டாதென்று சொல்வார்கள். அது என்னைப் பொறுத்தவரையில் உண்மை என்று தான் சொல்வேன். அளவுக்கதிகமாக நான் தொழில் செய்வதால் அடிக்கடி நாட்டை விட்டு வெளியே செல்ல வேண்டியிருக்கிறது. அதனால் குடும்பத்தினருடன் ஒன்றாகக் கூடி இருந்து குதூகலமாக வாழ முடியவில்லை. உங்களைப் பற்றியெல்லாம் மணிவண்ணன் பெருமையாகச் சொல்வார். ஊரில் இருந்து கொண்டு எவ்வளவு சந்தோசமாக வாழ்கிறீர்கள். இந்த ஒரு சாண் வயிற்றுக்குத் தானே உணவு; இந்த உடலை மறைக்கத்தானே ஆடை; நிம்மதியாக இருக்கத்தானே வீடு. இதெல்லாம் சாதாரணமாக இருந்தால்தான் நிம்மதி. அத்துடன் விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவைப் போலச் சேவை செய்து வாழ்வதில் தான் இன்பம். எனது சம்பந்தியைப் பார்க்க எனக்குப் பொறாமையாக இருக்கு. இன்று அவரின் வீட்டில் ஊரே திரண்டிருக்கு. அத்துடன் பெரும் பெரும் பிரமுகர்களெல்லாம் வந்திருக்கினை. கொழும்பில் எமது வீட்டில் ஏதாவதொரு வைபவம் நடைபெற்றால் அந்த நேரத்திற்குச் சிலர் வருவார்கள். பற்றில்லாமல் சம்பரதாயத்திற்காக வந்து போவார்கள். நீங்கள் கொடுத்து வைத்தவர்கள்’’ என்றார் பரமேஸ்வரன்.

விக்னேஸ்வரமூர்த்தி சிரித்தார்; ‘‘அப்படி ஏன் சொல்கிறீர்கள். நீங்கள் ஒரு பெரிய தொழிலதிபராக இருப்பதால் எத்தனை குடும்பங்களை வாழவைக்கிறீர்கள். அத்துடன் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பெருந் தொண்டாற்றுகிறீர்கள். அதுவும் ஒரு பெரும் விடயம் தானே’’ என்றார்.

‘‘நீங்கள் அதிபர். கதைப்பதில் வல்லவர்; நீங்கள் எதைச் சொன்னாலும் உங்கள் எல்லோரையும் நான் சந்தித்த பின்பு என்றுமில்லாத ஓர் உற்சாகத்தைப் பெற்றுள்ளேன்; மகிழ்ச்சியைப் பெற்றுள்ளேன்; பணம் தான் வாழ்வு என்று நினைத்திருந்த நான், பணம் வாழ்க்கையை நடத்த உதவும் ஒரு கருவி என்பதை உணர்ந்து கொண்டேன். நிம்மதியான வேலையும், அன்பான உறவுகளும், அமைதியான பிரதேசமும் என்னைக் கவர்ந்து விட்டன. எனக்கு

உங்களை விட்டுப் பிரியவே மனமில்லை. அழகான இந்தக்கிராமமும், அன்பான உங்கள் உறவும் எனக்கு எப்போதும் தேவையாக உள்ளது. நாளைக்கு நான் வெளிநாடொன்றுக்குச் செல்லவுள்ளேன். திரும்பிவரப் பல மாதங்களாகும். இனி உங்களை நான் எப்போது காணப்போகறேன்''. என்றார் பரமேஸ்வரன்.

''நானும் சிங்கப்பூருக்குச் செல்லவிருக்கிறேன். எனது சகோதரிக்கு கடும் சுகவீனம் என்று அறிவித்திருக்கிறார்கள். போனால் திரும்பிவர ஆறேழு மாதங்கள் செல்லும். அதுவரையும் சுவாமியாரையும் மகா கணபதியையும் உங்களெல்லோரையும் விட்டுப் பிரிவதை நினைக்கக் கவலையாக உள்ளது'' என்றார் தனபாலசிங்கம். அவரது கண்கள் கலங்கின.

தணிகாசலத்திற்குக் கவலையாக இருந்தது. தனது வலது கரம் செயலிழந்து விட்டதைப் போன்ற பிரமை. விக்னேஸ்வரமூர்த்தியும் கலங்கினார். எனினும் வெளிக்காட்டிக் கொள்ளாது சொன்னார்; ''சகோதரியைப் பார்க்கத் தானே வேண்டும். சென்று வாருங்கள்'' என்று.

''உங்கள் எல்லோரையும் விட்டுப் பிரிவதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை'' அழுதார் தனபாலசிங்கம்.

**394. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
**அனைத்தே புலவர் தொழில்**

மகிழும் படியாகக் கூடிப் பழகி, பிரியும் பொழுது மிகுந்த கவலையுடன் பிரிந்து செல்வது கல்வியில் புலமை உடையவர்களின் பண்பாகும்.

## *பணிந்து நின்று*

தணிகாசலத்தின் வீட்டுக்குக் ஸ்கந்ததேவா வந்தான். அவனைக் கண்டதும் தணிகாசலம் எழுந்து சென்று வரவேற்றார். எனினும், ''அவனுக்கு எப்படித் தனது வீடு குடிபுகுதல் தெரிந்தது'' என்று யோசித்தார்.

''உங்களது வீடு குடிபுகுதல் எனக்கு எப்படித் தெரிந்தது என்று யோசிக்கிறீர்களா...? உங்கள் சம்மந்தி எனக்கு மாமா முறையானவர். வத்சல்யன் தான், தணிகாசலம் என்றொரு பெரியவரின் மகளைத் தான் காதலிப்பதாகவும், அவரது குடும்பம் மிகவும் வறியது'' என்றும் சொன்னான்.

நான்; ''நாவலடிலை வாழும் தணிகாசலத்தின் மகள் நாமகளையா காதலிக்கிறாய்'' என்று கேட்டேன். அவன் ''ஆம்'' என்று சொன்னான். அதற்கு நான் சொன்னேன்; ''வத்சல்யா, பணம், பொருள், காணி,பூமியெல்லாம் இன்று வரும் நாளை போய் விடும். ஆனால் நல்ல குலத்தில் பிறந்தவர்களின் குடும்பத்தோடு கல்யாண உறவு வைப்பது நாம் எடுக்கும் ஏழேழு பிறவிகளிலும் இன்பத்தைத் தரும். தணிகாசலம் அண்ணையை எனக்குத் தெரியும். மிகவும் நல்லவர். உபகாரம் செய்யாதவர்களுக்கும் அவர் உபகாரம் செய்வார்.

எல்லோருடனும் பிரியமாக இருப்பார். செய்நன்றி மறவாமல் தனக்குதவி செய்தவர்களை எந்நாளும் நினைத்திருப்பார். நொந்தவர்களைத் தூக்கி விடுவார். கனவில் கூட மற்றவர்களைக் கெடுக்க நினைக்க மாட்டார். இவை நற்குடியில் பிறந்தவர்களுடைய பண்புகள். எனவே பணக்காரனான நீ ஏழையானாலும் நல்ல குடியில் பிறந்த தணிகாசலம் அண்ணையின் மகளைத் திருமணஞ் செய்வதைப் பெருமையாக நினை'' என்று சொன்னேன். நான் சொன்னது சரிதானே அதிபர் ஐயா''. என்று கேட்டான் ஸ்கந்ததேவா.

''மெத்தச்சரி...'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

தணிகாசலம் நெகிழ்ந்து போனார். அவரால் பேசமுடியவில்லை. அப்பொழுது சிவசுந்தரமூர்த்தியுடன் கதைத்துக் கொண்டிருந்த ஞானப்பிரகாசம் எழுந்து வந்து ஸ்கந்ததேவாவைப் பார்த்தார். அவரது கண்கள் கலங்கின. ஸ்கந்ததேவா அவரை வியப்புடன் பார்த்தான்.

''தம்பி, நீர் கடவுள் வாத்தியாற்றை மகனென்று சிவசுந்தரமூர்த்தி சொன்னார். அருகில் வந்து பார்த்த பின்பு தான் நான் தெரிந்து கொண்டேன். என்னைத் தெரியுமா? நான் முந்தி உங்களது வீட்டை அடிக்கடி வாறனான். அப்ப நீர் சின்னப் பிள்ளை. உமக்குப் பாடம் சொல்லித் தாறனான். உம்மை நான் உப்புமூட்டை காவின போது நீர் கீழை விழுந்து பல்லுடைந்து இரத்தம் வந்தது...''.

''ஓ...ஓ.. ஞாபகம் வருகிறது. நீங்கள் ஞானப்பிரகாசம் அண்ணை யெல்லே''

''ஓம் தம்பி, அப்பா காலமானதாக அறிந்தனான். அம்மா சுகமாக இருக்கிறாவே. ஒரு முறை அவாவை ஊருக்குக் கூட்டி யாருங்கோ. அவான்ரை உதவியும் ஆலோசனையும் பெற்று இந்த ஊரிலை எத்தனை பேர் படித்து நல்லாயிருக்கினை. அவையெல்லாம் அவாவைப் பார்த்து மகிழ வேணும். அதோடை அவாவும் தன் மூலம் பலர் நல்லாயிருக்கினை என்பதைக் கண்டு மகிழ வேண்டும்''.

''அவாவும் இங்கு வர விரும்புகிறா'' என்றான் ஸ்கந்ததேவா.

''நான் குடும்பக் கஷ்டம் காரணமாகப் படிப்பை இடை நிறுத்தி விட்டுத் தொழிலுக்குச் சென்றேன். கடவுள் வாத்தியார் வீட்டுக்கு வந்து எனது தந்தைக்குக் கூறிய வார்த்தைகள் இன்றும் எனது காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன; ''ஞானம் சரியான கெட்டிக்காரன். அவனை என்ன கஷ்டப்பட்டென்றாலும் படிப்பீ. அவன் ஒரு காலத்திலை இந்தக்கிராமத்திலை பெரிய அதிகாரியாக இருப்பான். பணக்காரனின் முன் ஏழைகள் கைகட்டி, வாய்பொத்தி நின்று இரப்பது போலக் கற்றவர்களின் முன் ஏங்கிப் பணிந்து நின்று உதவிகோரிக் கற்றல் வேண்டும். இது வெட்கத்திற்குரிய சம்பவமல்ல. உலகில் இரந்து பெறக்கூடியது கல்வி தான். மற்றவற்றை இரந்தால் நல்லாய் இருக்கும் காலத்தில் மானம் போய்விடும். கல்வியை இரந்து பெற்றால் பெற்றவன் நல்லாய் இருந்தால் கொடுத்தவனுக்குப் பெருமை உண்டாகும். கற்பதற்காக எந்த வழியை நாடினாலும் அது பெருமையைத் தான் தரும். ஏனென்றால் கற்றவன் தான் உலகில் உயர்ந்தவன்'' என்றார். அதன் பின் அவாவின்

உதவியால் தான் நான் இன்று ஒரு பெரிய அதிகாரியாக இருக்கிறேன்'' உணர்ச்சிவசப்பட்டார் ஞானப்பிரகாசம்.

பலர் கூடியிருந்த இடத்தில் பெரும் அதிகாரியான ஞானப்பிரகாசம் தனது தாயைப் பற்றிச் சொன்னதை நினைக்க ஸ்கந்ததேவாவிற்குப் பெருமையாக இருந்தது. உடல் சிலிர்த்தது.

''பெரியோர்களின் அன்பு உயிருள்ளவரை நிலைத்திருக்கும். அவர்கள் செய்யும் நற்கருமங்கள் தன்னலமற்றவையாக இருக்கும். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டு மென்று நினைப்பவர் கடவுள் வாத்தியார்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

**395. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்**

செல்வர்கள் முன் இரப்பதற்காகப் பணித்து நிற்கும் வறியவர்களைப் போல, கற்றவர் முன் ஏங்கிப் பணித்து நின்றாவது கல்வி கற்றோரே உயர்ந்தவர்கள். கல்லாதோர் இழிந்தவர்கள்.

## *மணல்கேணி*

தணிகாசலத்தின் வீட்டின் முன் ஆடம்பரமான ஒரு மோட்டார் வண்டி வந்து நின்றது. வருபவர்களை வாசல் வரை சென்று வரவேற்று அழைத்து வந்தது. ஆசனத்தில் இருத்தி மகிழ்வுடன் உரையாடும் வழக்கத்தைக் கைக் கொண்டிருந்த தணிகாசலம், ஆசனத்தால் எழுந்து வாசலுக்குச் சென்றார். மோட்டார் வண்டியில் இருந்து பேராசிரியரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவருமான கலாநிதி சிவலிங்கராசா அவர்கள் இறங்கினார்.

''என்ன தணிகாசலம் அண்ணை என்னை மறந்திட்டியள். பெரிய வீடுவாங்கிக் குடிபுகுதல் விழாச் செய்கிறீர்கள். எனக்குச் சொல்லவில்லை. உங்களது அயல் வீட்டுப்பிள்ளை சுகந்தினி என்னுடைய மாணவி. விரிவுரையாளராக இருக்கிறார். அவர் காலமை வந்தவுடனை; ''ஐயா, தணிகாசலம் அண்ணை இன்றைக்குப் புதிய வீடு வாங்கி அங்கு செல்கிறார். உங்களைக் காணவில்லை. மற்றெல்லோரும் நிக்கிறார்கள் என்றா. என்னை மறந்திட்டியள்..'' கவலைப்பட்டார் பேராசிரியர்.

''இல்லை இல்லை உங்களை நான் மறப்பனே... நான் ஒருத்தருக்கும் சொல்லவில்லை. மகளின்ரை திருமணத்தைச் சொல்லி விமர்சையாகச் செய்வம் என்று நினைத்திருக்கிறன்'' என்றார் தணிகாசலம்.

''சொல்லாமல் இவ்வளவு பேரும் வந்திருக்கினை.. ஊரில் உள்ள எல்லாப் பிரமுகர்களும் இருக்கினை. இனி யாருக்குச் சொல்ல இருக்கிறது'' என்று கூறியவாறு நடந்து வந்தார் சிவலிங்கராசா.

சிவலிங்கராசாவைக் கண்டதும் விக்னேஸ்வரமூர்த்தியும், அவருடன் கதைத்துக் கொண்டிருந்தவர்களும் எழுந்தனர்; ''விக்கி, வாழ்த்துக்கள். ஐம்பத்தெட்டு

வயதில் கல்வி முதுதத்துவமாணிப் பரீட்சையில் சித்தியடைந்திருக்கிறீா். எனது மாணவன் பெரியதொரு பரீடசையில் சித்தியடைந்திருப்பது எனக்குப் பெருமை சோ்க்கும் விடயம்'' என்றவாறு விக்னேஸ்வரமூா்த்தியைத் கட்டித் தழுவினாா் சிவலிங்கராசா.

''நன்றி ஐயா, தங்களிடம் நான் கற்ற கல்வி இன்னும் பல பெரும் பரீட்சைகள் எழுதிச் சித்தி பெற உதவும்'' என்றவாறு அவரது பாதங்களைப் பற்றி வணங்கிய விக்னேஸ்வரமூா்த்தி; ''என்னை ஆசீா்வதியுங்கள்'' என்றாா்.

''எங்களுக்கு அதிபா் பரீட்சையில் சித்தியடைந்தது தெரியாது'' என்று ஆச்சரியப்பட்டாா் தணிகாசலம்.

''அது தானே பாடசாலையிலும் மறைத்து விட்டாா்'' என்றாா் ரவீந்திரன்.

''பெரிய விழா ஒன்று அதிபருக்கு எடுக்க வேண்டுமென்று நான் பல நாட்களாகத் திட்டமிட்டனான். தணிகாசலம் பழைய மாணவா் சங்கக் கூட்டத்திற்கு ஒழுங்குசெய்'' என்றாா் வேலாயுதபிள்ளை.

''சீச்சீ.... விழா ஒன்றும் வேண்டாம். இதற்குத்தான் நான் மறைத்தனான்'' என்றாா் விக்னேஸ்வரமூா்த்தி.

''விக்கி, அவா்களது விருப்பத்தைக் குழப்பாதை. சில போ் விளம்பரத்திற்காக விழாச் செய்கிறாா்கள். இது விளம்பரவிழாவல்ல. கல்வியின் முக்கியத்துவத்தை மக்களுக்கு விளங்கப்படுத்தும் விழா. ஒரு மனிதன் முடிந்தளவு கல்வி கற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்று மற்றவா்களுக்கு உணா்த்தும் விழா. மணலில் உள்ள கேணியைத் தோண்டத் தோண்ட நீரின் அளவு கூடும். அது போல மக்கள் கற்கக் கற்க அறிவு கூடும். யாா் கற்காவிட்டாலும் ஆசிரியா்கள் தமது கல்வியறிவை வளப்படுத்தக் கற்றுக் கொண்டே இருத்தல் வேண்டும். இதை இன்று பெரும்பாலான ஆசிரியா்கள் உணா்வதில்லை. பலா் ஆசிரியத்தைத் தொழிலாக நினைக்கிறாா்கள். அதைப் பணியாகவும் கடமையாகவும் பலா் நினைப்பதில்லை. எப்போ பாடசாலை முடியும், தாம் அடுத்த வருமானம் தரும் தொழிலில் ஈடுபடலாமென்று நினைப்பவா்களுள் விக்கி மாறானவன். எனவே விழாக் கொண்டாட வேண்டும். அதுவும் எனது தலைமையில் பெருவிழாவாகக் கொண்டாடி எதிா்கால மாணவ சமுதாயத்திற்குக் கல்விப்பணியைப் பற்றி எடுத்துரைக்க வேண்டும்'' என்றாா் சிவலிங்கராசா.

''நாங்கள் சொன்னால் கேட்கமாட்டாா். அதோடு எம்மோடு பேசவும் மாட்டாா். நீங்கள் சொன்னால் தட்டமாட்டாா். எனவே எப்போது விழாவைக் கொண்டாட வேண்டுமென்று சொல்லுங்கோ'' என்றாா் தணிகாசலம். வேலாயுதபிள்ளை மகிழ்ச்சியால் சத்தமிட்டுச் சிரித்தாா்.

**396. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தா்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு**

மணலில் உள்ள கேணியைத் தோண்டத் தோண்ட நீரின் அளவு உயரும். அதே போல நூல்கள் பலவற்றையும் ஆழ்ந்து கற்கக் கற்க அறிவு கூடும்.

## சாகும் வரை கல்

‘‘நான் செல்லும் நாடுகள் யாவற்றிலுமிருக்கும் எமது ஊரவர்கள் அதிபரைப் பற்றி என்னை அடிக்கடி விசாரிப்பார்கள். கனடாவில் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் விழாவைப் பற்றிச் சொன்னால் எப்படிச் செயற்படுவார்கள் தெரியுமா? விழாவுக்கான எல்லாச் செலவுகளையும் அதிபரின் கனடா மாணவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்’’ என்றான் ஸ்கந்ததேவா.

‘‘நாமெல்லாம் அதிபரின் மாணவர்களாக இருக்கும் போது கனடாவில் இருக்கும் மாணவர்கள் எப்படி விழாவின் முழுப் பொறுப்பையும் ஏற்க முடியும். நாமும் செய்ய வேண்டும்’’ என்றான் தணிகாசலத்தின் மருமகன் முறையான பாலகுமாரன். அவன் ஒரு வாரத்திற்கு முன்பு பிரான்ஸ்சில் இருந்து வந்திருந்தான்.

‘‘அது தானே, எனது இரண்டு பிள்ளைகள் ஜேர்மனியில் இருக்கிறார்கள். ஜேர்மனியிலும் அதிபரிடம் கற்ற ஆயிரக்கணக்கான மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கேட்காவிட்டால் பின்பு குறை நினைப்பார்கள்’’ என்றார் வேலாயுதபிள்ளை.

அதிபரின் மாணவர்கள் இன்று உலகம் முழுவதும் பரந்து வாழ்கிறார்கள். அதனால் எல்லா நாட்டு மாணவர்களுடனும் தொடர்பு கொண்டு தான் செய்ய வேண்டும்’’ என்றார் தனபாலசிங்கம்.

‘‘அப்ப, இங்கேயே கூட்டம் நடத்துகிறீர்கள் போலிருக்கிறது’’ என்றார் சிவலிங்கராசா.

‘‘இஞ்சை எல்லாருமிருக்கினை ஒவ்வொருவரும் தமது முடிவைச் சொல்லலாம் தானே’’ என்றார் வேலாயுதபிள்ளை.

‘‘எனக்கு விருப்பமில்லை. அத்துடன் தணிகாசலத்தின்ரை வீட்டு வைபவமொன்றிலை இதைப்பற்றிக் கதைக்கிறத்தை நான் விரும்பவில்லை. சிலருக்குப் பிடிக்கும். சிலருக்குப் பிடிக்காது. அத்துடன் எனக்கு விழா எடுப்பதை நான் விரும்பவில்லை. அமைதியாக இருந்து சேவை செய்வதைப் போல, அமைதியாக இருந்து படிப்பதையே நான் விரும்புகிறேன்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘சில விழாக்கள் கட்டாயம் எடுக்கப்படல் வேண்டும். புகழுக்காகவும் விளம்பரங்களுக்காகவும் எடுக்கப்படும் விழாக்களென்றால் அதை எடுக்கக் கூடாது. சிலர் தமக்கு விழா எடுக்கும்படி தனக்கு வேண்டியவர்களுக்குச் சொல்லி அவ்விழாச் செலவுக்கான பணத்தையும் கொடுப்பார்கள். இது மக்கள் அனைவரும் விரும்பி எடுக்கும் விழா. அதைத்தவிர பலருக்குப் பல பாடங்களைப் புகட்டும் விழா. இன்று விழா வெடுக்கவென நாம் நினைக்க முன்பு எத்தனை நாடுகளில் இருந்து அவ்விழாவை எடுக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள் தெரியுமா? கற்றவனுக்குத் தன் நாட்டையும் ஊரையும் போலவே பிறநாடுகளும்

ஊர்களும் உரிமை உடையனவாகும். அத்துடன் தான் வாழும் நாட்டில் எவ்வளவு புகழோடு பேசப்படுகிறானோ அதேயளவு புகழுடன் உலகெங்கும் பேசப்படுவான். இது இவ்வாறிருக்க இன்று வாழும் மக்களில் பலர் கல்வியில் நாட்டங் கொள்கிறார்களில்லை. பட்டப்படிப்புப் படித்தவன் இன்னும் எவ்வளவு படிக்கலாம். ஒருவன் சாகும் வரை கற்கவேண்டும். இதை யார் உணராவிட்டாலும் ஆசிரியர்கள் உணர வேண்டும். இதை ஏன் அவர்கள் உணர்கிறார்கள் இல்லை. ஒரு தொழில் கிடைத்ததும் தமது வாழ்கை பூரணப்பட்டு விட்டதாக நினைக்கிறார்கள். இந்த எண்ணத்தை மாற்றி வாழும் வரை கல்வி என்ற எமது மூத்தோரின் வார்த்தைகளை மக்கள் பின்பற்ற வழிசெய்ய வேண்டும். அதற்காக இவ்விழா கட்டாயம் எடுக்கப்படல் வேண்டும்'' என்றார் சிவலிங்கராசா.

விக்னேஸ்வரமூர்த்தி எதுவும் பேசவில்லை. மக்களில் அனேகர் எழுந்து வந்து விக்னேஸ்வரமூர்த்தியைச் சூழ நின்று பார்த்தனர். சிவலிங்கராசா அப்படிச் சொல்லியும் அவரது மனம் அதை ஏற்றுக் கொள்ளாது தவித்தது.

''வாறமாதம் இருபத்தேழாம் திகதி சனிக்கிழமை பின்நேரம் நான்கு மணிக்கு விழாவை வைப்போம். நான் கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கத்திற்குச் சொல்கிறேன்'' என்றார் சிவலிங்கராசா.

''என்ன என்னுடைய பெயர் அடிபடுகிறது. நானில்லாத இடத்தில் என்னைப் பற்றி என்ன கதைக்கிறீர்கள்'' என்றவாறு அங்கே வந்தார் சுந்தரலிங்கம்.

அனைவரும் திரும்பிப்பார்த்தனர். கல்விப்பணிப்பாளர் சிரித்தபடி; ''எல்லோரும் கூடி நிற்பதைப் பார்த்தால் பெரியதொரு விஷயம் நடந்திருக்கு'' என்றார்.

**397. யாதானும் நாடாமல் ஊராமால் என் ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.**

கற்றவர்களுக்கு எல்லா நாடுகளும் தம் நாட்டைப் போன்றவை. அப்படியிருக்க ஒருவன் சாகும் வரை கல்வி கற்காமல் காலம் கழிப்பது ஏன்?

**தொடரும்**

''உங்களுக்குத் தெரியாதா....? விக்கி கல்விமுதுதத்துவமானிப் பட்டம் பெற்றிருக்கிறார். கலாநிதிப் பட்டம் பெறவும் பதிவு செய்துள்ளார்'' என்றார் சிவலிங்கராசா.

''அப்படியா? நல்ல விஷயம். மனிதன் இறக்கும் வரையும் கல்வி கற்றுக் கொண்டே இருத்தல் வேண்டும். அதை மற்றவர்கள் உணராவிட்டாலும் பரவாயில்லை, ஆசிரியர்கள் கூட உணர்கிறார்களில்லை. நான் கலந்து கொள்ளும் ஒவ்வொரு வைபவங்களிலும் ஆசிரியர்களைத் தொடர்ந்து கற்கும்படி வற்புறுத்துவேன். கல்வியில் தினமும் மாற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எமது மக்கள் ஆரம்பக் கல்விக்குப் பிறகு புத்தகங்களைப் படித்துப் பரீட்சைகள் எழுதிச் சான்றிதழ்களைப் பெற்று விட்டால் தமது கல்வி பூரணத்துவம் பெற்று

விட்டதென்று நினைக்கிறார்கள். ஆரம்பத்தில் சமய அறிவு பெறுவது தான் கல்வி என்றிருந்தது. பிற்காலத்தில் பழைய சரித்திரங்களை அறிந்து கொள்வது தான் கல்வி என்றிருந்தது. பின்புள்ளி விபரங்களைச் சேகரித்துக் கொள்வது தான் கல்வியென்றிருந்தது. இன்று கல்வி முறை பாரிய வளர்ச்சியடைந்து பெரும் மாறுதல்களுக்குரிய தாகி விட்டது. இதை விக்கி நன்கு உணர்ந்துள்ளார். அவருக்கு ஒரு பாராட்டு விழா வையுங்கள்'' என்றார் சுந்தரலிங்கம்.

வேலாயுதபிள்ளை பெருஞ் சத்தமாகச் சிரித்தார். தணிகாசலத்தின் முகம் பொங்கிப் பூரித்திருந்தது.

''இவர் யாரென்று தெரியவில்லை'' என்று ஸ்கந்ததேவாவைப் பார்த்தார் சுந்தரலிங்கம்.

''இவரா...? பெரும் பிரமுகர். உங்களுக்குத் தெரிந்தவர்தான் கடவுள் ஆசிரியையின் மகன்'' என்றார் தணிகாசலம்.

சுந்தரலிங்கம் கண்களை மேலே உயர்த்திச் சில கணங்கள் யோசித்தார். பின்பு; ''இடைக்காடு...'' என்று அவர் சொல்லும் போது ''அவர் தான் , அவர்தான்'' என்றார் தணிகாசலம்.

''அம்மா எப்படிச் சுகமாக இருக்கிறாவே?. நான் அவாவுடன் படிப்பித்தனான். அவா ஓய்வெடுக்கிற காலம். என்னில் நல்ல விருப்பம். அவா; ''தம்பி நீ பட்டதாரி என்று சொல்லி மேலை படிக்காமல் விடாதை. மேலும் பட்டங்களை எடு. நல்ல நிலைக்கு வருவாய். பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனைத் தெய்வமாகவும், உயர்த்துவது கல்வி. ஒருவன் ஒரு பிறப்பில் கல்வி கற்றால் அப்பிறப்பிற்கு மட்டுமல்லாது அவன் பிறக்கும் ஏழே பிறப்பிற்கும் உதவும் தன்மை வாய்ந்தது என்பா'' என்றார் சுந்தரலிங்கம்.

அப்பொழுது அங்கு வந்த வாட்டசாட்டமான ஓர் இளைஞன் விக்னேஸ்வரமூர்த்தியின் காலைத் தொட்டுக் கும்பிட்டு விட்டு உள்ளே சென்றான்.

''ஐயா, நேற்றுத்தான் எனது மகன் அங்கஜன் பல்கலைக்கழகத்தில் இருந்து வந்தவன். காலையில் உங்கள் வீட்டிற்குப் போனவன். நீங்கள் வீட்டில் இல்லை பிறகு பாடசாலைக்குப் போனவன். அங்கும் நீங்கள் இல்லை என்று சொன்னவன். நீங்கள் உதவி செய்யா விட்டால் எனது மகன் என்னைப் போல ஒரு கூலிக்காரனாகத் தான் இருந்திருப்பான். கணித விரிவுரையாளராக வந்திருக்க மாட்டான்'' கண்கலங்கினார் அம்மாணவனின் தந்தை. விக்னேஸ்வரமூர்த்தி புன்னகைத்தார்; ''ஐயா, அன்று நான் எனது மகனைப் பாடசாலையால் நிறுத்திய போது நீங்கள் எனது வீட்டுக்கு வந்து சொன்ன சொற்கள் இப்பொழுதும் எனது காதுகளில் ஒலிக்கிறது; ''முருகேசு, ஒருவனை முன்னேற்றத்திற்கு அழைத்துச் செல்வது கல்வி, மனிதனுக்குள்ளே புதைந்திருக்கின்ற அறியாமையை நீக்கி அவனை விழிப்புறச் செய்வது கல்வி. நீ அறியாமையில் மூழ்கியிருக்கிறாய். அதனால் தான் உனக்குக் கல்வியின் பெருமை தெரியவில்லை. சிறிதளவாவது கற்றிருந்தாலும் இந்த முடிவை எடுத்திருக்க மாட்டாய்'' என்றீர்கள். இப்பொழுது அவனுக்குப் புலமைப் பரிசில் ஒன்று கிடைத்துள்ளது. வெளிநாட்டிற்குச் செல்லவுள்ளான். அதைச் சொல்லத் தான் இன்று முழுவதும் உங்களைத் தேடினான்'' என்றார் முருகேசு.

அங்கஜன் விக்னேஸ்வரமூர்த்தியின் அருகில் வந்தான்; ''அங்கஜன், மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அத்துடன் பெருமையும் அடைகிறேன். படிப்பை இத்துடன் நிறுத்தி விடாதே. நான் எனது பேரப்பிள்ளைகளுடன் சேர்ந்திருந்து படிக்கிறேன். அது போல வாழ்நாள் முழுவதும் நீ படிக்க வேண்டும். ஏனென்றால் கல்வி ஒரு பிறப்போடு மட்டும் நின்று விடுவதில்லை. நாமெடுக்கும் பிறவிகள் தோறும் தொடர்ந்து வரும்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

**398. ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து.**

ஒரு பிறப்பிலே ஒருவன் கற்ற கல்வியானது அவனது ஏழு பிறப்புக்களிலும் தொடர்ந்து சென்று பெருமையைக் கொடுக்கும்.

## *மேலும் மேலும்*

கணபதி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் விக்னேஸ்வரமூர்த்தி கல்வி முதுதத்துவமானிப் பரீட்சையில் சித்தியடைந்தமைக்காகப் பாராட்டு விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில் பேராசிரியர் சிவலிங்கராசா உரையாற்றிக் கொண்டிருந்தார்; ''விக்னேஸ்வரமூர்த்தி எனது மாணவர். அவர் பல்கலைக்கழகத்தில் கற்கும் போதே எதிர்காலத்தில் ஓர் சிறந்த கல்விமானாவார் என்பது எனக்குத் தெரியும். இன்று எமது சமுதாயத்திற்குத் தேவையானது கல்விதான். கற்காமல் வெளிநாடொன்றிற்குச் சென்று கூலி வேலை செய்து அதிகபணம் சம்பாதிக்கலாமென்று கற்றவர்கள் கூட நினைக்கிறார்கள். கல்வி மனிதனின் உரிமை. இன்று யாழ்ப்பாணத்தின் கல்வித்தரம் மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளதாக அறிஞர்கள் கூறுகிறார்கள். பாடசாலைகளை விடத் தனியார் கல்வி நிலையங்களின் மீது தான் மக்கள் நம்பிக்கை வைத்திருக்கும் காலமிது. தனியார் கல்வி நிலையங்கள் பரீசாத்திகளை உருவாக்கும் தொழிற்சாலைகளாகத் தான் இங்கு இயங்கி வருகின்றன. கடந்த கால வினாத்தாள்களை எடுத்து, வரும் வருடப்பரீட்சைக்கு வினாத்தாள்கள் தயாரிக்கப்படுகின்றன. அதனால் கற்க வேண்டிய பல பகுதிகள் ஒதுக்கப்படுகின்றன. சுயமாகச் சிந்திக்கக் கூடிய ஒரு மனிதனை அவை உருவாக்கவில்லை. பரீட்சைகளுக்குத் தயார்ப்படுத்தும் நிலையங்களாகவே தனியார் கல்வி நிலையங்கள் இருக்கின்றன. தாமும் தம் குடும்பமும் வாழ வேண்டு மென்ற கருத்தை விடுத்துப் பொது நலத்திற்காக உழைக்க வேண்டு மென்ற எண்ணத்தைக் கல்வி உருவாக்க வேண்டும். ஆசிரியர்களின் வாழ்க்கை முன்மாதிரியாக அமையா விட்டால் கல்வியால் எந்தப் பயனும் ஏற்படாது என்பது அறிஞர்களது கருத்து. அந்தக் கருத்தை ஏற்று முன்மாதிரியாக வாழ்ந்து வருபவர் விக்னேஸ்வரமூர்த்தி. நான் பல மேற்கு நாடுகளுக்கு விஜயம் செய்திருக்கிறேன். அங்கு வாழும் மக்களுக்குக் கிடைத்திருக்கும் வாழ்க்கை வசதிகள் யாவும் அவர்கள் பெற்ற கல்வியால் தான் கிடைத்துள்ளது. அந்த நிலை இங்கும் வர வேண்டும். இன்று விக்னேஸ்வரமூர்த்தி பெரியதொரு பட்டத்தைப் பெற்றுள்ளார். ஒருவன் கற்கக் கற்க அவனது உள்ளத்தில் மகிழ்ச்சி பெருகும். அக்கல்வி தான் உலகில் வாழும் மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்று உணர்ந்துள்ள கற்றறிந்தவர்கள் மேலும் மேலும் கல்வியைக் கற்க விரும்புவர். அதனால் தான் அடுத்துக் கலாநிதிப் பட்டத்தைப் பெற விக்னேஸ்வரமூர்த்தி கற்கிறார். அதற்கு இவ்விழா உதவி செய்து உற்சாகத்தை

அளிக்குமென்று நான் நினைக்கிறேன். அவர் தொடர்ந்தும் கற்க வேண்டுமென்று வாழ்த்தி விடை பெறுகிறேன்.''

அடுத்துக் கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம் பேசினார்; ''போரினால் இன்று எமது கல்வியின் நிலை மிகவும் தாழ்ந்து விட்டது. முதலாமிடத்தில் இருந்த எமது மாவட்டம் கடைசி நிலையை அடைந்துள்ளது மிகவும் வருந்தத்தக்கது. தாழ்ந்த நிலையில் உள்ள எம்முடைய மக்களின் கல்வி நிலையை முன்பிருந்த நிலைக்கு கொண்டு வருதல் வேண்டும். இது தான் இப் பொழுது ஆசிரியர்கள் செய்ய வேண்டிய சேவையாகும். பட்டணத்தில் உள்ள பிரபல பாடசாலையொன்றில் சுனாமிப் பேரலையால் தந்தையை இழந்த மாணவனைப் பாடசாலையில் சேர்க்கப் பணம் கேட்டதாக அறிகிறேன். மக்களின் நிலையைப் புரிந்து கொள்ளாத அதிகாரிகள் கற்ற கல்வியால் என்ன பயன்?. ஒழுக்கமும் சேவை மனப்பான்மையும் இல்லாத கல்வியால் எந்த விதமான நற்பயன்களும் ஏற்படாது. பெரும் தீமைகளே ஏற்படும். சேவை செய்வதன் மூலம் மற்றவர்கள் உன்னைப் பற்றிப் பெருமையாகப் பல்லாண்டுகளுக்குப் பேசுவார்கள். இதனால் நீ பாக்கியசாலியாவாய். கற்ற நெறியில் இருந்து பிறழாதவன், நல்லவற்றை ஆராய்ந்து பிறருக்குச் செய்வான். சாந்தமானவன், நலிந்த மக்களின் உயர்வைப் பற்றிச் சிந்திப்பவன், இரக்கமும் அன்பும் உள்ளவன் தான் கல்வியாளன். அவன் மற்றவர்களின் சந்தோசத்திற்காகத் தான் பல அரிய நூல்களைத் தேடித் தேடிக் கற்கிறான். நான் முன்பு சொன்ன அனைத்தும் உங்கள் அதிபர் விக்னேஸ்வரமூர்த்திக்குப் பொருந்தும். பண்பான ஆழுமையுள்ள ஒழுக்க சீலரான விக்னேஸ்வரமூர்த்தியைப் பெற்ற பெற்றோரும், அதிபராகப் பெற்ற நீங்களும் பாக்கியசாலிகள். இவ்விழாவை எடுப்பதற்கு நாம் விக்னேஸ்வரமூர்த்தியை வற்புறுத்தித் தான் எடுத்தோம். இவ்விழா அவருக்கல்ல, உங்களுக்கு. நீங்கள் கற்பதற்கு; மகிழ்ச்சியாக இருப்பதற்கு; உங்கள் பிள்ளைகள் கல்வியில் முன்னேறுவதற்கு என்று தான் நான் சொல்வேன். விக்னேஸ்வரமூர்த்தி இன்னும் கற்க வேண்டும். அதனால் அவரும் நீங்களும் மகிழ்ந்து நன்மை பெற வேண்டும் என்று கூறி விடை பெறுகிறேன் வணக்கம்''.

**399. தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்.**

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுகிறது என்று அறிந்து மகிழ்ந்த கற்றறிந்த அறிஞர்கள் மேன் மேலும் கற்க விரும்புவார்கள்.

## *அழிவில்லாச் செல்வம்*

விக்னேஸ்வரமூர்த்திக்கு நடத்தப்பட்ட பாராட்டு விழா முடிந்த பின்பும் பலர் மண்டபத்தில் கூடி நின்றனர். ஸ்ரீனிவாசன் சுவாமிகள் விக்னேஸ்வரமூர்த்திக்கு அருகில் இருந்தார். தணிகாசலமும் வத்சல்யனும் நாமகளும் விழாவுக்கு வந்த நேரம் முதல் கலகலப்பற்றவர்களாக இருப்பது போலச் சுவாமியாருக்குத் தெரிந்தது. வழமையாக விழாவென்றால் சுறுசுறுப்பாக இயங்கும் தணிகாசலம் சோர்ந்திருந்தார்.

மண்டபத்தில் இருந்த பிரமுகர்களுக்குச் சிறிது தூரத்தில் ஓர் இளைஞன் அமைதியாக நின்று கொண்டிருந்தான். விக்னேஸ்வரமூர்த்தி முதலில் அவனை

விழாவுக்கு வந்தவனென்று நினைத்தார். விழா முடிந்து வெகுநேரமாகியும் அவன் அங்கு நிற்பதைக் கண்டு, அவனைத் தன்னருகே வருமாறு அழைத்தார். அவ்விளைஞன் அவரின் அருகே வந்து வணங்கினான்.

“நீர் யார்? வெகு நேரமாக ஏன் நிற்கிறீர்” என்று கேட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

“ஐயா, எனது பெயர் ஏரம்பன். பல்கலைக்கழகத்தில் தமிழை விசேட பாடமாகக் கற்கிறேன். அப்பாடத்தில் எனக்குச் சந்தேகமேற்பட்டுள்ளது. அதைத் தாங்கள் தீர்த்து வைத்தல் வேண்டும். நான் இவ்வூரில் இருந்து வெகு தொலைவில் இருப்பதால் தங்களை எப்பொழுது வந்து சந்திக்கலாமென்று கேட்பதற்காகவே நின்றேன்” என்றான்.

“சொல்லும் என்னென்று” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“இல்லை ஐயா, நான் குறித்து வைத்திருக்கிறேன். உங்களுக்கு நேரமுள்ள ஒரு நாளைச் சொன்னால் கொண்டு வருகிறேன்” என்றான் ஏரம்பன்.

“அப்படியா..? நீர் நாளைக்கு நான்கு மணிக்கு வாரும்” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

ஏரம்பன் சென்று விட்டான். தணிகாசலம் விக்னேஸ்வரமூர்த்தியின் அருகில் வந்தார்; “நான் போயிட்டு வரட்டா...?”

தனபாலசிங்கம், தணிகாசலத்தை நிமிர்ந்து பார்த்தார்; “மற்றய விழா நாட்களில் விழா முடிந்து மக்கள் எல்லோரும் சென்ற பின்பும் மண்டப ஒழுங்குகளைக் கவனித்துக் கொண்டு நிற்கும் தணிகாசலத்தைப் பார்த்து வேலாயுதபிள்ளை சொல்வார்; “நாளைக் காலமை செய்யலாம் போ” அப்படியான தணிகாசலம் விழா முடிந்த கையோடு ஏன் புறப்படுகிறான்” என்று நினைத்தார்.

“தணி, இன்று உனது முகம் கலவரமடைந்துள்ளது. முன்பு போலச் சுறு சுறுப்பும் இல்லை. ஏதாவது சுகமில்லையா? இல்லைப் பிரச்சினையா?” என்று கேட்டார் சுவாமியார்.

தணிகாசலம் சில கணங்கள் எதுவும் பேசவில்லை. அவரது முகம் முன்பை விடக் கலவரமடைந்தது. கண்கள் கலங்கின; “சுவாமி எனக்கொன்றுமில்லை. எனது சம்பந்திக்குத் தான் சில பிரச்சினைகள். அவரது தொழிற்சாலையில் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். ஆடைத்தொழிற்சாலையின் ஒரு பகுதி மின்சாரக் கோளாற்றால் எரிந்து விட்டது” என்று நிறுத்திய தணிகாசலத்தின் கண்கள் கசிந்தன. கண்களைத் துடைத்து விட்டுச் சொன்னார்; “அவரின் இனத்தவர்கள் எனது மகளைக் கட்டியதால் தான் இது நடந்தது என்கிறார்களாம். மருமகன் சொல்லிக் கவலைப்பட்டார்” என்றார் தணிகாசலம்.

சுவாமியார் சில கணங்கள் பேசாமலிருந்தார். பின்பு சொன்னார்; “தணிகாசலம், வாழ்க்கை மனிதர்களில் தங்கியிருப்பதில்லை. இன்று சரியாக இருப்பது நாளை பிழையாக இருக்கும்; இன்று அத்தியாவசியமாகத் தேவைப்படுவது நாளை தேவையில்லாத அற்ப பொருளாக மாறலாம். நன்மையையும் தீமையையும்

தீர்மானிப்பவன் இறைவன். உனது மகளால் தான் தொழிற்சாலை தீப்பற்றி எரிந்ததென்று சொல்பவர்கள் தமது காரியம் நடைபெறாததால் சொல்வார்கள். கல்வியைத் தவிர உலகில் உள்ள பொருட்களெல்லாம் அழியக் கூடியவை. மக்கட் பேற்றாலோ செல்வத்தாலோ அல்ல, கல்வியால் மட்டுமே ஒருவன் உயர்ச்சியடைய முடியும். அமர நிலையை அடைய முடியும். உனது சம்மந்தி தேடிய பொருட்கள் அனைத்தும் அழிந்தாலும் அவரது மகன் பெற்ற கல்வி அக்குடும்பத்தை வாழவைக்கும்; உச்சநிலையை அடைய வைக்கும்; ஏரம்பன் விக்னேஸ்வரமூர்த்தியிடம் தானே விளக்கம் கேட்டான். அரசன், செல்வந்தன், ஏழை எல்லோரும் இரப்பது கல்வியாளனிடம் தான். கல்வியறிவுள்ள மகளைப் பெற்ற நீ, சமயத்தின் உட் பொருளை உணர்ந்த நீ, கலங்கலாமா? சமய உண்மைகள் அனுட்டானங்களில் இல்லை அதைக் கைக்கொள்வதில் தான் தங்கியுள்ளது. எல்லாவற்றையும் இறைவனிடம் ஒப்படைத்துவிட்டு இன்பமாக வாழ்பவனே உண்மையான பக்தன். அப்படியான நீ கலங்கலாமா?'' என்று கேட்டார் சுவாமியார்.

தணிகாசலத்திற்கு நிம்மதி பிறந்தது.

**400. கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு;**
**மாடு அல்ல மற்றயவை.**

ஒருவனுக்குத் துன்பத்தைக் கொடுக்காத அழிவில்லாத செல்வம் கல்வியே ஆகும்.; மற்றச் செல்வங்கள் எதுவும் அத்தகைய சிறப்புடயவை அல்ல

### *களமின்றி*

''பெரும் கல்விமானான நீங்கள் பேசும் போது நான் மிகவும் ரசித்துக் கேட்பேன். உங்களின் பேச்சில் கல்வித்தத்துவம், உளவியல், சமயக்கோட்பாடுகள் யாவும் அடங்கியிருக்கும். ஆனால் இன்று நீங்கள் வேண்டா வெறுப்பாகப் பதிலுரை நிகழ்த்தியதாக நான் நினைக்கிறேன். உங்களுக்கு விருப்பமில்லா விட்டாலும் உங்கள் மீது அன்பு வைத்துள்ளவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். எனக்குக் கவலையாக இருக்கு'' என்றார் வேலாயுதபிள்ளை.

''வேலாயுதம் கவலைப்படக் கூடியதாக நான் ஒன்றும் பேசவில்லையே. எனக்கு விருப்பமில்லாவிட்டாலும், எனது அன்புக்குப் பாத்திரமானவர்களின் மனம் வேதனைப் படக் கூடாதென்று நினைப்பவன் நான். அப்படி என்ன பேசி விட்டேன்...?'' விக்னேஸ்வரமூர்த்தி கேட்டார்.

''நினைத்துப் பாருங்கள் புரியும்'' என்றார் வேலாயுதபிள்ளை.

விக்னேஸ்வரமூர்த்தி நினைத்துப் பார்த்தார்; ''அன்பானவர்களே, என் உயர்வுக்குக் காரணமானவர்களே, எனது உயர்வைத் தமது உயர்வாக எண்ணி மகிழ்ந்து என்னையும் மகிழ்விக்கும் பெரியோர்களே. இன்று ஒரு பெரு விழா எடுத்து என்னைக் கடமையுணர்வுள்ளவனாக்கியுள்ளீர்கள். ஒவ்வொருவனும் தான் தான் சிறந்த கல்வி மான் என்று நினைக்கிறான். அது தவறு. கற்றது கைம்மண்ணளவு. கற்காதது உலகளவு என்று பெரியவர்கள் கூறுவார்கள். அதனால் தான் வாழும் வரை கல்'' என்று பெரியவர்கள் சொல்லியுள்ளார்கள். ஒருவன் கற்ற கல்வியைப் பாராட்டலாம். ஆனால் அது பெருங்கல்வியென்று சொல்ல முடியாது. நான்கு நூல்களைக் கற்று, அவற்றில் உள்ள விஷயங்களை

மூளைக்குள் திணித்து வைத்து விட்டு பரீட்சை வினாக்களுக்கு விடையளிப்பதும், அதைப்பற்றிக் கட்டுரைகள் எழுதுவதும் கல்வியறிவு பெற்றவனின் செயலல்ல. தான் கற்றபடி நடப்பதும், கற்றவற்றைப் பிறருக்குக் கூறி அறியாமையில் மூழ்கியிருப்போரை விழிப்புறச் செய்வதும், கருத்துக்களை நுணுகி ஆய்வு செய்து புதுப் புதுக் கருத்துக்களை உருவாக்குவதும் தான் கல்வியறிவாளனின் பணி. வாழ்க்கையை நல்ல படி உருவாக்கக் கூடிய மனிதனை உருவாக்குதல் கல்வியாளனின் பணியாகும். கல்வியென்ற பெயரில் ஒரு புத்தகசாலை முழுவதையும் படித்து ஆய்வு செய்திருப்பவனை விடத் தான் படித்த நூல்களின் கருத்தை அவையில் நல்ல படி எடுத்துக் கூறக்கூடியவன் சிறந்த கல்விமான். நான் என்னைச் சிறந்த கல்விமான் என்று சொல்லமாட்டேன். நான் கற்க இன்னும் எவ்வளவோ இருக்கிறது. நான் கல்விப்புலத்தில் பணியாற்றுபவன். கல்விப்புலத்தில் கற்றவர்களே கடமை புரிகின்றனர். ஆயிரக்கணக்கான கல்விமான்களுடனும், இலட்சக்கணக்கான எதிர்காலக் கல்வி மான்களுடனும் ஓர் ஆசிரியன் பணிபுரிகிறான். அவன் கற்க வேண்டும், நிறையக் கற்க வேண்டும், தினமும் கற்க வேண்டும். இல்லாவிட்டால், சூதாடுவதற்குரிய ஆடுகளத்தை உண்டாக்கிக் கொள்ளாமல் சூதாட்டக் காயை உருட்டிச் சூதாடுவதைப் போன்றது. அதற்காகத் தான் நான் கற்றேன். இன்னும் கற்கவுள்ளேன். இந்நிலையில் இவ்விழா அவசரப்பட்டு எடுக்கப்பட்ட விழா வென்றே நான் கருதுகிறேன். இருந்த போதும் இங்கு பேசிய அறிஞர்கள் எல்லோரும் என்னை மேலும் மேலும் கற்குமாறு வேண்டிக் கொண்டனர். அதற்காகவும், கற்க வேண்டும் என்ற எனது ஆசையை மிக வலியுறுத்தியமைக்காகவும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன். நன்றி வணக்கம்''.

''என்ன வேலாயுதம் யோசிக்கிறாய்? நான் பேசியது பிழையே..?'' என்று கேட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

''வேலாயுதம் ஒவ்வொரு சொல்லையும் அலசி ஆராயும்'' என்றார் தனபாலசிங்கம்.

''விக்னேஸ்வரமூர்த்தி பேசியதில் தவறு எதுவும் இல்லை. அறிவு நிரம்புவதற்குரிய நூல்களைக் கற்காமல் கற்றோர் நிறைந்த அவையில் பேசுவது, சூதாடுவதற்குரிய களத்தை உருவாக்கிக் கொள்ளாமல் சூதாட்டக் காயை உருட்டி ஆடுவதைப் போன்றது என்பதற்காகத் தான் நான் கற்கிறேன் என்றார். அதை இன்றைய ஆசிரியர்களும் மாணவர்களும் கருத்தில் கொள்ள வேண்டும். அதை விட ஆடம்பரமோ, விளம்பரமோ இன்றி வாழும் அதிபருக்கு விழா எடுத்தது பிடிக்கவில்லை. இது அவரது சொந்தக்கருத்து அதை நாம் ஏற்கத் தான் வேண்டும்'' என்றார் சுவாமியார்.

சுவாமியாரின் பதில், வேலாயுதபிள்ளையின் மனத்தைச் சமாதானப்படுத்தவில்லை. எனினும் அவர் பேசாமல் இருந்தார். அவரது மனம் சமாதானப்படாது தவித்தது.

**401. அரங்குஇன்றி வட்டு ஆடி யற்றே நிரம்பிய
நூல்இன்றிக் கோட்டி கொளல்.**

அறிவு தரக் கூடிய நூல்களைக் கற்காமல் கற்றோர் சபையில் பேசுவது, சூதாட்டக் களம் இல்லாமல் காயை உருட்டிச் சூதாடுவதைப் போன்றது.

## *கல்லாதான் நிலை*

வேலாயுதபிள்ளை அதிகம் கற்றவர் அல்லர். கற்கும் போது கல்வியில் அதிக அக்கறை காட்டவில்லை. கா.பொ.த.சாதாரண வகுப்பு வரை அவர் படித்த போதும் சித்தியடையவில்லை. கற்காவிட்டாலும் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற விருப்பு உடையவர். அவர் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயப் பூசைக்குத் தவறாமல் செல்வார். ஸ்ரீனிவாசகன் சுவாமிகளின் அறிவுரைகளைத் தவறாது கேட்பார். சுவாமிகள் போதனை செய்யும் போது கூறும் சமயக்கருத்துக்களை விட மக்கள் சேவையைப் பற்றிக் கூறும் கருத்துக்கள் தான் அவரின் சிந்தையில் பதியும்; ''அன்பானவர்களே துன்பப்படும் மக்களின் துன்பங்களை நீக்க ஆவன செய்யுங்கள். அவர்களைத் துன்பங்களிலிருந்து விடுதலை பெறச் செய்வது உங்கள் கடமை. இன்பந்தரும் எல்லா ஆசைகளையும் சமுதாயத்தின் நன்மையை முன்னிட்டுத் தேவையான நேரங்களில் தியாகஞ் செய்தல் வேண்டும். நன்மையைத் தரும் செயல்களில் உறுதியான நம்பிக்கை வைத்தல் பொறாமையும் சந்தேகமு மின்றி உதவி செய்தல், நல்லவனாக இருந்து, நல்ல செயல்களுக்கெல்லாம் உதவி செய்தலை வழக்கமாக்கிக் கொள்ளல், இப்படிச் செய்தால் பெருமை அடையலாம்.''

''என்ன வேலாயுதம் யோசிக்கிறாய்'' என்று கேட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

''ஒன்றுமில்லை'' என்று தலையாட்டினார் வேலாயுதபிள்ளை.

''அதிபரை வேலாயுதபிள்ளை பெரிய கல்விமானாகக் கருதியிருக்கு. ஆனால் அதிபர் தான் பெரிய கல்விமானில்லை, இன்னும் படிக்க வேண்டும், பட்டங்கள் பெற்றால் மட்டும் அறிவாளியாகி விட முடியாது'' என்று பேசியதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லைப் போல் தெரிகிறது'' என்றார் தனபாலசிங்கம்.

''விஞ்ஞானத்துடன் இணைந்த சமய வாழ்வு தான் வாழ்க்கையின் அடிப்படை இலட்சியமாகும். விஞ்ஞானத்தைக் கற்றாலென்ன, கணிதத்தைக் கற்றாலென்ன, வானியலைக் கற்றாலென்ன, சமயம் கூறும் ஒழுக்கத்தைக் கைக்கொள்ளாவிட்டால் கல்வி கற்றதன் பயன் இல்லாமற் போய் விடும். எல்லா அறிவும் மனிதனுக்குள்ளே இருக்கிறது. அந்த அறிவை வெளிக்கொணர்வது ஆசிரியனது பணி. வெளிக்கொணர்ந்த அறிவைப் பண்படுத்தி சமூகத்தின் முன்னேற்றத்திற்காகச் செயற்படுத்துவது சமயம். ஒழுக்கம் தான் எல்லாவற்றிற்கும் உயிர் நாடி'' சுவாமியார் அரசின் கீழ் அருளுரை வழங்கிக் கொண்டிருந்தார். அவை வேலாயுத பிள்ளளையின் காதில் ஒலித்தன. தான் கற்கா விட்டாலும் ஒழுக்கமுள்ளவனாகவும் சேவையாற்றுபவனாகவும் இருக்க வேண்டுமென்பதே வேலாயுதபிள்ளையின் இலட்சியமாகும். அதனால் அவர் எப்பொழுதும் சேவையைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தார்.

''என்னடாப்பா நாங்கள் கதைக்கிறோம். நீ பேசாமல் இருக்கிறாய்?'' என்றவாறு வேலாயுத பிள்ளையின் தோளில் கையை வைத்தார் தனபாலசிங்கம்.

''அதிபர் எதைப் பேசினாலும் ஓர் அர்த்தத்துடன் தான் பேசுவார். தான் கல்விமான் இல்லை என்று சொன்னதிலும் ஓர் அர்த்தம் இருக்கும்'' என்ற வேலாயுதபிள்ளை நிமிர்ந்து பார்த்தார். சுவாமியார், ஞானப்பிரகாசம்,

சிவசுந்தரமூர்த்தி, ரவீந்திரன், வத்சல்யன், நாமகள், சுந்தரலிங்கம் போன்ற பெரும் பெரும் கல்விமான்கள் விக்னேஸ்வரமூர்த்தியைச் சூழ இருந்தனர். அவருக்கு சுவாமியார் ஒரு நாள் பேசியது நினைவுக்கு வந்தது; ‘‘கற்றவர்கள் நிறைந்த சபையில் கல்லாதவன் ஒன்றைச் சொல்ல விரும்புவது, மார்பகங்கள் இரண்டும் இல்லாதவள் பெண்தன்மையை விரும்புவதைப் போன்றதாகும்’’ அதனால் வேலாயுதபிள்ளை அதிபர் பேசிய பேச்சிற்கு விளக்கம் தெரிந்திருந்தும் அதைச் சொல்ல விரும்பவில்லை; ‘‘வழக்கமாக அதிபர் மேடையில் பேசினால் கேட்டுக் கொண்டே இருக்கலாம். அவரது பேச்சைக் கேட்காமல் விட்டால் கேட்கவில்லையே என்ற கவலை மனதில் எழும். ஆனால் இன்று அதிபர் உற்சாகமில்லாமல் பேசினார். நாம் அன்பு மிகுதியால் செய்தவற்றைத் தனக்கு விருப்பமில்லை என்றார். அது தான். அதை நான் மறந்திட்டன்’’ என்றார் வேலாயுதபிள்ளை.

சிலகணங்கள் யாரும் எதுவும் பேசவில்லை. மேலும் சில கணங்கள் தாமதித்து சுவாமியார் சொன்னார்; ‘‘வேலாயுதபிள்ளை சொல்வதில் நியாயமிருக்கு. இந்த விழாவை நாம் விக்னேஸ்வரமூர்த்தி பட்டம் பெற்றதற்காகக் கொண்டாடவில்லை. கற்றவர்கள் அதிகரிக்க வேண்டும். கற்றோர் சபையில் எவனாக இருந்தாலும் துணிவுடன் தலை நிமிர்ந்து பேச வேண்டும். என்ற பல நோக்கங்களுக்காகத் தான் கொண்டாடினோம். அதை அதிபர் புரிந்து கொள்ளத் தவறி விட்டார் என வேலாயுதம் நினைக்கிறார். அது தான் அவரது கவலைக்குக் காரணம். அதை மறந்து விடு வேலாயுதம்’’.

வேலாயுதபிள்ளை பலமாகச் சிரித்தார். அவர் அப்படிச் சிரித்தால் மிகவும் மகிழ்வுடன் இருக்கிறார் என்று அர்த்தம்.

**402. கல்லாதான் சொல்கா முறுதல் முலை இரண்டும்**
**இல்லாதாள் பெண்காமுற் றற்று.**

கல்வி அறிவு இல்லாதவன் கற்றோர் நிறைந்த சபையில் பேச விரும்புவது, முலைகள் இரண்டும் இல்லாதவள் பெண் தன்மையை விரும்புவதைப் போன்றதாகும்.

## ***நல்லவர்***

கணபதிமத்திய மகாவித்தியாலயத்தில் தமிழ்விழா ஒன்று கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பழந்தமிழ் நூல்களை மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் அறிமுகப்படுத்துதல்; தமழுக்கும் சைவத்திற்கும் தொண்டு செய்த பெரியார்களின் வரலாற்றையும் அவர்கள் செய்த தொண்டுகளையும் மாணவர்களுக்கும் மக்களுக்கும் எடுத்துரைத்தல். அது தொடர்பான பேச்சுக்கள், பட்டிமன்றங்கள், விவாதங்கள், வில்லுப்பாட்டு, நாட்டுக்கூத்து, இசைநாடகம் என்பன வைப்பது தொடர்பான கூட்டம் அன்று நடைபெற்றது. அக்கிராமத்தில் உள்ள கற்றவர்களும், குடாநாட்டில் உள்ள கற்றவர்களும் பெரியவர்களும் அக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். விக்னேஸ்வரமூர்த்தி அக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கினார். கணபதிமத்திய மகாவித்தியாலயத்தில் தணிகாசலமும் வேலாயுதபிள்ளையும் இல்லாமல் எந்த வைபவமும் நடைபெறாது.

‘‘இன்று தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டு செய்த பெரியவர்களின் பெயர்களை நாம் மாணவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அத்துடன் பழந்தமிழ் நூல்களைக் காட்சிப்படுத்தி, அவை கூறுபவற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்லல் வேண்டும். அறம், நீதி ஒழுக்கத்தைப் போதிக்கும் நூல்கள்; அந்நூல்கள் கூறும் கருத்துக்கள் புறம் என்று சொல்லப்படுகின்ற பழைய மன்னர்களின் போர், வரலாறு போன்ற கருத்துக்களைச் சொல்லும் நூல்களை இன்று பாடசாலைகளிலோ, பல்கலைக்கழகங்களிலோ கற்பிப்பதில்லை. அதனால் இந்நூல்களில் பாண்டித்தியம் பெற்ற அறிஞர்களை வரவளைத்து அவர்களைக் கொண்டு எம்மக்கள் அவற்றை அறியச் செய்தலே இவ்விழாவின் நோக்கமாகும். எமது பிரதேசத்தில் உள்ள கற்றறிந்தவர்களை இங்கு அழைத்துள்ளோம். அவர்கள் எமக்குத் தகுந்த ஆலோசனை வழங்க வேண்டும்’’ என்று கூறி விட்டு அமர்ந்தார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘இன்று கல்வியில் ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. அத்துடன் பாடசாலையையும், ஆசிரியர்களையும் நம்பியிராது தனியார் கல்வி நிலையங்களையே இன்றைய கல்வி நம்பியிருக்கிறது. ஒரு மனிதன் தன்னை நம்பி வாழ்க்கையை நடத்தக் கூடிய கல்வி முறையை உருவாக்குதல் வேண்டும். ஆங்கிலேயர் எமது நாட்டிற்கு வரு முன் எமது வாழ்விற்குத் தேவையான சகல பொருட்களிலும் எமது மக்கள் தன்நிறைவடைந்திருந்தனர். சுத்தமான காற்றையும் நீரையும் உணவையும் எமது மக்கள் பெற்றனர். உறுதியான நல்லொழுக்கத்துடனும் பற்றுடனும் பிறருக்கு உதவி செய்யும் மனப்பாங்குடனும் எமது மக்கள் வாழ்ந்து வந்தனர். கலை கலாச்சாரம் எமது மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தவே உதவின. இதனால் தன் வாழ்க்கையை தானாகவே ஒவ்வொருவரும் உருவாக்கிக் கொண்டனர். அப்படி வாழ்ந்த எமது மக்களின் வாழ்க்கை முறையை இன்றைய மக்களுக்கு நாம் தெரியப்படுத்த வேண்டும்’’ என்றார் சுவாமியார்.

பேராசிரியர் சிவலிங்கராசா தமிழ் நூல்களையும் தமிழ் வளர்த்த பெரியார்களையும் பட்டியலிட்டு மாணவர்களுக்குக் கொடுத்து அவற்றில் தேர்வு நடத்த வேண்டு மென்று கூறினார்.

ஒவ்வொரு பெரியார்களும் தத்தமது ஆலோசனைகளைக் கூறிக் கொண்டிருந்தனர். வேலாயுதபிள்ளையும் தணிகாசலமும் முன்வரிசையில் அருகருகே அமர்ந்திருந்து சபையில் பெரியவர்கள் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தனர். அதைக் கவனித்த சுந்தரலிங்கம் சொன்னார்; ‘‘வேலாயுதமும் தணிகாசலமும் பேசாமல் இருக்கிறியள், உங்கடை கருத்தைச் சொல்லுங்கோ’’.

வேலாயுதபிள்ளை முழுமையானதொரு சிரிப்புச் சிரித்தார். சுவாமியார் கோயிலில் ஒரு முறை அருளுரையின் போது சொன்னது அவரது ஞாபகத்திற்கு வந்தது. விசேட பூசைகள், நவராத்திரி, சிவராத்திரி போன்ற விசேட தினங்களில் சிவசுந்தரமூர்த்தியும் அவனது நண்பர்களும் விதண்டாவாதம் பேசி அந்நிகழ்வுகளைக் குழப்புவார்கள். அதை மனதில் வைத்துச் சுவாமியார் அருளுரை வழங்குவார்; ‘‘கல்வியறிவில்லாதவர்களின் மத்தியில் கற்றவன் அமைதியாக இருத்தல் வேண்டும். அப்பொழுது தான் அவனுக்குக் கௌரவம் உண்டாகும். அதே போலக் கற்றவர்களின் சபையில் கல்லாதவன் அமைதியாக இருந்தால், கல்லாதவர்கள் மிகவும் நல்லவர்களாகக் கணிக்கப்படுவார்கள். அத்துடன் கற்றவர்களின் மனமறிந்து அளவோடு பேசக் கற்றுக் கொள்ளல் வேண்டும். அளவுக்கதிகமாகப் பேசும் கற்றவனும் தன் கௌரவத்தை இழப்பான்’’.

“நாம் பாடசாலைக்கும் கோயில் நிதிசேகரிப்புகளுக்கும் அதிபருக்கு உதவியாக இருக்க வேண்டுமே தவிர, அவர்களுடன் சமமாக இருந்து ஆலோசனை சொல்லுமளவிற்கு இருக்கக் கூடாது” என்று தணிகாசலம் முன்பொரு முறை சொன்னதும் அவரது நினைவுக்கு வந்தது.

“நீங்கள் திட்டமிடுங்கோ. நாங்கள் நல்ல முறையில் செயற்பர்றம்” என்றார் வேலாயுதபிள்ளை.

**403. கல்லா தவரும் நனிநல்லர் கற்றார் முன்
சொல்லாது இருக்கப் பெறின்.**

கற்றவர் அவையிலே பேசாது அமைதியாக இருந்தால், கல்லாதவரும் மிகவும் நல்லவராகப் போற்றப்படுவார்.

## *ஏற்றுக் கொள்ளார்*

சிவசுந்தரமூர்த்தி எழுந்து சொன்னார்; “பருத்திமலையில் ஆரூரன் என்றொரு சொற்பொழிவாளர் இருக்கிறார். நான் அவரின் நாலைந்து நிகழ்வுகளில் பங்கு பற்றியுள்ளேன். மிகவும் அற்புதமாகப் பேசுகிறான். பெரியபுராணம், விநாயகபுராணம், கந்தபுராணம் பற்றிய பேச்சுக்களை நான் கேட்டுள்ளேன். அவரை எமது விழாவுக்கு அழைத்தாலென்ன?” .

விக்னேஸ்வரமூர்த்தி ரவீந்திரனைப் பார்த்தார். ரவீந்திரனும் சிவலிங்கராசாவும் சுநதரலிங்கமும் உதட்டுக்குள்ச் சிரித்தனர்.

“கற்றவர்களும் சில வேளைகளில் ஆராயமல் பேசி விடுகிறார்கள். ஆரூரன் கா.பொ.த.சாதாரண பரீட்சை கூடச் சித்தியடையவில்லை. தான் அறிந்த விஷயங்களைக் கோயில்களிலும், சனசமூகநிலைய விழாக்களிலும் மனனஞ் செய்து சொல்வதைப் போலச் சொல்கிறான். அவனது பேச்சில் பல தவறுகள் இருப்பதாகக் கற்றறிந்தவர்கள் சொல்கிறார்கள். அவன் பண்டிதர் கந்தையாவிடம் அண்மையில் சென்று நாயன்மார்களைப் பற்றி எழுதி வாங்கிச் சென்று அதை மனனஞ் செய்து உரையாற்றி வருகிறான். கோயில் திருவிழா வொன்றில் பத்து நாட்களும் தொடர் பிரசங்கம் செய்தவன். கேட்டுக் கொண்டிருந்தவர்கள் ஏதோ விளக்கம் கேட்க அதை அவன் புரிந்து கொள்ளாது தவறான விடை சொல்லியிருக்கிறான். அதனால் கோயிலில் சிறு சலசலப்பு ஏற்பட்ட தென்று நான் கேள்விப்பட்டேன்” என்றார் தனபாலசிங்கம்.

“சிவசுந்தரமூர்த்தி இப்போ பழையபடி குடிக்கிறதாகக் கேள்விப்பட்டேன். “மகளின் திருமணம் முடிந்து விட்டது. இனிப்பிரச்சினை இல்லை முந்திக் குடித்தனான். இப்போ குடியாமல் இருக்க உடம்பு தாங்குதில்லை” என்று தணிகாசலத்திற்குக் கூறினவராம்” என்றார் வேலாயுதபிள்ளை.

“மேடையில் பேசும் பலருக்குப் பரந்த அறிவு இல்லை. சொல்வன்மையால் சமாளிக்கிறார்கள். பேசுபவன் பல நூல்களைக் கற்றிருக்க வேண்டும். கற்றவற்றை மக்களுக்கு விளங்கக் கூடியவாறு கவர்ச்சியாகச் சொல்ல வேண்டும். ஆரூரன் அடுக்கு வசனத்தில் பேசுகிறானே தவிர பொருள் இல்லை.

குரல்வளம் நல்லாயிருக்கு. தமிழ் விழாவுக்கு அவனைப் பேச அழைத்தால் யாராவது ஓர் அறிஞர் ஏதாவது வினா எழுப்பினால் இவன் தடுமாற எமது மனம் போய்விடும்'' என்றார் தனபாலசிங்கம்.

''ஆரூரனின் கந்தபுராணம் பற்றிய பேச்சை நான் அம்மன் கோயிலில் கேட்டேன். மிகவும் நன்றாக இருந்தது. சிவசுந்தரமூர்த்தி ஐயா சொல்வதைப் போல ஆரூரனையும் அழைக்கலாம்'' என்றான் கணேசமூர்த்தி. கணேசமூர்த்தி பாடசாலைக்குச் செல்லும் நாட்களில் குடித்துக் கொண்டு திரிந்தவன். பெற்றோர் தேடிய சொத்திருப்பதால் பெரிய மனிதனைப் போல வாழ்கிறான்.

கணேசமூர்த்தியின் கதையைக் கேட்ட வேலாயுதபிள்ளை சிரித்தவாறு எழுந்து விக்னேஸ்வரமூர்த்தியின் அருகில் வந்து சொன்னார்; ''இந்தக் கூட்டத்திற்குக் கணேசமூர்த்திக்கு அறிவித்திருக்கக் கூடாது. கந்தையாப்பண்டிதர் எழுதிக் கொடுத்த ஒற்றையை ஆரூரன் பேசும் போது அடிக்கடி எடுத்துப் பார்க்கிறான். மேடைகளிலை பேசினாப் போலை எல்லாரும் அறிவாளிகளே. கணேசமூர்த்தி படித்திருந்தால் இப்படிக்கதைக்காது'' என்றார் வேலாயுதபிள்ளை.

''படிக்காதவன் கவர்ச்சியாகப் பேசினால் அது அறிவாகி விடுமா? நானும் அவன்ரை பிரசங்கத்தைக் கேட்டனான். சும்மாய் வார்த்தை அலங்காரமே தவிர கருத்து இல்லை. ஐந்தாம் ஆறாம் வகுப்புப் பிள்ளைகளுக்குக் கதை சொல்லுற மாதிரிக் கதை சொல்கிறான்'' என்றார் தனபாலசிங்கம்.

''இப்பொழுது நாங்கள் இதற்கென ஒரு நிர்வாக சபையைத் தேர்ந்தெடுப்போம். முதல் நாள்க் கூட்டத்தில் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கக் கூடாது. நிர்வாக சபையைத் தேர்ந்தெடுத்த பின்பு தான் நடைமுறையைப் பற்றிச் சிந்தித்து முடிவெடுத்தல் வேண்டும்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. தலைவராக விக்னேஸ்வரமூர்த்தியும் செயலாளராக ரவீந்திரனும் பொருளாளராகத் தனபாலசிங்கமும் ஏகமனதாகத் தெரிவாகினர். ஆறு பேர் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சிவசுந்தரமூர்த்தியை நிர்வாக சபைக்குத் தெரிவு செய்யவில்லை. அது அவருக்குச் சற்றுக் கோபத்தைக் கொடுத்த போதும் எதுவும் பேசமுடியாததால் எழுந்து சென்றார்.

சிவசுந்தரமூர்த்தியை நிர்வாகத்துள் தெரிந்தால் விழாவுக்கு ஆரூரனை அழைக்கும் படி கரைச்சல் கொடுத்துக் கொண்டிருப்பார். அதனால் தான் நான் தெரிவு செய்யவில்லை'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''வழமையாக நிர்வாக சபை தெரிவு செய்யு முன் யார் யாரைத் தெரிவு செய்ய வேண்டும் என்று நீங்கள் சொல்வீர்கள். இன்று நீங்களே தெரிவு செய்து விட்டீர்கள்'' என்று அதிபரைப் பார்த்துச் சொன்னார் வேலாயுதபிள்ளை.

**404. கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயினும்**
**கொள்ளார் அறிவு உடையார்.**

கல்வி அறிவில்லாதவன் சில துறைகளில் தனது அறிவைக் காட்டினாலும் கற்றவர்கள் அதனை அறிவுடைமை யென ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

## *பேச்சினால் கெடும்*

விக்னேஸ்வரமூர்த்தி பாடசாலையில் இருந்து புறப்பட்டு நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வரும் போது ஆரூரன் எதிரே வந்தான்; ''ஐயா உங்களிடம் தான் ஒரு அலுவலாக வந்தேன்''.

விக்னேஸ்வரமூர்த்தி அவனை நிமிர்ந்து பார்த்தார். வெள்ளை வேட்டியும் வெள்ளைச் சட்டையும் அணிந்திருந்தான். அழகான கறுப்புக் கண்ணாடி அவனது சிவந்த முகத்திற்கு எடுப்பாக இருந்தது. சிவப்பு நிறமும் பச்சை நிறமும் உடைய பெரிய கரையுடைய சால்லையொன்று தோளில் இருந்தது. நெற்றியில் திரிபுண்டரமாகத் திருநீறு தரித்திருந்தான். நெற்றியின் மத்தியில் வட்டவடிவமான சந்தணப் பொட்டு அதன் மத்தியில் அழகான குங்குமப் பொட்டு. மொத்தத்தில் ஒரு பழுத்த சைவப்பழம் போலத் தோன்றினான் ஆரூரன்.

''நான் மகாகணபதி ஆலயத்திற்குச் செல்கிறேன். இரவு ஆறுமணிக்கு வீட்டுக்கு வாரும்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

ஆரூரன் அவரின் பின்னால் கோயிலுக்கு வந்தான். விக்னேஸ்வரமூர்த்தி மேற்சட்டையைக் கழற்றி விட்டுக் கோயிலின் முன்பாக இருந்த குழாய் நீரில் கால்களைக் கழுவி விட்டுத் திரும்ப, கோயிலின் முன்னால் உள்ள கடைக்காரன் கற்பூரத்துடனும் தீப்பெட்டியுடனும் நின்றான். விக்னேஸ்வரமூர்த்தி.பணத்தைக் கொடுத்து கற்பூரத்தை வாங்கினார். அவன் கொண்டு வந்த சில்லறைக் காசில் மிகுதிப் பணத்தைக் கொடுத்தான். விக்னேஸ்வரமூர்த்தி கோயிலுக்கு வரும் போதெல்லாம் கற்பூரம் கொழுத்துவார். அவரிடம் கல்வி கற்ற கடைக்காரன் அவரைக் கடைக்கு நடந்து வர விட மாட்டான். எவ்வளவு மக்கள் நின்றாலும் விக்னேஸ்வரமூர்த்தியைக் கண்டவுடன் கற்பூரத்துடன் வந்து விடுவான்.

கற்பூரத்தைக் கொழுத்தி அதைத் தொட்டு வணங்கி விட்டு, கோயில் மாடத்தில் இருந்த திருநீற்றை எடுத்துப் பூசிக் கொண்டு, சுவாமியார் இருக்கும் அரசமரத்தை நோக்கிச் சென்றார் விக்னேஸ்வரமூர்த்தி. சுவாமியாருடன் தமிழ் விழா உறுப்பினர்கள் பலர் கதைத்துக் கொண்டிருந்தனர். விக்னேஸ்வரமூர்த்தியைப் பின் தொடர்ந்து ஆரூரன் சென்றான். விக்னேஸ்வரமூர்த்தி சுவாமியாரின் பாதங்களைத் தொட்டு வணங்கினார். பின் அவரின் அருகில் சென்றமர்ந்தார். ஆரூரனை அங்கிருந்தவர்கள் கவனிக்கவில்லை. அவன் சுவாமியாருக்கு எதிரே நின்றான்.

''பேராசிரியர் சிவலிங்கராசா சிறிது நேரத்திற்கு முன்பு வந்து தமிழ் விழா சம்பந்தமான கோவை ஒன்றைத் தந்து விட்டுச் செல்கிறார். பழந்தமிழ் நூல்களின் பெயர்களும் அவற்றை எழுதிய பெரியார்களின் பெயர்களுமுள்ளன. ஆறுமணிக்குத் திரும்பிவருவதாகச் சொன்னார்''. என்ற சுவாமியார் சிறிது நேரம் அமைதியாக இருந்தார். பின்; ''நல்ல தமிழ்நூல்கள் பல அவைதிக சமயத்திற்குரியன. எனவே நாம் தமிழுக்குத் தொண்டாற்றிய சகல சமய அறிஞர்களையும் சேர்த்தால் தான் விழா முழுமை பெறும் என்று சொன்னார்''.

''திருக்குறளை எல்லோரும் சைவ சமயநூல் என்கிறார்கள். ஆனால் திருக்குறள் சமணசமய நூல். அந்த நாளில் சைவத்தில் இருந்த கொடுமை

காரணமாகத் தான் வள்ளுவர் சைவத்தை விட்டுச் சென்று சமணத்தில் சேர்ந்தார். இது போலப் பல சம்பவங்களை எடுத்துச் சொல்லலாம். புத்தரும் சைவத்தில் இருந்து வெறுப்புக் காரணமாகப் பிரிந்து சென்றவர் தானே. திருக்குறள், மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற சிறந்த நூல்கள் சமணத்திலும் பௌத்தத்திலும் எழுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் சைவர்கள்'' என்றான் ஆரூரன்.

சுவாமியார் புன்னகைத்தார்; ''மகனே எதையும் ஆதாரமின்றிப் பேசக்கூடாது. திருக்குறள் எந்தச் சமயத்திற்குரியது என்பது பிரச்சினையாக இருக்கலாம். ஆனால் எந்த மொழிக்குரியது என்பதில் பிரச்சினை இல்லையே...? அத்துடன் ஆராய்ச்சியாளர்கள் தாம் எடுக்கும் முடிவுகளுக்கு ஆதாரமாகச் சான்றுகள் பலவற்றைச் சொல்கிறார்கள். அதைச் சிலர் ஏற்பார்கள். பலர் ஏற்கமாட்டார்கள். இவையெல்லாம் எமக்குத் தேவையில்லை. ஒவ்வொரு நூலிலும் கூறப்பட்ட நல்ல கருத்துக்களை மக்களுக்குத் தெரியப்படுத்துவதே இன்றைய கற்றவர்களின் பணி. மற்றவர்கள் ஒன்றைப்பற்றிக் கூறுபவற்றை நீ உண்மை யென்று நம்பாதே. அப்படி நம்பினால் உன்னிடம் பலவீனமும் அறியாமையும் இருக்கிறதென்று அறிஞர்கள் முடிவெடுப்பார்கள். மற்றவர்கள் சொல்வதை ஏற்காது ஆதாரங்களைத் தேடிக் கண்டு பிடி. அதன் பின் பேசு. எப்பொழுதும் மற்றவர்கள் சொல்வதைக் கிளிப்பிள்ளை போல ஒப்புவிப்பவன் கல்விமானாக இருக்க மாட்டான். ஒருவன் தன்னை அறிவுள்ளவன் போலக் காட்டிக் கொள்ளும் தன்மை கற்றவர் முன் அவன் வாய் திறந்து பேசும் போது வெளிப்பட்டு விடும்'' என்றார் சுவாமியார். ஆரூரன் எதுவும் பேசவில்லை.

**405. கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாட்ச் சோர்வு படும்.**

கல்லாத ஒருவன் தன்னை அறிவாளி யென நினைத்துக் கொள்ளும் தன்மை, கற்றோர் அவையில் பேசும் போது அந்தப் பேச்சினால் கெடும்.

### ***களர் நிலம்***

''நீ எதைக் கற்றாய். எமது பாடசாலையில் இரண்டு தரம் கா.பொ.த.சாதாரணதரம் எடுத்தும் ஒரு பாடம் கூடச் சித்தியடையவில்லை. அதன் பின்பும் பல முறை பரீட்சை எடுத்தனி. இருந்தும் சித்தியடையவில்லை. பெரும் பண்டிதரான கந்தையாவின் வீட்டுக்குச் சென்று அவரிடம் நான்கு சொற்கள் கற்றவுடன் நீ பண்டிதனாகி விட்டாயா? முதலில் கற்றவன் பெரியவர்கள் முன் பேசக் கற்றுக் கொள்ளல் வேண்டும். அத்துடன், தான் கற்றவற்றைப் பேசு முன் அதைப் பேசும் வழிகளைப் பற்றி அறிந்து கொள்ளல் வேண்டும். திருக்குறளைப் பற்றிப் பேசும் நீ இரண்டு குறள் சொல்பார்ப்போம்.'' என்றார் தணிகாசலம் கோபமாக.

தணிகாசலம் அப்படிக் கதைப்பார் எனச் சற்றும் எதிர்பாராத ஆரூரன் தடுமாறிப் போனான். அவனால் பேசமுடியவில்லை. உடல் வியர்த்தது. அதைக் கவனித்த வேலாயுதபிள்ளை சொன்னார்; ''ஆரூரா சுவாமியார் நிறையப் படித்தவர். தற்பொழுதும் படித்துக் கொண்டிருக்கிறார். நாம் அவரிடம் அறிந்தவற்றைச் சொல்லி விளக்கம் கேட்கலாமே தவிர வாதிடல் கூடாது. திருக்குறள் எந்த ஆண்டு இயற்றப்பட்டதென்று சொல்பார்ப்போம். அதை விடப்

பல புலவர்களும் அறிஞர்களும் திருக்குறளைப் பற்றிப் போற்றிப் புகழ்ந்து கூறியுள்ளனர். அவர்களுள் மிகவும் பிரபலமான புலவர் ஔவையார். ஔவையாரைத் தெரியாத சிறு பிள்ளை கூட இருக்கமாட்டாது. நீ இப்பொழுது ஔவையார் திருக்குறளைப் பற்றிக் கூறிய பாடலைச் சொல்லு பார்ப்போம்'' என்றார்.

ஆரூரனுக்குப் பொல்லைக் கொடுத்து அடிவாங்கியதைப் போல இருந்தது. அவமானத்தால் அவனின் உடல் கூசியது. மெல்ல அவ்விடத்தை விட்டுப் புறப்பட ஆயத்தமானான்.

''கல்லாதவனை விட, கற்றவனைப் போல நடிக்கும் கல்லாதவனால் சமூகத்திற்குப் பல கேடுகள் உண்டாகும். நீ நூலின் பொருளையும் அது கூறும் தத்துவத்தையும் அறியாதவர்களுக்குத் திரிபுபடுத்திக் கூறுவதால் அவர்கள் அதை உண்மையென நினைத்துத் தாமும் அக்கருத்தை மற்றவர்களுக்குக் கூறுகிறார்கள். இது எமது கிராமத்தில் பெரும் பிரச்சினை. நீ இனிமேல் கோயில்களில் பிரசங்கம் செய்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்'' என்றார் தணிகாசலம்.

''கல்லாதவர்கள் உயிரோடு இருக்கிறார்கள் என்று சொல்லும் நிலையில் தான் இருக்கிறார்கள். இவர்கள் ஒன்றும் விளையாத களர் நிலத்திற்கு ஒப்பானவர்கள். களர்நிலத்தில் விழும் பயன் தரும் வித்துக்கள் முளைப்பது கூட இல்லை. மக்களுக்குத் தீங்கு தரும் செடிகள் சிலசமயம் முளைத்து மக்களுக்குத் தீங்கு செய்து கொண்டிருக்கும். நீ களர் நிலத்தில் முளைத்துப் பயிராகிப் பூத்துக் காய்த்த முட்செடி. அதனால் தான் மக்களுக்குத் தீமை தரும் சொற்களைக் கூறுகிறாய்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''மகனே ஒருவன் பலர் குழுமியிருக்கும் அவையில் பேசு முன் தான் பேச எடுத்துக் கொண்ட விடயத்தைப் பலமுறை சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். அந்த விடயம் பற்றி நன்கு அறிந்தவர்களிடம் அபிப்பிராயம் கேட்டல் வேண்டும். கல்விகற்பதற்கு வயது பார்க்கத் தேவையில்லை. சாகும் வரை கற்றல் வேண்டு மென்று நமது பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. எனது குருவான வைத்திலிங்கம் தான் ஐந்தாம் வகுப்பு வரை தான் கற்றதாகச் சொல்வார். அவர் பாடசாலைக்குச் சென்று கற்றது தான் ஐந்தாம் வகுப்பு. அதன் பின் அவர் கற்றது கணக்கிலடங்காது. பாடசாலைக்குச் சென்று தான் கல்வி கற்க வேண்டுமென்றில்லை. பலர் வீட்டிலிருந்தே கற்று மேதைகளாகியுள்ளனர். நீ கற்க வேண்டும் என்று நினை. கற்க முன்பு கண்டபடி பேசாதே. அது உனக்கு மட்டும் அவமானமல்ல பெரும் அறிஞரான பண்டிதரையும் சந்தேகப்படவைக்கும். கல்லாதவனால் சமூகத்திற்கு எந்த விதமான நன்மையும் ஏற்படப் போவதில்லை. நமது வாழ்க்கை சிறந்ததாகவும் தூய்மையானதாகவும் இருக்க வேண்டுமானால் கற்க வேண்டும்; தொடர்ந்து கற்க வேண்டும். ஒரு விடயத்தை திரும்பத் திரும்பக் கற்றால் அதன் பொருளை பல்வேறு விதங்களில் அறிந்து கொள்ள முடியும். முதல் முறை விளங்காதது திருப்பவும் படிக்க விளங்கும். உன்னை நீ பரிபூரணனாக்கிக் கொள்ள விரும்பினால் கண்டபடி கதைப்பதை விட்டு விட்டு கல்'' என்றார் சுவாமியார்.

ஆருரன் எதுவும் பேசாமல் அவ்விடத்தைவிட்டு மெல்ல நகர்ந்தான்; ‘‘பல இடங்களிலும் மேடைகளில் ஏறிச் சனத்தைக் குழப்புறான். இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால் சனம் கெட்டுப் போம்’’ என்றார் தணிகாசலம்.

**406. உள்ளென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர் அனையர் கல்லா தவர்.**

கல்லாதவர்கள் உயிரோடு இருந்த போதும், அவர்கள் பயிர்கள் விளையாத களர் நிலத்தைப் போன்றவர்கள் ஆவர்.

### *மண்பொம்மை*

சுவாமியார் சொன்னது ஆருரனுக்குப் பிடிக்கவில்லை; ‘‘நான் படிக்காதவன் என்று பலர் நினைக்கிறார்கள். பாடசாலைக்குச் சென்று கல்வி கற்று பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்றால் தான் அறிவாளிகள் என்று சிலர் நினைக்கிறார்கள். எமது கிராமத்தில் எத்தனை பட்டதாரிகள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் மேடை ஏறிப் பேசலாம் தானே. பேசத் தெரியாத கல்விமான்கள் பேசும் என்னைக் குறை சொல்கிறார்கள்’’ என்று எண்ணியபடி பண்டிதர் கந்தையாவின் வீட்டுக்கு வந்தான் ஆரூரன்.

வேப்பமரநிழலில் சாய்வு நாற்காலியொன்றில் சாய்ந்து ஓய்வாகப் படுத்திருந்து கலிங்கத்துப் பரணி என்ற பழந்தமிழ் நூலைப் படித்துக் கொண்டிருந்த பண்டிதர் ஆரூரன் வந்ததைக் கவனிக்கவில்லை. ஆரூரன் சிறிது நேரம் பேசாமல் நின்றான். பண்டிதர் படிப்பில் ஆழ்ந்திருந்தமையால் வெகுநேரஞ் சென்றும் அவனைப் பார்க்கவில்லை.

‘‘ஐயா’’

புத்தகத்தின் மேலால் கண்களை உயர்த்திப் பார்த்தார் பண்டிதர். ஆரூரனின் முகம் சற்றுக்கலவரமடைந்து கறுத்திருப்பதைப் போல இருந்தது.

‘‘ஐயா’’ என்ற ஆரூரன் சிறிது நேரம் எதுவும் பேசாமல் நின்றான். அவனது நிலையைக் கண்டதும் பண்டிதருக்கு அவன் யாரோ ஒரு கற்றவருடன் முரண்பட்டுக் கொண்டு வந்திருக்கிறானென்று புரிந்து விட்டது.

‘‘என்ன நடந்தது?’’

‘‘சுவாமியார் பலரின் முன் நிலையில் என்னை அவமானப்படுத்தி விட்டார். கல்லாதவன் தன்னை அறிவுடையவன் போலக் காட்டிக் கொள்ளும் தன்மை, கற்றவர் முன்னே அவன் வாய்திறந்து பேசும் போது அந்தப் பேச்சினால் தெரிந்து விடும்’’ என்றார். நான் திருக்குறளைப் பற்றி நீங்கள் சொன்ன கருத்துக்களைத் தான் சொன்னேன்’’.

“கற்றவர்கள் இருக்கும் அவையில் அறிஞர்கள் கூடத் தேவையின்றிப் பேசக் கூடாது. கருத்துக்களைக் கேட்டால் தான் கூறுதல் வேண்டும். அத்துடன் நூலின் பொருளைத் தெளிவாக அறிந்த பின்பு தான் பேசவேண்டும். வெள்ளாடுகள் போல நுனிப் புற்களை மேய்ந்து விட்டுக் கற்றோர் அவையில் பேசக்கூடாது. சபையை நுட்பமாய் அறியும் தன்மையில்லாதவனின் அழகிய தோற்றம், மண்ணால் உருவாக்கப்பட்ட அழகான பொம்மையைப் போன்றது” என்று கற்றறிந்தவர்கள் கூறுவார்கள். சுவாமியார் அருட்கடல். நான் பலமுறை அவரிடஞ் சென்று எனக்கு விளங்காத பலவற்றைக் கேட்டறிந்துள்ளேன். அவர் தமிழையும் சமயதத்துவங்களையும் கரைத்துக் குடித்தவர். முக்காலமும் உணர்ந்தவர். அவரெதிரே கற்றுணர்ந்தவர்களே பேசப்பயப்படுவார்கள். நீ ஏன் பேசினாய்?” என்று கேட்டார் பண்டிதர்.

“பேராசிரியர் சிவலிங்கராச கருத்தைக் கூறினார். அதற்கு விளக்கம் கூறினேன்?”

“பேராசிரியரின் கருத்துக்கு விளக்கம் கூறுமளவிற்கு வந்து விட்டாயா மூடனே. உனக்குத் திருக்குறளைப் பற்றி என்ன தெரியும்?. கற்காத நீ, பேசவேண்டு மென்று ஆசைப்பட்டதால் உனது அறிவுக்கு ஏற்ற முறையில் சில விஷயங்களை எழுதித் தந்தேன். அதை நீ தப்பும் தவறுமாகப் புரிந்து பேசி வருகிறாய். இதனால் எனக்குத் தான் மானக்கேடு. சீடனைக் கொண்டு தான் குருவை அளவிடுவார்கள். கற்றறிந்தவர்களே பழந்தமிழ் நூலுக்குப் பொருள் கூறவும், அதைப் பற்றிப் பேசவும் தயக்கம் காட்டுவர். அப்படியிருக்க தமிழரின் வாழ்வியல் நூலுக்குக் கருத்துக் கூற முற்பட்டிருக்கிறாய். எதையும் நுட்பமாய் அறியும் தன்மையில்லாதவனின் அழகிய தோற்றம் மண்ணால் உருவாக்கப்பட்ட அழகிய பொம்மையைப் போன்றது என்று தெரிந்தும், உன்னை மதித்து உனக்கு பிரசங்கங்களை எழுதித் தந்த எனக்குச் செருப்பால் அடிக்க வேண்டும்” என்றார் பண்டிதர்.

பண்டிதர் தன் கருத்தைப் பரிகசித்த சுவாமியாரைக் கண்டிப்பார் என்று நினைத்த ஆரூரனுக்குப் பண்டிதரின் வார்த்தைகள் கவலையைக் கொடுத்தன. அவன் ஏதோ சொல்ல முற்பட்டான். அதை விரும்பாத பண்டிதர் சொன்னார்; “கற்றவன் எப்பாழுதும் அடக்கமாக இருப்பான். சான்றுகளுடன் சரியாகத் தெரியாவிட்டால் தெரியாது என்று ஒப்புக் கொள்வான். அவன் கௌரவத்திற்காகத் தெரியாதவற்றைத் தெரிந்தது போலக் கூறினால் அவமானப்படுவான். நீ இன்று சுவாமியாரின் முன் பேசியதை எனது பேச்சாகவே அறிவுடையவர்கள் நினைப்பர். எனவே நான் சுவாமியாரிடஞ் சென்று மன்னிப்புக் கேட்க வேண்டும்” என்று எழுந்தார் பண்டிதர்.

**407. நுண்மான் நுழைபுலம் இல்லான் எழில்நலம்**
**மண்மான் புனைபாவை யற்று.**

நுட்பமானவற்றைக் கல்வியறிவால் அறிந்து கொள்ள முடியாதவனது அழகிய தோற்றம், மண்ணால் செய்யப்பட்ட அழகிய பொம்மையைப் போன்றது.

### *கொடிய செல்வம்*

பண்டிதர் எழுந்து உடை மாற்றிக் கொண்டு சுவாமியாரைச் சந்திக்கப் புறப்பட்ட போது அவரது மூத்த மகள் துளசி அவரிடம் வந்தாள். பண்டிதருக்கு

ஐந்து பெண்பிள்ளைகள். மூவர் திருமணம் செய்திருந்தனர். துளசி திருமணமாகி மூன்று பிள்ளைகளின் தாய். இராணுவ நடவடிக்கையின் போது அவளது கணவன் நடத்திய வியாபார நிலையத்துள் வைத்து எரியூட்டப்பட்டான். அதனால் துளசியும் மூன்று பிள்ளைகளும் அவருடனேயே வசித்து வந்தனர். வியாபார நிலையம் நடத்துவதற்காகத் துளசியின் நகைகளை அடைவு வைத்திருந்தான். அவன் இறந்ததும் கடன்காரர்களின் தொல்லை தாங்க முடியாது துளசி மிஞ்சியிருந்த நகைகளை விற்றுக் கடனை அடைத்தாள்.

முக எலும்பு வெளியே தள்ளிய படி உருக்குலைந்து நிற்கும் மகளைக் கவலையுடன் பார்த்தார் பண்டிதர். அவருக்குக் கிடைக்கும் ஓய்வூதியப் பணத்தில் தான் இரு குடும்பங்களும் சீவிக்கின்றன. காலையிலும் மாலையிலும் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பார். ஆரூரனுக்குப் பேச்சு எழுதிக் கொடுப்பார். திருமண வாழ்த்துப்பா, வேறு வைபவங்களுக்கான பாக்கள் எழுதிக் கொடுப்பதால் சிறிதளவு வருமானம் அவருக்கு வரும்.

‘‘என்ன துளசி?’’

‘‘மூத்தவனுக்கு இரண்டு நாளாய்க் காய்ச்சல். மருந்தெடுக்க வேணும்’’

‘‘அவரிடம் அப்பொழுது பணமிருக்கவில்லை. சிறிது நேரம் யோசித்தார். பின்பு சொன்னார்; ‘‘ என்னிடம் ஒரு சதம் கூட இல்லை. யாரையாவது கேட்டுப் பார்ப்பம்’’ புறப்பட்டார் பண்டிதர். ஆரூரன் வசதியானவன். எனினும் அவன் அதைக் கேட்டுக் கொண்டு பேசாமல் இருந்ததால் பண்டிதர் அவனிடம் கடன் கேட்க விரும்பவில்லை. அவனுக்கு அவர் பெருந்தொகையான பணம் கொடுக்க வேண்டும். அதனால் அவர் அவனிடம் கேட்க விரும்பவில்லை.

வழியில் தணிகாசலம் வந்தார். பின் பண்டிதரைக் கண்டதும் நின்றார்; ‘‘வாத்தியார் சொல்லுறன் என்று குறை நினைக்காதைங்கோ இவன் ஆரூரனுக்கு நீங்கள் எழுதிக் குடாதைங்கோ. எந்தப் பெரிய அறிவாளி நீங்கள், உங்கடை மானத்தைக் கெடுக்கிறான்’’ தணிகாசலம் கூறும் போது பண்டிதர் குறுக்கிட்டுச் சொன்னார்; ‘‘பெரும் பிழை செய்திட்டன். பேசவேண்டு மென்று ஆசைப்பட்டான். அவன்ரை ஆசைக்காக எழுதிக் கொடுத்தால் அவன் கற்றவர்களை மதிக்கிறானில்லை. சுவாமியாருக்கும் விளக்கம் கொடுக்க ஆரம்பித்து விட்டானாம். நான் எல்லாம் கேள்விப்பட்டனான். சுவாமியாரிட்டை மன்னிப்புக் கேட்கப் போறன்’’ கலங்கினார் பண்டிதர். அதற்கு மேல் தணிகாசலத்தால் பேசமுடியவில்லை அதனால்; ‘‘மூத்தவளின்ரை பாடு எப்படி?’’ என்று கேட்டார்.

அவ்வார்த்தைகள் பண்டிதரின் நெஞ்சைத் தாக்கின; ‘‘அதை ஏன் தணி கேட்கிறாய். இன்னும் இரண்டு குமர் இருக்கு. இவளையும் வைத்துக் காப்பாற்ற முடியாமல் இருக்கு. மூத்தவனுக்கு மூன்றுநாளாய்க் காய்ச்சல். மருந்தெடுக்கக் காசில்லை’’ விம்மினார்.

‘‘இதுக்கேன் கவலைப்படுறியள். என்னைக் கேட்டால் நான் தர மாட்டனே?’’ என்றபடி சட்டைப் பையிலிருந்து ஆயிரம் ரூபாய்த்தாள் ஒன்றை எடுத்து நீட்டினார்.

‘‘முன்பும் உங்களிடம் கடன்பட்டனான்’’ தயங்கினார் பண்டிதர்.

‘‘பரவாயில்லைப் பிடியுங்கோ’’ என்று வற்புறுத்திக் கொடுத்தார் தணிகாசலம்.

‘‘மறு நாள் ஆரூரனின் பேர்த்தியார் காலமாகி விட்டார். அவருக்கு எண்பத்தொன்பது வயது. ஆரூரன் மரணவீட்டை மிகவும் ஆடம்பரமாகக் கொண்டாடினான். பிரேதம் வீதியால் செல்லும் போது வெடிகள் கொழுத்தப்பட்டன. வான வேடிக்கைகள் நிகழ்ந்தன. வெடிக்கும், வானவேடிக்கைக் கெனவும் ஐம்பதினாயிரம் ரூபா செலவு செய்திருந்தான். அவனும் அவனது நண்பர்களும் நன்றாக மது அருந்தி விட்டு வீதியில் கலாட்டாவிலீடுபட்டனர். அங்கு நடந்த கை கலப்பில் நால்வர் படுகாயமுற்றனர். வெடி வெடித்ததில் பலர் காய முற்றனர். பறைமேளகாரரும் மேலைத்தேச மேளகாரரும் போட்டி போட்டு அடித்தனர்.

‘‘படிப்பறிவில்லாதவனிடத்தில் உள்ள செல்வமானது, நல்லவர்களிடம் உள்ள வறுமையை விட மிகக் கொடிய துன்பத்தையும் ஆபத்தையும் உண்டு பண்ணும்’’ என்று தனபாலசிங்கம் தணிகாசலத்திற்குச் சொன்னார்.

‘‘இதோடை முடிந்துதே. நாளைக்கு எட்டு, பிறகு அந்திரட்டி என்று அமர்களப்படுத்துவன். அவனோடை திரியுற கூட்டத்திற்கு ஒரு மாதத்திற்குப் பரவாயில்லை. வெளிநாட்டிலை இருக்கிற தம்பிமார் லட்சக்கணக்கிலை அனுப்ப இவன் செலவு செய்ய வேண்டியது தானே’’ என்றார் வேலாயுதபிள்ளை.

### 408. நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
### கல்லார்கண் பட்ட திரு.

கல்லாதவனிடம் உள்ள செல்வம், நல்லவர்களுக்கு உண்டான வறுமையை விடக் கொடிய துன்பத்தைக் கொடுக்கும்.

## *குடிப்பிறப்பு*

அன்று ஞானப்பிரகாசத்தின் மகளுக்குத் திருமணம். தான் வேலை செய்யும் அலுவலகத்திற்கு மகளின் திருமண அழைப்பிதழைக் கொடுக்க ஞானப்பிரகாசத்திற்கு விருப்பமில்லை. திருமண அழைப்பிதழைக் கொடுத்தால் ஒவ்வொரு ஊழியர்களும் தனித்தனியாகப் பரிசுகள் கொடுக்க விரும்புவார்கள். பரிசு என்ற சாட்டில் வர்த்தகர்களும் கட்டிட ஒப்பந்தக்காரர்களும் அலுவலக ஊழியர்களும் பெரும் பரிசில்களைக் கொடுத்தால் பின்பு அவர்கள் செய்யும் தில்லு முல்லுகளுக்கு நடவடிக்கை எடுப்பது கஷ்டமாக இருக்கும் என்று நினைத்தார் ஞானப்பிரகாசம். அதை தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான தனது உதவியாளரான சதாசிவத்திற்குச் சொன்னார்.

சதாசிவம் சிறிது நேரம் யோசித்து விட்டுச் சொன்னார்; ‘‘ நீங்கள் உங்களது இன சனங்களுடன் கொண்டாடினாலும் நண்பர்கள், அயலவர்கள், அலுவலக ஊழியர்கள், வரத்தான் செய்வார்கள். யாருக்குச் சொல்லா விட்டாலும் எமது அலுவலக ஊழியர்களுக்குச் சொல்லுதல் வேண்டும். ஒவ்வொரு ஊழியனும் தனது வீடுகளில் நடைபெறும் நல்ல கெட்ட நிகழ்வுகளுக்கு அலுவலகத்திற்கு அறிவிக்கிறான் தானே. அலுவலகமும் ஒரு குடும்பம் தான். நீங்கள்

சொல்லுங்கோ'' என்ற பின் தான் ஞானப்பிரகாசம் அலுவலகத்திற்குத் திருமண அழைப்பிதழைக் கொடுத்தார்.

அன்று மதிய உணவு வேளையின் போது சிவசுந்தரமூர்த்தி சதாசிவத்தைத் தனிமையில் சந்தித்தார்; ''சதாசிவம், ஞானப்பிரகாசம் தனது மகளின் திருமணத்திற்கு அழைப்பிதழ் தந்திருக்கிறார். எப்படிப் போறது''.

''வாகன மொன்றைப் பிடித்துப் போவோம்'' என்றார் சதாசிவம்.

''உனக்கென்ன விசரே. அவங்களின்ரை குடும்பம் எங்கடை வீட்டை நம்பித்தான் சீவித்தது. இப்பவும் அவற்றை சகோதரங்கள் உயர்ந்த குடியில் பிறந்தவர்களின் வீடுகளிலை தொண்டு, துரவு செய்யுதுகள். ஞானப்பிரகாசத்தின்ரை தமக்கையின்ரை மகன் தான் எங்கடை வீட்டு வேலைகளைச் செய்யிறான். கலியாணவீட்டுச் சபையிலை அவங்களோடை கூட இருந்து என்னாலை சாப்பிட முடியுமே...? அவங்கள் எங்களை மதிப்பங்களே?'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

சதாசிவம் நிமிர்ந்து சிலகணங்கள் பார்த்தார்; ''சிவா, கூலி வேலை செய்பவனாக இருந்தாலும் அவனைக் கீழானவன் என்று சொல்லக் கூடாது. நாங்கள் வேலை செய்து அரசாங்கத்திடம் வேதனத்தைப் பெறுகிறோம். அவர்கள் உங்களிடம் வேலை செய்து வேதனத்தைப் பெறுகிறார்கள். இதில் உயர்வு தாழ்வு எங்கே இருக்கிறது. அத்துடன் ஞானப்பிரகாசம் எமது மேலாளர். அவரின் வீட்டுக்குத் தான் நாம் செல்கின்றோமேயன்றி அவரது இனத்தவர்களின் வீட்டுக்குச் செல்லவில்லை. அத்துடன் திருமணம் பொதுமண்டபத்தில் நடைபெறுகிறது. பொதுமண்டபத்தில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்றில்லை. எல்லோருக்கும் மண்டப ஊழியர்களே சமைக்கிறார்கள். உணவுக்கென மண்டப நிர்வாகியிடம் பணம் கொடுக்கப்படுகிறது. அவர்களே பொருட்களை வாங்கிச் சமைக்கிறார்கள். இதில் சாதி சமயத்திற்கோ உயர்வு தாழ்வுக்கோ இடமில்லை. கல்லாதவர்கள் உயர்ந்த குடியில் பிறந்திருந்தாலும் அவர்கள் தாழ்ந்தவர்கள் தான். கற்றவர்கள் தாழ்ந்த குடியில் பிறந்தவர்களாயினும் அவர்கள் உயர்ந்தவர்களே. ஞானப்பிரகாசத்தின் குடும்பம் முன்பு உங்கள் வீட்டில் தொண்டு துரவு செய்ததென்பதற்காக நீங்கள் அவரை மதிக்காமல் விட முடியுமா? அவர் உங்களைப் பெயர் சொல்லி அழைப்பார். நீங்கள் அவரை 'ஐயா' என்று தான் அழைக்க வேண்டும். பெயர் சொல்லி அழைக்க முடியுமா?'' என்று கேட்டார் சதாசிவம்.

சிவசுந்தரமூர்த்தியால் எதுவும் பேசமுடியவில்லை. சிறிது நேரம் பேசாமல் இருந்து விட்டுச் சொன்னார்; ''கனகசபாபதியின்ரை மருமோன் இந்தக் கந்தோரிலை தானே வேலை செய்கிறான். அவனைக் கலியாண வீட்டுக்குப் போகவேண்டாமென்று கனகசபாபதி சொன்னவனாம். என்னசெய்யிறதென்று தெரியவில்லை என்று கவலைப்பட்டான்'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

''சிவா, ஊருக்குள் ஆரம்பத்தில் எல்லோரும் கஷ்டப்பட்டவை தான். அதிபர் விக்னேஸ்வரமூர்த்தியின் தகப்பன் என்ன வேலை செய்தவர். அவர் கூலி வேலை செய்தவரென்பதற்காக அவரின் மகனான விக்னேஸ்ரமூர்த்தியை மதிக்காமல் விட முடியுமே? நீங்கள் உங்கடை மகனுடைய பாடசாலை அனுமதிக்காக காலிலை விழாத குறையாகக் கெஞ்சியும் அனுமதித்தவரே. எப்பவும் கற்றவன்தான்

உயர்ந்தவன்'' என்று கூறி விட்டு நகர்ந்தார் சதாசிவம். சிவசுந்தரமூர்த்தி அவர் செல்வதைப் பார்த்துக் கொண்டு நின்றார்.

**409. மேல்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்**
**கற்றார் அனைத்திலர் பாடு.**

கல்லாதவர் உயர்ந்த குடியில் பிறந்திருந்தாலும், அவர் தாழ்ந்த குடியில் பிறந்த கற்றவருக்குக் கீழானவரே ஆவார்.

## *மதிப்பு*

வேலாயுதபிள்ளை சனசமூகநிலையத்திற்கு வந்த போது தணிகாசலமும் தனபாலசிங்கமும் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தனர். வேலாயுதபிள்ளை சனசமூக நிலையத்திற்கு முன்னால் நின்ற வாகை மரத்தின் கீழ்க் கட்டப்பட்டிருந்த கட்டில் இருந்தார். சிறிது நேரத்தில் தணிகாசலமும் தனபாலசிங்கமும் வந்து வேலாயுதபிள்ளைக்கு அருகில் இருந்தனர்.

''அறிவு வளர்வதற்குக் காரணமான நூல்களைக் கற்றவன் தான் மனிதன். மற்றவர்களெல்லாம் மனித உருவில் உலாவும் மிருகங்கள்'' பெருமூச்சு விட்டார் வேலாயுதபிள்ளை.

தணிகாசலம் எதுவும் சொல்லவில்லை. தனபாலசிங்கம் கேட்டார்; ''ஆஸ்பத்திரியாலையே வாறாய்.. சிவசுந்தரமூர்த்திக்கு எப்படி...?''

''தலையிலை மூன்று தையல் போட்டிருக்கு. இடது கை எலும்பிலை வெடிப்பிருக்காம்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''எல்லாம் காசு மெத்தினத்தாலை வந்தது. செத்த சீவனை நிம்மதியாய் அடக்கம் செய்ய முடியாமல் இருக்கு. ஆரூரன்ரை பேர்த்தியார் பெயரோடையும் புகழோடையும் வாழ்ந்த மனிசி. ஆரூரன் ஊரில் உள்ள குடிகாரர்களுடன் தானே சினேகிதம். எல்லாரும் பிரேதம் எடுக்கேக்கை நல்ல வெறிலை நிண்டதாலை எனக்குப் பிரச்சினை வருமெண்டு தெரிந்து தான் நான் சுடலைக்குப் போகேல்லை. சந்தீலை பிரேதத்தை இறக்கி வைத்து விட்டு அடிபட்டிருக்கிறாங்கள்'' என்றார் தனபாலசிங்கம்.

''எல்லாருக்கும் வெறி. என்ன நடந்த தென்று ஆருக்கும் தெரியாது. வெடியைக் கொழுத்தி மணியத்தின்ரை காலுக்கை போட்டுட்டாங்களாம். மணியமும் வெறிலை தான் நிண்டது. வெடி கொழுத்திய மாதவனுக்கு மணியம் அடித்திருக்கிறான். மாதவன் வெடியைப் போட்டுட்டு மணியத்திற்கு அடிக்க, நிலத்திலை போட்ட கோர்வை வெடி தீப்பற்றி வெடித்திருக்கு. அதுக்குப் பயந்து பாடையைச் சுமந்து கொண்டு சென்றவர்கள் நிலத்திலை பாடையை வைச்சிட்டு ஓடிற்ராங்கள்'' என்று வேலாயுதபிள்ளை சொல்லிக் கொண்டிருக்கும் போது தனபாலசிங்கம் குறுக்கிட்டுச் சொன்னார்; ''ஆரூரனுக்கும் நவராசாவுக்கும் ஏதோ தோட்டப் பிரச்சினையாம். பேசாமல் வந்த நவராசாவைப் பார்த்து ஆரூரன் ஏதோ

சொல்ல நவராசா அவனுக்கு அடித்துப் போட்டானாம். அதை விலக்குப் பிடிக்கச் சென்ற சிவசுந்தரமூர்த்திக்கு மாதவன் பொல்லாலை அடித்துப் போட்டானாம்''.

''உப்பிடிப் பல கதை உலாவுது. அறிவு மிகுந்த நூல்களைக் கல்லாதவர்களுடைய நன்மை தீமைகளுக்குப் போகக் கூடாது. போறதெண்டால் காலமை பத்துமணிக்கு முன்பு போய் வந்து விட வேண்டும். இல்லாட்டில் எல்லாம் குடிச்சிட்டு நிக்குங்கள். யானைக்கும் வெறி, பாகனுக்கும் வெறி யென்றால் எப்படி இருக்கும்'' என்றார் தணிகாசலம்.

''சிவசுந்தரமூர்த்தி பரீட்சைக் கென்று படித்து சித்தியடைந்ததே தவிர நல்ல நூல்களைப் படிக்கவில்லை. முன்பும் பலதீய செயல்களைச் செய்தவன். பிறகு மகளின் திருமணம் நடைபெறவில்லை என்ற கவலையால் குற்றச் செயல்கள் பலவற்றைச் செய்ததாகச் சொன்னான். பிறகு காவல்துறையினருக்குப் பயந்து திருந்தின மாதிரி நடித்தான். இப்ப பழைய நிலைக்கு வந்திட்டான். இப்ப அவர் ஆரூரனுடன் தான் கூட்டு. இரண்டு பேரும் சேர்ந்து குடிக்கினை. அதாலை தான் அவர் தமிழ் விழாவுக்கு ஆரூரனை பேச்சுக்கு அழைக்குமாறு சொன்னவர்'' என்றார் தணிகாசலம்.

''மனிதன் தாழ்ந்திருப்பதற்குக் காரணம் நல்ல நூல்களைக் கற்காதது தான். இதனால் தான் இவர்கள் புலன்களால் வரும் இன்பங்களில் மகிழ்ச்சியடைபவர்களாக இருக்கிறார்கள். நல்ல நூல்களைக் கற்றவர்கள் பிறருக்குத் தொண்டு செய்வதிலும், பிறர் மீது அன்பு, கருணை காட்டுவதிலும் நாட்டமுள்ளவர்களாக இருக்கிறார்கள். இவர்களின் மனதில் தீய எண்ணங்கள் ஒரு போதும் உண்டாவதில்லை'' என்றார் தனபாலசிங்கம்.

''சிவசுந்தரமூர்த்தியின் மனிசி இரண்டு மணித்தியாலம் என்னைப் பிடித்துச் சொல்லி அழுதுது. நான் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு நின்றனான். மனிசி எனக்கு நெருங்கின சொந்தக்காரி. நல்ல குடும்பத்துப் பெண். பாவம் இவனைக் கட்டிச் சீரழியுது'' என்று பெருமூச்சு விட்டார் வேலாயுதபிள்ளை.

**410. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோடு ஏனையவர்.**

அறிவு நிறைந்த நூல்களைக் கற்றவர்களோடு ஒப்பிடுகையில் அத்தகைய நூல்களைக் கற்காதவர்கள் விலங்குகளுக்கு ஒப்பானவர்களாவர்.

## தலையான செல்வம்

கணபதி மத்திய மகாவித்தியாலயத்தின் புகழ்பூத்த ஆங்கில ஆசிரியர் அரியபூசணம், விக்னேஸ்வரமூர்த்தியின் முன்னால் இருந்தார். அவர்கூறியவற்றைக் கேட்க விக்னேஸ்வரமூர்த்திக்கு வேதனையாக இருந்தது. பிள்ளைகளின் நலனில் மிகுந்த அக்கறையும், கற்பித்தலில் அர்பணிப்பும் உடையவர் அரியபூசணம்; ''ஆசிரியர் தான் சமூகத்தின் கலங்கரை விளக்கு. திக்குத்திசை மாறிச் செல்லும் கப்பல்களை ஒழுங்கு படுத்தும் திசையறி கருவியைப் போன்றவர்கள். அவர்கள் முன் மாதிரியாக இருந்தால் தான் மாணவர்கள் ஒழுங்காக இருப்பார்கள்.

அசிரியர் ஒழுக்கமில்லாமல் இருந்து கொண்டு மாணவர்கள் ஒழுக்கம் தவறி நடக்கிறார்கள் என்று சொல்வது பொருத்தமற்றது'' என்று அடிக்கடி கூறுபவர் அரியபூசணம். காலைக் கூட்டங்களில் மாணவர்களுக்கு நற்சிந்தனை கூறவிட்டால் அவர் சொல்வதனைத்தும் முத்தாகத்தான் இருக்கும். வகுற்பிற்குக் கற்பிக்கச் சென்றால் குறும்புகள் செய்யும் மாணவர்கள் கூட மெய் மறந்து பாடத்தில் லயித்திருப்பார்கள். பரீட்சைகளின் போது தமிழ்ப் பாடத்தை விட அனேகமான மாணவர்கள் ஆங்கிலத்தில் தான் கூடுதலான புள்ளிகளைப் பெறுவார்கள். விக்னேஸ்வரமூர்த்தி அவரிடம் கற்றவர்.அவர் அங்கு அதிபராகப் பொறுப்பேற்க முதலில் மறுத்தார். அவர் பதவி ஏற்கும் போது அவரைக் கற்பித்த ஆசிரியர்கள் பலர் அங்கு கடமையாற்றிக் கொண்டிருந்தனர். அதனால் அவர் மறுத்து விட்டார்.

அவர் மறுத்ததால் அரியபூசணம் அவரைத் தேடி வீட்டுக்குச் சென்றார். பயபக்தியுடன் அவரை ஆசனத்தில் அமர்த்தி விட்டு விக்னேஸ்வரமூர்த்தி அவரின் எதிரே பயபக்தியுடன் நின்றார்.

''விக்கி, மதிப்பும் மரியாதையும் மனதில் தான் இருக்க வேண்டும். உன்னைக் கற்பித்த ஆசிரியர்கள் பலர் கணபதி மத்திய மகாவித்தியாலயத்தில் கற்பிக்கிறார்கள் என்பதற்காக நீ அப்பாடசாலையின் அதிபர் பதவியை ஏற்காது விடலாகாது. நானும் அதிபர் பரீட்சை எழுதினனான். ஆனால் சித்தியடையவில்லை. நீ சித்தியடைந்தது மட்டுமல்லாது இன்னொரு பாடசாலையில் அர்பணிப்புடனும் கடமை உணர்வுடனும் கடமை செய்து வருகிறாய். இந்த உலகத்தைப் பார். பெற்றோரை விடப் பிள்ளைகள் மேதாவிகளாக இருக்கிறார்கள். குருவை மிஞ்சிய சீடர்கள் பலரிருக்கிறார்கள். எம்முடன் கற்பிக்கும் இராமநாதன் ஆசிரியர் நாற்பத்தைந்து வயதில் பட்டப்படிப்புப் படித்தார். அவரது மாணவன் கணேசராசா தான் பல்கலைக் கழகப் பீடாதிபதியாக இருந்தான். அதற்காக இராமநாதன் படிக்காமல் விட்டாரா..? பாடசாலையில் கணேசராசாவுக்கு இராமநாதன் குருவாக இருந்தார். பல்கலைக்கழகத்தில் கணேசராசா இராமநாதனுக்குக் குரு. இதை நாம் மனதளவில் மதித்து மதிப்புக் கொடுத்தால் போதும். தேவையில்லாத விஷயங்களைப் பற்றி அலட்டிக் கொள்வதில் உனது சக்தியைச் சிதறவிடாதே. துணிவுடன் அதிபர் பதவியை ஏற்றுக் கொள். உனது கடந்த காலச் சேவை மிகவும் பெருமைக்குரியதாக இருந்ததால் தான் மக்கள் உன்னைப் பதவியில் அமர்த்த விரும்புகின்றனர். அதே போல எதிர்காலம் மேலும் சிறப்பாக அமையும் என்பதை நான் முழு மனதுடன் நம்புகிறேன்'' என்றார் அரியபூசணம். அதனால் தான் விக்னேஸ்வரமூர்த்தி அதிபர் பதவியை ஏற்றார்.

''தமபீ, இந்தப் பாடசாலையின் நிறுவுனர் என்னை விரும்பி முழுமனதுடன் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலய வாசலில் வைத்து என்னை ஆங்கில ஆசிரியராக நியமித்தவர். நியமனம் தரும் போது எனக்கு இருபத்தி மூன்று வயது. இப்ப ஐம்பத்தேழு வயது. முப்பத்தி நான்கு வருட சேவையை மிகவும் திறம்பட முடித்து விட்டன். இன்னும் மூன்று வருடங்கள் சேவை செய்யலாம். ஆனால் எனக்கு இப்ப காது கேட்பதில்லை. எத்தனையோ வைத்தியர்களிடம் சிகிட்சை பெற்றும் பயன் இல்லை. செவியால் கேட்டறிவது ஒரு செல்வமாகும். அது ஏனைய செல்வங்கள் அனைத்திலும் தலையானது. ஆசிரியனுக்கு வாயும் செவியும் தான் பிரதான மானவை. மாணவர்கள் சொல்வதொன்றும் எனக்குக் கேட்பதில்லை. அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்லியும் எனக்குக் கேட்குதில்லை. அதனால் என்னால் கற்பிக்க முடியவில்லை. ஆங்கில நாடகப் போட்டியில் எங்கள் பாடசாலை தான் முதன்மை நிலைக்கு வாறது. இப்ப பிள்ளைகள் நாடகம் நடிக்கும் போது பேசுற பேச்சு எனக்குக் கேக்கிறதில்லை''

என்று பெருமூச்சு விட்டவர். சிறிது நேரங்கழித்துச் சொன்னார்; ‘‘நான் ஓய்வெடுக்கிறதாய்த் தீர்மானிச்சிட்டன். எல்லாப் பத்திரங்களையும் நிரம்பிக் கொண்டு வந்தனான். கையொப்பம் வைத்துத் தாருங்கோ.’’

விக்னேஸ்வரமூர்த்தி சிலையாக அமர்ந்திருந்தார். அரியபூசணம் சொல்வதொன்றும் அவருக்குக் கேட்கவில்லை.

**411. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.**

செவியால் கேட்டறிவதும் ஒரு செல்வமாகும். அச் செல்வம் செல்வங்களுள் எல்லாவற்றிற்கும் தலையானதாகும்.

## *இல்லாத போது*

வகுப்பு மேற்பார்வைக்கு அரியபூசணத்தின் வகுப்புக்கு அடிக்கடி செல்வார் விக்னேஸ்வரமூர்த்தி. அவர் வகுப்புக்குச் செல்ல முன்பு அரிய பூசணத்தைக் கண்டு சொல்வார்; ‘‘ ஐயா, கா.பொ.த.உயர்தர வகுப்பிற்கு இன்று ஏழாம் பாடம் நீங்கள் ஆங்கில இலக்கியம் கற்பிக்கப் போகிறீர்கள். இன்று நான் அந்த நேரம் உங்கள் வகுப்பிற்கு வந்து அப்பாடம் சம்பந்தமாக எனக்கிருக்கிற சில சந்தேகங்களை நீக்க வேண்டும்’’.

அரியபூசணம் முழுமையாக மகிழ்ந்து சிரிப்பார். விக்னேஸ்வரமூர்த்தி ஆங்கிலத்தில் மிகுந்த பாண்டித்தியம் பெற்றவர். ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்ட ஒரு பேராசிரியனின் தகுதி அவருக்கிருக்கென்பது அரியபூசணத்திற்குத் தெரியும். இருந்தும் தன்மீதுள்ள அளவுக்கதிகமான அபிமானம் காரணமாகத் தான் அவர் அப்படிச் சொல்கிறார் என்று அவருக்குத் தெரியும்.

‘‘சொன்னபடி விக்னேஸ்வரமூர்த்தி அரியபூசணத்தின் வகுப்பிற்குச் செல்வார். வகுப்பு முடிந்ததும் விக்னேஸ்வர மூர்த்தி சொல்வார்; ‘‘ஐயா, உங்களைப் போன்ற தொரு ஆசிரியரைப் பெற எமது மாணவர்கள் பெரும் பாக்கியம் செய்திருத்தல் வேண்டும். கற்பித்தல் நுணுக்கங்கள் அனைத்தையும் அறிந்த உங்கள் கற்பித்தல் முறையைப் பின்பற்றி நானும் கற்பிக்கத் தான் உங்கள் வகுப்பிற்கு அடிக்கடி வாறனான்’’என்பார்.

வகுப்பு முடிந்ததும் ஆங்கில நாடகத்தை உயர்தர வகுப்பு மாணவர்களுக்குப் பழக்கவிருந்தார். அதனால் விக்னேஸ்வரமூர்த்திக்குச் சொன்னார்; ‘‘இந்தப் பாடம் முடிந்தவுடன் ஷேக்ஸ்பியரின் வெனிஸ் நகரத்து வணிகன் நாடகம் ஒத்திகை பார்க்கப் போகிறேன். நீங்களும் வாருங்கள்’’.

மாணவர்களுடன் இருவரும் பிரதான மண்டபத்தில் உள்ள மேடைக்குச் சென்றனர். அரியபூசணம் ஒவ்வொரு வசனத்தையும் ஆங்கிலேயர் பேசுவதைப் போலப் பேசிக் காட்டினார். பல மாணவர்கள் அவரைப் போலப் பேசினர். சிலர் தடுமாறினர். அரியபூசணம் கோபங் கொள்ளாது பொறுமையாகப் பல தடவைகள்

பேசிக் காட்டினார். தடுமாறிய மாணவர்கள் ஒழுங்காக வசனங்களைப் பேசும் வரை அவர் விட மாட்டார்.

அன்று நாடக ஒத்திகை. மறுநாள் மாவட்ட மட்ட ஆங்கில நாடகப் போட்டிக்கு அந் நாடகத்தை நடத்திக் காட்ட வேண்டும். அதனால் மிகவும் உற்சாகமாக இருந்தார். மாணவர்கள் உற்சாகத்துடன் நடித்துக் கொண்டிருந்தனர். பாடசாலைத் தொழிலாளி தேநீர் கொண்டு வந்து வைத்துப் பலமணிநேரமாகியும் இருவரும் தேநீர் குடிக்கவில்லை.

ஐந்துமணிக்கு அங்கு வந்த ரவீந்திரன் ஆசிரியர்; ''ஐயா, நீங்கள் மத்தியானம் கொண்டு வந்த உணவையும் உண்ணவில்லை. தேநீரையும் குடிக்கவில்லை. இப்படி இருந்தீர்களானால் குடற்புண் வந்து விடும்'' என்றார்.

அரியபூசணம் சிரித்தார். நான் காலையில் எழுந்தவுடன் பல் துலக்கி முகங் கழுவி விட்டுச் சீர்காழி கோவிந்த ராஜனின் பக்திப் பாடல்களைக் கேட்ட படி வேலையைச் செய்வேன். அந்த நேரம் எனது மனைவி தேநீர் கொண்டு வந்து தருவார். பெரும் பான்மையான நாட்களில் நான் அதைக் குடிக்க மறந்து விடுவேன். எட்டு மணிக்கு சாப்பிடுவதற்காக மனைவி என்னைக் கூப்பிடுவாள். கூப்பிட்ட நேரம் போய்ச் சாப்பிட்டால் தான் சாப்பாடு. அந்த நேரம் ஏதாவது வேலையில் ஈடுபட்டிருந்தேனென்றால் காலைச் சாப்பாட்டைச் சாப்பிட மறந்து பாடசாலைக்கு வந்து விடுவேன். இன்று நான் காலமை சாப்பிடவில்லை என்று எனது மனைவி தொலைபேசியில் சொல்லி, மத்தியானச் சாப்பாட்டை நேரத்துடன் சாப்பிடுமாறு சொன்னா. நான் மத்தியானமும் சாப்பிடவில்லை. செவிக்குச் சுவையான உணவு கிடைத்தால் வயிற்றில் பசி வராது. செவிக்கு உணவில்லாத போது தான் சிறிதளவு உணவு வயிற்றுக்குத் தேவைப்படும். இன்று முழுவதும் செவிக்கு நல்ல உணவுகள் கிடைத்தன. காலையில் மாணவர்கள் ஆங்கிலப் பாடல்களை மிகவும் இனிமையாகப் பாடினார்கள். அதில் மெய்மறந்து விட்டேன். இம் முறையும் எமது மாணவர்கள் தான் குழுப் பாடற் போட்டியில் முதலாம் இடத்தைப் பெறுவார்கள். அதன் பின் ஆங்கில நாடகம் மிகவும் சிறப்பாக இருந்தது. அதனால் பசிக்கவில்லை''. என்றார் அரியபூசணம்.

''அதிபரும் காலையிலும் சாப்பிடவில்லை; மத்தியானமும் சாப்பிடவில்லை'' என்றான் ரவீந்திரன்.

''அரியபூசணம் ஐயா சொன்னது போல செவிக்குணவு இல்லாத போது தான் வயிற்றில் பசிவரும். இன்று காலையில் நானும் ஆங்கிலப் பாடலைக் கேட்டு இரசித்தேன். மிகவும் நன்றாக இருந்தது'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி. அப்படியான ஒரு சிறந்த ஆசிரியர் ஓய்வு பெறுவதை நினைக்க விக்னேஸ்வரமூர்த்திக்குக் கவலையாக இருந்தது.

**412. செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது**
**வயிற்றுக்கும் ஈயப் படும்.**

செவிக்கு இன்பமளிக்கும் கேள்வியாகிய உணவு இல்லாத போது சிறிதளவு உணவு வயிற்றிற்கும் தரப்படும்.

***தேவருக்கு இணையானோர்***

தமிழ் விழாவுக்கான மாணவர்களின் நிகழ்ச்சிகள் அன்று ஒத்திகை பார்க்கப்பட்டன. பாடசாலையின் பிரதான மண்டபத்துள் நிகழ்ச்சிகள் நடைபெறும் மேடைக்கு முன்பாகப் பேராசிரியர் சிவலிங்கராசா, கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம், விக்னேஸ்வரமூர்த்தி, ரவீந்திரன் தமிழ் ஆசிரியர்கள் மூவர், சங்கீத ஆசிரியர்கள் இருவர், நடன ஆசிரியர் இருவர், தணிகாசலம், வேலாயுதபிள்ளை ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

முதலில் பாரதியாரின் நடிப்புச்சுதேசிகள் என்ற தலைப்பிலான பாடலை உயர்தர வகுப்பு மாணவர்கள் பதினைந்து பேர் பாடினர். மிருதங்கம், கடம், வீணை, புல்லாங்குழல், தவில் போன்ற வாத்தியங்களை மாணவர்களே இசைத்தனர்.

''நெஞ்சில் உரமும் இன்றி
நேர்மைத் திறனுமின்றி
வஞ்சனை சொல்வாரடி- கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி''

ஒரு மாணவி பக்க வாத்தியங்களின்றி மிகவும் இனிமையாகப் பாடினாள். பின் எல்லோருமாகச் சேர்ந்து பாடினர். வாத்தியக் கலைஞர்கள் மிகவும் நுட்பமாக வாத்தியங்களை இசைத்தனர். மாணவர்கள் என்று சொல்ல முடியாதளவிற்கு மிகவும் அருமையாக இருந்தது.

உறுதியுடனும் ஊக்கத்துடனும், தங்களால் முடியும் என்ற உற்சாகத்துடனும் வாத்தியக் கருவிகளை இசைக்கும் மாணவர்கள் வாத்தியக் கருவிகளை இசைக்க, அதற்கேற்ப, சுருதி பிசகாது அத்தனை மாணவர்களும் பாடிக் கொண்டிருந்தனர். ஒத்திகையில் சரி பிழை கூறித்திருத்த வேண்டியவர்கள் மெய்மறந்து அப்பாடலை ரசித்துக் கொண்டிருந்தனர்.

பாடல் இசைத்து முடிந்ததும் பேராசிரியர் சிவலிங்கராசா தனது ஆசனத்தை விட்டெழுந்து சென்று சங்கீத ஆசிரியையான திருமதி பாஸ்கரநாதசர்மாவைப் பாராட்டினார்; ''மிகவும் அருமையாக மாணவர்கள் பாடினார்கள். வாத்தியக் கலைஞர்களும் ராகம், தாளம், பல்லவி சிறிதளவேனும் பிசிறாது வாசித்தது மனதிற்குச் சந்தோசமாக இருந்தது. செவியுணவாகிய கேள்வி அறிவை உடையவர்கள் பூமியில் வாழ்ந்தாலும் விண்ணுலகில் அவியுணவை உண்ணும் தேவர்களுக்கு ஒப்பானவர்களாவர் என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். நீங்கள் தேவரிலும் மேலானவர். கேள்வியறிவையுடைய நீங்கள் எம்மை இன்று மகிழ்வித்தமையால் நாமும் தேவர்கள் உண்ணும் அவியுணவை உண்டவர்களாகிறோம்'' என்றார்.

''மிகவும் அருமையான கேள்வி ஞானம் மிக்க ஆசிரியை. பாடல்கள், இசை, நாடகங்கள் முதலியவற்றில் மிகுந்த புலமை உள்ளவர். அருமையாகப் பாடல்களை இயற்றுவார். ஒவ்வொரு வருடமும் ஏராளமான பரிசுகளை எமக்குப் பெற்றுத் தருபவர்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''இந்தக் கல்லூரியில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் அனைவரும் கேள்விஞானம் உடையவர்கள். அதனால் இங்கு கற்கும் மாணவர்களும், என்போன்றவர்களும் தேவர்கள் உண்ணும் அவியுணவை உண்ணும் பாக்கியம் பெற்றவர்கள்'' என்றார் தணிகாசலம்.

அடுத்ததாகத் ‘‘தமிழனின் வீரம் சங்க காலத்தை விட இருபதாம் நூற்றாண்டு மேம்பட்டுள்ளது’’ என்ற பட்டி மன்றம் தொடங்கியது.

இரு பிரிவுகளாகப் பிரிந்து கலந்து வாதிட்ட மாணவர்கள் சளைக்காது வாதிட்டனர்.

‘‘சங்கநூல்கள் முழுவதையும் அலசி ஆராய்ந்திருக்கிறார்கள். பழைய கருத்துக்களுக்கு அருமையான புதிய வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. தற்காலப் போர் முறைகளும் யுத்திகளும் வீராப்புடன் முன் நிற்கின்றன. மிகவும் நல்லதொரு புதுமையான நிகழ்வு. ஆசிரியரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். தலைமை வகித்துப் பேசிய இரு பிரிவுப் பெண் தலைவர்களும் உணர்ச்சி ததும்ப வீரவேஷத்துடன் பேசினார்கள்’’. என்றார் சிவலிங்கராசா.

அடுத்துச் சங்க கால மன்னர்களும், புலவர்களும், அறிஞர்களும் தத்தமது உடைகளை அணிந்து மேடையில் தோன்றினார்கள். ஔவையாராகத் தோன்றியவர் மேடையில் தோன்றி நல்வழிப் பாடல்களைப் பாடினார். மேடையின் பின்பக்கத்தில் இருந்து மெல்லிய வீணை ஒலி தாழ்ந்து வந்தது. அதற்கு ஈடு செய்யும் வகையில் மெலிதான மிருதங்க ஒலி ஒலித்தது.

‘‘சாய்... அருமையான கற்பனை... எந்த ஒரு நிகழ்வையும் மக்கள் ரசிக்கும் படியாகப் புதுமையானதாகச் செய்தல் வேண்டும். எமது மக்கள் ஒரே மாதிரித்தான் செய்து வருகிறார்கள். அந்த நிலையை மாற்றி புதுமுறையில் இந்நிகழ்வைத் தயாரித்த ஆசிரியரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்’’ என்றார் சிவலிங்கராசா.

அந்நிகழ்வை நெறியாழ்கை செய்த தமிழ் ஆசிரியரைச் சிவலிங்கராசாவுக்கு அறிமுகப்படுத்தினார் விக்னேஸ்வரமூர்த்தி.

**413. செவிஉணவிற் கேள்வி யுடையார் அவிஉணவின்**
**ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து.**

செவி உணவாகிய கேள்வியறிவை உடைய மண்ணுலகத்தவர், அவியுணவை உண்ணும் விண்ணுலகத்தவர்களுக்கு ஒப்பானவர்கள்.

## *ஊன்று கோல்*

‘‘முப்பது வருடங்களாக ஓஹோ என்றிருந்த அப்பாவினது வியாபாரத்தில் சற்றுத் தளர்ச்சி ஏற்பட்டுள்ளது. எந்தவொரு காலத்திலும் இல்லாத பிரச்சினைகள் பலவும் இப்போது அவருக்கு வந்துள்ளன. அதனால் அப்பா மிகவும் வேதனைப்படுகிறார். நேற்றுத் தொலைபேசியில் இரண்டு மணித்தியாலங்கள் கதைத்தார். எமக்குச் சொத்து ஏராளமகா இருக்கு. ஆனால் வியாபாரத்தில் தற்பொழுது நட்ட மேற்பட்டதால் அவர் மானம் போய்விட்டதென்று கவலைப்படுகிறார். நான் எதைச் சொன்னாலும் கேட்கிறாரில்லை’’ என வத்சலயன்

கவலைப்பட்டான். வேதனையால் அவனது பொலிவாக முகம் களை இழந்து காணப்பட்டது.

நாமகள் அவனுக்கு எதைச் சொல்லித் தேற்றுவதென்று தெரியாது தடுமாறினாள்.

‘‘நான் கற்றனான். எந்தவிதமான மூடநம்பிக்கைகளிலும் நம்பிக்கையில்லாதனான். அப்பா அப்படியானவர் அல்லர். அதனால் துன்பப்படுகிறார். எமது இனத்தவர்களும் நண்பர்களும் அவருக்குத் தேவையில்லாத கதைகளைக் கூறுவதால் அவர் அதை உண்மையென நம்பிக் கவலைப்பட்டுத் தேவையில்லாதவற்றை யெல்லாம் கற்பனை பண்ணுகிறார்’’.

‘‘அப்பா, உங்களது சாதகத்தையும் என்னுடைய சாதகத்தையும் கொண்டு போய்க் குருக்களிட்டைக் காட்டினவர். அவர் நல்ல பொருத்தமான சாதகம் என்று சொன்னவர். பிறகேன் எனது சாதகத்தால் தான் தமக்குத் துன்பம் வருகிறது என்று சொல்வான்’’ விம்மினாள் நாமகள்.

‘‘நம்பிக்கை தான் வாழ்க்கை, பலவீனப்பட்டால் அனைத்தும் அழிந்துவிடும். அப்பா தேவையில்லாதவற்றை நம்புகிறார். நான் பலமுறை அறிவியல் ரீதியான கருத்துக்களைக் கூறியும் அவர் நம்புகிறாரில்லை’’ கவலைப்பட்டான் வத்சல்யன்.

‘‘உங்களது அப்பா, என்னால் தான் தமது குடும்பத்திற்குக் கஷ்டங்களும் நஷ்டங்களும் ஏற்படுகிறது என்று நம்பினால் நீங்கள் என்னை மறந்து விடுங்கோ. நாங்கள் பழையபடி எமது வீட்டுக்குச் சென்று விடுகிறோம்’’ விம்மினாள் நாமகள்.

வத்சல்யன் பதறிப்போனான். நாமகள் அப்படிச் சொல்வாளென அவன் எதிர்பார்க்கவில்லை; ‘‘உமக்கென்ன விசரே. ஒருவரால் இன்னொருவர் எப்படிப் பாதிப்படைய முடியும். அப்பா அதிகம் படிக்காதவர். சாத்திர சம்பரதாயங்களில் அதீத நம்பிக்கை உள்ளவர். அதனால் அவர் அப்படித்தான் பேசுவார். அறிவுள்ள நாங்கள் தான் அனுசரித்துப் போக வேண்டும். படித்தநீரே கவலைப்பட்டால் எப்படி’’? என்று கேட்டான் வத்சல்யன். நாமகள் எதுவும் சொல்லவில்லை. அதனால் வத்சல்யன் சொன்னான்; ‘‘நான் கொழும்புக்குச் சென்று அப்பாவை நேரில் சந்தித்து ஆறுதல் கூறலாம் என்றிருக்கிறேன். மனிதர்கள் தமக்கேற்படும் கஷ்ட நஷ்டங்களைத் தம்முடன் வாழ்பவர்கள் மீதும், நெருங்கிய நண்பர்கள் மீதும் சுமத்தப் பழகிவிட்டார்கள். இல்லாவிட்டால் விதி என்று சொல்கிறார்கள். இது எல்லோருக்கும் பொருந்தும். நீர் கூட ஒரு முறை பரீட்சையில் குறைவான புள்ளிகள் எடுத்தமைக்குக் காரணம் உமக்கு வேண்டாதவர் ஒவரைப் பரீட்சைக்குச் செல்லும் போது சந்தித்தது தான் காரணம் என்று சொன்னீர். அதனால் அப்பா சொல்வதை கேளாதையும்’’ என்று கூறிவிட்டுச் சென்று விட்டான்.

மகள் படும் துன்பங்களை அறிந்து தணிகாசலம் வேதனைப்பட்டார். நாமகள் வாய் திறந்து தனது கவலைகளைச் சொல்லாவிட்டாலும் அவளது நடத்தைகளில் இருந்தும், முகத்தில் இருந்தும் அவள் சொல்லொணாத் துயரத்தை அனுபவிக்கிறாள் என்று நினைத்தார். எனினும் சுவாமியாரின் நற்சிந்தனைகள் அவரது மனதைச் சாந்தி செய்தன; ‘‘துன்பங்களைக் கண்டு அஞ்சாதே. துன்பமான வேளைகளில் தான் நீ துணிவுடனும் தைரியத்துடனும்

செயலாற்ற வேண்டும். இல்லாவிட்டால் துன்பம் உனது முதுகில் ஏறியிருந்து சவாரி செய்யும். துன்பங்கள் இறைவனுக்குக் கூட நேர்ந்துள்ளது. உலகில் துன்பமில்லாதவர்கள் எவருமில்லை. துன்பத்திற்கு முன்பும் பின்பும் உங்களை இன்பம் நாடி வரும். தன்நம்பிக்கையும் உறுதியும் கொண்ட மனமுள்ளவனுக்குத் துன்பம் ஒரு சோதனையாகவே வரும். அச்சோதனையில் அவன் சித்தியடைந்து முன்பை விடச் சிறப்புக்கள் பலவற்றைப் பெறுவான். எனவே துன்பம் வரும் வேளையில் துணிவுடன் இருங்கள்'' ''நான் நூல்களைக் கற்காவிட்டாலும் கற்றறிந்தவர்களின் அறிவுரைகளைக் கேட்டறிந்தமையால் துன்பம் வந்த வேளையில் அவ் அறிவுரைகள் எனக்கு ஊன்று கோலாகப் பயன்படுகிறது. அறிவுள்ளவர்களோடு சேராதிருந்தால் எனக்கு பைத்தியம் பிடித்து விடும்'' என்று நினைத்தார் தணிகாசலம்.

**414. கற்றிலன் ஆயினும் கேட்க அ∴தொருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றாம் துணை.**

ஒருவன் கற்கா விட்டாலும், கற்றவர்களிடம் கேட்டு, அறிய வேண்டியவற்றை அறிந்து கொள்ளல் வேண்டும்; அ∴து அவனுக்குத் துன்பம் வரும்போது ஊன்று கோல் போலத் துணை ஆகும்.

## ***உதவும்***

வத்சல்யன் சொன்னதை நினைக்க நாமகளுக்குத் தலை வெடித்து விடும் போலிருந்தது. வத்சல்யனுடன் காதல் கொண்டதை நினைத்துப் பார்த்தாள் நாமகள். வத்சல்யன் நாமகளிலும் பார்க்க இரண்டு வருடங்கள் கூடப்படிப்பவன். நாமகள் முதன் முதலாகப் பல்கலைக்கழகத்திற்கு வந்த போது மாணவர்கள் பகிடிவதை செய்தனர். வத்சல்யன் அவளுக்கு அருகில் வந்து; ''உன்னுடைய பெயர் என்னடீ'' என்று கேட்டான்.

''நாமகளடா''

''உன்னில் பார்க்க இருவருடங்கள் கூடப் படிக்கும் என்னைன ''டா'' போடலாமா? மன்னிப்புக்கேளடி'' அதட்டினான்.

''மன்னித்துக் கொள்ளடா'' என்றான் நாமகள்.

வத்சல்யனுக்குச் சிரிப்பு வந்து விட்டது. அவளைக் கண்டதும், அவளின் குடி கொண்டிருந்த கவர்ச்சி மின்னலாக அவனைத் தாக்கியமையால் தான் வலியச் சென்று வெருட்டுவது போலக் கதைத்தான்.

''நாமகள், எனக்கு உங்களைக் கண்டவுடன் பிடித்து விட்டது ''டா'' போட்டுக் கதைத்தாலும் பரவாயில்லை. மற்றவர்களுடன் அப்படிக் கதையாதைங்கோ'' என்றான் வத்சல்யன்.

நாமகள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவனது கண்களில் நிறைந்திருந்த வசீகரம் அவளை வசீகரித்தது. அவனை மீண்டும் ''பார்'' என்று கண்கள் துடித்தன.

மறுநாளும் வந்தான். பின்பும் வந்தான். ஒருநாள் அவன் சொன்னான்; ‘‘உம்மை எனக்குப் பிடித்திருக்கு. என்னை உமக்குப் பிடித்திருக்கா?’’.

‘‘ம்’’ என்றாள் நாமகள். அன்றைக்கே புலம்பத் தொடங்கி விட்டான்; ‘‘இவ்வளவு நாட்களும் அன்பாகக் கதைத்த அவன் இன்று ஏன் இப்படிக் கதைத்தான்’’ என்று நினைக்க மனதில் தேங்கி நின்ற துயரம் பட்டென்று அதிகரித்து அழுகையாக வெடித்தது. விம்மி விம்மி அழுதாள். அப்போது அங்கே வந்த தணிகாசலம் மகள் விக்கி விசும்பி அழுவதைக் கண்டு திகைத்து விட்டார். இது நாள் வரை அவர் எவ்வளவோ கஷ்டப்பட்ட போதும் அவளைக் கலங்கவிடவில்லை. குட்டி நாய் போலக் குதூகலித்து விளையாடிய அவளின் விசும்பல் தணிகாசலத்தை வேதனைக்குள்ளாக்கியது. ‘‘என்னம்மா’’ என்று கேட்டார் அவரது குரல் பிசிறியது.

நாமகள் அவரை நிமிர்ந்து பார்த்தாள். உழைப்பதைத் தவிர வேறெதையும் அறியாத அவரது உடல் சற்று இளைத்திருப்பதைப் போல இருந்தது; ‘‘நான் காதலித்திரா விட்டால் எவ்வளவு இன்பமாக இருந்திருப்பன். காதலித்ததால் என்னையும் வருத்தி எனது குடும்பத்தினரையும் வருத்துகிறேனே்’’ என்பதை நினைக்க அவளுக்கு வேதனையாக இருந்தது.

‘‘வத்சல்யன் ஏதாவது கடுமையாகச் சொன்னாரா..?’’

‘‘இல்லை அவரது தகப்பனார் சொன்னதை நினைக்க வேதனையாக இருக்கு’’ விம்மினாள்.

‘‘எமக்குக் கேடுவர எல்லாம் வல்ல நாவலா் ஸ்ரீ வித்தியா மகா கணபதி விட மாட்டார். முகத்தை கழுவி விட்டு வாம்மா கோயிலுக்குப் போட்டுவருவம். மகா கணபதியைத் தரிசித்தால் எல்லாத் துன்பமும் பறந்து விடும்’’ என்றார் தணிகாசலம்.

நாமகளும் தணிகாசலமும் கோயிலுக்கு வந்த போது சுவாமியார் அரசமரநிழலில் இருந்தார்; ‘‘பூசைக்கு நேரமிருக்கு. வாம்மா சுவாமியாரைச் சந்தித்துக் கொண்டுவருவம்’’ என்றார்.

கண்களை மூடிக் கொண்டிருந்த சுவாமியார் அரவங்கேட்டுக் கண் விழித்தார்; ‘‘வைத்தியா் அம்மாவா? என்ன கவலை? முகமெல்லாம் வீங்கிக் கறுத்திருக்கு. மாமனார் ஏதாவது கூறினாரா? துக்கத்திற்கான பரிகாரம் ஓயாது நடைபெற்ற சம்பவங்களைக் குறித்துச் சிந்திப்பதல்ல. மாறாக அதை மறந்து விடுவது தான் எந்த ஒரு துன்பமும் புதிதாக வராது. ஊழ்வினைப்படி தான் யாவும் நடைபெறும். வத்சல்யனது தந்தையின் பழைய பழியொன்று காத்திருந்து இப்பொழுது அவரைச் சூழ்ந்துள்ளதே தவிர உன்னுடைய செயல்கள் எவையும் அவரைப் பாதிக்காது. ஆன்மா அடுத்தடுத்துப் பிறப்பெடுக்கிறது. அது ஒரு பிறப்பில் செய்யும் பாவ புண்ணியங்களுக் கேற்பத்தான் மறு பிறப்புக்கான கருப்பையை அடைகிறது. எனவே தீர்மானிக்கப்பட்டவை யெல்லாம் நடந்தே தீரும். பயப்படாதே, வத்சல்யன் உன்னைக் கைவிடமாட்டான்’’ என்றார் சுவாமியார். நாமகள் அவரது பாதங்களைப் பணிந்து விட்டுக் கோயிலுக்குச் சென்றாள். கோயில் வாசலில் விக்னேஸ்வரமூர்த்தி நின்றார்; ‘‘ தணி, வத்சல்யன் காலையில்

என்னிடம் வந்து சொன்னான்; ‘‘நாமகள் வீணாண கற்பனைகள் பலவற்றைச் செய்து மனம் குழம்புகிறாளாம். என்னை ஆறுதல் சொல்லச் சொன்னான்’’ என்றவர் நாமகளின் பக்கம் திரும்பி; ‘‘பயப்படாதை அம்மா எந்த வேளையிலும் வத்சல்யன் உன்னைக் கைவிட மாட்டான்’’ என்று சொல்ல, கோயில் காண்டாமணி அடித்தது.

‘‘ஒழுக்கமுடையவர்களது வாய்ச் சொற்கள் வழுக்குகின்ற சேற்று நிலத்தில் நடக்க ஊன்று கோல் உதவுவது போல உதவும்’’ என்று அருளுரையில் சுவாமியார் சொன்னது அவளது காதில் ஒலித்தது.

**415. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே**
**ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்**

வழுக்குகின்ற சேற்று நிலத்தைக் கடக்க ஊன்று கோல் பயன்படுவது போல, ஒழுக்கமுள்ள சான்றோரது வாய்ச் சொற்கள் வாழ்க்கையில் வரும் துன்பத்தைக் கடக்க உதவும்.

## *கேட்ட பெருமை*

ஆரூரன் பண்டிதரின் வீட்டுக்கு வந்தான். பண்டிதர் சுவாமி அறையுள் பிரார்த்னையில் ஈடுபட்டிருந்தார். காலையில் எழுந்தவுடன் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சுவாமியறையுள் நுளைந்தாரேயானால் இருபது நிமிடங்கள் சுவாமி கும்பிடுவார். தீபங்களை ஏற்றி வணங்கிப் பஞ்ச புராணங்களைப் பாடிய பின்பு தான் வெளியே வருவார். ஆரூரன் வந்த போது தேவாரம் பாடிக் கொண்டிருந்தார் பண்டிதர்.

பண்டிதர் குரல்வளம் மிக்கவர். பண்ணோடு தேவாரத்தைப் பாடினாரானால் அனைவரும் மெய் மறந்து கேட்டுக் கொண்டிருப்பார்கள். நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத் திருவிழாக் காலங்களில் அவர் தான் பஞ்ச புராணங்களையும் பாடுவார். அது தவிர வெள்ளிக்கிழமைகளில் மகா கணபதி ஆலயத்தில் பஜனை சொல்லிக் கொடுப்பார். அதனால் அவ்வூரில் வாழ்பவர்கள் எல்லோரும் பண்ணுடன் பஞ்சபுராணங்களை ஓதக் கற்றுக் கொண்டுள்ளனர்.

ஆரூரன் முற்றத்தில் இருந்த நாற்காலியில் அமர்ந்தான். முற்றத்தில் விசாலித்துப் படர்ந்திருந்த வேப்பமரத்தின் கீழ் மூன்று நாற்காலிகளும் பண்டிதரின் சாய்வு நாற்காலியும் இருக்கும். பண்டிதரிடம் வருவோர் அவரின் வருகைக்காக அந்நாற்காலியில் அமர்ந்து காத்திருப்பார்

பண்டிதர் பிரார்த்தனையை முடித்துக் கொண்டு வெளியே வர ஆரூரன் எழுந்தான். பண்டிதர் சாய்வு நாற்காலியில் வந்தமர்ந்து; ‘‘இரு’’ என்று சொல்ல ஆரூரன் நாற்காலியில் அமர்ந்தான். பண்டிதரின் மூத்தமகள் துளசி தகப்பனுக்கும் ஆரூரனுக்கும் இரண்டு மூக்குப் பேணிகளில் கோப்பி கொண்டு வந்து கொடுத்தாள். பண்டிதர் அதை வாங்கிச் சுவைத்துக் குடித்தார். ஆரூரனுக்குத் துளசி தயாரித்துக் கொடுக்கும் கோப்பியில் நல்ல விருப்பம்.

கோப்பியைக் குடித்து விட்டு மூக்குப் பேணியை நிலத்தில் வைத்த பண்டிதர் ஆரூரனைப் பார்த்துக் கொண்டிருந்தார். எப்பொழுதும் அவர் கதையைத் தானாகத் தொடக்க மாட்டார். வந்தவர் சொல்லட்டு மென்று காத்திருப்பார்.

சிறிது நேரம் பேசாதிருந்த ஆரூரன் சொன்னான்; ‘‘பாட்டியின் மரண வீட்டில் சிறு தகராறு ஏற்பட்டு விட்டது’’ அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போது பண்டிதர் குறுக்கிட்டார்; ‘‘சிறு தகராறா.. பதினைந்து பேர் காயமடைந்திருக்கிறார்கள். இருவர் உயிருக்குப் போராடுகிறார்கள். என்று கேள்விப்பட்டேன்’’.

‘‘மாதவன் வெடியைக் கொழுத்திப் போட, அது மணியத்தின் காலுக்குக் கிட்ட விழுந்து வெடித்து விட்டது. ஏற்கனவே இருவரும் காணி ஒன்றில் பிரச்சினைப்பட்டவர்கள். அதனால் மாதவன் வேண்டு மென்று தான் வெடியைக் கொழுத்திப் போட்டு விட்டானெண்டு மணியம் மாதவனுக்கு அடிக்க மாதவன்ரை மகன் தகப்பனுக்கு அடிக்கிறதைப் பார்த்திட்டு மணியத்துக்கு அடிக்க அது கோஸ்டிச் சண்டையாகி விட்டது. நான் எதுவும் செய்யவில்லை’’ என்றான் ஆரூரன்.

‘‘நீதான் கள்ளச் சாராயம் வாங்கிக் கொடுத்ததாகச் சனம் கதைத்தது. மரண வீட்டை அமைதியாகக் கொண்டாட வேண்டும். ஓர் ஆன்மா துன்பங்களில் இருந்து விடுபடுவதை நாம் பிரார்த்தனையுடன் கொண்டாடுவது தான் மரபு. அத்துடன் நீ பல ஆயிரம் ரூபாக்களுக்கு வெடி வாங்கிக் கொடுத்திருக்கிறாய். ஒருவனது பணபலத்தை காட்டுமிடங்கள் பல இருக்கின்றன. மரண வீட்டில் பணபலத்தையோ ,கோபத்தையோ, அகங்காரத்தையோ, கோபதாபத்தையோ காட்டுதல் கூடாது. அது நாகரிகமான செயலும் அல்ல. ஒருவன் ஒழுக்கத்துடன் வாழத் தொடங்குவது தான் சமய வாழ்க்கை வாழ ஆரம்பிப்பதற்கான முதல் படியாகும். கோயில்களில் சமயப் பிரசங்கங்கள் செய்வது மதவாழ்க்கை ஆகாது. துன்பங்கள் ஒழுக்கக் கேட்டால் ஏற்படுகின்றன. அதைத் தவிர துன்பங்கள் வந்து சேர்வதற்கு வேறு எந்தக் காரணங்களும் இல்லை. என்னோடு பழகும் நீ, தீமை செய்பவர்களுடன் ஏன் தொடர்பு வைத்திருக்கிறாய? பெரியவர்கள், ஞானிகள் தீர்க்க தரிசிகள் போன்றோரின் வாழ்க்கையை உனக்கு நான் கூறியுள்ளேன். அவர்கள் திருவாய் மலர்ந்த வார்த்தைகள் பலவற்றை உனக்கு நான் கூறியுள்ளேன். சிறிதளவாவது நல்லவற்றைக் கேட்டறிதல் வேண்டும். நாம் கேட்ட அந்த அளவிற்கு அவை நிறைந்த பெருமையைத் தரும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். நீ கேட்ட நல்ல வார்த்தைகள் பயனளிக்காததால் நீ ஓர் அயோக்கியன். தயவு செய்து இனிமேல் இங்கு வந்து எனது மானத்தைக் கெடுக்காதே. உன்னைப் பற்றிக் கேவலமாகக் கதைப்பவர்கள் என்னையும் சேர்த்துக் கதைக்கிறார்கள்’’ என்றார்.

ஆரூரன் ஆடிப்போனான்; ‘‘ஐயா நான் எந்தக் குற்றமுஞ் செய்யவில்லை. நான் அவர்களோடும் சேருவதில்லை. அவர்கள் செத்த வீட்டுச் சாட்டில் வந்து பெருந்துன்பத்தை எனக்குத் தந்து விட்டார்கள். இனிமேல் நான் சேரமாட்டன். தயவு செய்து மன்னித்து என்னை ஏருங்கள்’’ அழுதான் ஆரூரன்.

**416. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும்.**

நல்லவற்றைச் சிறிதளவாவது கேட்டறிய வேண்டும். நல்லவற்றைக் கேட்டறிந்த அந்த அளவிற்கு ஏற்ப அவை பயனைத் தரும்.

## *பேதைமை*

“நீ தவறு செய்ய மாட்டாய் என்பதை நாம் நம்பமாட்டன். நீ என்னைப்பற்றியும் தவறாகத்தான் பலரிடம் கூறியிருக்கிறாய். கல்வியை யாசிப்பவனுக்கு இல்லையென்று மறுப்பது மகாபாவம். பசியோடு இருப்பவனுக்கு உணவு கொடுக்காவிட்டால் பாவமேற்படாது. ஆனால் கற்கப்போகிறேன் என்று கற்றவனிடம் வருபவனுக்குக் கற்பிக்காவிட்டால் அவன் எடுக்கும் ஏழேழு பிறவிகளிலும் அவன் துன்பங்களைத் தான் அனுபவிப்பான். செல்வர்கள் முன் ஏழைகள் ஏங்கி நின்று இரப்பதைப் போலக், கற்றவர்கள் முன் கற்க விரும்புபவர்கள் ஏங்கிப் பணிந்து நின்று கற்க வேண்டும் என்று எமது அறவியல் நூல்கள் கூறுகின்றன. அதற்காகத் தான் நான் உனக்குக் கற்பித்தேன். உன் போன்றவர்களுடன் உறவாடுவதே பாவம். வெளியே போ. நான் செத்தால் கூட என்னுடைய வீட்டுப் பக்கம் வராதே..” கர்ஜித்தார் பண்டிதர்.

ஆரூரனுக்கு வேதனையாக இருந்தது. கற்கும் காலங்களில் கெட்ட நண்பர்களின் சகவாசத்தால் பாடசாலைக்குச் செல்லாமல் விட்டதை நினைக்க அவனுக்குக் கவலையாக இருந்தது. அவர் ஆத்திரத்துடன் இருக்கும் போது எதைச் சொன்னாலும் அவருக்கு அது விளங்காது என்பது அவனுக்குத் தெரியும். அதனால் அவரது மனம் சாந்தியடைந்ததும் வந்து சொல்வோம் என நினைத்தான். பண்டிதர் அடிக்கடி சொல்வார்; “கற்றறிந்தவர்கள் சில சமயம் பொருளைத் தவறாக உணர்ந்திருந்தாலும் பேதைமையான எவற்றையும பேசமாட்டார்கள்” அவ்வார்த்தைகள் அவனது காதில் ஒலித்தன.

கவலையுடன் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்தான். வெளிவீதியைக் கூட்டித் துப்பரவு செய்து கொண்டிருந்தார் தணிகாசலம்; “அண்ணை”.

தணிகாசலம் நிமிர்ந்து பார்த்தார். எதிரே ஆரூரன் நின்றான். அவனது முகம் சோர்ந்து வாடியிருந்தது; “செத்த வீடு நடந்து நான்கு நாளாக வில்லை. கோயிலுக்கு வாறது சரியா?” என்று கேட்டார் தணிகாசலம்.

“பிழை தான், கவலை மிகுதியாலை தெரியாத் தனமாய் இந்தப் பக்கம் வந்திட்டன். உங்களோடு ஒரு கதை கதைக்கலாமா...?”

“சொல்லு”

“அண்ணை நான் கெட்டவன் தான். குடிக்கிறவன் தான். ஆனால் இப்ப அப்படி இல்லை. பண்டிதர் வீட்டை போன பின்பு யாவற்றையும் விட்டு விட்டேன். கெட்ட நண்பர்களின் தொடர்பை விட்டதனால் அவர்கள் என்னைப் பழிவாங்க நினைக்கிறார்கள். நல்லவர்களோடு சேர்ந்து நல்ல வார்த்தைகளைக் கேட்டால் கேட்டளவிற்கு அவை அறிவைத் தரும் என்பார்கள். சத்தியமாய் அண்ணை நான் பிரசங்கம் செய்யத் தொடங்கிய பின்பு திருந்தி விட்டேன். பாடசாலைக்குச் சென்று கற்காவிட்டாலும் கற்றறிந்தவர்களோடு தொடர்பு வைத்திருந்தால் சிறிதளவாவது அறிவு வரும். சுவாமியாருடனும், கற்ற நல்லவர்களோடும் நீங்கள் தொடர்பு வைத்திருப்பதால் தான் நீங்கள் மதிக்கப்படுகிறீர்கள். நிறைந்த

அறிவைப் பெற்றிருக்கிறீர்கள். அதை இல்லையென்று மறுப்பீர்களா...?'' என்று கேட்டு விட்டு நிறுத்தினான் ஆரூரன்.

தணிகாசலம் எதுவும் பேசவில்லை. அவரால் பேசமுடியவில்லை.

''அண்ணை, பண்டிதரையும் என்னையும் பிரிக்கப்பார்க்கிறார்கள். மரணவீட்டன்று நான் வெடி வாங்கிக் கொடுக்கவில்லை. குருமூர்த்தி தான் வாங்கிக் கொடுத்துக் கலகத்தை உண்டு பண்ணியவன். சாராயமும் அவன் தான் வாங்கிக் கொடுத்திருக்கிறான். பாட்டியின் ஒரு மகளின் மகன் தானே அவன். அவனுடைய தாயார் பாட்டிக்கு விருப்பமில்லாத ஒருவனுடன் சென்றதால் பாட்டி அவர்களைக் கைவிட்டு விட்டா. அவாவின் மரணச் சடங்கில் சண்டையை உண்டாக்கி எம்மை மானபங்கப் படுத்த வேண்டு மென்று மாதவனை பிடித்துச் செயலாற்றியிருக்கிறான்'' அழுதான் ஆரூரன்.

தணிகாசலம் அதைக் கேட்டுத் திகைத்துப் போனார். ''குருமூர்த்தி கெட்டவன். யாருடைய பேச்சையும் கேட்க மாட்டான்''. அவர் யோசித்துக் கொண்டிருக்கும் போது ஆரூரன் சொன்னான்; ''அண்ணை இதைச் சொல்லத்தான் நான் பண்டிதரின் வீட்டுக்குச் சென்றனான். அவர் என்னைக் கமையாக ஏசினார் தான் செத்தாலும் தன் வீட்டுப் பக்கம் வரக்கூடாது என்று கூறி விட்டார்'' அழுதான் ஆரூரன்.

''அழாதை ஆரூரன். நான் யாவற்றையும் பண்டிதருக்குக் கூறுகிறேன். நுட்பமாக உணர்ந்து, நிறைந்த கேள்வி ஞானத்தை உடையவர்கள் சில சமயம் பொருளைத் தவறாக உணர்ந்திருந்தாலும் பேதைமையானவற்றை நினைவில் வைத்திருக்க மாட்டார்கள். உண்மை தெரிந்தால் அவரே உனது வீடு தேடிவருவார்'' என்றார் தணிகாசலம். அவ்வார்த்தைகள் ஆரூரனுக்குச் சற்று ஆறுதலைக் கொடுத்தன.

**417. பிழைத்துஉணர்ந்தும்பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்து
ஈண்டிய கேள்வி யவர்.**

நுட்பமான அறிவுடைய பெரியவர்கள் சில சமயம் பொருளைத் தவறாக உணர்ந்திருந்தாலும் பேதமையானவற்றைச் சொல்ல மாட்டார்கள்.

## *சத்தியில்லாத செவிகள்*

''அண்ணை, நான் வணங்கிற நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி தான் பண்டிதர் உருவில் எனக்குக் கற்பிக்கிறார் என்று நான் நினைத்திருக்கிறேன். என்னிடம் ஏராளமான சொத்திருக்கு. இருந்தும் இளம் வயதில் பெற்றோரை ஏமாற்றியதன் பயனை நான் இன்று நன்குணர்ந்துள்ளேன். ஒருவனுக்கு காலம் பூராவும் உதவுவது கல்வி. அதை எந்த வயதிலும் பெறலாம் என்றும் சாகும் வரை கல்வி கற்கலாம் என்றும் அன்று அதிபரின் பாராட்டு விழாவுக்கு வந்த பெரியவர்கள் சொன்னார்கள். அதன் பின்பு படிக்க வேண்டு மென்ற ஆர்வம் எனது மனதில் அதிகரித்தது. அதனால் பண்டிதரைக் கடவுளாக நினைத்துப் பூசித்து வருகிறேன். அவரை விட்டால் எனக்கு கல்வி கற்பிக்கக் கூடிய குரு இக்கிராமத்தில் எவரும் இல்லை. அப்படியிருக்க அவரைப் பற்றி நான் குறை சொல்வேனா?. அன்று நான் சுவாமியாருடன் அறியாமை காரணமாகத் தான்

அப்படிப் பேசி விட்டேன். அது தான் அவருக்குக் கோபம். இனி மேல் நான் வாய்திறந்து பெரியவர்களுடன் பேசமாட்டேன். பண்டிதருக்காக நான் எனது உயிரையே கொடுப்பன். என்னுடன் தான் பண்டிதரின் மூத்தமகள் துளசி படித்தவள். பண்டிதர் விரும்பினால் அவளை நான் திருமணம் செய்யிறன்''.

தணிகாசலம் திகைத்துப் போனார். அதன் பின் ஆரூரன் பேசியவை எவையும் அவருக்குக் கேட்கவில்லை; ''இவ்வளவு அன்பு வைத்திருக்கிறவனைப் பண்டிதர் தவறாகப் புரிந்து கொண்டு விட்டாரே'' என்று நினைத்தார்.

''என்னுடைய இளமைக் காலம் சீரழிந்து விட்டது. இனிமேலாவது எனது வாழ்வு பயனுள்ளதாக இருக்க வேண்டு மென்று விரும்புகிறேன். உங்களைப் போன்ற நல்லவர்கள் பலர் மற்றவர்களுடைய நன்மைக்காக வாழ்கிறார்கள். அதைப் போல நானும் வாழ விரும்புறன். அடுத்தவனுக்கு நன்மை செய்வதன் மூலமாகத்தான் ஒவ்வொருவனும் தனக்கு நன்மையைப் பெற முடியும்''.

''சரி...சரி... நீபோ. இங்கு யாராவது வந்தால் உன்னைத் தவறாக நினைப்பார்கள். நான் பண்டிதரோடு கதைக்கிறேன்'' என்றார் தணிகாசலம்.

ஆரூரன் அவரைச் சிலகணங்கள் நிமிர்ந்து பார்த்தான் பின்பு; ''அண்ணை முன்பு நான் மடையன்; அறிவில்லாதவன், இப்ப அப்படியில்லை. பெரியவர்களின் அறிவுரைகளைக் கேட்காதவர்களின் காதுகள் கேட்கும் தன்மையை உடையனவாக இருந்தாலும் கூட, அவை கேட்கும் சக்தி இல்லாதவை என்று எனக்குத் தெரியும். எனது காதுகள் முன்பு அப்படித்தான் இருந்தன. ஆனால் இப்போது அந்த நிலை மாறி விட்டது'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

தணிகாசலம் பண்டிதரின் வீட்டுக்குச் சென்று ஆரூரன் சொன்னவற்றை ஒன்றும் விடாமல் சொன்னார். அதைக் கேட்ட பண்டிதர் திகைத்துப் போனார். சில நிமிடங்கள் அவரால் எதையும் பேசமுடியவில்லை.

''ஆரூரன் மிகவும் மனம் வருந்துகிறான். நீங்கள் அவனை உங்கள் வீட்டுக்கு நான் செத்தாலும் வர வேண்டாம் என்று கூறினீர்களாம். அதைத் தான் சொல்லிச் சொல்லி அழுதான். பாவம் அவன். அவனுடன் முன்பு கூடித்திரிந்தவர்களும், அவனது சிறிய தாயாரின் மகனும் அவனைப் பழிவாங்கத் துடிக்கிறார்கள். எனவே அவனைச் சந்தித்து ஆறுதல் கூறுங்கள். வேண்டுமானால் நான் அவனை இங்கு வரும்படி சொல்லி விடுகிறேன்'' என்றார் தணிகாசலம்.

''இல்லை... நான் தான் ஆராயாமல் கோபத்தில் கண்டபடி ஏசிவிட்டேன். குருமூர்த்தி தான் எனக்கு அவனைப் பற்றிச் சொன்னது. மரணம் நிகழ்ந்து மூன்று நாட்கள் கூடக் கழியவில்லை. நான் சென்று அவனைச் சந்திக்கிறேன்'' என்றார் பண்டிதர்.

தணிகாசலம் போன பின்பு பண்டிதரின் மனம் நிலை கொள்ளாமல் தவித்தது; ''எப்போதும் பிறருக்கு நன்மையையே செய்யுங்கள்; அத்துடன் தூய்மை உள்ளவராகவும் இருங்கள். அது உங்களுக்கு எந்த இடத்திலும் சிறப்பைத் தரும். எதையும் நன்கு ஆராய்ந்து கதைப்பவனே கற்றவன்; கேள்விஞானம் உடையவன். மற்றவர்கள் மீது குற்றமிருந்தாலும் அதை அவன் உணரும்

படியாக மெதுவாகச் சொல். அவசரமோ ஆத்திரமோ கொள்ளாதே'' என்றெல்லாம் கற்று விட்டு நான் அவசரப்பட்டு விட்டேனே'' என்று கவலைப்பட்டார் பண்டிதர்.

''ஆரூரன் நல்லவன். பெரியவர்களுடைய அறிவுரைகளைக் கேட்டு அதன்படி நடக்கிறான். ஆனால் அவனது நண்பர்கள் அவனைத் திருத்தவிடுகிறார்களில்லை. முன்பு அவன் குடித்துக் கொண்டு திரியும் நாட்களில் அவனது பணத்தில் திண்டு குடித்தவர்கள் இப்போது அந்த வசதிகளில்லாததால் அவனுக்கு எதிராகச் செயற்படுகிறார்கள். நானும் முதலில் அவனைத் தவறாகத் தான் நினைத்தேன். அவன் சொன்ன தகவல்களை ஆதாரமாக வைத்து ஆராய்ந்து பார்த்ததில் அவன் நல்லவனென்று தெரிகிறது'' என்று தணிகாசலம் கூறிய வார்த்தைகள் பண்டிதரின் காதுகளில் ஒலித்தன. அவர் புறப்பட்டு ஆரூரனது வீட்டை நோக்கிச் சென்றார்.

**418. கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி.**

அறிவுடையவர்கள் பேசும் பேச்சைக் கேட்காதவர்களின் செவிகள் கேட்கும், தன்மையுடையவை இருந்தாலும் கூட, அவை கேட்டு உணரும் சக்தியில்லாதவையே.

***வாயுள்ளவர்***

கடும் வெயிலுக்குள்ளால் துவிச்சக்கர வண்டியில் வேர்த்து விறு விறுத்து வந்திறங்கிய பண்டிதரைப் பணிவுடன் கரங்குவித்து வரவேற்றான் அரூரன். துவிச்சக்கர வண்டியால் இறங்கிய பண்டிதர், துவிச்சக்கர வண்டியை நிறுத்தி விட்டு மரண வீட்டுக்காகப் போடப்பட்டிருந்த பந்தலில் இருந்த நாற்காலி யொன்றில் அமர்ந்து மூச்சு விட்டார். வயதானதால் அவருக்குக் களைப்பு அதிகமாக இருந்தது.

''யாரிடமாவது சொல்லியனுப்பியிருந்தால் நான் உங்களது வீட்டிற்கு வந்திருப்பேன். இந்த வேகாத வெயிலில் நீங்கள் வரவேண்டுமா...? வருவதாக இருந்தாலும் பின்நேரம் வந்திருக்கலாம். உள்ளுக்கு வாருங்கோ மின்விசிறி போட்டு விர்றன்'' என்றான் ஆரூரன்.

''வேண்டாம், வெளியே குளிர்மையான காற்று வீசுகிறது'' என்றவாறு நிமிர்ந்து அவனது முகத்தைப் பார்த்தார். அடிக்கடி பார்க்கும் முகமானாலும் அன்று வித்தியாசமாக இருப்பதைப் போல இருந்தது. பழைய உற்சாகத்தை அதில் காண முடியவில்லை. சோர்ந்து கறுத்திருந்தது. அப்படி ஒரு போதும் ஆரூரனது முகம் இருந்ததில்லை.

''இருங்கோ ஐயா வருகிறேன்'' என்றவன் உள்ளே சென்று ஒரு பனை ஓலை விசிறியை எடுத்து வந்து விசுக்கினான். பண்டிதர் உருகிப் போனார். தான் முதல் நாள் பேசியதை நினைத்துப் பார்த்தார்; ''எவ்வளவு கொடுமையான வார்த்தைகள். கற்றறிந்த கேள்வி ஞானம் மிக்க நான் அப்படிக் கோபங் கொண்டிருக்கக் கூடாது. ஏன் நான் அப்படி அவசரப்பட்டுப் பேசினேன்'' என்று நினைத்தார். அவருக்கு வெட்கமாக இருந்தது.

‘‘கேட்டுத் தெளிந்த நுட்பமான அறிவுடையவர் அல்லாத மற்றவர்கள், அன்பு கலந்த பணிவான சொற்களைப் பேசும் வாயினராக இருக்க மாட்டார்கள்’’ என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். நானும் அப்படியானவனோ?’’ என்று நினைக்க அவருக்குக் கவலையாக இருந்தது; ‘‘ஆரூரா அன்று இருந்த மனநிலையில் நான் கோபத்துடன் வாய்க்கு வந்தபடி உன்னை ஏசி விட்டேன். அது மகா தவறு என்று பின்னர் தான் தெரிந்தது. அதை ஒரு பொருட்டாக எடுக்காதே. உனக்கு அதனால் மனவேதனை இருந்தால் என்னை மன்னித்துக் கொள்’’ கலங்கினார் பண்டிதர்.

‘‘ஐயையோ... கற்றறிந்த பெரும் மனிதரான நீங்கள் இந்த அற்ப காரியத்திற்குக் கலங்கலாமா? நான் அதை ஒரு பொருட்டாக எடுக்கவில்லை; அதனால் எனக்கு வேதனையும் இல்லை. நுட்பமான அறிவுடைய நீங்கள் காரணமில்லாமல் தவறியும் அப்படியான சொற்களைப் பாவிக்க மாட்டீர்கள். ஏதோ விபரீதமாக நடந்து விட்டதென்றே நினைத்தேன். அத்துடன் ஒருவனைத் தண்டிப்பதற்குப் பெற்றோர்க்கும் குருவுக்கும் அரசனுக்கும் உரிமை இருக்கிறது. அந்த உரிமையில் தான் நீங்கள் என்னைத் தண்டித்தீர்கள். அதனால் நான் திருந்த வேண்டும். கற்க வேண்டும் என்று தீவிரமடைந்துள்ளேன்’’ என்றான் ஆரூரன்.

‘‘சரி.... சரி அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாதே. தொடர்ந்து வந்து படி. என்னுடைய வாரிசாக நான் உன்னை நினைக்கிறேன்’’ என்றார் பண்டிதர்.

ஆரூரன் உணர்ச்சிவசப்பட்டான். அவனால் சிலகணங்கள் பேசமுடியவில்லை; ‘‘இப்படியான ஒரு நிலை வருமென்றால், அன்று நீங்கள் எனக்கு அடித்துக் கூட இருக்கலாம். நான் பெரும் பாக்கியசாலி. என்னை அறிவில்லாதவன்; நல்ல கருத்துக்களைச் சொல்லத் தெரியாதவன் என்றெல்லாம் இகழ்பவர்களுக்குச் சாட்டையடி கொடுக்க முடியாதே எனக் கவலைப்பட்டேன். இப்போது அக்குறை தீர்ந்து விட்டது’’ மகிழ்ந்தான் ஆரூரன்.

‘‘இடையறாத பயிற்சியின் மூலம் எதையும் சாதிக்கலாம். எந்த மூடனும் முயற்சித்தால் மேதையாகலாம். பேதைகளாக யாரும் பிறப்பதில்லை. முயற்சியால் தான் மனிதன் மேதையாகிறான்; பணக்காரனாகிறான்; ஞானியாகிறான்; முயற்சி அவனைக் கடவுளாகவும் உயர்த்தும். ஆரம்பத்தில் நீயல்ல யார் ஒரு செயலைச் செய்தாலும் மற்றவர்களின் ஏளனத்திற்கு அச் செயல் உட்படும். இந்த ஏளனத்திற்குப் பெரிய பெரிய மேதைகளும் உட்பட்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் ஏளனஞ் செய்பவர்கள் செயலைச் செய்பவன் சற்று உயர ஆரம்பித்ததும் எதிர்பார்கள். எதிர்புக்களை அவன் முறியடித்தால் ஏற்றுக் கொள்வார்கள். ஆரம்பத்தில் உன்னை ஏளனஞ் செய்தவர்கள் இப்போது எதிர்கிறார்கள். இன்னும் சில காலத்தில் உன்னை அறிஞனாக ஏற்றுக் கொள்வார்கள். கலங்காதே’’ என்றார் பண்டிதர்.

ஆரூரனுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி ஏற்பட்டது; ‘‘நுட்பமான அறிவுடையவர் அல்லாத மற்றவர்கள், பணிவுடைய சொற்களைப் பேசும் வாயினராய் இருக்க மாட்டார்கள்’’ என்று ஒரு நாள் சுவாமியார் கூறிய அருளுரை ஆரூரனின் காதுகளில் ஒலித்தது; ‘‘மிகவும் நன்றி ஐயா. நான் தங்கிளின் சீடன் என்பதை நிரூபிப்பேன்’’ என்றான்.

**419. நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய**
**வாயினர் ஆதல் அரிது.**

நூல்களின் பொருளை நுட்பமாகக் கேட்டறிந்தவர் அல்லாத மற்றவர்கள், பண்பான சொற்களைப் பேசும் வாயினை உடையவராக இருக்க மாட்டார்கள்.

## *இரண்டும் ஒன்று*

''மகனே நான் சென்று வருகிறேன். நீ உனது வேலைகளைக் கவனி'' என்று கூறி விட்டு எழுந்தார் பண்டிதர்.

''ஐயா, எனது வீட்டுக்கு இன்று நீங்கள் வந்ததைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். முன்பு பல தடவைகள் நீங்கள் எனது வீட்டுக்கு வந்திருக்கிறீர்கள். அப்பொழுது நீங்கள் என்னைச் சீடனாக ஏற்றுக் கொள்ளவில்லை. இன்று தான் அந்த உரிமை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனால் நான் மிகமிக மகிழ்நிதிருக்கிறேன். ஆதலால் தங்களுக்கு ஏதாவது ஒன்றைத் தர விரும்புகிறேன்'' என்றான் ஆரூரன்.

''எனக்கு எதுவும் தேவையில்லை. குடிப்பதற்குக் கொஞ்சம் நீர் தா'' என்றார் பண்டிதர்.

''எமது வீட்டில் மரணம் நிகழ்ந்து மூன்று நாட்கள் தான் ஆகின்றன. துடக்குள்ள வீட்டில் தண்ணீர் குடிப்பீர்களா? அத்துடன் நீங்கள் உயர்ந்த குடியில் பிறந்தவர். தாழ்ந்த குடியில் பிறந்த எனது வீட்டில் தண்ணீர் குடிப்பீர்களா...?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் ஆரூரன்.

''நானே கேட்டு வாங்கிக் குடிக்க ஆயத்தமாக இருக்கும் போது நீ இப்படிக் கேட்கலாமா..? ஒரு வழியில் நீ எனக்கு உறவுக்காரன்...'' என்று பண்டிதர் கூறிக் கொண்டிருக்கும் போது ஆரூரன் குறுக்கிட்டுச் சொன்னான்; ''கல்லாதவர்கள் உயர் குடியில் பிறந்திருந்தாலும் தாழ்ந்தவர்களே ஆவர் என்று பெரியவர்கள் கூறுவார்கள். பிறப்பால் நான் உங்களுக்கு உறவினனாக இருந்தாலும் கல்லாததால் கீழானவனாகி விட்டேன்'' என்றான்.

பண்டிதர் சிரித்தார்; ''கல்வியின் பெருமையை நீ இப்பொழுதாவது உணர்ந்து கொண்டதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன். கற்காமல் வாழும் மனிதர்கள் மிருகங்களுக்குச் சமமானவர்கள்'' என்று கூறிய பண்டிதர் ஆரூரன் கொடுத்த தேநீரை வாங்கிக் குடித்து விட்டுச் சென்றார்.

மறுநாள் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்தில் வெளிநாட்டிலிருந்து வந்திருந்த ஆதவன் என்ற அவ்வூரவன் விசேடபூசை ஒன்றைச் செய்தான். அன்று மடத்தில் அன்னதானம் செய்யவும் அவன் ஏற்பாடு செய்திருந்தான்.

அன்று பூசை முடிவடைந்ததும் கலாபூசணம் வில்லிசைமாமணி என்றழைக்கப்படும் கணபதிப்பிள்ளையின் 'சத்தியவான் சாவித்திரி' என்ற வில்லிசை நடைபெற்றது. சின்னமணி வில்லிசைப்பதில் வல்லவர். உலகில் உள்ள நாடுகள் பலவற்றிற்கும் சென்று வந்தவர். அதனால் அயல்

ஊர்களிலிருந்து ஏராளமான மக்கள் வில்லிசையைக் கேட்க வந்திருந்தனர். ராகசுத்தத்துடன் சின்னமணி அருமையாகப் பாடிக் கொண்டிருந்தார். பக்க வாத்தியக் கலைஞர்கள் பாட்டிற்கேற்றவாறு இசைக்கருவிகளை இசைத்துக் கொண்டிருந்தனர். சுவாமியார் மேடையின் அருகில் வந்தமர்ந்து வில்லிசையை ரசித்துக் கொண்டிருந்தார். நேரம் இரண்டு மணியைக் கடந்தும் பலர் பசியையும் மறந்து வில்லிசையை ரசித்துக் கொண்டிருந்தனர்.

அன்று அனேகமானவர்கள் கலந்து கொண்டமையால், வில்லிசை முடிய மடத்தில் சாப்பாடு கொடுப்பது சிரமமாக இருக்கும் என்பதற்காக வில்லிசை நடைபெறும் போதே மடத்தில் உணவு கொடுக்க ஆரம்பித்தனர். வந்திருந்த ஆயிரக்கணக்கான மக்களில் நூறு நூற்றைம்பது பேர் மட்டும் எழுந்து சென்று மடத்தில் சாப்பிட்டு விட்டுத் தமது வீடுகளுக்குச் சென்றனர். ஏனையோர் வில்லிசையில் மயங்கி இருந்தனர். சின்னமணியின் வில்லிசை முடிவடைந்ததும் விக்னேஸ்வரமூர்த்தி நன்றி சொன்னார்; ''அன்பானவர்களே! எமது ஊரவரான ஆதவன் என்பவர் வெளிநாட்டிலிருந்து வந்து மகா கணபதிக்குப் பெரியதொரு அபிஷேகம் செய்தார். அத்துடன் அன்னதானமும் செய்ய விரும்பினார். பாடசாலைக்கு அவர் இரண்டு இலட்சம் ரூபாவுக்குத் தளபாடங்கள் வாங்கித் தருவதாகவும், மகா கணபதி ஆலய மணிக்கோபுரத்தைப் புணருத்தாரணஞ் செய்து வர்ணம் பூசித்தருவதாகவும் கூறியுள்ளார். அவருக்கு மகா கணபதி அருள்வாராக. அடுத்து வில்லிசைச் சக்கரவர்த்தி சின்னமணியினது வில்லிசையைப் பற்றி உங்களுக் கெல்லாம் தெரியும். இன்று உலகில் வாழ்ந்து வரும் வில்லிசைக் கலைஞர்களில் முதன்மை நிலையில் இருப்பவர் சின்னமணி. அவரது பாடல்களைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம். கேட்டறிதல் என்னும் உணர்வு செவிக்கு இல்லாத போது சிறிதளவு உணவு வயிற்றுக்கும் ஈயப்படும் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். மதிய உணவு வேளை கடந்தும் அடியார்கள் பசியை மறந்து, தம்மை மறந்து, மெய்மறந்து அவரது இசையை ரசித்ததில் இருந்தே அவரது புலமை எல்லோருக்கும் விளங்கும். செவியால், கேள்விச் சுவையை உணராமல் வாயால் உண்ணும் உணவின் சுவையை மட்டும் அறிந்தவர்கள் வாழ்ந்தால் என்ன? இறந்தாலென்ன? இரண்டும் ஒன்று தான். எனவே மக்கள் நல்ல விஷயங்களைக் கேட்டறிதல் வேண்டும். சின்னமணியவர்கள் பல்லாண்டு வாழ்ந்து இசைத்துறைக்குத் தொண்டாற்ற வேண்டும் என்று கூறி எனது நன்றியுரையை முடிக்கிறேன். நன்றி வணக்கம்''

### 420. செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
### அவியினும் வாழினும் என்?

செவியால் கேள்விச் சுவையை கேட்டு இன்புறாது, வாயால் உண்டு மகிழ்வோர் இறந்தாலென்ன? வாழ்ந்தாலென்ன?.

## *கருவி*

சுவாமியார் வெகுநேரமாகக் கண்களை மூடியபடி இருந்தார். அவருக்கு எதிரே பயபக்தியுடன் நின்ற ஆரூரனால் எதையும் நினைத்துப் பார்க்க முடியவில்லை; ''நான் சொன்னதில் ஏதாவது தவறு இருக்குமோ? நான் அவசரப்பட்டு விட்டேனா? நான் கூடாத எவற்றையும் சொல்லவில்லையே. இந்த ஊரவர் மட்டுமன்றி அயலூரவர்கள் கூடச் சுவாமியாரிடம் வந்து தமது குறை நிறைகளையும், தமது மனதில் உள்ளவற்றையும் கூறித் தமது மனக்கவலையை மறந்து போகிறார்கள். அப்படித்தானே நானும் எனது மனதில் உள்ளவற்றைக் கூறினேன். பண்டிதர் எனது குரு. இருந்தும் அவர் தனது மூத்தமகள் துளசியால் படும் வேதனையை

வார்த்தைகளால் எடுத்துச் சொல்ல முடியாது. ஒரு நாள் அவர் மிகவும் கவலையோடு சொன்னார்; ‘‘மகனே எனக்கு துளசியால் தான் கவலை. மற்றய பெண்பிள்ளைகள் நான் சீதனமாகப் பெரும் பொருள் கொடுக்கா விட்டாலும் நல்லாய் இருக்கிறார்கள். துளசிக்கு நான் விரும்பித்தான் எனது மருமகனைத் திருமணஞ் செய்து கொடுத்தேன். திருமணமாகி ஐந்து வருடங்களுக்குள் அவன் இறந்து விட்டான். அவளுக்குப் மூன்று பிள்ளைகளும் இருக்கு. அவள் அதிகம் படிக்கவில்லை. அதனால் ஒரு வேலையும் தேட முடியாது. நானில்லாத காலத்தில் பெருங் கஷ்டப்படப் போகிறாள். அதை நினைக்க வேதனையைத் தாங்க முடியவில்லை. நான் செத்தாலும் என் ஆத்மா சாந்தியடையாது’’ என்று கலங்கியமையால் தான் துளசியை நான் திருமணஞ் செய்யத் தீர்மானித்தேன். அதனால் எனது விருப்பத்தைச் சுவாமியாரிடஞ் சொன்னேன். அதைக் கேட்டு விட்டுக் கண்களை மூடிய சுவாமியார் நிஷ்டையில் ஆழ்ந்து விட்டாரே’’. ஆரூரன் மனங் குழம்பினான்.

சுவாமியார் மெல்லக் கண்திறந்தார். ஆரூரனுக்குச் சுவாமியாரின் முகத்தைப் பார்க்கத் தயக்கமாக இருந்தது; ‘‘மகனே, எடுத்த முடிவில் உறுதியாக இரு. தூய்மையும் அன்பும் உள்ளவனால் தான் எல்லாவற்றையும் துறக்க முடியும். பாதிக்கப்பட்டவர்கள் மீது இரக்கம் கொள்ளல் வேண்டும். அறிவுள்ளவன் தான் மற்றவர்கள் செய்ய முடியாதவற்றைச் செய்வான். அறிவு, அழிவுவராமல் காக்கும் கருவி. அது பகைவராலும் அழிக்க முடியாதது. எனவே அறிவுள்ள நீ எடுத்த முடிவை யாராலும் மாற்ற முடியாது என்பது எனக்குத் தெரியும். பண்டிதர் அறிவு மிக்கவர். அரிய பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர். இப்புவியில் அறிவுள்ள பலரால் பொருளைத் தேடிக் கொள்ள முடிவதில்லை. ஆனால் அறிவுள்ளவர்களைப் பொருள் சென்றடையும். உனது முடிவை நான் ஏற்றுக் கொள்கிறேன்’’ என்று கூறி விட்டுக் கண்களை மூடினார் சுவாமியார்.

ஆரூரனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. எந்தச் செயலையும் சுவாமியார் ஏற்றுக் கொண்டு விட்டால் அக்கிராமத்தில் எவரும் எதுவும் பேசமாட்டார்கள். இனிச் சுவாமியார் தணிகாசலம் அண்ணையிடம் கூறியவற்றையும் கவனிப்பார் என்று நினைத்தவாறு வீட்டுக்குச் சென்றான். செல்லும் வழியில் தணிகாசலத்தின் வீடு இருந்தது. ஆரூரன் அங்கு சென்றான். தணிகாசலம் வெளியே இருந்தார். அவரது முகத்தில் கவலைக்குரிய அறிகுறிகள் தென்பட்டன. தணிகாசலம் நிமிர்ந்து அவனைப் பார்த்தார். பின்; ‘‘இரு’’ என்று சொல்லி விட்டு மௌனமாக அமர்ந்திருந்தார்.

‘‘ஆரூரா, பண்டிதரின் மகளைத் திருமணம் செய்வதென்ற உனது முடிவை இன்னொரு முறை பரிசீலனை செய். ஆசையால், அன்பால், பரிதாபத்தால் எடுக்கப்படும் முடிவுகள் சில சமயம் வாழ்க்கையை அழித்து விடும். வாழ்க்கையில் வரும் பெரும் துன்பங்களை அறிவால் நீக்கலாம். பண்டிதரின் மகளைத் திருமணம் செய்வது எனது அறிவுக்கெட்டியவரை உனக்குத் தீமைதான் உண்டாகும். உனது இனத்தவர்கள், பெற்றோர், அயலவர்கள், நண்பர்கள் அதை விரும்பமாட்டார்கள். அதனால் உனது பிற்கால வாழ்வு துன்பமுடையதாக இருக்கும். எனவே நன்றாக யோசித்துச் செய். மற்றவர்ளிடம் அறிவுரைகளைக் கேள். ஆராயாமல் முடிவெடுத்தால் பிற்காலத்தில் வருந்த வேண்டிய நிலை ஏற்படும்’’ என்றார் தணிகாசலம்.

ஆரூரன் எதுவும் பேசவில்லை. தணிகாசலத்தைப் பார்த்தான்; ''கடந்த பல நாட்களாகத் தணிகாசலம் முன்னைய கலகலப்பின்றிக் காணப்படுகிறார். என்னவாக இருக்கும்?'' என்று யோசித்தான்.

''நன்கு ஆராயாமல் அவசரப்பட்டு எடுக்கும் முடிவுகளால் வாழ்க்கை அழிந்து விடும். அப்பிடி எனக்கு நடந்து விட்டது. என்னைத் தேடி அதிஷ்டம் வருகிறதென்று நினைத்தேன். அழிவுதான் வந்தது. பலரும் பலவிதமாகச் சொல்லும் போது எனது அறிவு மயங்கி விட்டது. நன்கு ஆராயாமல் ஒரு விஷயத்தில் இறங்கினால் அது அழிவில் தான் முடியும். எனவே ஒரு முறைக்குப் பல முறை சிந்தி. அவசரப்படாமல் ஆறுதலாக இருந்து சிந்தித்துப் பார்த்து விட்டு வந்து முடிவைச் சொல். அதன் பின் பண்டிதரோடு கதைக்கலாம்'' என்றார் தணிகாசலம்.

**421. அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்**
**உள்ளழிக்கல் ஆகா அரண்.**

அறிவு, அழிவுவராமல் காக்கும் கருவியாகும். அத்துடன் பகை கொண்டவர் அழிக்க முடியாத பலம் பொருந்திய உள்ளரனும் ஆகும்.

***அறிவு***

தணிகாசலம் மூன்று தினங்களாக நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திற்குச் செல்லவில்லை. அன்று விநாயக சதுர்த்தி. அன்று கட்டாயம் தணிகாசலம் கோயிலுக்கு வருவார் என்று எதிர்பார்த்த குருக்கள் மிகுந்த ஏமாற்றமடைந்தார். இரவு எட்டு மணிக்குக் கோயில் பூசை முடிவடைந்ததும் வெளியே வந்தார் குருக்கள். அரசமரத்தடியில் சுவாமியார் இருந்தார். அவரைச் சுற்றிப் பலர் நின்றனர். குருக்கள் அவ்விடத்திற்குச் சென்றார். அங்கு விக்னேஸ்வரமூர்த்தியும் தனபாலசிங்கமும் வேலாயுதபிள்ளையும் வேறு சிலரும் நின்றனர்.

''தணிகாசலத்தை மூன்று நாட்களாகக் கோயிற் பக்கம் காணவில்லை. என்ன வருத்தமாக இருந்தாலும் கோயிலுக்கு வராமல் விடமாட்டார். ஆசூசம் இருந்தால் கூட வெளியே வந்து நிற்பார். அத்துடன் இன்று விநாயக சதுர்த்தி. சதுர்த்தி தினத்தில் நான் அறிந்தவரை தணிகாசலம் கோயிலுக்கு வராமல் நின்றதை நான் அறியவில்லை'' என்றார் குருக்கள்.

''மணிவண்ணணைத் தணிகாசலத்தை அழைத்து வரும்படி அனுப்பியுள்ளோம். வந்து விடுவார்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''நாமகளுக்கு மகா கணபதி துன்பமிழைத்து விட்டாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. நான் ஐம்பத்தைந்து வருடங்களாக மகா கணபதிக்குப் பூசை செய்து வருகிறேன். தணிகாசலத்தைப் போன்ற தொரு பக்தனைக் காணவில்லை. மற்றவர்கள் அரசாங்கத் தொழில் புரிகிறார்கள். எல்லா நேரங்களிலும் கோயிலுக்கு வந்து தொண்டுகள் புரிய முடியாது. ஆனால் தணிகாசலம் தனது எல்லா வேலைகளையும் விட்டு விட்டு மகா கணபதிக்குத் தொண்டு செய்தவன். இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தணிகாசலம் மகா கணபதியின் கொடியேற்றத்தினத்தன்று வெண்காயம் நட ஏற்பாடு செய்திருந்தார். கூலிக்கு நட ஆட்களை ஏற்பாடு செய்திருந்தார். நான் தணிகாசலத்தை அழைத்து ஏசினேன்;

“உன்னைப் போல பலரும் தோட்டங்களில் வேலை செய்தால் யார் கோயிலுக்கு வருவார்கள். யாருக்காகக் கொடியேற்றுவது. அறிவுள்ள நீயே இப்படிச் செய்தால், மற்றவர்கள் என்ன செய்வார்கள்?” என்று ஏசினேன். அதன் பின் தணிகாசலம் கோயிலில் எந்த ஒரு சிறு நிகழ்வு நடைபெற்றாலும் அந்நிகழ்வன்று தனது தோட்டத்தில் எந்த வேலையும் செய்யமாட்டார். தணிகாசலத்திற்கு மகா கணபதி துரோகமிழைத்தால் நான் கடைசிவரையும் என்னுடைய கையாலை பூப் போட மாட்டன்”.

வேலாயுதபிள்ளை பதறிப் போனார்; “குருக்கள் இப்ப என்ன நடந்து விட்டதென்று இப்படிக்கதைக்கிறீர்கள். மகா கணபதி தணிகாசலத்திற்குக் கெடுதி செய்ய மாட்டார்.”

“அதை நான் நம்புறன். ஆனால் பரமேஸ்வரன் வத்சல்யனை அழைத்து நாமகளை மறந்து விடும் படி கூறியிருக்கிறார். நட்டத்தோடு நட்டமாய் வாங்கிய வீட்டை அவர்களுக்குக் கொடுத்து விடுவோம் என்றும் சொல்லியிருக்கிறார். நான் தூக்கி வளர்த்த பிள்ளை, நாமகள் என்ரை பிள்ளை தான். நேற்று தணிகாசலம் வீட்டை வந்து “நான் இனிமேல் மகா கணபதி பின் கோயில் வாசலுக்கு வரமாட்டன்” என்று அழுதழுது அவன் சொல்லேக்கை என்ரை இருதயம் வெடிக்காமல் விட்டுட்டுது. நான் பூப்போடுற கணபதி சக்தியுள்ளவரென்றால் தணிகாசலத்திற்கு எதுவும் நடக்காது” விம்மினார் குருக்கள்.

வேலாயுதபிள்ளையும் தனபாலசிங்கமும் விக்னேஸ்வரமூர்த்தியும் கதைக்க முடியாது ஊமையாய் நின்றனர். சுவாமியார் கண்களை மூடியபடி இருந்தார். அவரைப் பார்க்கக் குருக்களுக்குக் கோபம் கோபமாக வந்தது; “மகா கணபதிமாதிரி இருக்கிறார். பிள்ளைப் பெற்று வளர்த்தால் எல்லோ கஷ்டம் கரைச்சல் தெரியும்” என்று மனதுள் நினைத்தார் குருக்கள்.

சுவாமியார் மெல்லக் கண்திறந்தார்; “தணிகாசலத்திற்கு எந்தத் துன்பமும் ஏற்படாது. தற்பொழுது சோதனை காலம். கடவுளின் மீது அன்பு. பக்தி, நம்பிக்கை என்பன இருந்தாலும் அளவுக்கு மேல் துன்பங்கள் வந்தால் யாவும் அற்று விடும். இன்று தணிகாசலத்திற்குக் கடுந்துன்பம் வந்துள்ளது. இந்த நேரத்தில் தான் தணிகாசலமும் அவரது நண்பர்களான நீங்களும் தைரியத்துடன் இருத்தல் வேண்டும். மனத்தை அது போன போக்கிற்குப் போகவிடாமல் தீமையில் இருந்து விலக்கி நல்ல வழியில் போகச் செய்வது தான் அறிவு. குருக்களும் தணிகாசலமும் அந்த நிலையைக் கடந்து விட்டனர். நானும் குடும்பத்தனாக இருந்தால் அப்படித்தான் இருப்பேன். நம்பிக்கையை இழக்கக் கூடாது. வாழ்க்கை, வாள் முனையில் நடப்பதைப் போன்றது. சிறிது தளர்ந்தாலும் அது மரணத்தின் வாசலைக் காட்டிவிடும். குருக்கள், அமைதியாக இருங்கள். இருட்டுக்குப் பின் சூரியன் உதிப்பான்” என்று கூறிவிட்டுக் கண்களை மூடினார் சுவாமியார். குருக்களுக்கு எரிச்சலாக இருந்தது.

**422. சென்ற இடத்தால் செலவிடா தீதுஓரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு.**

மனத்தைச் சென்ற இடத்தில் செல்ல விடாமல், தீமைகளிலிருந்து விலக்கி நல்வழிப்படுத்துவதே அறிவு ஆகும்.

## *மெய்யறிவு*

“எனக்கென்றால் மனம் சமாதானம் அடைய மறுக்கிறது. நாமகள் ஒரு சாதாரண பெண் என்றால் பரவாயில்லை. கற்றறிந்தவள்; வைத்தியர் நான் அவளின் சாதகத்தை அணுஅணுவாக ஆராய்ச்சி செய்தனான். அவன் பிறந்தன்று தணிகாசலம் வீட்டுக்கு வந்து சொன்ன போது நேரத்தைக் கணித்து அவள் பிற்காலத்தில் பேரும் புகழோடும் பெரும் பணக்காரியாக இருப்பாள் என்று சொன்னனான். இதுவரை நான் சொன்னது பொய்த்ததில்லை”. பெருமூச்சு விட்டார் குருக்கள்.

“காதலெண்டாலும் இருவருடைய குறிப்புக்களையும் பார்த்து எண்பது வீதம் பொருத்தம் என்று சொன்னனீங்கள்” என்று தணிகாசலம் சொன்னது; “குருக்கள் நல்ல பொருத்தம் செய்யுங்கோ என்று சொன்னதாலை தான் நான் சம்மதித்தனான். குருக்கள் பொருத்தமில்லை என்று சொல்லியிருந்தால் நான் கடைசிவரையும் சம்மதித்திருக்கமாட்டனென்று தணிகாசலம் எனக்குச் சொன்னவர்” என்றார் வேலாயுதபிள்ளை.

“நான் எனக்கு வேண்டியவர்களின் குறிப்புக்களைக் குறித்து வைத்திருக்கிறனான். நேற்றும் மனங்கேளாமல் இரண்டு பேற்றை குறிப்பையும் எடுத்துப் பார்த்தனான். பிரச்சினை இல்லை. மகா கணபதிதான் எதையோ நினைத்துக் கொண்டு இப்படிச் செய்கிறார்” என்றார் குருக்கள்.

விக்னேஸ்வரமூர்த்தி எதுவும் பேசாமல் யோசித்துக் கொண்டிருந்தார்; “என்ன அதிபர் பேசாமல் இருக்கிறியள். உங்களது மௌனத்தைப் பார்க்க எனக்கு வேதனையாக இருக்கிறது. வாய்திறந்து ஏதாவது சொல்லுங்கள்” என்றார் தனபாலசிங்கம்.

“எப்போதோ முடிந்த காரியம்” என்று ஒரு பெரியவர் சொல்லியிருக்கிறார். தணிகாசலத்தின் வாழ்வில் எங்கோ ஒரு தவறு இருந்திருக்கிறது என்று குருக்கள் நினைக்கலாம் தானே. ஒரு செய்தியை எவர் சொல்லக் கேட்டாலும், அப்பொருளை அறிந்து கொள்வது தான் அறிவு என்று பெரியவர்கள் சொல்வார்கள். எதற்கும் கண்டபடி கதையாது பொறுத்திருங்கோ” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“எனக்கெண்டால் கோயிலுக்கு வரவே விருப்பமில்லை. தற்செயலாக ஏறுமாறாக நடந்தால் மகா கணபதிக்குப் பூசை செய்ய இன்னொரு குருக்களைப் பாருங்கோ.... என்ரை பிள்ளை அவள்” விம்மினார் குருக்கள்.

யாரும் எதுவும் பேசவில்லை. சுவாமியார் கண்களை மூடியபடி இருந்தார். அப்பொழுது மணிவண்ணனது மோட்டார் வண்டி வந்து நின்றது. தணிகாசலமும் மணிவண்ணனும் மோட்டார் வண்டியிலிருந்து இறங்கி வந்தனர். சுவாமியார் கண்களைத் திறந்தார். அவரது கண்கள் சிவந்திருந்தன.

அங்கு வந்த தணிகாசலம் மணலின் மீது அமர்ந்தார். அவரது முகம் என்றுமில்லாதவாறு கலவரமடைந்திருந்தது.

‘‘தணி, என்னால் தான் எல்லாம் வந்தது. நான் தான் இரண்டு பேரினதும் சாதகத்தைப் பார்த்துச் செய்யும்படி சொன்னனான்’’ விம்மினார் குருக்கள்.

‘‘நீங்கள் என்ன செய்யிறது குருக்கள். சாதகத்தில் உள்ளதைத் தானே சொன்னனீங்கள். போனவாரம் வத்சல்யனுடைய தகப்பனார் அவனை வரச் சொல்லித் தொலை பேசியில் சொன்னதாலை அவரும் போயிட்டார். நாலைந்து தினங்களாக அவரோடும் தொடர்பு கொள்ள முடியவில்லை அதற்கு மேல் தணிகாசலத்தால் பேசமுடியவில்லை.

‘‘பரமேஸ்வரனை எனக்குப் பலவருடகாலமாகத் தெரியும். நேர்மையான நல்ல மனிதர். அவர் அப்படிச் சொல்வாரென நான் கடைசி வரையும் நம்பமாட்டன். அவர்கள் பெரும் பணக்காரர். அவரது உறவினர்கள், நண்பர்கள் பலர் தமது பிள்ளைகளை வத்சல்யனுக்கு திருமணஞ் செய்து கொடுக்க ஆசைப்பட்டனர். பலர் என்னிடம் வந்து தமது பெண்பிள்ளைக்கு வத்சல்யனைத் திருமணம் செய்வதற்குப் பரமேஸ்வரனுடன் கதைத்து ஒழுங்கு செய்து தரும்படி கேட்டனர். நான் அவருடன் கதைத்த போது அவர் ‘‘தனது மகன் யாரோ ஒரு பெண்ணை விரும்பி விட்டதாகக் கூறினார். தனக்கிருக்கிறது ஒரே ஒரு பிள்ளையென்றும் எனவே அவனின் விருப்பத்திற்கு மாறாகத்தான் எந்த வேளையிலும் நடக்க மாட்டேன் என்றும் கூறினார். அவர் சாதி, சமயம், அந்தஸ்து எவற்றையும் பார்க்கவில்லை. எனவே அவர் அப்படிக்கதைத்திருக்க மாட்டார். அத்துடன் அவர் இருவருடைய சாதகத்தையும் பார்த்ததாகவும் நல்ல பொருத்தமென்றும் சொன்னவர். நான் அவருடன் பல முறை தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் தொடர்பு கொள்ள முடியவில்லை’’ என்று மணிவண்ணன் கூறிக் கொண்டிருந்த போது மணிவண்ணனது கைத் தொலைபேசி கீதம் பாடியது; ‘‘மணி நான் பரமேஸ்வரன் பேசுகிறேன். வத்சல்யன் இங்கு வந்து என்னுடன் சண்டைக்கு வருகிறான். நான் நாமகளின் சாதகத்தால் தான் எனக்குத் துன்பங்கள் வந்ததாகக் கூறி, அவனைத் திருமணம் செய்யக் கூடாதென்று கூறினேனாம். உனக்கு என்னைப் பல வருட காலமாகத் தெரியும். நான் அப்படிச் சொல்வேனா? எனக்கு வேண்டாத யாரோ தான் இப்படிக் கதைகட்டியிருக்கிறார்கள்’’ அழுதார் பரமேஸ்வரன்.

மணிவண்ணனுக்கு அதைக் கேட்கச் சந்தோசமாக இருந்தது. பரமேஸ்வரன் சொன்னதைத் தணிகாசலத்திற்குச் சொல்லி விட்டு கைத்தொலைபேசியை தணிகாசலத்திடம் கொடுத்தான்; ‘‘மச்சான், என்னைப்பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது. என்னைப் பற்றி மணிவண்ணனிடம் கேளுங்கோ. நான் ஒரு ஈ எறும்புக்குக் கூடத் துன்பஞ் செய்ய மாட்டன்’’.

‘‘எந்தச் செய்தியை யார் யார் சொல்லக் கேட்டாலும் அச் செய்தியை அப்படியே ஏற்றுக் கொள்ளமல் உண்மை நிலையை அறிந்து கொள்வது தான் அறிவு. எல்லாம் வல்ல குருக்களே அதிலிருந்து தவறி விட்டார்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

**423. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

எப்பொருளை யார்யாரிடம் கேட்டாலும், அப்பொருளின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்வதே அறிவாகும்.

## ஆராய்ந்து அறிதல்

‘‘பரமேஸ்வரன் மிகவும் நல்லவர்; நேர்மையானவர்; எந்தச் சந்தர்ப்பத்திலும் வாய்மை தவறாத உத்தமர். நான் கடந்த முப்பது வருட காலமாக அவரிடம் பொருட்கள் கொள்வனவு செய்துவருகிறேன். பத்துவருடங்களுக்கு முன்பு எமது பிரதேசத்தில் போர் உச்சக்கட்டத்தில் நடைபெற்ற போது ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு நான் அவரிடம் பொருட்களைக் கொள்வனவு செய்தேன். பொதுவாக அவர் பணங் கொடுத்தால் தான் பொருள் தருவார். காசோலைகளை ஏற்க மாட்டார். நான் பொருள் கொள்வனவுக் கெனக் கொண்டு சென்ற பணத்தை யாரோ எனக்குத் தெரியாது கொள்ளையடித்து விட்டனர். அதைப்பற்றி அவருக்குச் சொல்ல முடியாது. எனவே எனது நண்பனொருவரிடம் பணத்தைக் கடனாகப் பெற்றுப் பொருட்களை வாங்கிக் கப்பலில் ஏற்றி விட்டு ஊருக்கு வந்து விட்டேன். பதினைந்து தினங்களுக்குப் பின் பொருட்களுடன் புறப்பட்ட கப்பல் கடலுள் தாண்டு விட்டது. அதனால் நான் கொழும்பு வியாபாரத்தைக் கைவிட்டு விட்டேன். அதைப்பற்றி அறிந்த பரமேஸ்வரன் யாழ்ப்பாணத்திற்கு என்னைத் தேடி வந்து விட்டார்; ‘‘மணி, நீ பணத்தைத் தொலைத்ததை என்னிடம் சொல்லியிருக்கலாம் தானே’’ என்று கூறி எனக்கேற்பட்ட நஷ்டத்தின் ஒரு பகுதியைத் தந்து, கடனாகவும் பொருட்களைத் தந்தார். அப்படிப்பட்ட மனிதநேயம் மிக்கவரான பரமேஸ்வரன் ஒரு பெண்ணின் விஷயத்தில் கொடூரமான முறையில் நடந்து கொள்வாரென நான் சிறிதளவும் நம்பவில்லை’’.

‘‘ஒருவன் தான் அறிந்து கொண்டவற்றைப் பிறருக்குச் சொல்லு முன் அது உண்மையான செய்தி தானா என்பதை உறுதி செய்தல் வேண்டும். அத்துடன் அச் செய்தியைப் புரியும் படியும் மனதில் படியும் படியும் சொல்லல் வேண்டும். பிறரிடம் ஒரு செய்தியைக் கேட்கும் போது சம்பந்தப்பட்டவர் அப்படிச் சொல்லக் கூடியவரா என்பதை நுட்பமாக ஆராய்ந்து அறிய வேண்டும். அது தான் அறிவு. நல்லறிவு படைத்த குருக்கள் கூட இதை உணரத் தவறி விட்டார். தனது வாய்ச் சொல் பிழைக்காது, தான் கணித்த சாதகம் இதுவரை பொய்த்ததில்லை என்ற நம்பிக்கையுள்ள குருக்களுக்குத் தவறு மகா கணபதியினுடையது என்று சொல்ல எப்படித் துணிவு வந்தது. எதையும் மிகவும் நுட்பமாக ஆராய்ந்து அறிதல் வேண்டும்’’ என்றார் சுவாமியார்.

‘‘இந்தத் தவறான செய்திகளுக் கெல்லாம் காரணகர்த்தா தனது சகோதரிதானாம். சகோதரிக்கு, மகள் பிறந்த போது சகோதரியும் புரிசனும் வத்சல்யனைத் தான் அவளுக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டு மென்று கேட்டார்களாம். சகோதரியின் புரிசன் அவ்வளவு நல்லவர் இல்லையாம். தினமும் மதுபானம் அருந்தி விட்டு ஊரவர்களுடனும் அயலவர்களுடனும் பிரச்சினைப்படுவாராம். அதனால் அக் குடும்பத்தில் பெண்ணெடுக்கத் தான் விரும்பவில்லை என்று சொன்னார். அத்துடன் அந்தக் குடும்பத்தால் தமக்கு அடிக்கடி மானக்கேடு வருகிறதாம். பொன்னைப் பொருளைக் காணி பூமியைக் கொடுக்கலாம் எனது உயிருக்குயிரான மகனைக் கொடுக்க முடியாது என்று பரமேஸ்வரன் கூறி விட்டார். இதனால் தான் அவர்கள் வத்சல்யனுக்குத் திருமணம் நிட்சயிக்கப்பட்ட பெண்ணால் தான் பரமேஸ்வரனுக்குத் தொழிலில் நஷ்டமேற்பட்டதென்று கூற, அவர் வத்சல்யனுக்கு நிட்சயிக்கப்பட்ட பெண்ணைத் திருமணஞ் செய்ய விரும்பவில்லை என்ற செய்தியைப் பரப்பினார்களாம். யாராவது வதந்திகளைப் பரப்பினால் அதில் உள்ள பொருளை நன்கு ஆராய்ந்து அறிந்த பின்பே அதைப்பற்றிய முடிவை எடுத்தல் வேண்டும். நான் மிகமிக

அருகில் இருக்கிறேன். அத்துடன் தணிகாசலம் அண்ணையோடு மிகவும் நெருங்கிப் பழகி வருகிறேன். அவர் என்மீது அளவுக்கதிகமான அன்பும் நம்பிக்கையும் வைத்துள்ளார். அத்துடன் நான் பரமேஸ்வரனது குடும்பத்துடன் வைத்துள்ள உறவும் அவருக்குத் தெரியும். அப்படியிருக்க அவர் என்னை வந்து சந்தித்துக் கதைக்காது யார் யாரோ சொன்னவற்றை நம்பிக் கவலைப்பட்டது மட்டுமல்லாமல், பரமேஸ்வரனைப் பற்றி மற்றவர்கள் தரக்குறைவாகப் பேசவும் வைத்து விட்டார். இது எனக்கு மிகுந்த கவலையைத் தருகிறது'' என்றான் மணிவண்ணன்.

''அப்ப தணிகாசலம் எனக்குச் சொன்னதெல்லாம் கட்டுக்கதையே? நான் யோசிக்காமல் மகா கணபதி மீதுபழிசுமத்திக் கதைக்கக்கூடாத கதைகளை யெல்லாம் கதைத்து விட்டேன்'' குருக்களின் குரல் தளதளர்த்தது.

''முன்பே சுவாமியார் கவலைப்படாதை தணிகாசலம், இதில் ஏதோ ஒரு சிக்கல் இருக்கிறது. பொறுமையாக இரு. துன்பம் வந்த வேளைகளில் நாம் பிறருடன் பேசும் போதும், கேட்கும் போதும், பதில்சொல்லும் போதும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்'' என்றவர். நான் தான் அறியாத்தனமாகப் பேசிவிட்டன்'' கவலைப்பட்டார் தணிகாசலம்.

**424. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு.**

தான் சொல்வதைக் கேட்பவன் புரிந்து விளங்கிக் கொள்ளுமாறு கூறுதல் வேண்டும். பிறரிடம் கேட்கும் போது கேட்டவற்றில் உள்ள நுட்பமான பொருளை ஆராய்ந்து அறிதல் வேண்டும் இதுவே அறிவாகும்.

### *விரிவும் சுருக்கமும் இல்லாதது*

''உங்களது மகளைப்பற்றி நீங்கள் தெரிந்து கொண்டது இவ்வளவு தானா...? மருத்துவக்கல்லூரியில் கற்றாலும் அவள் வயது குறைந்தவள், அனுபவமில்லாதவள் பிறர் கூறும் பொருளை நுட்பமாக ஆராய்ந்து அறியும் வல்லமை இல்லாதவள். நீங்கள் அப்படியானவரா? ஊரில் உள்ள எத்தனை குடும்பங்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தனீங்கள். அதில் மிகவும் சிக்கலான விஷயம், தில்லைநடராசா கந்தசாமியின் மனைவி நந்தினியுடன் தொடர்பு வைத்திருந்ததை அறிந்த அவனது மனைவி உங்களிடம் வந்து அந்த விஷயத்தைச் சொல்லி அழுதவள். அந்தச் சம்பவத்தைப் பற்றி எனக்கும் தெரியும். தில்லை என்னுடைய கடையிலை கடனாகப் பொருட்களை வாங்கி அவளுக்குக் கொடுப்பவன். அதுவும் அவளுக்குத் தெரியும். அதைப்பற்றி என்னை உங்களுக்குச் சொல்லச் சொல்லிச் சொன்னதாலை நான் உங்களுக்குச் சொன்னனான். அதை அடுத்தவரறியாமல் நல்ல முறையில் தீர்த்து வைத்த உங்களாலை ஏன் உங்களது மகளின் பிரச்சினையை தீர்க்க முடியவில்லை'' என்று கேட்டான் மணிவண்ணன். தணிகாசலத்தால் அதற்குப் பதில் கூற முடியவில்லை தடுமாறிப் போனார். அவருக்கு மகள் அன்று அழுதழுது சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

''அப்பா, நான் ஏமாந்திட்டன். மருத்துவக்கல்லூரிக்குச் சென்றன்றே வத்சல்யன் என்மீது மோகங் கொண்டு விட்டார். அதன் பின் அடிக்கடி வந்து என்னுடன்

பேசினார். அப்பொழுது எனது குடும்பத்தைப் பற்றித்தான் நினைத்தேன். தோட்டவேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றக் கஷ்டப்படும் உங்களின் முகம் என் கண்களுக்குள் தோன்றியது. இதற்கு முன் அன்நிய ஆடவர்களுடன் கதைக்காத எனக்குப் பயமாகவும் இருந்தது. அதனால் அவரைச் சந்திக்கக் கூடாதென்று விலகி விலகிச் சென்றேன். ஆனால் அவர் நெருங்கி நெருங்கி வந்தார். எனக்குக் கதைக்க விருப்பமில்லை. ஆனால் அவர் நான் கதைக்க மாட்டேனா என்று ஏங்கினார். நான் கதைக்காததால் எனது தோழியொருத்தியிடம் தனது காதலைப்பற்றிச் சொல்லி, நான் தன்னை விரும்பா விட்டால் தான் படிப்பை இடை நிறுத்தி விட்டுச் செல்லப் போவதாகச் சொன்னார். எனது தோழி என்னை வற்புறுத்தினாள்; ''காதல் என்பது கேவலமான தொன்றல்ல, பலர் காதலித்துத் திருமணஞ் செய்திருக்கிறார்கள். அத்துடன் வத்சல்யன் உன்னைத் தீவிரமாக நேசிக்கிறான் பாவமடி அவன்'' என்று பலமுறை அவள் சொன்னதால் தான் விருப்பம் தெரிவித்தேன். அதன் பின் அவர் என்னுடன் பேச வந்த போது; ''எனக்கு உங்கள் மீது காதல் ஏற்படவில்லை. உங்களுக்கு என்மீது விருப்ப மென்றால் முறைப்படி அப்பாவிடம் வந்து கதையுங்கள்'' என்றேன். அதனால் தான் அவர் தனது பெற்றோரை அழைத்து வந்தார். இப்ப ஊரில் நான் காதலித்து ஏமாந்து விட்டேன் என்று என்னைக் கேவலமாக நினைக்கப் போகிறார்கள்.'' அழுதாள். துயரத்தின் சிறு தழும்பு கூடத் தென்படாத அவளது பட்டுப் போன்ற முகம் துயரமிகுதியால் கறுத்திருந்ததை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

''தணிகாசலம் அண்ணை, நீங்கள் என்னில் பார்க்க எத்தனையோ வயது மூத்தனீங்கள்; அத்துடன் அனுபவம் மிக்கனீங்கள்; அறிவுடையவர்; எனக்கு எத்தனை பிரச்சினைகள் வந்த போது ஆறுதல் கூறி எனது தளர்ச்சியை நீக்கிய நீங்கள் அவசரப்பட்டு உங்கள் மகளின் மனத்தையும் உங்களது மனத்தையும் கெடுத்து விட்டீர்கள். ''உலகத்தில் உயர்ந்தவரை நட்பாக்கிக் கொள்வது சிறந்த அறிவு. அந்த உயர்ந்த அறிவு கூடிக் குறையாது எப்பொழுதும் ஒரே அளவுடையதாக இருக்கும்'' என்று சுவாமியார் அடிக்கடி கூறுவதையும் மறந்து விட்டீர்களே'' என்று கவலைப்பட்டான் மணிவண்ணன்.

''உண்மை தான். அறிவால் ஒருவன் உயர்ந்தவனாக இருந்த போதும் சில வேளைகளில் பற்றும் பாசமும் அவனைத் தடுமாற வைத்து விடுகிறது. மகளை எந்தவிதமான குறையுமின்றி வளர்த்ததால், அவள் அழ எனது மனம் குழம்பி விட்டது'' கவலைப்பட்டார் தணிகாசலம்.

''எனக்கு உங்களின் நிலமை புரிகிறது. நீங்கள் தடுமாறினால் பரவாயில்லை. உங்களின் குடும்பத்தையும் தடுமாற வைத்து விட்டீர்கள்'' என்று மணிவண்ணன் கூறிக் கொண்டிருக்கும் போது வேலாயுதபிள்ளை சொன்னார்; ''தணிகுடும்பத்தையே தடுமாற வைத்தவர். என்னையும் குருக்களையும் தடுமாற வைத்திட்டார். குருக்கள் தணிகாசலத்தில் கொண்ட பாசம் காரணமாக மகா கணபதியையும் வெறுத்திட்டார்''.

''சரி.. சரி... நடந்த சம்பவங்களை வீட்டை போய்ச் சொல்லுங்கோ. நாமகள் குழம்பிப் போயிருக்கிறாள்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

**425. உலகம் தழீஇயது ஒட்பம்; மலர்தலும்**
**கூம்பலும் இல்லது அறிவு.**

உலகத்தில் உள்ள உயர்ந்தவர்களை நட்பாக்கிக் கொள்வது உயர்ந்த அறிவு; அந்த நட்பில் முதலில் மகிழ்வும் பின் முறிவும் இல்லாமல் பார்ப்பதும் அறிவு.

## *பின்பற்றி வாழ்தல்*

‘‘மணிவண்ணன் மிகவும் நல்லவன்; நேர்மையானவன்; பொய்பேசாதவன். எனினும் என்னைச் சமாளிப்பதற்காகவும், நானும் எனது குடும்பத்தினரும், நண்பர்களும் பரமேஸ்வரனது செயலால் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகவும் ஏன் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது? பின்பு பரமேஸ்வரனைச் சந்தித்து நியாயத்தை எடுத்துக் கூறலாம். என்றும் மணிவண்ணன் நினைத்திருக்கலாம் தானே. தில்லைநடராசா தான் இனிமேல் நந்தினியுடன் உறவு வைக்க மாட்டேன் என்று மகாகணபதி ஆலயத்தில் அவருக்கு முன்பாகச் சத்தியம் பண்ணினான். அதை அவனது மனைவிக்கு நான் எடுத்துச் சொல்லி அதை அவள் நம்பிவிட்டாள். அதனால் இப்பொழுது அவள் மிகவும் சந்தோசமாக வாழ்கிறாள். இதனால் முன்பு மகா கணபதி ஆலயத்திற்கு வராது நின்ற அவள் இப்பொழுது தினமும் வருகிறாள். ஆனால் தில்லை நடராசா திருந்தவில்லை. முன்பு அடிக்கடி நந்தினியின் வீட்டுக்குச் சென்று வந்த அவன் தற்பொழுது போவதைக் குறைத்துக் கொண்டானே தவிரச் சென்று வருகிறான். அது போலத்தான் பரமேஸ்வரனது செயல்களும் இருக்குமோ?’’ என்று கலங்கினபடி இருந்தார் தணிகாசலம்.

வழக்கமாக இரவு பத்துமணிக்குப் பிறகு வீட்டுக்கு வரும் தணிகாசலம் தற்பொழுது வீட்டை விட்டு வெளியே செல்வதில்லை. அன்று நான்கு மணியாகியும் அவர் மதிய உணவை உண்ணவில்லை. வழமையாக அவர் காலையில் உணவு உண்பதில்லை. வீட்டில் வளர்க்கும் பசுவில் பால் கறந்து கொடுப்பார். அவரது மனைவி சீனி போட்டுப் பாலைக் காய்ச்சி ஒரு கோப்பை கொடுப்பாள். அதைக் குடித்து விட்டுச் சென்றாரானால் பகல் ஒரு மணிக்குப் பிறகு தான் சாப்பாட்டிற்கு வருவார். அன்று காலை அவர் பால் குடிக்கவில்லை.

‘‘அப்பா, காலையிலும் நீங்கள் பால் குடிக்கவில்லை. இப்போது நான்கு மணியாகிறது. சாப்பிடாமல் இருக்கிறீர்கள். மணிவண்ணன் மாமா சொன்ன மாதிரித்தான் வத்சல்யனும் சொல்கிறார். எனக்கு வத்சல்யனில் நம்பிக்கை இருக்கு. எழும்பி வந்து சாப்பிடுங்கோ...’’ கலங்கினாள் நாமகள்.

அப்பொழுது அவர்களது வீட்டு வாசலில் ஒரு மோட்டார் வண்டி வந்து நின்றது. தணிகாசலம் எழுந்து முற்றத்திற்கு வந்த போது, பரமேஸ்வரனும் அவரது மனைவி காமாட்சியம்பாளும் வத்சல்யனும் உள்ளே வந்து கொண்டிருந்தனர்.

‘‘வாருங்கோ, உள்ளுக்கு வாருங்கோ’’ என்று அவர்களை வரவேற்று வீட்டுள் அழைத்துச் சென்ற தணிகாசலம் அவர்களை ஆசனத்தில் அமர்த்தினார்.

‘‘நான் ஓர் இந்து. சமய உண்மைகளை கண்களை மூடிக் கொண்டு நம்புவேன். கடவுள் நம்பிக்கை அளவுக்கதிகமாகக் உள்ளவன் நான். கடவுளைத் தவிர நான் யாரையும் நம்புவது கிடையாது. எனது மனைவியும் அப்படியானவள். எமக்கு நன்மையையும் தீமையையும் கடவுள் ஒருவரால் தான் தர முடியும். நான்

மிகவும் ஏழையாக இருந்தேன். கடவுள் அள்ளித்தந்தார். அள்ளித் தந்ததில் ஒரு பகுதியை அவர் இப்போது எடுத்து விட்டார். எடுத்ததிலும் பார்க்க எனக்குக் கூடத்தருவார். இது இருவருக்குமிடையில் அடிக்கடி நடைபெறும் நிகழ்வு. பத்து இலட்சம் ரூபா தேவையெனக் கடவுள் எடுத்தாரேயானால் நூறு இலட்சம் ரூபா தருவார். அதற்காக நான் கவலைப்படவில்லை. சாத்திரத்தில் பூரண நம்பிக்கை வைத்திருக்கிறேன். எனது குடும்பச் சோதிடர் எனக்கு இந்த வருடம் பாரிய நட்டமேற்படு மென்று சொன்னவர். ஆனால் எனக்குப் பெரிய நட்ட மேற்படவில்லை''. என்று பரமேஸ்வரன் கூறிவிட்டு மூச்சு விட்டார்.

தணிகாசலத்திற்கு ஆறுதலாக இருந்தது. ஒரு கணம் மகா கணபதியை மனதில் நினைத்தார்.

''இந்துக்கள் சோதிடத்தை அளவுக்கதிகமாக நம்புகிறார்கள். இதுவும் அவர்களது வீழ்ச்சிக்கு முக்கிய காரணியாகும். எமது சமுதாயம் இப்போது இருக்கும் தாழ்ந்த நிலைக்குச் சோதிடத்தை அளவுக்கதிகமாக நம்புவதும் ஒரு காரணமாகும். சோதிடத்தை தவறாக எண்ணிக் கணக்கிடுவதில் கற்றவர்களும் பாமரர்களும் ஒரு நிலையிலே இருக்கிறார்கள். அதனால் தான் என்மீது உங்களுக்குச் சந்தேகம் வந்தது. சோதிடத்தை நான் நம்பினாலும் உலகத்தில் உயர்ந்தவர்கள் எப்படி வாழ்கிறார்களோ அது போல அவர்களைப் பின் பற்றியே நான் வாழ்கிறேன். பெரியவர்கள், ஞானிகள், கற்றறிந்தவர்கள் கூறுவதையும் கேட்கிறேன். நல்ல நூல்களைப் படிக்கிறேன். எனவே மனித தர்மத்திற்கு மாறாக நான் நடக்க மாட்டேன்'' என்றார் பரமேஸ்வரன்.

பல நாட்களுக்குப் பின் முழுமையான மகிழ்வுடன் சிரித்தார் தணிகாசலம். அவருக்குப் பசித்தது.

**426. எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வது உறைவது அறிவு.**

உலகத்தில் மக்கள் எவ்வாறு வாழ்கிறார்களோ, அதற்கேற்பப் பொருந்தித் தானும் அப்படி வாழ்வதே அறிவாகும்.

### *முன்னறிதல்*

''எல்லோராலும் பின்பு நடக்க விருப்பதை அறிந்து கொள்ள முடியாது. அவ்வாறு அறிந்து கொள்ள முடியாத அறிவற்ற மனிதர்களால் தான் உலகத்தில் துன்பங்கள் ஏற்படுகின்றன. தமது செயல்கள் எதிர் காலத்தை உருவாக்குகின்றன என்பதைப் படித்தவர்கள் கூட அறிந்து கொள்வதில்லை. ஒருவன் செய்த செயலின் பயன் எப்போதே ஒருநாள் செய்தவனை வந்தடையும் என்பதை நம்புபவன் நான். அதனால் தான் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீவிபத்தின் நட்டத்தைக் கணிப்பிடுவதற்குத் தொழிலாளர்களை நியமித்து விட்டு அவசர அவசரமாக இங்கு வந்தேன். தணிகாசலம் தனது எதிர்காலம் துன்பமயமானது என்றெண்ணிக் கவலைப்படுவார் என்று எனக்குத் தெரியும். இந்தப் பிரச்சினைக்கு வேறு யாராலும் ஆறுதல் கூற முடியாதென்றும் எனக்குத் தெரியும். அதனால் தான் நேரில் வந்தேன்'' என்றார் பரமேஸ்வரன்.

‘‘எப்பொழுதும் மனிதன் எதிர்காலம் குறித்து நல்லவற்றைச் சிந்திப்பது குறைவு. அறிவுள்ளவன் மட்டுமே எதிர்காலம் குறித்து நல்லவற்றைச் சிந்திக்கிறான். அதனால் பின் நடக்கவுள்ளதை அறிவுடையோர் முன்னரே தமது உயர்ந்த அறிவால் அறிந்து கொள்வர். தணிகாசலம் தனது உயர்ந்த அறிவால் பின் நடக்கவிருப்பதை முன்பே அறிந்து கொள்ளும் தன்மை வாய்ந்தவர். அடுத்தவர்களுக்கு வரும் துன்பங்களை அறிந்து சொல்லும் அளவிற்கு அறிவுள்ள தணிகாசலத்தால் தனக்கு என்ன வரும் என்பதை அறிந்து கொள்ளாமைக்குக் காரணம் மனப்பதட்டம் தான். ஒவ்வொருவரும் தமது பிரச்சினைகளைத் தாமே தீர்த்துக் கொள்ளும் வகையில் தமது அறிவை வளர்க்க வேண்டும். வெறும் எழுத்துக்களை வாசிப்பதும், மற்றவர்களின் வார்த்தைகளைச் செவிமடுப்பதும் கல்வியாகாது. ஒவ்வொருவரும் வாசிக்கும், கேட்கும் வார்த்தைகள் அவர்களின் மனதை அசைப்பதாக இருத்தல் வேண்டும் அது தான் அறிவு. ஒரு மனிதனின் முன்னேற்றமென்பது, அவனிடத்தில் குடிகொண்டிருக்கும் அறிவைப் பொறுத்தே அமைகிறது. நான் யாவற்றையும் உணர்ந்து அமைதியாக இருந்த போது அதைத் தவறாகத் தணிகாசலமும் குருக்களும் புரிந்து கொண்டு பேசக் கூடாதவற்றை யெல்லாம் பேசி விட்டனர். உங்களது வார்த்தைகளுக்கு எதிர்காலம் பதில் கூறும் என்று பொறுத்திருந்தேன்’’ என்று சுவாமியார் எனக்குக்’ கூறினார் என்றான் மணிவண்ணன்.

அப்பொழுது நாமகள் ஒரு தட்டில் பலகோப்பைகளில் தேநீரை ஊற்றிக் கொண்டு வந்தாள். காமாட்சியம்மாள் மருமகளை நிமிர்ந்து பார்த்தாள். திருமகளின் முகத்தைப் போலப் பொங்கிப் பூரித்திருந்த அவளது வதனம் சற்றுக் கறுத்துப் பொலிவிழந்திருந்தது.

‘‘அம்மா, உயர்ந்த படிப்புப் படிக்கும் பெண்ணான உனக்குக் கூட எம்மீது சந்தேகம் வந்து விட்டதா?. வத்சல்யன் திரும்பத் திரும்ப அது ஊரவரின் பொறாமையிலான பேச்சு அதை நம்ப வேண்டா மென்று கூறியும் நீ ஏற்றுக் கொள்ள வில்லையாம். அதைத் திரும்பித் திரும்பச் சொல்லிக் கவலைப்பட்டதால் தான் நானும் கூட வந்தேன்’’ என்றாள் காமாட்சியம்மாள்.

‘‘தணிகாசலம், எமது குடும்பத்தவரால் தான் உங்களுக்கு இவ்வளவு துன்பங்களும் ஏற்பட்டது. எனது தங்கையும் கணவனும் தனது மகளுக்கு வத்சல்யனைத் திருமணஞ் செய்ய விரும்பினர். நானோ அல்லது வத்சல்யனோ அதை விரும்பவில்லை. அதற்குக் காரணம் அக்குடும்பத்தவர்களது தீய ஒழுக்கம் தான். ஒழுக்கத்திற்காக நாம் வாழ்க்கையில் உள்ள எவற்றையும் துறக்கலாம். ஆனால் எதன் பொருட்டும் ஒழுக்கத்தைக் கைவிடக்கூடாது. கீழ்த்தரமான செயல்களால் எதையும் தாம் சாதித்து விடலாமென்று பலர் நினைக்கிறார்கள். அது கடைசி வரையும் நடைபெற மாட்டாது என்று ஏனோ அவர்கள் நினைப்பதில்லை. அதற்காகத் தான் நான் புறப்பட்டு வந்தேன். உங்களுக்கு அதனால் ஏற்பட்ட மனக்கஷ்டங்களுக்கு மன்னிப்புக் கோருகிறேன்’’ என்றார் பரமேஸ்வரன்.

‘‘ஐயையோ ஏன் பெரிய வார்த்தைகளை யெல்லாம் உபயோகிக்கிறீர்கள். நல்லவை நிகழ்ந்தால் கண்ணூறு பட்டு ஏதாவது நோய் நொடி வருமென்று சொல்வார்கள். எமக்கு நோய் நொடி வரவில்லை. மனக் கஷ்டம் வந்து விட்டது. அதெல்லாவற்றையும் நாங்கள் மறந்து விட்டோம்’’ என்றார் தணிகாசலம்.

வத்சல்யன் நாமகளை ஆசையுடன் பார்த்தான். அவளும் பார்த்தாள். இரு சோடி விழிகளும் கலந்து உறவாடி மகிழ்ந்து தாழ உதடுகள் பிரிந்தன. பல நாட்களுக்குப் பின் முழுமையான காதல் உணர்வு பெருக்கெடுத்தோடும் நாமகளின் அச்சிரிப்பில் மயங்கித் தடுமாறினான் வத்சல்யன்.

**427. அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்**
**அஃதுஅறி கல்லா தவர்.**

அறிவுடையவர்கள் எதிர் காலத்தில் நிகழப் போவதை முன்பே அறிந்து கொள்வார்கள். அறிவில்லாதவர்கள் அதை அறிந்து கொள்ள மாட்டார்கள்.

### *அறிவுடையோர்*

“ நான் இது வரை யார் மீதும் கோபப்பட்டதில்லை; எதற்காகவும் கவலைப்பட்டதும் இல்லை; எதற்கும் அஞ்சியதும் இல்லை. ஏனென்றால் நான் எல்லோருடனும் அன்பாகவே பழகுகிறேன். எல்லோரையும் இறைவனின் குழந்தைகளாகவே நினைக்கிறேன். ஒருவன் பணம் பொருளால் உயர்ந்து தாழ்ந்து இருப்பதைப் பற்றி நான் சிந்தித்துப் பார்ப்பதில்லை. குணத்தாலும் ஒழுக்கத்தாலும் உயர்ந்திருப்பவனையே நான் மதிக்கிறேன். இன்றைக்குத் தான் நான் என் மனதில் உள்ளதைச் சொல்கிறேன். இந்த ஊரில் வாழ்பவர்களில் தணிகாசலத்தின் மீது தான் நான் அளவற்ற பாசம் கொண்டிருக்கிறேன். தணிகாசலம் புனிதமும் பூரணத்துவமும் பெற்ற ஒரு மாமனிதன்; மண் உலகின் தேவன். அதனால் தான் தணிகாசலத்திற்கு நேர்ந்த அவலத்தையிட்டு அளவுக்கதிகமாக உணர்ச்சி வசப்பட்டேன். என்னால் எந்தக் குறைபாட்டையும் தாங்கிக் கொள்ள முடியும். ஆனால் நம்பிக்கைத் துரோகத்தைத் தாங்கிக் கொள்ள முடியாது” உணர்ச்சி வசப்பட்டார் குருக்கள்.

இரண்டு வாரங்களின் பின் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தின் காலைப் பூசைக்கு வந்த தணிகாசலத்தை வேலாயுதபிள்ளையும் தனபாலசிங்கமும் வரவேற்றுப் புன் முறுவலுடன் பேசிக் கொண்டிருந்த போது அவ்விடத்திற்கு வந்த குருக்கள் சொல்வதைக் கேட்க தணிகாலசத்திற்கு மெய் சிலிர்த்தது. வேலாயுதபிள்ளையும் தனபாலசிங்கமும் குருக்களின் உணர்ச்சி வசப்பட்ட பேச்சைக் கேட்டு எதுவும் பேச முடியாது தடுமாறியபடி நின்றனர்.

குருக்கள் தொடர்ந்து சொன்னார்; “என்னால் ஒரு பெண்ணுக்குத் துரோகமிளைப்பதைப் பொறுக்க முடியாது. பெண்களை மதிக்கும் குடும்பம் தான் நாகரீகமான குடும்பம். அக்குடும்பத்திற்கு எந்தக் குறையும் வராது. தணிகாசலத்தை விட்டு விட்டு நாமகளை நினைத்துப் பாருங்கள். அவளிடம் பெண்மைக்குரிய பண்புகள் அனைத்தும் பூரணமாக உள்ளன. இப்படியான ஒரு பெண் பரமேஸ்வரனுக்கு மருமகளாகக் கிடைப்பாளா...? அவர்கள் நாமகளை அடையப் பூர்வ ஜென்மத்தில் ஏதோ புண்ணியம் செய்திருத்தல் வேண்டும். சமூகம் எப்பொழுதும் பெண்களைக் குறைத்தே மதிப்பிடுகிறது; எப்பொழுதும் குற்றம் சொல்லிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொருவரின் தாயும் பெண்; தாரமும் பெண். இதை ஏன் ஒவவொருவரும் நினைக்கிறீர்கள் இல்லை. நாமகள் ஒழுக்கமான பெண். அதனால் தான் அவள் வத்சல்யனை விரும்பவில்லை. வேறு பெண்களாக இருந்தால் வலியவரும் செல்வத்தை மகிழ்ந்து வரவேற்றிருப்பார்கள்.

ஆனால் நாமகள் பெற்றோருடன் கதைக்கும் படி கூறினாள்'' உணர்ச்சி மிகுதியால் குருக்கள் கூறும் வார்த்தைகள் அரை குறையாக வெளி வந்தன.

குருக்கள் இப்படி உணர்ச்சி வசப்பட்டதை இதுவரையாரும் காணவில்லை.

''பெண்ணைக் குலவிளக்கென்கிறோம்; குலமகள் என்கிறோம். அப்படியான ஒரு பெண்ணைக் வேதனைப்படுத்துவதை நாம் எப்படி அனுமதிக்க முடியும். ஒரு பெண் காதலிப்பது குற்றமில்லை. காதலித்தவனைத் திருமணம் செய்யாமல் விடுவது தான் குற்றம். குற்றம் மட்டுமல்ல களங்கமும் கூட. விதிவசத்தால் காதலர் பிரிந்தால் அதை ஏற்றுக் கொள்ளல் வேண்டும். இன்று எமது பூமியில் நடைபெறும் கொடிய போரால் எத்தனை பெண்கள் விதவைகளாகியுள்ளனர். இவர்களுக்கெல்லாம் மறு வாழ்வு கொடுத்தல் வேண்டும். காதலித்து விட்டு பின் சாட்டு போக்குகள் சொல்லிப் பிரிய நினைப்பவர்களை எப்படி மன்னிக்கலாம். அப்படியானவர்களை அடித்துக் கொலை செய்தல் வேண்டும். நாமகளுக்கும் வத்சல்யனுக்கும் திருமணமாகா விட்டால், நாமகளை யார் திருமணம் செய்வார்கள். வேலாயுதம் உனது மகனுக்குச் செய்து வைப்பாயா?'' கேட்டு விட்டு மூச்சு விட்டார் குருக்கள். வேலாயுதம் ஏற்கனவே தடுமாறியிருந்ததால் அவரால் பேசமுடியவில்லை.

''ஒருவன் அஞ்ச வேண்டியதற்கு அஞ்சாமல் இருப்பது அறிவில்லாத தன்மை; அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சுவதே அறிவுடமை என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனால் தான் நானும் தணிகாசலமும் அஞ்சினோம். அதற்காகத்தான் தணிகாசலம் கோயிலுக்கு வரவில்லை. தற்செயலாக திருமணம் குழம்பியிருந்தால் நான் சொன்னபடி மகா கணபதிக்குப் பூசை செய்திருக்க மாட்டன்'' என்றார் குருக்கள். தணிகாசலத்தின் கண்களால் கண்ணீர் ஆறாகப் பெருகிக் கொண்டிருந்தது.

**428. அஞ்சுவது அஞ்சாமை பேதமை; அஞ்சுவது**
**அஞ்சல் அறிவார் தொழில்.**

அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சாமல் இருப்பது அறியாமையாகும். அஞ்சத்தக்கவற்றிற்கு அஞ்சுவது அறிவுடையவரின் தொழிலாகும்.

## ***துன்பம் வராது***

'' ஒரு செயலின் பின் விளைவுகளை நாம் முன்பே நமது அறிவின்மூலம் ஆராய்ந்து அறிந்த பின்பே அச்செயலைத் தொடங்குதல் வேண்டும். ஒரு செயலில் வெற்றி பெற வேண்டுமானால் மீண்டும் மீண்டும் மனம் தளராது நம்பிக்கையுடன் முயற்சி செய்வதன் மூலம் வெற்றியைப் பெறலாம். எனவே எனவே முயற்சியை மேலும் மேலும் மேற்கொண்டு எந்தச் செயலையும் செய்யலாம். எமக்கு வரும் சாதாரண பிரச்சினைகளை மனதிற்குச் சமாதானம் கூறித்திருப்திப்படலாம். ஆனால் என்னுடைய சொத்து; சுகம்; வாழ்க்கை என்று நான் நினைத்திருப்பது நாமகளைத்தானே. அவளுக்கொரு பாதிப்பு வந்தால் எப்படி என்னால் தாங்கிக் கொள்ள முடியும். எனது பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக நானும் எனது மனைவியும் பட்ட கஷ்டங்கள் எவ்வளவு தெரியுமா? எத்தனை நாட்கள் நாம் இரவில் உண்ணாமல் உறங்கியிருப்போம்.

அவள் படித்து உத்தியோகமாகி விட்டால் எமது கஷ்டங்களெல்லாம் தீரா விட்டாலும் அவளது கஷ்டங்களாவது தீருமென்று எதிர் பார்த்தேன். தற் செயலாகத் திருமணம் நடைபெறா விட்டால், அவள் காலமெல்லாம் கஷ்டப்படுவாள் என்பதை நினைக்க எனக்கு மகா கணபதி மீது மட்டுமல்ல வாழ்க்கையின் மீதே வெறுப்பு வந்தது. மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் நஞ்சு கொடுத்து விட்டு நானும் குடித்தாலென்ன என்று கூட நினைத்தேன். அந்த ஒரு வார காலத்துள் பின்பு நடக்கவிருக்கும் துன்பங்களெல்லாம் எனது மனதில் தெரிந்தன. பின்வரக் கூடியவற்றை முன்னே அறிந்து கொள்ளும் அறிவுடையவர்களுக்கு, அவர் அதிர்ச்சியடைந்து நடுங்கும் படியாக ஒரு துன்பமும் வராது என்று பெரியவர்கள் கூறுவார்கள். அது உண்மை. பரமேஸ்வரன் எமது வீட்டுக்கு வந்து தனது நிலையைக் கூறிய போது எனக்கு பெரு மகிழ்ச்சி உண்டாகவில்லை. அவர் தனது மகனுக்கு நாமகளைத் திருமணம் செய்ய மறுத்திருந்தால் கூட நான் அதிர்ச்சியடைந்திருக்க மாட்டன். ஏனென்றால் இன்று மதிப்போடு சமூகத்தில் வாழும் பலர் பணம் பொருளுக்காக எதையும் செய்வார்கள் என்று எனக்குத் தெரியும்''. என்றார் தணிகாசலம். அவரின் முகத்தில் முன்னைய மகிழ்ச்சியைக் காணவில்லை.

''அவர்கள் எது செய்ய நினைத்தார்களே எனக்குத் தெரியாது. ஆனால் நாமகளுக்குத் திருமணம் நடைபெறா விட்டால் என்ன நடைபெறும் என்று எனக்குத் தெரியும். அதனால் தான் நான் வணங்கும் மகா கணபதிக்கு நிபந்தனை விதித்தேன். கோயிலுக்கு வரும் போது, பூசை செய்யும் போதும் சம்பந்தப்பட்டவர்கள் உடலாலும் உள்ளத்தாலும் தூய்மை உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். தணிகாசலமும் நானும் எப்பொழுதும் உடலாலும் உள்ளத்தாலும் தூய்மை உடையவர்களாகவே இருக்கிறோம். அப்படியானவர்களின் பிரார்த்தனையையும் பூசையையும் தான் கடவுள் ஏற்றுக் கொள்வார். நேர்மையுடனும், தைரியத்துடனும் பக்தியுடனும் செய்யப்படும் எந்தச் செயலும் வெற்றி தரும் என்பதால் தான் நான் மகாகணபதிக்குச் சவால் விட்டேன். நீங்கள் கடவுளுக்குச் சவாலா என்று நினைப்பீர்கள். பக்தி முதிர்ந்த நிலையில் சண்டித்தனம் கூட விடலாம். நான் மகா கணபதியை என்னுடைய குருவாய்; தலைவனாய்; மகனாய்; சகோதரனாய் நினைக்கிறேன். அவரும் அப்படித்தான் நினைக்கிறார். எமது புராண இதிகாச நாயகர்களும், நாயன்மாரும் கடவுளை ஏவலாளாகக் கொள்ளவில்லையா...? தணிகாசலத்தின் மேலிருந்த அன்பு என்ன அப்படிச் செய்ய வைத்து விட்டது'' என்றார் குருக்கள்.

''குருக்களைப் போலத்தான் நானும் மகா கணபதியை நினைத்திருக்கிறேன். எனக்கு அவரின் மீது அதீத நம்பிக்கை உண்டு. நம்பிக்கை இல்லாதவர்களுக்குக் கடவுள் என்றும் கல்லாகவே இருப்பார். நம்பிக்கை உள்ளவர்களுக்குக் கல்லும் கதை பேசும் கடவுளாக இருக்கும். நான் கோயிலுக்கு வரா விட்டாலும் மகா கணபதி தினமும் எனது வீட்டுக்கு வந்து என்னுடன் கதைத்து மகிழ்ந்து விட்டுத் தான் செல்வார். பின்பு வரக் கூடிய நன்மை தீமைகளைப் பற்றி நான் நன்கறிந்திருந்தமையால் எது நடந்தாலும் நான் அதிர்ச்சியடைந்திருக்க மாட்டன். துன்பப்பட்டிருப்பன்; துயரப்பட்டிருப்பன். தீமை நடக்கமாட்டா தென்ற நம்பிக்கை எனது மனதில் இருந்தமையால் தான் நான் கோயிலுக்கு வராமல் இருந்தேன்'' என்றார் தணிகாசலம்.

அப்பொழுது கோயிலுக்கு நாமகளும் வத்சல்யனும் வந்தனர். குருக்கள் கதைப்பதை விட்டு விட்டு அவர்களை நோக்கி அவசர அசவரமாகச் சென்றார்.

**429. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.**

வரப்போகும் துன்பத்தை முன்னே அறிந்து தம்மைக் காத்துக் கொள்ள வல்ல அறிவுடைய பெரியவர்களுக்கு, அவர் நடுங்கும் வண்ணம் எந்தத் துன்பமும் வரமாட்டாது.

***உள்ளவர்; இல்லாதவர்***

பண்டிதரின் தகப்பனார் காலமாகி விட்ட செய்தி காட்டுத் தீயைப் போலக் கிராமமெங்கும் பரவி விட்டது. பண்டிதர் கற்றவர்; கணபதி மத்தியமகா வித்தியாலயத்தில் முப்பது வருடங்களாக ஆசிரியராகக் கடமை புரிந்து ஓய்வு பெற்றவர். அதனால் கணபதி மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் ஆசிரியர்கள் அனைவரும் நேரத்துடன் பண்டிதரின் வீட்டுக்கு வந்து விட்டனர். நாவலடிக் கிராமத்தில் உள்ள அனைவர்க்கும் பண்டிதர் கல்வி கற்பித்தமையால் அந்தக் கிராமமே அங்கு திரண்டிருந்தது. அந்தக் கிராமத்தில் உள்ள அனைவரும் பண்டிதரிடம் கற்றமையால் பண்டிதரின் வீட்டுக் காரியங்களைத் தமது வீட்டுக் காரியமென நினைத்துச் செயலாற்றிக் கொண்டிருந்தனர். பண்டிதரை யாரும் எதுவும் கேட்காது தமது விருப்பத்தைப் போலச் செயலாற்றிக் கொண்டிருந்தனர்.

மக்கள் சுறுசுறுப்புடனும் பற்றுடனும் செயலாற்றுவதைப் பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தார் சிவசுந்தரமூர்த்தி. அவரது தந்தையார் காலமான போது அங்கு ஊரவர் எவரும் செல்லவில்லை. பிரேதம் எடுக்கும் நேரம் தான் அவர் வேலை செய்யும் காரியாலய ஊழியர்கள் வந்தனர். கணபதி மத்திய மகாவித்தியாலயத்தில் அவரது மகனுடன் கல்வி கற்கும் மாணவர்கள் மட்டும் வந்திருந்தனர். அவர்கள் தான் அங்கு வந்து வீடு வாசலைத் துப்பரவு செய்து ஆக வேண்டிய காரியங்களைக் கவனித்தனர். கணபதி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர்கள் சிலர் வந்திருந்தனர். விக்னேஸ்வரமூர்த்தி பொதுவாக வைபவங்களுக்கு அந்த நேரமே செல்வார். பிரேதம் எடுக்கும் போது விக்னேஸ்வரமூர்த்தியும் இரண்டு மூன்று ஆசிரியர்களும் வந்திருந்தனர்.

கலியாண வீடானால் முகூர்த்தநேரத்திற்கும், மரணவீடானால் பிரேதம் எடுக்கும் நேரத்திற்கும் வரும் விக்னேஸ்வரமூர்த்தி பண்டிதரின் வீட்டுக்கு பண்டிதரின் தகப்பனார் இறந்தவுடன் வந்து விட்டார். அதைப் பார்த்த சிவசுந்தரமூர்த்திக்கு கவலையாகவும் ஆத்திரமாகவும் இருந்தது.

“வேலாயுதம், என்னுடைய தகப்பனார் இறந்த போது பிரேதம் எடுக்கிற நேரம் வந்தவையெல்லாம் பண்டிதரின் தகப்பன் இறந்தவுடனேயே வந்திட்டினை. நேற்று இராத்திரி அவர் செத்தவர். இரவு பத்து மணிக்கு வந்த விக்னேஸ்வரமூர்த்தி இன்னும் வீட்டை போகேல்லை. பிரேதம் எடுத்தாப் பிறகு தான் போவரோ..?” என்று கேட்டார் சிவசுந்தரமூர்த்தி.

“நீங்கள் பண்டிதரைக் குறைவாயே நினைக்கிறியள். முப்பது வரிசம் பண்டிதர் கடமை தவறாமல் நேர்மையாக உழைத்தவர். அந்த நன்றிக் கடனைத் தீர்க்கத்தானே வேண்டும். பண்டிதருக்கு இன்று ஏற்பட்டுள்ள கௌரவம் அவருடைய செயல்களாலே உருவாக்கப்பட்டது. பணமில்லாவிட்டாலும் அவர் பெரும் கல்வி மான். கடமையைச் சரிவரச் செய்தர். அறிவுடையவர்கள்

வேறொன்றும் இல்லாதிருப்பினும் எல்லாம் உடையவராவார். இன்று பண்டிதர் எதுவும் செய்யவில்லை. அவரைச் செய்ய ஊரவர்களும் விடமாட்டார்கள். பணத்தால் என்ன ஐயா செய்யலாம்? கோடி கோடி யாகப் பணமிருந்தாலும் நல்ல மனமும் அறிவும் இல்லா விட்டால் யாரும் துணைக்கு வரமாட்டார்கள். கற்றபோதும் பலருக்கு அறிவு இருப்பதில்லை. அப்படியான அறிவில்லாதவர்கள் எல்லாம் உடையவர்களாக இருந்தாலும் ஒன்றும் இல்லாதவர்களாகத் தான் வாழ்வார்கள்''. என்றார் வேலாயுதபிள்ளை.

''ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் தூய்மையானதாக இருந்தால் மட்டுமே மக்கள் மதிப்பார்கள். நாம் வாழும் வாழ்க்கையின் பெறுபேறு இப்படியான நிகழ்வுகளில் தான் வெளிப்படும். நாம் நினைக்கும் ஒவ்வோர் எண்ணமும், நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் தூய்மையானதாக இருத்தல் வேண்டும். நமது செயல்கள் தான் வட்டியும் முதலுமாக நம்மை வந்தடைகின்றன. பண்டிதர் இந்தக் கிராம மக்களுக்காற்றிய தொண்டை நாம் குறைத்து மதிப்பிட முடியாது. பாடசாலையில் அவர் கல்வி கற்பிக்கும் காலத்தில் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று கற்பித்திருந்தால் இன்று இலட்சாதிபதியாக இருப்பார். கல்வியைப் பணம் பொருளுக்கு விற்கக் கூடாது என்பதற்காகத்தான் அவர் ஓய்வு பெற்ற பின்பு கூடத் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லவில்லை. இப்பொழுதும் அவர் இலவசமாகத் தான் இவ்வூர் மக்களுக்குக் கற்பிக்கிறார். காரியாலயங்களில் வேலை செய்பவர்கள் இலஞ்சமாக எவ்வளவு பணத்தைப் பெறுகிறார்கள்'' என்றார் தனபாலசிங்கம்.

சிவசுந்தரமூர்த்தி எதுவும் பேசவில்லை. மௌனமாக இருந்து அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கூடி நின்றனர். பண்டிதரின் தகப்பனுக்கு ஆயிரக்கணக்கானோர் மலர் மாலை சூடித் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். பிரேத ஊர்வலம் ஒரு மைல் தூரத்திலுள்ள மயானத்தைச் சென்றடைய நான்கு மணித்தியாலங்கள் சென்றன.

**430. அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர்.**

அறிவுடையவர்களிடம் எதுவும் இல்லாதிருப்பினும் எல்லாம் உடையவர்களாகவே இருப்பர். அறிவில்லாதவர்கள் எல்லாம் இருந்தாலும் ஒன்றும் இல்லாதவர்களாகவே இருப்பர்.

## *விரும்பும் பெருமை*

தணிகாசலம் தனது மகளின் திருமணம் நிட்சயிக்கப்பட்டதற்காகத் தனது இனத்தவர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவர்க்கும் அன்று ஒரு விருந்து வைத்தார். நாமகள் மருத்துவக்கல்லூரியில் இரண்டாம் ஆண்டு மாணவியாக இருந்தாள். மருத்துவக் கல்லூரியை அவள் முடிக்க இன்னும் நான்கு வருடங்கள் செல்லும். அது வரை திருமணம் செய்ய முடியாது. தணிகாசலத்தின் இனத்தவர்களும் ,அயலவர்களும், நண்பர்களும் தம்மால் நான்கு வருட காலம் காத்திருக்க முடியாது என்று கூறினர். அத்துடன் வசதிகள் இன்மையால் தணிகாசலம் தனது வீட்டு வைபவங்கள் எதையும் பெரிதாகச் செய்யவில்லை. நாமகள் வயதிற்கு வந்த நிகழ்வை யாருக்கும் தெரியாது செய்து விட்டார்.

நாமகள் பாடசாலைக்கு வந்த பின்பு தான் அந்த நிகழ்வு நடை பெற்றது ஊராருக்குத் தெரிய வந்தது. அதன் பின்பு அவரது உறவினர்களும், நண்பர்களும், அயலவர்களும் தணிகாசலத்தைச் சந்தித்து தமது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். தணிகாசலம் யாருடனும் வாய் திறந்து எதுவும் பேசவில்லை. விக்னேஸ்வரமூர்த்தி சொன்னார்; "ஒரு நிகழ்வைச் செய்வதாக இருந்தால் வீடு நல்ல முறையில் இருக்க வேண்டும். தணிகாசலத்தின் வீடு சிறியது. அத்துடன் மண்ணால் கட்டப்பட்டது. தணிகாசலத்தின் வீட்டில் ஒரு நிகழ்வு நடை பெற்றால் இனசனம் மட்டுமா வரும். அயலூரவை கூட வருவார்கள். அவர்களையெல்லாம் வரவேற்று உபசிரிப்பது முடியாத காரியம். நாமகளின் திருமணத்தை உங்களுக்கெல்லாம் சொல்லி விமர்சையாகச் செய்வார்" என்றார்.

நாமகள் மருத்துவக் கல்லூரிக்குத் தெரிவான போது தணிகாசலத்தை உறவினர்களும் நண்பர்களும் ஒரு சிறு வைபவமாக அதைச் செய்யும் படி சொன்னார். தணிகாசலம் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தில் ஓர் அபிஷேகம் செய்து உறவினர்கள் நண்பர்களுக்கெல்லாம் பிரசாதம் கொடுத்தார். அப்போதும் எல்லோரும் தமது மன ஆதங்கத்தை தணிகாசலத்திற்குத் தெரிவித்தனர்.

தணிகாசலம் யோசித்துப் பார்த்தார். மகளின் திருமணம் பிரச்சினைப் பட்டுத் தீர்ந்துள்ளது. அத்தீர்வை வலியுறுத்துவதனால் ஒரு வைபவம் வைக்க வேண்டும் என்று நினைத்தார். தனது விருப்பத்தை விக்னேஸ்வரமூர்த்தியிடம் ரெிவித்தார். விக்னேஸ்வரமூர்த்தி அது நல்ல யோசனை யெனப் பாராட்டி உடனே அதைச் செய்யுமாறு வற்புறுத்தினார். அதன் பின் சுவாமியாருக்குச் சொன்னார்.

" மகனே உனது வீட்டில் சாப்பிடுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காதா என்று எங்கும் பலரில் நானும் ஒருவன். கர்வம், சினம், காமம் ஆகிய இழிந்த குற்றங்களில்லாத ஒருவனது வீட்டில் ஒரு பிடி உணவு உண்பது தேவர்கள் அமிழ்தை உண்பதை ஒக்கும். வெகுநாட்களாக உனது வீட்டுச் சாப்பாடு சாப்பிட வேண்டு மென்ற ஆவல் எனது மனதில் இருந்தது. சுவாமியார் பற்றற்றவர்; எவருடைய வீட்டிலும் உணவு உண்ணாதவர். ஆசையில்லாதவர் என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறேனே அப்படியிருக்க சுவாமியார் எனது வீட்டு உணவில் ஆசை வைத்திருக்கிறாரே என்று நினைப்பாய்" என்று கூறி விட்டு நிறுத்திய சுவாமியார் சில கணங்கள் பொறுத்துச் சொன்னார்; "மகனே செருக்கும் சினமும் காமமும் ஆகிய இழிந்த குற்றங்கள் இல்லாதவனுடைய வாழ்வு மேம்பாடுடையது. முற்றும் துறந்த முனிவர்களின் பெருமையை விட உயர்ந்தது. அத்துடன் அவனது வாழ்வில் உண்டாகும் பெருக்கம் பெருமை உடையது. அத்தகையவனது வீட்டில் இரந்து உண்பது பெருமையானது. எனவே உனது வீட்டில் அந்த நிகழ்வைக் கொண்டாடு. அன்றைய தினம் உனது வீட்டில் உணவு அருந்துபவர்களெல்லாம் சிறப்படைவர்' என்றார்.

தணிகாசலத்திற்கு அதை நினைக்க மெய் சிலிர்த்தது.

அன்று அங்கு குழுமியிருந்த அனைவரும் நாமகளுக்கு வாய்த்த மாப்பிளையைப் பற்றி உயர்வாகக் கதைத்துக் கொண்டிருந்தனர். வேலாயுத பிள்ளை சொன்னார்; "நல்ல பண்புகள் அனைத்தும் குடி கொண்ட எனது நண்பர் தணிகாசலத்திற்கு இப்படியான ஒரு பெரு வாழ்வு கிடைக்கு மென்று எனக்குத் தெரியும். இப்பெரு வாழ்வால் தணிகாசலம் சிறப்படையவில்லை.

தணிகாசலத்தால் தான் அந்தப் பெருவாழ்வு சிறப்படைந்தது. பரமேஸ்வரனது குடும்பம் தணிகாசலத்தின் குடும்பத்தோடு திருமண உறவு வைக்கக் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும்'' அதைக் கேட்டுத் தனபாலசிங்கம் மகிழ்வுடன் சிரித்தார்.

**431. செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்**
**பெருக்கம் பெருமித நீர்த்து.**

செருக்கு, சினம், காமம் ஆகிய குற்றங்கள் இல்லாதவருடைய உயர்வே எல்லோராலும் விரும்பப்படும் பெருமையுடையது.

## *குற்றங்கள்*

நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தில் அன்று இரவு பொதுக் கூட்டம் நடை பெற்றது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவ்வாலயச் சூழலில் வாழ்வோர் பணமாகவோ பொருளாகவோ கொடுத்துதவ வேண்டும் என்று சுவாமியார் கூறியிருந்தார்.

கூட்டம் ஆரம்பமானதும் சுவாமியார் பேசினார்; ''இன்று எம் மக்கள் ஆழிப்பேரலையின் கொடூரத் தாக்கத்தினால் பெரும் துன்பத்துக்குள்ளாகியுள்ளனர்; பலர் உயிரிழந்துள்ளனர்; பலர் தமது வீடுகளை இழந்துள்ளனர்; பலர் தமது உறவுகளை இழந்துள்ளனர். மனிதனாகப் பிறந்தவன் அர்பணிப்பும் தியாக சிந்தையும் உள்ளவனாக இருத்தல் வேண்டும். மகா கணபதி ஆலயத்தின் தலைவர் பொருத்தமானவர். அவர் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத் தலைவராக இருக்கிறார். எந்தக் குறையும் அவர் இவ் ஊர் மக்களுக்கு விடவில்லை. தற்பொழுது ஊரில் பல்வேறு நிறுவனங்களுக்குப் பலர் தலைவர்களாக வர ஆசைப்படுகிறார்கள். தலைவன் என்பவன் எடுத்த செயலைத் தனித்து நின்றாவது செய்து முடிக்க வல்லவனாக இருத்தல் வேண்டும். அத்துடன் எந்தச் செயலையும் மக்களோடு மக்களாக நின்று செய்யக் கூடியவனாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் கர்வம் கொண்டவனாகத் தலைவன் இருக்கக் கூடாது. கர்வம் கொண்டவர்களால் ஒரு போதும் எந்தக் காரியத்தையும் செய்து முடிக்க முடியாது. துணிவு, வீரம், ஆற்றல் உள்ளவர்களால் மட்டுமே ஒரு செயலில் சாதனை செய்ய முடியும். அத்துடன் இழிந்த குணமாகிய பொறாமை தான் அழிவுகளுக்குக் காரணமாய் இருக்கிறது. தலைவன் என்பவன் வேலைகளின் சுமை முழுவதையும் தன் தோளில் சுமக்கக் கூடியவனாக இருத்தல் வேண்டும். இதெல்லாவற்றையும் நான் ஏன் கூறுகிறேன் என்றால் இவ்வாலயத்தின் தலைவரான விக்னேஸ்வரமூர்த்தி பாடசாலையின் வேலைகளைக் கவனிக்க வேண்டியிருப்பதால் சுனாமி அனர்த்த நிதி சேகரிப்பதற்காகப் புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யும் படி கோரிக்கை விடுத்துள்ளார். அவரது கோரிக்கை நியாயமானது என ஏற்றுக் கொள்ளப்பட்டதால் தயவு செய்து தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யுங்கள். பொருள் கொடுத்து உதவாத தன்மையும், பெருமை இல்லாத தன்மானமும் தகுதி இல்லாத மகிழ்ச்சியும் தலைவனாக இருப்பவனுக்கு இருக்கக் கூடாது. இவற்றைக் கவனத்தில் கொண்டு செயலாற்றுங்கள்'' என்று கூறி விட்டு அமர்ந்தார் சுவாமியார்.

கூட்டத்தில் சிறு சலசலப்புத் தோன்றியது. நிமிடங்கள் கடந்து கொண்டிருந்தனவே தவிர யாரும் எழுந்து தலைவர் ஒருவரின் பெயரைப் பிரேரிக்கவில்லை. அதனால் மீண்டும் சுவாமியார் சொன்னார்; ‘‘பயப்படாதீர்கள் எந்தச் செயலையும் செய்யத் தொடங்கு முன் பயமாகத் தான் இருக்கும். துணிந்து ஏற்று விட்டால் மிகவும் சுலபமாக இருக்கும். இன்று எமக்கு உறுதியான பல தலைவர்கள் தேவை. நாம் இருக்கும் போதே புதிதாகப் பலரை உருவாக்க வேண்டும். எனவே புதிய தலைவராக நான் கஜேந்திரனைத் தெரிவு செய்கிறேன். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் கஜேந்திரன் இதற்குப் பொருத்தமானவராக இருப்பாரென நம்புகிறேன்’’ என்றார் சுவாமியார்.

‘‘சுவாமியாரின் வார்த்தைகள் ஒரு போதும் பிழைத்ததில்லை. அவர் சொல்வதை வேதவாக்காக எடுக்கும் நாம் இதையும் வேதவாக்காக ஏற்றுக் கொள்கிறோம்’’ என்றார் தணிகாசலம்.

‘‘கஜேந்திரனுக்கு உதவியாக நகுலனைத் தெரிவு செய்யுங்கள். இருவரும் இளைஞர்கள்; பட்டதாரிகள்; கீழ்படிவுள்ளவர்கள். கீழ்படியும் தன்மை தான் மனிதனை முன்னேற்றும் முதல் படி. கீழ்ப்படியக் கற்றுக் கொள்பவன் தான் எதிர்காலத் தலைவனாக உருவாகிறான்’’ என்றார் சுவாமியார்.

கஜேந்திரன் பரபரப்புடன் எழுந்தான்; ‘‘சுவாமி இந்தப் பெரும் பொறுப்பை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. நான் வயதில் மிகவும் இளையவன். இந்தக் கிராமத்தில் தணிகாசலமண்ணை, வேலாயுதபிள்ளையண்ணை, தனபாலசிங்கண்ணை போன்ற பல பெரியவர்கள் இருக்கிறார்கள். அவர்களை விட்டு விட்டு....’’ என்று கஜேந்திரன் கூறிக் கொண்டிருக்கும் போது சுவாமியார் குறுக்கிட்டுச் சொன்னார்; ‘‘மகனே, மூத்தவர்களுடன் இணைந்து செயற்பட்டுப் பழகுங்கள். இளைஞர்கள் விலகி நின்று வாழக்கூடாது. அவர்களோடு சேர்ந்து உதவிகள் செய்து வாழ்வது தான் சிறப்பைத் தரும்’’.

சபையோர் எதுவும் பேசவில்லை. விக்னேஸ்வர மூர்த்தி எழுந்து கஜேந்திரனுக்கு அருகில் வந்து சொன்னார்; ‘‘கஜேந்திரா சுவாமியின் வாயால் தெரிவாக நீ கொடுத்து வைத்திருத்தல் வேண்டும். எதுவும் பேசாமல் ஒத்துக் கொள். உன்னால் செயற்பட முடியும்’’.

**432. இவறலும் மாண்புஇறந்த மானமும் மாணா**
**உவகையும் ஏதம் இறைக்கு.**

பொருள் கொடாத தன்மையும், மாண்பில்லாத மானமும், தகுதியற்ற செயல்களால் கொள்ளும் மகிழ்ச்சியும் நாட்டை ஆள்பவர்களுக்குக் குற்றங்களாகும்.

***காப்பர்***

கஜேந்திரனுக்குப் பயமாக இருந்தது. அவன் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தான். அத்துடன் அவனது தாய் நோயாளி. படுத்த படுக்கையாகச் சில நாட்களுக்கிருப்பாள். பல நாட்கள் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிட்சை பெறுவாள். தகப்பன் விவசாயி. அதனால் வீட்டுப் பொறுப்புக்களைக் கஜேந்திரனே கவனிப்பான். பெரும்பாலான நாட்கள் அவன் தான் சமைப்பான். தோட்டத்தில் வேலைகள் செய்யும் கூலியாட்களுக்கும் அவன் தான் உணவு தயாரிப்பான். அத்துடன் வித்தியா என்ற பெண்ணை விரும்புகிறான். அவள் அவனை விரும்பவில்லை. சந்திக்கும் வேளைகளில் முறாய்த்துப் பார்ப்பாள். நின்று செருப்பைக் கழற்றி விடுவாள். இருந்த போதும் அவளில் ஏற்பட்ட மோகம் காரணமாக அவன் அவளின் பின்னால் சுற்றுவான். இதற்கே அவனுக்கு நேரம் போதாது இருக்கும். அப்படியிருக்க எப்படிப் பொதுச் சேவை செய்வது என்று யோசித்தான்.

“ பெரியவர்களின் சொற்களுக்குக் கீழ் படிந்து நடப்பது தான் இளைஞர்களின் கடன். சுவாமியார் பெரியவர். எதையும் அர்த்தத்துடன் தான் சொல்வார். உனக்குள்ள பிரச்சினைகள் யாவும் எனக்குத் தெரியும். பிரச்சினைகளைப் பெரிதுபடுத்தினால் நாம் வாழ முடியாது. எதிர் நீச்சலிடல் வேண்டும். அதிபர், வேலாயுதம், தனபாலசிங்கம், நான் எல்லோரும் வயோதிபர்கள். நாம் ஒதுங்க வேண்டும். எமது இடத்திற்கு இளைஞர்கள் வரல் வேண்டும்” என்றார் தணிகாசலம்.

மீண்டும் தயங்கினான் கஜேந்திரன்; “ஏன் யோசிக்கிறாய். எனது மாணவனான நீ பெரிதாக யோசிப்பதைப் பார்த்தால் நான் உனக்குக் கற்பித்த கல்வியின் மீது சந்தேகமாக உள்ளது” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“ஐயையோ அப்படிச் சொல்லாதீர்கள். நீங்கள் எனது குரு மட்டுமல்ல; தகப்பன்; இல்லைக் கடவுள்” கண்கலங்கினான் கஜேந்திரன்; “ஐயா, எனக்குப் பல பிரச்சினைகள் இருப்பது உங்களுக்குத் தெரியும். இருப்பினும் சுவாமியாரின் வார்த்தைகளை மீறாமல் என்னால் செயற்பட முடிம். ஆனால்” நிறுத்தினான் கயேந்திரன்.

“மனதில் உள்ளவற்றைப் பயப்படாமல் சொல். மனதில் கிலேசமிருந்தால் எந்தச் செயலையும் வெற்றிகரமாகச் செய்ய முடியாது” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

மீண்டும் சிலகணங்கள் தயங்கிய கஜேந்திரன் பின் சொன்னான்; “இரண்டு வருடங்களுக்கு முன்பு வைரவர் கோவிலில் சிவராத்திரி தினத்தைக் கொண்டாடுவதற்காக இளைஞர்களான நாம் பணம் சேகரித்தோம். சிவராத்திரி தினத்தை நல்ல முறையில் கொண்டாடிய பின் வரவு செலவு விபரத்தையும் வெளியிட்டோம். ஆனால் சிலர் நான் புதியதொரு துவிச்சக்கர வண்டி வாங்கிய போது சிவராத்திரிக்குச் சேர்ந்த பணத்தில் தான் அதை வாங்கியதாகக் கூறினார்கள். அதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை” கலங்கினான் கஜேந்திரன்.

“நீ குற்றஞ் செய்யவில்லை. நீ அப்படிச் செய்திருப்பாயென நானோ அல்லது ஊரில் வாழும் நல்லவர்களோ நினைக்கவில்லை. அதனால் நீ ஏன் துயரப்படுகிறாய். பழிக்கு அஞ்சுகின்ற பெரு மக்கள் திணையளவான சிறு

குற்றம் ஏற்பட்டாலும், அதைப் பனையளவாக எண்ணி அதை மீண்டும் செய்யாமல் காத்துக் கொள்வார்களே தவிரச் செயல்களில் ஈடுபடாமல் இருக்கமாட்டார்கள். அப்படிச் செயல்களில் ஈடுபடாமல் இருந்தால் தான் சந்தேகிக்க வேண்டி வரும்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''ஒரு சிலரின் தீய குணங்களை நீ எண்ணிப் பார்க்காதே. பெரும்பான்மையானவர்களின் நல்ல குணத்தை மட்டும் எண்ணிப்பார். நான் பல முறை சிறு சிறு குற்றங்களை என்னை அறியாமலே செய்துள்ளேன். மகா கணபதியின் கட்டிட நிதிக்கு நானும் இன்னும் சிலரும் பணம் வாங்கிக் கொண்டிருந்தோம். அன்று சிவசுந்தரமூர்த்தியின் வீட்டுக்குச் சென்றோம். அவர் ஐந்நூறு ரூபா தந்தார். அன்று சபாநாயகத்திற்குப் பாம்பு கடித்து விட்டது. அவனது தகப்பனார் என்னிடம் வந்து பணம் கேட்டார். அவருக்கு ஊரில் யாரும் உதவி செய்ய மாட்டார்கள் என்பது உனக்குத் தெரியும். நான் சிவசுந்தரமூர்த்தியிடம் வாங்கிய ஐந்நூறு ரூபாவை அவரிடம் கொடுத்தேன். மறுநாள் ஊர்முழுவதும் நான் மகா கணபதி கோயிலுக்குச் சேர்ந்த காசைக் கொடுத்து விட்டேன் எனக் கதையைக் கட்டி விட்டனர். அன்றே நான் பற்றுச்சீட்டுக் கொடுத்து விட்டு அதிபரிடம் பணத்தைக் கொடுத்து விட்டேன். ஆனால் சிவசுந்தரமூர்த்தி தந்த பணத்தைப் பலருக்கு முன்னால் கொடுத்ததால் தான் எனக்கு அக்குற்றம் வந்தது. அது போன்ற செய்லகளை நான் இப்போது செய்வதில்லை. எனவே திணையளவு குற்றம் தன்னும் செய்தால் தான் அதைப் பனையளவாக எண்ணிப் பயப்படுதல் வேண்டும். நீ குற்றஞ் செய்யவில்லை. தைரியமாகப் பொறுப்பை ஏர்'' என்றார் தணிகாசலம். கஜேந்திரன் மகிழ்வுடன் ஒப்புக் கொண்டான்.

**433. தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பழிநாணு வார்.**

பழிக்கு அஞ்சுகின்ற பெரியோர்கள் தினையளவு குற்றம் ஏற்பட்டாலும், அதை பனையளவாக எண்ணி மறுபடியும் அக் குற்றத்தைச் செய்யாமல் காத்துக் கொள்வர்.

### *கொள்கை*

''அந்த மருந்து குடித்ததும் பல நாட்களாக மாறாதிருந்த நோய் மாறி விட்டது'' என்று சீனியன் எல்லோருக்கும் சொன்னதால் மயில்வாகனத்திற்கு மதிப்பு உண்டானது. மயில்வாகனம் மிகவும் நல்லவன். தனது ஊரவர், நண்பர்கள், அயலவர்கள், இனத்தவர்களுக்கு ஏதாவது வருத்த மென்றால் அவர்களை உரிய மருந்துவர்களிடம் அழைத்துச் சென்று மருந்து வாங்கிக் கொடுப்பான். தெரிந்தவர்கள் ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை பெற்றால் அவர்களுக்குத் தன்னாலான சேவைகளைச் செய்வான். வைத்தியசாலையில் கடமைபுரியும் ஊழியர்கள் ஏதாவது வேலைகள் சொன்னால் உடனே அதைச் செய்து முடிப்பான். மருந்தக வைத்தியர் அவனுடன் மிகவும் அன்பாகப் பழகி வந்தார். அதனால் மயில்வாகனம் கேட்கும் மருந்து வகைகளைக் கொடுத்து வந்தார்.

அன்று சீனியன் தனக்கு பல நாட்களாக நித்திரை வருவது குறைவு என்று சொன்னான். நித்திரை இல்லாமல் இருப்பது தான் பல கொடிய நோய்களுக்கு முதல் காரணி. எனவே நீ என்னுடன் வைத்தியசாலைக்கு வா வைத்தியஞ் சொல்லி மருந்து வாங்கலாம் என்றான் மயில்வாகனம்.

சீனியன் கேட்கவில்லை. ''நித்திரைக் குளிசை கொண்டு வந்து தாருங்கோ குடிச்சுப் பார்ப்பம். மாறா விட்டால் உங்களிடம் வருகிறேன்'' என்றான்.

மயில்வாகனத்திற்கு அது விருப்பமில்லை. இருந்த போதும் சீனியன் தனக்காக கலப்படமில்லாத கள்ளைத் தருவதால் மனமின்றி வைத்தியரிடஞ் சொன்னான்.

''மயில், நித்திரையின்மை பல வியாதிகளின் ஆரம்பம். எனவே அவரைக் கூட்டிவா'' என்று கூறி விட்டு இரண்டு நித்திரை வருவதற்குரிய மாத்திரைகளைக் கொடுத்தார். அதை அவன் கொண்டு வந்து சீனியனிடம் கொடுத்தான். அதன்பின் அவன் அதை மறந்து விட்டான்.

அன்று வேலையால் வந்த மயில்வாகனம் உடைகளைக் களைத்து விட்டுக் குளித்தான். பின் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்து மகா கணபதியை வணங்கி விட்டு, பக்தர்களுக்காக வைக்கப்பட்டிருந்த திருநீற்றை எடுத்துப் பூசினான். பின் சந்தணத்தை எடுத்து நெற்றியில் வைத்து விட்டுச் சீனியனின் வீட்டுக்குச் சென்றான்.

''ஐயா, எங்கை போறியள். சீனியன் வீட்டுக்கே. படியாத நாங்களே கள்ளுக் குடிக்கிறத்தை விட்டு விட்டோம். படித்த உங்களால் குடிக்காமல் இருக்க முடியாதே?. கள்ளுக் குடிக்கிறது மகா குற்றம் ஐயா, கள்ளுக் குடித்தால் எல்லாக் குற்றங்களையும் ஆராயாமல் செய்யச் சொல்லும். ஒரு முறை ஒரு சிறு குற்றத்தைச் செய்தால் அது பழக்கப்பட்டு விடும். பின் எல்லாக் குற்றங்களையும் தயக்க மின்றிச் செய்யச் சொல்லும். படிப்படியாகப் பஞ்சமா பாதங்களையும் செய்யும் துணிவு வந்து விடும். நான் அனுபவப்பட்டனான். அதாலை தான் சொல்லுறன். சீனியன் வீட்டை இனிமேல் போகாதைங்கோ. தனக்கு வருத்த மென்று சொல்லி உங்களிடம் நித்திரைக் குளிசைகளை வாங்கிக் கள்ளிலை கலந்து செல்லப்பாக்குக் கொடுத்ததாலை தான் நவநீதன்ரை மாடுகளை எங்களாலை அவிழ்க்க முடிந்தது. நீங்கள் நித்திரைக் குளிசை கொடுக்காவிட்டால் செல்லப்பா காவலுக்குப் போயிருப்பன். நாய் எங்களை மாடவிழ்க்க விட்டிராது. ஆதலால் நீங்கள் தான் எம்மிலும் பெரிய குற்றவாளி. நீங்கள் இல்லாவிட்டால் நாங்கள் அந்தப் பாவத்தைச் செயதிருக்க மாட்டம்''.

கிருஷ்ணனின் சொற்கள் இடியைப் போலத் தாக்கியதால் மயில்வாகனம் அதிர்ச்சியுடன் மகா கணபதி ஆலயத்திற்கு வந்தான். அங்கு தணிகாசலம் நின்றார். அவன் அழுதழுது கிருஷ்ணன் சொன்னதைத் தணிகாசலத்திற்குச் சொன்னான்.

''மயில் குற்றம் தான் ஒருவனுக்கு அழிவை உண்டாக்கும் பகையாகும். நீ கள்ளுக் குடிப்பதால் தான் கெட்டவர்களுடன் சேர்ந்தாய். கெட்வர்கள் தமது காரியம் பார்ப்பதற்காக எதையும் செய்வார்கள். சீனியன் உனக்கு நல்லவன் போல நடித்து எவ்வளவு பெரிய தீமையைச் செய்துள்ளான். எனவே நல்ல முறையில் வாழ வேண்டுமென நினைப்பவர்கள் குற்றங்கள் செய்யக் கூடாது. செய்தால் அக் குற்றம் அவர்களது வாழ்வை அழித்து விடும்''

**434. குற்றமே காக்க பொருளாக; குற்றமே**
**அற்றம் தருஉம் பகை.**

குற்றமே ஒருவனுக்கு அழிவை உண்டாக்கும் பகையாகும். எனவே குற்றம் செய்யாமல் இருப்பதே அவனின் நோக்காக இருத்தல் வேண்டும்.

## *தீயின் அருகே*

‘‘எனக்குப் பயமாக இருக்கண்ணை. அறியாத வயதில் கெட்டவர்களின் சகவாசத்தால் கள்ளைக் குடிக்கப் பழகி விட்டேன். அது பெரிய குற்றம் என்று தெரிந்தும் என்னால் அதைக் கைவிட முடியவில்லை. வேலையால் வந்து உடைகளைக் களைந்தவுடன் எந்த முக்கியமான வேலை இருந்தாலும் கள்ளருந்தச் செல்ல வேண்டு மென்ற நினைவு மனதில் எழுந்து விடும். அதை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் நான் வெட்கப் படும் படியான பல சம்பவங்கள் நடந்துள்ளன. என்றாலும் அந்த நேரம் வரும் உணர்வுகளை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை’’ அழுதான் மயில்வாகனம்.

‘‘நடந்து முடிந்த சம்பவங்களுக்காக வருந்தினால், செய்த குற்றங்கள் மன்னிக்கப்படு மென நீதி நூல்கள் கூறுகின்றன. குற்றங்கள் செய்வதை வழக்கமாக்கிக் கொண்டவர்கள் திருந்துவது கஷ்டம். சின்னத்தம்பி கள்ளுக் குடிப்பதில்லை என்று பல முறை சத்தியம் செய்தவன். மீண்டும் மீண்டும் கள்ளைக் குடித்து விட்டுக் குற்றச் செயல்களில் ஈடுபடுகிறான். எனவே அவனைப் போல நீயும் குடிக்கமாட்டேன், குற்றச் செயல்கள் செய்ய மாட்டேன் என்று கூறி விட்டு பின் அவற்றைச் செய்யாதே. குற்றஞ் செய்யக் கூடாது என முழுமனதுடன் செயற்பட வேண்டும். ஊருக்காகவும் உலகுக்காகவும் நல்லவனாக மாறுபவர்கள் திரை மறைவில் குற்றங்கள் செய்வதை நான் பார்த்துள்ளேன்’’ என்றார் தணிகாசலம்.

‘‘குற்றங்கள் நேர்வதற்கு முன்னமே வராமல் காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை நெருப்பின் முன் வைக்கப்பட்ட வைக்கோல் போர் போல அழிந்து விடும் என்று எனது தந்தையார் கூறுவார். அது எவ்வளவு உண்மை யென்று எனக்குத் தெரிகிறது. பணத்திற்கும் கள்ளிற்கும் ஆசைப்பட்டு கனகசபாபதியுடன் சேர்ந்து பல குற்றச் செயல்களில் நான் ஈடுபட்டனான். அதை அறிந்த எனது தந்தையார் என்னை அழைத்துச் சொன்னவர்; ‘‘மயில், நான் ஒழுக்கத்தை உயிராக மதித்து நடந்து வருகிறேன். அப்படியான எனக்கு நீ எப்படிப் பிள்ளையாகப் பிறந்தாய் என்று நான் அடிக்கடி நினைத்து வருந்துவதுண்டு. குற்றச் செயல்களைச் செய்பவனுடன் சேர்பவனும் குற்றவாளி தான். அவன் குற்றங்கள் செய்யா விட்டாலும் குற்றவாளியாகவே மக்களால் கணிக்கப்படுவான்’’ என்றவர்; ‘‘ஒரு நாள் கனகசபாபதி குடித்து விட்டு வீதியோரத்தில் விழுந்து படுத்திருக்கிறார். அந்த வழியால் வந்த எமது மருந்தக வைத்தியர் சூரியகுமாரன் வீதியோரமாக மோட்டார் வண்டியை நிறுத்தி, வீதியால் சென்றவர்களின் துணையுடன் அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று வைத்தியம் பார்த்தார். மயக்கம் தெளிந்து எழுந்த கனகசபாபதி என்னைத்

தனக்குத் தெரியுமென்று கூறியிருக்கிறார். அதனால் வைத்தியர் கனகசபாபதியைக் குடிக்க வேண்டா மென்று கூறியிருக்கிறார். உடனே ‘‘கனகசபாபதி மயில்வாகனமும் நன்றாகக் குடிப்பான்’’என்று சொல்லியிருக்கிறார். அதை வைத்தியர் நம்பவில்லை. மறு நாள் நான் வேலைக்குச் சென்ற போது வைத்தியர் என்னை அழைத்துச் சொன்னார்; ‘‘மயில் உங்கள் ஊரவரான கனகசபாபதி என்பவர் வீதியோரத்தில் நன்றாகக் குடித்து விட்டு மயங்கிக் கிடந்தார். அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து சிகிச்சை அளித்தேன். மயக்கம் தெளிந்த அவர்; ‘‘நீ நன்றாகக் குடிப்பாய்’’ என்று சொன்னார். மயில் ஒருவன் குற்றம் செய்யவே கூடாது. குற்றங்களுக்கு அஞ்ச வேண்டும். குற்றம் நேர்வதற்கு முன் அதை வராமல் காத்துக் கொள்ளல் வேண்டும். மனிதன் ஒழுக்கமாக வாழ வேண்டும் என்று நினைத்தால் குற்றங்கள் செய்யக் கூடாது. ஏனென்றால் குற்றங்கள் தீயைப் போன்றன. தீக்கு அருகில் வைக்கப்படும் வைக்கோல் போர் பொறிபட்டு அழிவதைப் போல குற்றங்கள் மனிதனை அழித்து விடும். ஒரு குற்றத்தைத் தயங்காமல் செய்பவன் பல குற்றங்களைச் செய்ய முற்படுவான். நீ கள்ளுக் குடிப்பதாக மயில்வாகனம் சொன்னதை நான் நம்பவில்லை’’ என்றார். அன்றே நான் திருந்தியிருந்தால் இன்று இந்தக் கேவலமான நிலை வந்திராது. செல்லப்பா எனக்கு நெருங்கிய உறவினன். அவன் அறிந்தால் என்னைப் பற்றி என்ன நினைப்பன்’’.

‘‘திரும்பத் திரும்ப ஒன்றைக்கூறுவதால் திருந்தியவனாக மாட்டாய். குற்றம் வருமுன் அவற்றைத் தவிர்த்து வாழ்வதன் மூலமே ஒழுக்கமான வாழ்வை ஒருவன் வாழ முடியும். எனவே முதலில் சீனியனின் வீட்டுக்குச் செல்வதை நிறுத்து. அதன் மூலம் குற்றவாளிகளோடு பழகும் நிலை இல்லாமற் போகும்’’ என்றார் தணிகாசலம்.

‘‘அண்ணை நான் இனி அவனின் வீட்டுக்குச் செல்ல மாட்டேன். குற்றங்களும் செய்ய மாட்டேன்’’ என்றான். தணிகாசலம் எதுவும் பேசவில்லை. அதனால் சிறிது நேரம் நின்று விட்டு மகா கணபதியின் கோயிலை நோக்கி நடந்தான் மயில்வாகனம்.

**435. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்**
**வைத்தூறு போலக் கெடும்.**

குற்றம் வருமுன்பே அதைக் காத்துக் கொள்ளாதவனின் வாழ்க்கை, நெருப்பின் அருகில் வைத்தவைக்கோல் போர் போல் அழிந்து விடும்.

## *குற்றம் நேராதவன்*

மெல்ல இருள் பூமியைக் கவர ஆரம்பித்தது. மயில்வாகனம் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலய வாசலில் இருந்தான். வெளியே வைக்கப்பட்டிருந்த கற்பூரச் சட்டிக்குள் கற்பூரம் மிகவும் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது. அன்று செவ்வாய்க்கிழமை. ஏராளமான பக்தர்கள் கோயிலுக்கு வந்து கொண்டிருந்தனர். தணிகாசலத்தின் மனைவி பெரியதொரு அறுகம்புல் மாலை கட்டிக் கொண்டு கோயிலுக்கு வந்திருந்தாள்; ‘‘விநாயகருக்கு வாசமுள்ள மலர்களால் அர்ச்சிப்பதிலும் பார்க்க அறுகால் அர்ச்சிப்பது தான் சிறந்தது.

விநாயகர், அனலாசுரனை விழுங்கிய பொழுது வெப்பத்தைத் தாங்க முடியாது வேதனைப் பட்டார். இதை அறிந்த அந்தணர்களும் தேவர்களும் ரிசிகளும் கங்கைநீராலும், பாலாலும், தேனாலும் அபிடேகத் திரவியங்கள் பலவற்றாலும் அவருக்கு அபிசேகம் செய்தும் விநாயகரின் வெப்பம் தணியவில்லை. அதனால் வருந்திய முனிவர்கள் அறுகம் புற்களை அறுத்து வந்து அவரின் உடலில் பரவினர். உடனே அவரது வெப்பம் தணிந்தது. விநாயகர் அங்கு கூடி நின்றவர்களைப் பார்த்து; " அறுகால் அர்ச்சிப்பதையே நான் விரும்புகிறேன்" என்றார். அதனால் தான் நான் செவ்வாய் கிழமைகளிலும் வெள்ளிக்கிழமைகளிலும் அறுகம் புல்லில் மாலை கட்டி வந்து மகா கணபதிக்குச் சாத்துகிறேன். அறுகால் விநாயகரை அர்ச்சித்தால் துன்பங்கள், கஷ்டங்கள், பிரச்சினைகள், நோய்கள், பாவங்கள் யாவும் தீரும்'' என்றாள் தணிகாசலத்தின் மனைவி.

ஆறுமணிக்கு காண்டாமணி ஒலித்தது. காண்டாமணி ஒலித்ததும் ஸ்ரீனிவாசன் சுவாமிகளது அருளுரை, இல்லா விட்டால் திருமுறைகள் ஒலி பெருக்கியில் ஒலிக்கும்.

அன்று ஸ்ரீனிவாச சுவாமிகளின் அருளுரை ஒலிபரப்பானது; ''அன்பானவர்களே, ஒழுக்கமுள்ளவர்களாக வாழப் பழகுங்கள். ஒழுக்கமுள்ளவன் குற்றச் செயல்கள் செய்ய மாட்டான்; தவறுகள் செய்ய மாட்டான்; பொறாமைப்பட மாட்டான்; மற்றவர்களைக் கெடுக்க மாட்டான். அடுத்தவர்கள் ஒழுக்கமாக வாழ வேண்டும் என நீ எதிர் பார்க்காதே. நீ ஒழுக்கமாக வாழ். நீ குற்றச் செயல்கள் செய்யாவிட்டால் அடுத்தவர்கள் உனக்குக் கெடுதல் செய்யமாட்டார்கள். ஒரு வகுப்பில் புவியல் பாடம் நடை பெற்றுக் கொண்டிருந்தது. ஆசிரியர் ஓர் உலகப் படத்தை எடுத்து மாணவர்களுக்குக் காட்டி விட்டு அதைப் பல துண்டுகளாகக் கிழித்தார். பின் மாணவர்களைப் பார்த்து இந்த உலகப் படத்தை ஒழுங்கான முறையில் ஒட்டித் தரக் கூடிய மாணவன் எழுந்து நிற்கலாம்'' என்று சொன்னார். நாற்பது மாணவர்கள் இருந்த அந்த வகுப்பில் ஒரே ஒரு மாணவன் எழுந்து நின்றான்.

ஆசிரியர் கிழித்த உலகப் படத்துண்டுகளை அம்மாணவனிடம் கொடுத்தார். ஆசிரியர் எதிர்பாராதவாறு அம்மாணவன் மிக விரைவாக அப்படத்தை ஒழுங்கான முறையில் ஒட்டிக் கொண்டு வந்து கொடுத்தான். வியப்படைந்த ஆசிரியர்; ''இவ்வளவு விரைவாக எப்படி உன்னால் ஒட்ட முடிந்தது'' என்று கேட்டார்.

''குருவே, உலகப் படத்திற்குப் பின்னால் ஒரு மனிதனின் படம் இருந்தது. மனிதனை ஒழுங்காக்கினேன் உலகம் ஒழுங்காகி விட்டது'' என்றான். இது ஒரு பழைய அருமையான கதை. எப்பொழுதும் மனிதன் ஒழுங்காக இருந்தால் உலகம் ஒழுங்காக இருக்கும். முதலில் தன்னிடமுள்ள குற்றங்களை நீக்கி விட்டுப் பின்னர் மற்றவர்களிடமுள்ள குற்றங்களை ஆராயவல்ல ஒருவனுக்கு எந்தக் குற்றமும் நேராது''.

மயில்வாகனத்திற்கு அதைக் கேட்கப் பயமாக இருந்தது; " ஒவ்வொருவரும் தம்மிட முள்ள குற்றங்களைக் குற்றமாகக் கருதாது மற்றவர்கள் மீது குற்றஞ் சாட்டுகிறார்கள். நான் கள்ளருந்தும் குற்றத்தைச் செய்ததனால் தான் செல்லப்பாவுக்குத் துன்பம் நேர்ந்தது.'' என்று நினைத்தான். அவனது கண்கள் கலங்கின.

அறியாமையால், சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமாக ஒருவன் ஒரு குற்றத்தைச் செய்ய நேர்ந்தால், அதைத் திரும்பத் திரும்பச் செய்யாமல் காத்துக் கொள்ளல் வேண்டும். ஒரு முறை ஒரு குற்றத்தைச் செய்பவனுக்கு மறு முறை அக்குற்றத்தைச் செய்வது சாதாரணமாக இருக்கும். அதனால் தான் பெரியவர்கள் குற்றம் எதையும் வராமல் காத்துக் கொள்ளல் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்'' சுவாமியாரின் அருளுரை நிறுத்தப்பட்டு ஒலி பெருக்கியில் மந்திர உச்சாடனஞ் செய்யப்பட்டது.

மயில்வாகனம் கண்களை மூடி மெய்மறந்து மகா கணபதியைத் தொழுதான். மனப் பாரம் சிறிது சிறிதாகக் குறைவடைவதைப் போல இருந்தது; ''மகா கணபதியே என்னைக் குற்றச் செயல்கள் செய்யாமல் காத்தருளல் வேண்டும்'' என்று மனமுருகி வேண்டினான்.

''தினமும் கோயிலுக்கு வா. அப்படி வந்தால் தேவையில்லாத காரியங்களில் நீ ஈடுபட மாட்டாய்'' என்றார் தணிகாசலம்.

**436. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்பிற்பின்**
**என்குற்ற மாகும் இறைக்கு?**

தன்னிடமுள்ள குற்றங்களை முதலில் நீக்கி விட்டுப் பின்னர் பிறருடைய குற்றத்தை ஆராய்ந்து பார்க்கும் அரசனுக்கு உண்டாகத்தக்க குற்றம் எதுவும் இல்லை.

## *அழியும் செல்வம்*

பரமேஸ்வரனும் காமாட்சியம்மாளும் தணிகாசலத்தின் வீட்டுக்கு வந்தனர். தணிகாசமும் அவரது மனைவி பாக்கியலட்சுமியும் அவர்களை வரவேற்று ஆசனத்திலிருத்தினர்.

பாக்கியலட்சுமி இருவருக்கும் தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள். தேநீர்க் கோப்பையை எடுத்து மெதுவாக உறிஞ்சிக் குடித்த பரமேஸ்வரன் வந்த நேரத்தில் இருந்து பேசாமல் இருந்தது தணிகாசலத்திற்கு கவலையைக் கொடுத்தது. முன்பு வந்தால் வாயோயாமல் கதைத்துக் கொண்டே இருக்கும் பரமேஸ்வரனது அன்றைய நிலை தணிகாசலத்திற்கு இனம் புரியாத உணர்வுகளைத் தோற்று வித்தது. அத்துடன் அவரது முகத்திலும் கவலைகளுக்குரிய ரேகைகள் பதிந்திருந்தன.

''மச்சான், வந்த நேரத்தில் இருந்து கதைக்காமல் இருக்கிறீர்கள். அத்துடன் முகத்திலும் முன்னைய செந்தளிப்பைக் காண முடியவில்லை. ஏன்? என்ன நடந்தது?'' தணிகாசலம் கேட்டார்.

பெருமூச்சு விட்டார் பரமேஸ்வரன்.

''என்ன நடந்தது? ஏதாவது கலியாணப் பிரச்சினையா?'' பரபரப்புடன் கேட்டார் தணிகாசலம்.

தணிகாசலத்தைச் சில கணங்கள் உற்றுப் பார்த்த பரமேஸ்வரன் சொன்னார்; ''மச்சான், உங்களின் வாழ்வை நினைக்க எனக்குப் பொறாமையாக உள்ளது. ஓயாமல் உறங்காமல் பணம் தான் வாழ்வு என்று நினைத்துச் சம்பாதித்ததை நினைக்க எனக்கு வெறுப்பாக இருக்கிறது. உலக நடைமுறையைப் பற்றி அறியாது ஓடியோடி பணத்தைச் சேர்த்து அதை அழித்தது தான் மிச்சம்'' பரமேஸ்வரனின் குரல் தழுதழுத்தது.

தணிகாசலம் பதறிப் போனார். ''மச்சான்'' என்று அவர் வேதனையோடு அழைத்ததைக் கேட்டுக் கவலை கொண்ட பரமேஸ்வரன் குறுக்கிட்டுச் சொன்னார்; '' உங்களைப் பற்றி மணிவண்ணன் வாயோயாமல் சொல்வான். ஒருவன் பொருளைத் தேடுவது பெரிய காரியமல்ல. அதை அனுபவிப்பதே பெரிய காரியம். என்னைப் பொறுத்தவரை நான் தேடிய பொருட்களை அனுபவிக்கவில்லை. பொருள் தேடும் ஆசையால் ஒழுங்காக நான் நித்திரை கொண்டதில்லை; நாளாந்தக் கடமைகளைக் கூட ஒழுங்காகச் செய்ததில்லை. ஒழுங்காகச் சாப்பிட்டதில்லை. சுவையான உணவுகளைக் கூட பணம் தேடும் ஆசையால் ருசித்து உண்டதில்லை. கோயிலுக்குச் சென்றதில்லை; உறவினர்களது வைபவங்களுக்குச் சென்றதில்லை. இப்படித்தேடிய பணத்தால் ஒரு நன்மை கூடச் செய்ததில்லை. தான தர்மம் செய்யவில்லை. பணம் பணம் என்று அவாப்பட்டுத் தேடியது தான் மிச்சம்'' பெருமூச்சு விட்டார் பரமேஸ்வரன்.

தணிகாசலத்திற்கு அவர் கூறியதொன்றும் புரியவில்லை. அதனால் அவர் பேசாது அவரைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''எனது தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தமக்குச் சம்பளம் கூட்டித்தருமாறு கேட்டார்கள். நான் மறுத்து விட்டேன். அத்துடன் சம்பளம் கூடக் கேட்டவர்களை வேலையில் இருந்து நீக்கி விட்டுப் புதிய தொழிலாளர்களைச் சேர்த்துக் கொள்வேன் என்று எச்சரித்தேன். அதனால் தொழிலாளர்கள் சென்று விட்டனர். ஒரு மாதங் கழிய மின் கம்பிகளை வெட்டி இணைத்து மின் ஒழுக்கை உண்டாக்கி எனது தொழிற்சாலையின் பெரும்பகுதியை எரித்து விட்டனர். அவர்கள் எல்லோரும் ஒற்றுமையாகச் சேர்ந்து மிகவும் நுட்பமாகத் திட்டமிட்டுச் செய்தமையால் என்னால் அதற்கு நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. செய்யக் கூடிய நன்மைகளைக் கூடச் செய்யாமல் சேர்த்து வைத்திருப்பவனுடைய செல்வம் அவனாலேயே பாதுகாக்க வழியில்லாமல் அழிந்து போகும் என்பார்கள். அதன்படி அழிந்து விட்டது'' என்றார் பரமேஸ்வரன்.

தணிகாசலத்திற்கு என்ன கதைப்பதென்று புரியவில்லை; '' பொருள் சேர்வதும் அழிவதும் அவரவரின் விதி என்று பெரியவர்கள் சொல்லியுள்ளனர். கவலைப்படாதைங்கோ'' என்றார்.

''விதி தான். அதை ஒப்புக் கொள்ளுறன். ஆனால் எனது தொழிற்சாலையை அழிவிலிருந்து காப்பாற்றியிருக்க முடியும். நான் தானதர்மங்களோ, நொந்தவர்களுக்கு உதவிகளோ செய்யவில்லை. எனது நண்பனொருவனின் தொழிற்சாலையில் தீவிபத்தேற்பட்ட போது தொழிலாளர்கள் உடனே அணைத்து விட்டனர். அத்துடன் அவனது நண்பர்கள் பெருந்தொகையாகப் பணங் கொடுத்தனர். அதனால் அவன் உடனேயே தொழிந்சாலையை ஆரம்பித்து விட்டான். என்னால் ஒரு வருடங்களித்தாலும் தொழிற்சாலையை ஆரம்பிக்க

முடியாது. எனக்கு எவரின் உதவியும் இல்லை. நான் செய்யக் கூடிய உதவிகளைப் பிறருக்குச் செய்திருந்தால், அவர்கள் எனக்கு உதவியிருப்பார்கள்'' என்றார் பரமேஸ்வரன்.

தணிகாசலம் சிலையாக அமர்ந்திருந்தார். அவரால் பேச முடியவில்லை.

**437. செயற்பால செய்யாது இவறியான் செல்வம்**
**உயற்பாலது அன்றிக் கெடும்.**

செய்யத் தக்க செயல்களுக்குக் கூடச் செலவு செய்யாமல் சோத்து வைத்திருப்பவனது செல்வம் பயன் எதுவும் இல்லாமல் அழிந்து விடும்.

## *தனிப்பெருங் குற்றம்*

தணிகாசலம் வெகுநேரம் பேசாமலிருந்ததால் பரமேஸ்வரன் சொன்னார்; ''எனக்குப் பொருளின் மீது அதிக ஆசை, அதனால் ஏழைகளுக்குக் கூட நான் உதவி செய்வதில்லை. எல்லோரையும் சந்தேகப்படுவேன். யாரையும் எளிதில் நம்பமாட்டன். எனக்கு கணநாதன் என்றொரு நண்பன் இருநான். சும்மா பெயருக்குத் தான் நான் அவனை நண்பனாக நினைத்திருந்தேன். அடிக்கடி வீட்டுக்கு வருவான். நானும் அவனது வீட்டுக்குச் செல்வேன். பற்றில்லா விட்டாலும் அது குடும்ப உறவாக மாறி விட்டது. அவன் பழங்களைத் தகரங்களில அடைத்து ஏற்றுமதி செய்து கொண்டிருந்தான். அவன் ஏற்றுமதி செய்யும் நாடொன்றைத் தீடிரெனப் புரட்சியாளர்கள் கைப்பற்றி விட்டார்கள். அதனால் அந்நாட்டு வியாபரி யொருவன் கோடிக் கணக்கான ரூபாவைக் கொடுக்க முடியவில்லை. அதனால் கணநாதன் திண்டாடிப் போனான். அவனால் தொழிற்சாலையை நடத்த முடியவில்லை. அவனிடம் பொருள் வாங்குபவர்களும் நண்பர்களும் செய்தியறிந்து கணநாதனது வீட்டுக்குச் சென்றனர். நானும் சென்றேன். அவன் நஷ்டப்பட்டவன் போலக் கவலைப்பட்டவனாக இருக்கவில்லை.

நண்பர்கள் அவனுக்கு ஆறுதல் கூறினர். ஆனால் அவன் சிரித்துக் கொண்டிருந்தான். அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதென்று நானும் நண்பர்களும் நினைத்தோம் ஆனால் அவன் நிதானமாகச் சொன்னான்; ''அற்பமான இதயமுள்ள மனிதர்கள் தான் பொருள் இழப்பிற்காகக் கவலைப்படுவார்கள். கவலைப்படுவதன் மூலம் நான் இழந்த பொருட்களெல்லாம் கிடைத்து விடுமென்றால் கவலைப்படலாம். இழந்த பொருட்கள் கிடைக்க வேண்டு மென்ற நியதியிருந்தால் கிடைத்தே தீரும். ஒரு செயலைச் செய்ய வேண்டுமானால் இரும்பைப் போன்ற மனவுறுதி இருத்தல் வேண்டும். அந்த மனவுறுதி முன்பிருந்ததால் தான் ஒரு நேரச் சோற்றுக்குக் கூட வழியில்லாத நான் பெருங்கோடீஸ்வரனாக முடிந்தது. இப்பொழுது பலகோடி ரூபாக்களை இழந்தாலும் கையில் பலகோடி ரூபா இருக்கிறது. நல்ல நண்பர்கள் இருக்கிறார்கள். நான் வாழுங் காலத்தில் பொருளின் மீது அளவு கடந்த ஆசை வைக்கவில்லை. உலோபித்தனமாக வாழவில்லை. எத்தனையோ பேருக்கு தொழில் தொடங்கப் பண உதவி செய்திருக்கிறேன். தான தர்மம் செய்திருக்கிறேன். நான் செய்த தான தர்மங்கள் என்னைக் கஷ்டப்பட விட மாட்டாது என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு'' என்றான். நான் எதுவும் பேசாமல்

வந்து விட்டேன். அவனுக்குப் பலர் உதவி செய்தனர். அவனது ஒரு நண்பன் என்னிடம் வந்து சொன்னான்; “ஐயா நிங்கள் மிகவும் வசதியாக இக்கிறீர்கள். கணநாதனுக்கு உதவி செய்யலாம் தானே” என்றான்.

‘‘உதவி செய்யத்தான் வேண்டும். இப்போ வசதி கொஞ்சம் குறைவு’’ என்று சொன்னேன்.

‘‘என்னிடம் பணமில்லை. கணநாதனிடம் இருபது இலட்சரூபா பெற்றுத்தான் தொழிற்சாலையை ஆரம்பித்தேன். அவர் கேட்கா விட்டாலும் அதைக் கொடுத்தல் வேண்டும். அதனால் எனது தொழிற்சாலையைப் பொறுப்பாகத் தருகிறேன். இருபத்தைந்து இலட்ச ரூபா தாருங்கள்’’ என்று கேட்டான்.

‘‘நான் முன்பு மறுத்து விட்டு, சிரமப்பட்டுக் கொடுப்பதாகவும் ஒரு வாரம் கழித்து வரும் படியும் சொன்னேன். அதன்படி அவன் ஒரு வாரம் கழித்து வந்து பெற்றுச் சென்றான்.

அடுத்த மாதம் புரட்சியாளரை அரசபடைகள் துரத்தி விட்டன. அதனால் பழைய பிரதமர் பதவி ஏற்றார். அந்த வியாபாரி உடனடியாகப் பணத்தை அனுப்பி வைத்தான். அந்தச் சம்பவத்தால் எனது நண்பர்களிடையே என்னைப் பற்றித் தவறாக எண்ணம் உருவானது.’’ பெருமூச் விட்டார் பரமேஸ்வரன்.

தணிகாசலம் பேசாமல் இருந்தார். அதனால் பரமேஸ்வரன் சொன்னார்; ‘‘எனக்குப் பொருளின் மீது ஆசை அல்ல அவா. பொருளுக்காகப் பல்வேறு விதமாக நான் நடிப்பேன். உண்மையைச் சொல்லப் போனால் ஆரம்பத்தில் உங்களது மகளை எனது மகனுக்குச் செய்ய விருப்பமே இல்லை. மகனுக்காக நடித்தேன். பின் தொழிற்சாலை தீக்கிரையானதும் அதைச் சாட்டித் திருமணத்தைக் குழப்பநினைத்தேன். ஆனால் முடியவில்லை...’’

தணிகாசலம் அதிர்ந்து போனார். அப்போ தான் கேள்விப்பட்ட தெல்லாம் உண்மை தான் எனப்புரிந்து கொண்டார். அவருக்குப் பயமாக இருந்தது.

‘‘பொருள்களில் அளவு கடந்த ஆசை வைத்து யாருக்கும் உதவாமல் இருக்கும் உலோபித்தனம், மற்றக் குற்றங்களோடு ஒப்பிட முடியாத தனிப் பெருங் குற்றம் என்பதை இப்போது நான் உணர்ந்து கொண்டேன். நான் இப்பொழுது இருக்கும் நிலைக்கு நானே காரணமானவன். நான் எப்படி இருக்க வேண்டு மென்று நினைக்கிறேனோ அப்படிப் பிறரும் இருக்க வேண்டு மென்று நினைப்பவன் தான் இன்பமாக வாழ்வான் என்பதை இப்பொழுது தான் நான் புரிந்து கொண்டேன்’’ கலங்கினார் பரமேஸ்வரன்.

**438. பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்**
**எண்ணப் படுவதொன்று அன்று.**

பொருள்களின் மீது பற்று வைத்து யாருக்கும் கொடுக்காமல் இருக்கும் உலோபித்தனம், மற்றய குற்றங்களோடு ஒப்பிட்டு எண்ண முடியாத ஒரு தனிப் பெருங் குற்றமாகும்.

## *விருப்பம் கொள்ளக் கூடாது*

‘‘என்னைப்பற்றி நான் எப்பொழுதும் உயர்வாகவே எண்ணிக் கொள்வேன். மற்றவர்கள் எவருக்கும் இல்லாத ஆற்றல்கள் பல என்னுள்ப் புதைந்துள்ளதாக எண்ணி நான் மற்றவர்களை மதிப்பதில்லை. நானே எனது எதிர் காலத்தை உருவாக்கியுள்ளேன். எல்லையற்ற எனது சக்தியால் நான் தொழிலில் பெரும் நிபுணத்துவம் பெற்றவன் என்று எப்பொழுதும் நினைத்துக் கர்வப்படுவேன். நான் அனுபவித்துக் கொண்டிருக்கும் அளவில்லாத இன்பம் எனது திறமையால் உருவாக்கப்பட்டது. எனக்கிருக்கும் இத்திறமை மற்றவர்களுக்கு இல்லை என்று நினைத்தேன். அதனால் என்மீது எனக்கு மட்டற்ற மதிப்பும் நம்பிக்கையும் இருந்தது. அதனால் மற்றவர்களுடைய ஆலோசனைகளையோ புத்திமதிகளையோ நான் கேட்பதில்லை. இருந்தும் தொழிற் சங்கத் தலைவர் எனது வீட்டுக்கு வந்து சொன்னார்; ‘‘ஐயா , தொழிலாளர்களின் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. மற்றைய தொழிற்சாலைகள் வேதனத்தை அரசின் வேண்டுகோளுக்கிணங்க அதிகரித்து விட்டன. அத்துடன் தொழிலாளர்களுக்குப் பல சலுகைகளும் செய்கின்றன. உலகெங்கும் எமது தொழிற்சாலையில் உற்பத்தியாகும் ஆடைகளுக்குத் தான் கிராக்கி அதிகம். எனவே தொழிலாளர்களின் வேதனத்தைச் சிறிது அதிகரிப்பதால் எந்தவிதமான நஷ்டமும் தொழிற்சாலைக்கு வராது. அத்துடன் வேதனத்தை அதிகரிக்கா விட்டால் தொழிலாளர்கள் கலகங்களில் ஈடுபடுவார்கள். அதன் பின் காவல் நிலையத்திற்கும் நீதி மன்றத்திற்கும் செல்ல வேண்டிய நிலை உருவாகும். ஐயா, மனிதர்கள் நன்மை தராத செயல்களில் ஒரு போதும் விருப்பங் கொள்ளக் கூடாது. இனி உங்கள் விருப்பம்’’ என்று சொல்லி விட்டுச் சென்றான்.

‘‘நான் எப்பொழுதும் நான் நினைப்பதுதான் சரியென்று நினைப்பவன். தொழிலாளர்களை எனது மூளையின் திறமையால் கட்டுப் படுத்தலாமென்று நினைத்துச் சில செயல்களில் ஈடுபட்டேன்’’ பெருமூச்சு விட்டார் பரமேஸ்வரன்.

தணிகாசலத்தின் மனம் அமைதி இழந்து தவித்தது; ‘‘பரமேஸ்வரன் ஏன் தனக்குத் தேவையில்லாத கதைகளையெல்லாம் சொல்கிறார். ஒரு வேளை திருமணத்தை வேண்டாமென்று சொல்லப் போகிறாரோ’’ என்று நினைத்தார். அவருக்குத் தலையைச் சுற்றியது; ‘‘ அப்பனே மகா கணபதியே என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறாய். நான் தற்பெருமை கொண்டேனா…? இல்லை நன்மை தராத தீய செயல்கள் ஏதாவதொன்றைச் செய்தேனா..? இப்படி ஏன் வருத்துகிறாய்?’’ என்று நினைத்தார்.

‘‘நாம் நினைக்கும் ஒவ்வோர் எண்ணமும், நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் தனித்தனியே மிக்க ஆற்றலைக் கொண்டிருக்கின்றன. அவை பின் எம்மைப் பற்றிப் பிடிக்கும்’’ என்று எனது நண்பன் கணநாதன் கூறுவான். அவன் அப்படிக் கூறும் போது அவனைக் கேலி செய்து சிரிப்பேன்; ‘‘நாம் முன்னேறுவதற்காக எதையும் செய்யலாம். கோளைகளும் பலவீனர்களும் தான் தத்துவம் பேசிக் கொண்டு முன்னேற முடியாமல் கஷ்டப்படுவார்கள்’’ என்று கூறுவேன். ஆனால் கணநாதன் கூறியது சரியென்று இப்போது தான் உணர்கிறேன்”.

“தொழிற்சாலையில் தீவிபத்து ஏற்படுவதற்குச் சில தினங்களுக்கு முன் கணநாதன் வந்து சொன்னான்; ‘‘நீ என்னை நண்பனாகக் கருதா விட்டாலும்,

நான் உன்னை நண்பனாகக் கருதுகிறேன். உனது எதிரிகள் தொழிலாளர்களுடன் சேர்ந்து உன்னை ஒழித்துக் கட்ட முடிவு செய்துள்ளனர். இப்பொழுதும் காலங்கடக்கவில்லை. தொழிற்சங்கத் தலைவனை அழைத்து சமாதானமாகப் பேசி முடிவுக்கு வா. இல்லாவிட்டால் பாரிய இழப்பு நேரிடும்'' என்று கூறிவிட்டுச் சென்றான். எனது திறமையை நம்பியிருந்த நான் அவன் சொன்னவற்றைக் கேட்கவில்லை. அதனால் தான் பெரும் நஷ்டம் எனக்கு ஏற்பட்டது''.

''நாம் கஷ்டப்படும் வேளைகளில் நாம் நம்பிக்கையுடன் வணங்கும் கடவுள் தான் மனித உருவில் வந்து உதவிகள் புரிவார்; புத்திமதிகள் கூறுவார் என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். எனக்குக் கஷ்டங்கள் ஏற்படும் போது மகா கணபதி யாரையாவது அனுப்பிக் கஷ்டங்களைத் தீர்ப்பார். ஆனால் எனது மகளின் விஷயத்தில் அது பொய்த்து விட்டது போலத் தெரிகிறது'' கலங்கினார் தணிகாசலம்.

''ஏன் பொய்த்தது. உமது மகளால் தான் நான் திருந்தினேன். என்னைத் திருத்திய குலவிளக்கு அவள். இந்தத் திருமணத்தைச் செய்ய விரும்பாமல் நடித்ததற்கான தண்டனையை மகாகணபதி எனக்குத் தந்து என்னைத் திருத்தி விட்டார். உமது மகளின் திருமணம் ஒரு போதும் குழம்பாது. குழம்பினால் நான் மகனை இழந்து விடுவேன்'' பரமேஸ்வரனின் குரல் கரகரத்தது கண்களால் கண்ணீர் வழிந்தது.

**439. வியவற்க எஞ்ஞான்றும் தன்னை; நயவற்க**
**நன்றி பயவா வினை.**

எப்பொழுதும் தன்னைப் பெரிதாக எண்ணித் தற் பெருமை கொள்ளுதல் கூடாது. அத்துடன் நன்மை தராத செயல்களை ஒருபோதும் விரும்பவும் கூடாது.

### ***இரகசியம்***

''துன்பங்கள், கஷ்டங்கள், பிரச்சினைகள் யாவும் ஒருவனைத் தானாக வந்தடையாது. அவற்றை நாம் தான் அழைக்கிறோம். எனக்கு வந்த பெரு நஷ்டம் என்னால் தான் வந்தது. ஒவ்வொரு மனிதனும் தனக்குள் புதைந்து கிடக்கும் ஆற்றல்களை வரையறைக்குட்படுத்தி அவற்றை நல்ல நோக்கத்திற்காகப் பயன்படுத்துதல் வேண்டும். மனிதனின் ஆற்றல்கள், ஆசை, அவா, பொறாமை, முதலியவற்றால் திசை திருப்பப்பட்டு அழிக்கப்படுகின்றன என்பதை நான் இப்போது உணர்ந்துள்ளேன். வத்சல்யன் உங்கள் மகள் மீது மையல் கொண்ட விடயம் எனக்குத் தெரியும். அவனது மனத்தை மாற்ற எவ்வளவோ முயற்சிகள் செய்தேன். அவனை எனது நண்பனொருவனது மகளுக்குத் திருமணம் செய்து வைக்கவே நான் விரும்பினேன். அவளைச் செய்தால் பல கோடி ரூபா பெறுமதியான சொத்துச் சேருமென நினைத்தேன். அதற்காக அவனது ஒரு நண்பனைப் பிடித்தேன். அவனுக்கு, வத்சல்யனையும் நாமகளையும் பிரித்துத் தந்தால் பல இலட்சரூபா தருவதாகச் சொன்னேன். அவன் சம்மதித்தான். அந்த விஷயத்தை அவன் தனது காதலிக்குச் சொல்லியிருக்கிறான். அவளுக்குத் தனது காதலனின் மேல் சந்தேகம் வந்து விட்டது. பணத்திற்காக நண்பனின் காதலுக்குத் துரோக மிழைக்கும் அவன், நாளைக்குப் பணத்திற்காகத் தனக்குத் துரோகம் செய்ய மாட்டானென்று எப்படி

நம்புவது என்று நினைத்து வத்சல்யனுக்கு யாவற்றையும் சொல்லி விட்டாள். அதனால் தான் நாம் பெண் கேட்டு வந்தோம். திருமணம் நிட்சயமான பின்பும் நான் பிரிக்க நினைத்தேன். கடவுள் அதற்கான தண்டனையைத் தந்து விட்டார். பல நாட்களாக மனைவி சமைக்கவில்லை. வேலையாட்களையும் நிறுத்தி விட்டாள். அது ஒரு பெரிய கதை'' என்று கூறிப் பெருமூச்சு விட்டார் பரமேஸ்வரன்.

அவரது கதைகளைக் கேட்கக் கேட்கத் தணிகாசலத்திற்குப் பயமாக இருந்தது. காமாட்சியம்மாளைப் பார்த்தார். அவளது முகம் பிரகாசமாக இருந்தது. அந்த முகத்தில் ஒரு தெய்வீகக் களை இருந்தது.

"அண்ணா, இவர் பணத்தால் எல்லாவற்றையும் சாதித்து விடலாமென்று நினைப்பவர். பலமுறை அதில் தோல்வி கண்ட போதும் அதை விடாப் பிடியாகக் கடைப்பிடிப்பார். தொழிற்சாலை விஷயத்திலும் இவர் முழுமையாக நம்பியவர்கள் தான் பணத்திற்காக எல்லாவற்றையும் செய்தது'' என்றாள் காமாட்சியம்மாள்.

''உண்மைதான் கடவுளுக்குள்ளளவு சக்தி சாத்தானுக்கும் உண்டென்று பெரியவர்கள் கூறுவார்கள். அத்துடன் சிவனிடம் அழியாத வரங்களைப் பெற்ற பல அசுரர்கள் தமது அகங்காரத்தால் தாம் பெற்ற வரங்களால் எவ்வித நன்மைகளையும் பெறாமல் அழிந்து போனதை நான் அறிந்தும் எனது சுய நலத்தால் சீரழிந்து விட்டேன். நான் அறிவாளி; மிகுந்த திறமையுள்ளவன் என்று நினைத்துப் பல திட்டங்களைத் தீட்டி, எனது கையாட்களைக் கொண்டு நிறைவேற்றலா மென்று நினைத்தேன். அதற்காக அவர்களுக்கு ஏராளமான பணத்தையும் கொடுத்தேன். அவர்கள் என்னிடம் பணம் பெற்றுக் கொண்டு எனக்கு நம்பிக்கையுள்ளவர்கள் போல நடித்து எதிரிகளிடம் என்னைக் காட்டிக் கொடுத்து விட்டார்கள். அதனால் எனது செயற்பாடுகள் அனைத்தும் உடனுக்குடன் அவர்களுக்குத் தெரிந்து விடும். தீய செயல்களுக்கு உதவுபவர்கள் தீயவர்கள் என்பதை அப்போது என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. இரகசியமாக நான் தொழிற்சாலையை விற்பதற்கு முயற்சி யெடுத்தேன். விலைபேசி விற்கும் நாளும் வந்து விட்டது. இனி எதிரிகளால் எதுவும் செய்ய முடியாதென நினைத்து அதை எனது நண்பனொருவனிடம் சொன்னேன். அவன் தனது நன்மைக்காகத் தொழிற்சங்கத் தலைவரிடம் சொல்லி விட்டான். அதனால் வெகுண்டெழுந்த தொழிற்சங்கத் தலைவன் மின்சாரப் பொறியலாளரின் துணையோடு மின் ஒழுக்கை உண்டாக்கித் தொழிற்சாலையை எரித்து விட்டான். நாம் நன்மை செய்தாலென்ன, தீமை செய்தாலென்ன எம்டைய பகைவர்கள் அதை அறியாத படி நடந்து கொள்ள வேண்டும். அப்படி நடந்தால் அவனுக்கு எந்தத் துன்பமும் நேராது'' பெருமூச்சு விட்டார் பரமேஸ்வரன்''

''ஒருவன் தனக்கு வரக்கூடாது என்று நினைக்கும் தீமைகள், மற்றானுக்கும் வரக்கூடாது என்று நினைத்தல் வேண்டும். தூய்மையாக இருப்பதும் மற்றவர்களுக்கு நன்மை செய்வதையும் கடைப்பிடித்தால் நாம் கோயிலுக்குச் செல்லத் தேவையில்லை. அதை உங்களின் வாழ்வில் இருந்து அவர் புரிந்து கொள்ள வேண்டும். நீதிக்குப் பிறம்பான செயல்கள் ஒரு போதும் நன்மை தராது. தீராத துன்பத்தைத் தான் தரும்'' என்றாள் காமாட்சியம்மாள். அதை கேட்ட பரமேஸ்வரன் பெருமூச்சு விட்டார்.

**440. காதல் காதல் அறியாமை உய்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்.**

தான் விரும்புபவற்றைப் பகைவர்கள் அறியாத வண்ணம் செயலாற்றித் தன் கருமம் முடிப்பவனைப் பகைவனின் வஞ்சகமான சூழ்ச்சிகள் எதுவும் செய்யாது.

## *ஆராய்ந்து பெறு*

தணிகாசலத்தின் வீட்டின் முன் ஆடம்பரமான மோட்டார் வண்டி ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து மேலைத்தேச உடை அணிந்த கம்பீரமான ஒருவர் இறங்கினார். மோட்டார் வண்டி வந்து நின்ற ஓசை கேட்ட பாக்கியலட்சுமி வாசலுக்கு வந்தாள். பரமேஸ்வரனும் காமாட்சியம்மாளும் மணிவண்ணனது வீட்டில் மதிய உணவு உண்ணச் சென்று விட்டனர். வந்து நின்றது யாருடைய மோட்டார் வண்டியாக இருக்கும் என்று நினைத்தவாறு வந்தாள். வாசலில் அறிமுகமில்லாத ஒருவர் நின்றார்.

''இது தணிகாசலமண்ணையுடைய வீடு தானே''.
''ஓம்...... உள்ளுக்கு வாங்கோ'' என்றாள் பாக்கியலட்சுமி.

''நான் அவரைச் சந்திக்க வந்துள்ளேன். வரச் சொல்லுங்கள்'' என்றார் வந்தவர்.

''அவர் இல்லை''
''எங்கே சென்றார்? வந்து விடுவாரா?''
பாக்கிய லட்மி தடுமாறினாள்; ''காலையில் நேரத்துடன் சென்று விட்டார். அவர் புறப்பட்டால் திரும்பி வரும் நேரத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. உங்களுக்கு அவசரமானால் பாடசாலையில் சென்று பாருங்கள்'' என்றாள் பாக்கியலட்மி.

''சரி நான் பாடசாலையில் சென்று பார்கிறேன்'' என்று கூறிவிட்டு வந்தவர் மோட்டார் வண்டியில் ஏறிப் புறப்பட்டார்.

அவர் சென்ற பின்பு தான் வந்தவர் யாரெனக் கேட்காமல் விட்டு விட்டேன். என்று வருந்தினாள் பாக்கியலட்சுமி. அப்போது தணிகாசலம் துவிச்சக்கர வண்டியில் வந்து இறங்கினார்.

''ஐந்து நிமிடங்களுக்கு முன்பு உங்களைத் தேடிக் கொண்டு ஒருவர் மோட்டார் வண்டியில் வந்தார். நீங்கள் எந்தப் பாதையால் வருகிறீர்கள்?'' என்று கேட்டாள் பாக்கியலட்சுமி.

''பாடசாலையில் இருந்து வாறன். கணேசமூர்த்தியின் வீட்டருகே ஒரு விலையுயர்ந்த மோட்டார் வண்டி என்னை விலத்தியது'' என்றார் தணிகாசலம்.

“சிவப்பு நிறமா?”
“ஓம்”
“அதுதான்”
“வந்தவர் யாரென்று சொல்லும்”
“நான் பெயர் கேட்கு முன் அவர் மோட்டார் வண்டியில் ஏறிச் சென்று விட்டார்.”

“பாடசாலைக்குப் போட்டு வாறன்” என்றவாறு துவிச்சக்கர வண்டியைத் திருப்பினார் தணிகாசலம்.

“காலையிலும் சாப்பிடாமல் சென்றனீங்கள். இப்ப பகல் மூன்று மணியாகி விட்டது. சாப்பிட்டு விட்டுப் போங்கோ. உங்களைத் தேவையானால் அவர் வருவர் தானே...” என்று பாக்கியலட்சுமி சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் வார்த்தைகளை முடிக்கு முன் அவர் வெகுதூரஞ் சென்று விட்டார். “இந்தாளைத் திருத்தேலாது. சாப்பாடு தண்ணி வென்னி யில்லாமல் இரவு பகலாகத் திரிது. சொன்னாலும் கேட்கமாட்டார்; தானும் உணர மாட்டார்” கதைத்த படி உள்ளே சென்றார் பாக்கிய லட்சுமி.

ஆரோடை அம்மா கதைக்கிறியள்” என்று கேட்டவாறு வந்தாள் நாமகள்.

“காலமை சாப்பிடாமல் போனவர். மூன்று மணிக்கு வாறார். யாரோ தேடி வந்தவை. என்னில் தான் பிழை அவர் சாப்பிட்ட பிறகு சொல்லியிருக்கலாம்...”

நாமகள் சிரித்தாள்; பலமாகச் சிரித்தாள்; “உங்களுக்கு அப்பாவைப் பற்றித் தெரியாதே”.

“ம்” பெருமூச்சு விட்டாள் பாக்கியலட்சுமி. அப்பொழுது மோட்டார் வண்டியொன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது. நாமகளும் பாக்கியலட்சுமியும் வெளியே வந்தனர்.

விக்னேஸ்வரமூர்த்தியும் முன்பு வந்தவரும் சிரித்துக் கதைத்துக் கொண்டு உள்ளே வந்தனர்.

“வாங்கோ..... வாங்கோ.... என முகம் மலர வரவேற்றாள் நாமகள்.

“அவர் உங்களைத் தான் தேடிக் கொண்டு வந்தவர்” என்றார் பாக்கியலட்சுமி.

“ஓம்.... கண்டனாங்கள் வாறார்” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

விக்னேஸ்வரமூர்த்தியும் புதிதாக வந்தவரும் நாற்காலிகளில் அமர்ந்து கொண்டனர். அப்போது தணிகாசலம் உள்ளே வந்தார். வந்தவர் எழுந்து வணங்கினார்; “எனது பெயர் அங்குசன். உங்கள் ஊரில் உள்ள வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்ற வைத்தியர்” என்றார்.

“அப்படியா ....? மிகவும் மகிழ்ச்சி. உங்களுக்கு எம்மாலான உதவிகளைச் செய்வோம்” என்றார் தணிகாசலம்.

“உங்களைப் பற்றியும், அதிபரைப் பற்றியும் அப்பா அடிக்கடி சொல்வார். அதனால் வேலையைப் பொறுப்பேர்க்க முன்பு உங்களைச் சந்தித்து ஆசி பெற வேண்டு மென நினைத்தேன்”.

தணிகாசலம் பூரித்துப் போனார். அவரால் பேசமுடியவில்லை.

“அறம் உணர்ந்தவராய், தம்மை விட மூத்தவராய் உள்ள அறிவுடையவர்களின் நட்பைப் பெற வேண்டு மென்ற ஆவலில் தான் உங்கள் இருவரையும் சந்திக்க வந்தேன்” அங்குசன் பேசிக் கொண்டிருந்தார். தணிகாசலத்திற்கு அவை யொன்றும் கேட்கவில்லை.

**441. அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை**
**திறன் அறிந்து தேர்ந்து கொளல்.**

அறம் உணர்ந்தவர்களாய்த் தன்னை விட வயதில் மூத்தவராய் உள்ள அறிவுடையவரின் நட்பை ஆராய்ந்து பெறல் வேண்டும்.

## *தெரிந்து துணையைத் தேடு*

நாமகள் தேநீர் கொண்டு வந்து அங்குசனுக்கும் விக்னேஸ்வரமூர்திக்கும் தணிகாசலத்திற்கும் கொடுத்தாள்.

“இவள் நாமகள். என்னுடைய மாணவி. தணிகாசலத்தின் மகள், மருத்துவக் கல்லூரியில் கற்கிறாள்”. என்று அங்குசனுக்கு நாமகளை அறிமுகஞ் செய்தார் விக்னேஸ்வரமூர்த்தி.

“அப்படியா..? மிகவும் சந்தோசம். எந்த வீட்டில் பெண்கள் கல்வியறிவுடையவர்களாக இருக்கிறார்களோ அந்த வீட்டில் சகல ஐஸ்வர்யங்களும் இருக்கும். கல்வியறிவில்லாத பெண்களால் குடும்பமும் கிராமமும் நாடும் என்றும் துன்பப்பட்டுக் கொண்டே இருக்கும். பெண்களின் கல்வியறிவு வளர்ச்சியடைந்தாலன்றி குடும்பம் நலம் பெறுவதற்கு வாய்பே இல்லை. நன்றாகப் படியுங்கள்” என்று வாழ்த்தினார் அங்குசன்.

“பதவிக்கு வருபவர்கள் பணத்தைப் பற்றியும் அதைச் சம்பாதிக்கும் வழிவகைகளைப் பற்றியும் சிந்திப்பார்களே தவிர அறத்தைப் பற்றியும் நட்பைப் பற்றியும் சிந்திக்க மாட்டார்கள். அதுவும், வைத்தியர்கள் உழைப்பிலேயே கண்ணாக இருப்பார்கள். நீங்கள் வித்தியாசமானவராக இருக்கிறீர்கள்” என்றார் தணிகாசலம்.

“ஒவ்வொருவரினது வாழ்க்கையையும் தீர்மானிப்பவர் கடவுள். எமது வாழ்வு மேன்மையடைய வேண்டுமானால் நாம் நல்ல செயல்களைச் செய்தல் வேண்டும்.

நல்லதைச் செய்து நல்லவராக வாழ்ந்தால் சொர்க்க வாழ்வு கிடைக்கும் என்று எனது பாட்டனார் கூறுவார். நான் மருத்துவக் கல்லூரிக்குத் தெரிவானதும் அவர் சொன்னது இன்றும் எனது காதுகளில் ஒலிக்கிறது; ''எந்தவிதமான சுயநல நோக்கமும் இல்லாமல், பணம் பொருள் புகழ் இவற்றிற்கு அடிமைப்படாமல் உனது கடமையைச் செய். இந்த வகையில் நீ செயலாற்றினால் நீ நினைத்த தெல்லாவற்றையும் அடைவாய். கடவுளுக்கு உனக்கு எந்தெந்த நேரம் உதவி செய்ய வேண்டுமென்று தெரியும். எனவே கடமையை கண்ணியத்துடன் செய்'' என்றார். அதன்படி தான் நடந்து வருகிறேன். இதற்கு முன்பு இக்கிராம வைத்தியசாலைக்கு பல வைத்தியர்களை நியமித்த போதும் எவரும் வரவில்லை. எல்லோரும் பட்டணத்தில் உள்ள வசதிகளை விட்டு விட்டு வர விரும்பவில்லை. ஆனால் நான் வந்திருக்கிறேன். மற்றவர்கள் என்னைக் கேலி செய்தனர். எனது தந்தை யார் சொன்னார்; 'மகனே தேவை உள்ள இடத்தில் தான் கடமை செய்தல் வேண்டும். தேவையுள்ளவர்களுக்குக் கடமை செய்பவர் கடவுள் ஒருவர் தான். எனவே அவர்கள் உன்னைக் கடவுளாக நினைப்பார்கள். விருப்புடன் சென்று கடமைகளைச் செய்'' என்றார். நான் மருத்துவன். வேதனைப் பட்டுக் கொண்டிருக்கின்ற மக்களுக்குச் சிறிதளவாவது சேவை செய்ய முடியுமானால் அது நான் பெற்ற பெரும் பாக்கிய மென்று நான் கருதுகிறேன். மனிதனுக்கு நம்பிக்கையை உண்டாக்கி அவனுக்கு மன அமைதியைக் கொடுப்பது தான் வைத்தியனின் முதற் பணி''.

''உமது வார்த்தைகளில் இருந்து உமது குடும்பத்தின் பண்பு எனக்குத் தெரிகிறது. நீங்கள் மிகவும் நல்லவர்; நேர்மையானவர்; இரக்க சிந்தனை மிக்கவர். அதனால் நீங்கள் கேட்கும் உதவிகள் அனைத்தையும் செய்து தருகிறோம்'' என்றார் தணிகாசலம்.

''மிகவும் மகிழ்ச்சி. இருக்கின்ற துன்பத்தைப் போக்கி, இனித் துன்பம் வராத வண்ணம் முன்பே தெரிந்து காக்கின்ற தன்மை உடையவர்களைத் தெரிந்து துணையாகக் கொள்ள வேண்டும் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வைத்தியசாலையின் கிணறு வற்றாத ஊற்றுடையது. அதனால் அதை கலக்கி இறைக்க முடியாமையால் அக்கிணற்று நீரை நோயாளர் பாவிப்பதில்லை. அதனால் குழாய் கிணறு ஒன்று அமைத்துத் தரல் வேண்டும். இப்பொழுது நோயாளர்கள் குடிநீருக்காக அயல்வீடுகளுக்குச் செல்கிறார்கள். பாதுகாப்பு வேலியில்லாததால் கட்டாக்காலி நாய்கள் நோயாளிகள் தங்கிச் சிகிச்சை பெறும் மண்டபங்களுக்குள்ச் சென்று பல தொல்லைகளைச் செய்கின்றன.''

'வைத்தியசாலைக்கு நல்ல தொரு தலைவர் இல்லாததால் எம்மால் அபிவிருத்தி செய்ய முடியவில்லை. என்றோ குழாய் கிணறு அமைப்பதென நாங்கள் தீர்மானித்துப் பணமும் சேகரித்து வைத்துள்ளோம். நீங்கள் நல்ல தொரு பொறுப்பான கடமையுணர்வு மிக்க வைத்தியர். ஒரு வார காலத்துள் யாவற்றையும் செய்து தருகிறோம்'' என்றார் தணிகாசலம்.

மலகூடம், மின்சாரம், வேலி, வைத்தியர் பற்றாக்குறை போன்றவற்றால் நோயாளர்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். இவற்றை யெல்லாம் நாம் நீக்கித் தருகிறோம். எதிர்காலத்திலும் நோயாளிகளுக்கு வரவிருக்கு துன்பங்களையும் முன்னதாகவே தெரிந்து நீங்கத் தயாராக உள்ளோம். நீங்கள் வைத்தியசாலைக்கு அருகில் சகல வசதிகளோடும் குடும்பத்தினருடன் இருக்க வேண்டிய வசதிகளையும் செய்து தருகிறோம்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“மிகவும் நன்றி, மிகவும் நன்றி, மிகவும் நன்றி” என்று சந்தோஷ மிகுதியால் சிரித்தார் அங்குசன். “பல நாட்களாக வைத்திய சாலைக்கு ஒரு வைத்திய நிபுணர் இல்லாத குறை தீர்ந்து விட்டது” என்று எண்ணி மகிழ்ந்தார் தணிகாசலம்.

**442. உற்றநோய் நீக்கி உறாஅமை முன்காக்கும்**
**பெற்றியார்ப் பேணிக் கொளல்.**

வந்த துன்பத்தை நீக்கி, இனித் துன்பம் வராத வண்ணம் காத்து நடக்கும் பெரியவர்களைப் போற்றி அவர்களோடு நட்புக் கொள்ளல் வேண்டும்.

## *முதன்மையான சிறப்பு*

தணிகாசலத்தின் வீட்டிலிருந்து அங்குசன் வெளியே வந்த போது பரமேஸ்வரனும் காமாட்சியம்மாளும் உள்ளே வந்தனர். அவர்கள் அங்குசனைக் கண்டதும் ஆச்சரியப்பட்டனர். அதைப் போல அங்குசனும் ஆச்சரியப்பட்டார்; “மாமா... நீங்கள் என்ன இந்தப்பக்கம்...” என்று அங்குசன் கேட்க, அதற்குப் பதில் கூறாது; “நீங்கள் ஏன் இங்கே வந்தீர்கள்?” என்று கேட்டார் பரமேஸ்வரன்.

“நான் இவ்வூர் வைத்தியசாலைக்குப் பொறுப்பதிகாரியாக இடமாற்றம் பெற்று வந்துள்ளேன். எனது தந்தையார், பெரியார்களைப் போற்றித் தமக்குச் சுற்றமாக ஆக்கிக் கொள்ளுதல், ஒருவன் அடையும் பெருஞ் சிறப்புக்களிலெல்லாம் தலையானதாகும் என்று கூறுவார். நான் இங்கு வந்து பலரை விசாரித்துப் பார்த்தேன். அறம் உணர்ந்தவராகவும், அறிவுடையவராகவும் உள்ள பெரியார் தணிகாசலமும் அதிபர் விக்னேஸ்வரமூர்த்தியும் என்று சொன்னார்கள். தணிகாசலம் அவர்களைப் பற்றி இவ் ஊரவர்கள் கூறியதைக் கேட்க எனக்கு மெய் சிலிர்த்தது. இப்படியும் ஒரு மனிதன் வாழ்வானா? வாழ முடியுமா? என்று சந்தேகப்பட்டேன். அதனால் நான் எனது வேலையைப் பொறுப்பேற்க முன்பு அந்த மகானைத் தரிசிக்க விரும்பினேன். அத்துடன் மக்களின் அறியாமையை நீக்கி அவர்களுக்குக் கல்வியை ஊட்டித் தனது பணியைத் தவத்தைப் போலச் செய்து வரும் அதிபரையும் சந்தித்து ஆசி பெற விரும்பினேன். அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறெதையும் அறியாது அமைதியாகக் கல்விப் பணி புரியும் மாமனிதன் என்று அதிபரைப் பற்றிச் சொன்னார்கள். அதனால் அவரையும் சந்திக்க வந்தேன். நீங்கள் ஏன் வந்தீர்கள்?” என்று கேட்டான் அங்குசன்.

இந்தப் பெரிய மனிதனின் மகளைத் தான் எனது மருமகளாக்கிக் கொண்டேன்” என்றார் பரமேஸ்வரன்.

“எந்தவிதமான பயனையும் கருதாது மற்றவர்களின் நன்மைக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் உத்தமரான தணிகாசலம் அவர்களின் மகளைச் செய்வதற்குக் வத்சல்யன் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும். நாமகளின் முகத்தில் தவழும் தெய்வீகத் தன்மைக்காக எதையும் இழக்கலாம். ஒரு சில கணங்களே நான் அவளைப் பார்த்தேன். எல்லோரையும் வசீகரிக்கின்ற ஒரு காந்த சக்தி. அவளது கண்களில் குடி கொண்டிருந்தது. இவள் எமது வீட்டின் குல தெய்வமாக

வந்தால் எப்படி இருக்கும் என்று நினைத்தேன். எனது தம்பி வெளிநாட்டில் வைத்தியராகக் கடமை புரிகிறான் அவனுக்குச் செய்யலா மென முடிவு செய்தேன். எனினும் அறிமுகமில்லாத நான் எப்படிக் கேட்பது. சில நாட்கள் பொறுத்து வந்து கேட்போம் என நினைத்தேன். நீங்கள் முந்தி விட்டீர்கள். வத்சல்யன் அதிஷ்டக்காரன்'' என்றார் அங்குசன்.

''நான் சென்று வருகிறேன்'' எனப் புறப்பட்டார் அங்குசன். அவருடன் விக்னேஸ்வரமூர்த்தியும் சென்றார்.

''அங்குசனின் தகப்பன் விநாயகரத்தினம் எனது நண்பர். நகரில் பெரிய இரும்பு வர்த்தகர். நமது நாட்டுக்கு வரும் இரும்புப் பொருட்களை அவர் தான் இறக்குமதி செய்கிறார். ஐந்து ஆண்பிள்ளைகள் அவருக்கு இருக்கிறார்கள். ஐவரும் பல்கலைக் கழகம் சென்று கற்றவர்கள். விநாயகரத்தினம் மிகவும் நல்லவர்; எளிமையானவர்; ஏழைகளில் இரக்கம் உள்ளவர். ஏழைகளுக்கும் தொழிலாளர்களுக்கும் தன்னாலான அனைத்து உதவிகளையும் செய்வார்; ''எவனொருவன் பொருள் தேடுவதை மட்டும் கருத்திற் கொண்டு செயற்படுகிறானோ, அத்தகையவன் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் நஷ்டமடைகிறான். அவனுக்கு நண்பர்கள் இருக்க மாட்டார்கள்; உறவினர்கள் இருக்க மாட்டார்கள்; உதவி செய்வோர் இருக்க மாட்டார்கள். எவனொருவன் ஏழைகளின் மீது இரக்கப்படாமல் வாழ்கிறானோ அவன் வாழ்க்கையில் இன்பத்தை அடைய மாட்டான்; புகழைப் பெற மாட்டான். எவனொருவன் உதவி செய்யாமல் வாழ்கிறானோ அவன் ஆபத்துக்களை அடிக்கடி சந்திப்பான். நீ எனது நண்பன். நல்லவர்களைப் போற்றி நட்புக் கொள். அவர்கள் மூலம் பல நன்மைகளை அடையலாம். நீ எல்லோரையும் சந்தேகித்து நடப்பதால் தான் உனக்கு அடிக்கடி பிரச்சினைகள் வருகின்றன.'' என்று சொல்வான். அவற்றை யெல்லாம் கேட்காததால் தான் நான் நட்ட மடைந்தேன் தகப்பனைப் போல அங்குசனும் நல்லவர்களை நாடிச் சென்று அவர்களை நட்பாக்கிக் கொள்வான். கொழும்பில் உள்ள பெரியவர்கள் பலர் அவனது நண்பர்கள்'' என்றார் பரமேஸ்வரன்.

''நான் பரம ஏழை; கல்வியறிவில்லாதவன். ஆனால் பெரியவர்களைப் போற்றி நட்பாக்கிக் கொண்டதன் மூலம் தான் இன்று இந்தப் பெரு வாழ்வைப் பெற்றேன். பூவோடு சேர்ந்த நாரும் கடவுளின் பாதத்தை அடைவதைப் போலப் பெரியவர்களுடன் சேர்ந்தால் தான் நான் பேசப்படுகிறேன்; எனது பிள்ளைகள் அறிவாளிகளானார்கள். பெரியவர்களின் நட்பு துன்பத்தைப் போக்கும்; துன்பங்கள் வராமல் காக்கும். இது எனது அனுபவம்'' என்றார் தணிகாலம்.

**443. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்**
**பேணித் தமராக் கொளல்.**

பெரியவர்களைப் போற்றித் தனக்குச் சுற்றத்தவராக்கிக் கொள்ளுதல்,ஒருவன் பெறத்தக்க அரிய பேறுகள் எல்லாவற்றிலும் அரிதானதாகும்.

*பெரும் வல்லமை*

“உண்மைதான். நான் அதை இன்று வரை உணரவில்லை. அத்துடன் என்னுடன் சேர்ந்தவர்கள் தமது நன்மைக்காக என்னை நல்லவர்களுடன் சேரவிடவில்லை. விநாயகரத்தினம் தொழில் விஷயத்தில் மிகவும் கெட்டிக்காரன். ஒரு முறை தொழிலாளர்கள் பல பிரச்சினைகளை முன் வைத்து வேலை நிறுத்தம் செய்தார்கள். அவ்வேலை நிறுத்தம் மூன்று மாதகாலம் நீடித்தது. தொழிற்சங்கப் பிரமுகர்கள் விட்டுக் கொடுக்காது பிடிவாதமாக இருந்தனர். தொழிலாளி ஒருவனின் மகன் கடுஞ் சுகவீன முற்று வெளிநாட்டினர் வைத்து நடத்தும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். அரசாங்க ஆஸ்பத்திரிகளில் அவனின் நோய் அறியப்படாததால் தொழிற்சங்கப் பிரமுகர்களை நம்பித் தொழிலாளி தனது மகனை வெளிநாட்டு வைத்தியசாலையில் சேர்த்து விட்டான். மூன்று தினங்களுக் கொருமுறை பணங் கட்டுதல் வேண்டும். அத் தொழிலாளியின் மகனை அனுமதித்த மூன்றாவது தினம் பணத்திற்காக வைத்தியசாலை நிர்வாகம் அத்தொழிலாளியை நெருங்கியது. மூன்று மாதகாலம் வேலை செய்யாததால் தொழிலாளர்கள் யாபேரும் பணத்திற்குப் பெருங் கஷ்டப்பட்டனர். அதனால் பணம் சேரவில்லை. அன்று அவனைப் பார்க்கச் சென்ற விநாயகரத்தினம் நிலமையை அறிந்து முழுப்பணத்தையும் கட்டி விட்டார். அதனால் அரைவாசித் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பி விட்டனர். சில தொழிலாளர் கொழும்பில் உள்ள பிரமுகர் ஒருவரிடம் சென்று தமக்கும் உதவி செய்யும் படி விநாயகரத்தினத்திடம் கேட்கும் படி கூறினர். அப்பிரமுகர் சிறந்த கல்விமான். எம்மை விட அறிவாளி. கொழும்பில் பல பிரமுகர்கள் தமது சொந்தப் பிரச்சினைகளுக்கும், தொழிற் பிரச்சினைகளுக்கும் அவரிடஞ் சென்று ஆலோசனை கேட்பார்கள். அந்தப் பிரமுகர் விநாயகரத்தினத்திடம் வந்து தொழிலாளர்களின் நிலையைப் பற்றிக் கூறி அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்யுமாறு கோரினார். மறுநாள் விநாயகரத்தினம் தொழிலாளர்களை அழைத்து அவர்கள் கோரியதை விட அதிகளவு சலுகைகள் செய்தார். அதனால் தொழிற்சங்கப் பிரமுகர்களின் ஆதிக்கம் முற்றாக அற்றுப் போய் விட்டது. நான் முதலில் விநாயகரத்தினம் மூளையில்லாதவன் என்று தான் நினைத்தேன். ஆனால் நான் தான் மடையன் என்று பின்பு புரிந்து கொண்டேன். எனது தொழிற்சாலையில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த போது அந்தப் பிரமுகர் எனது வீடு தேடி வந்து சொன்னார்; “பரமேஸ்,நாம் எப்பொழுதும் உயிர்களிடத்தில் அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும். ஒரு செயலை அதிகாரத்துடன் செய்யச் சொல்லிச் சொல்வதை விட அன்புடன் கூறுவது அச் செயலின் பயனை இரட்டிப்பாக்கும். தொழிலில் இலாபம் வர வேண்டும் என்று நினைப்பது தர்மமானது. பெரும் இலாபம் வர வேண்டு மென்று நினைப்பது பாவமானது. மற்றவர்களின் உழைப்புக்கு மதிப்புக் கொடுத்தல் வேண்டும். உழைப்பிற் கேற்ற ஊதியம் கொடுக்கப்படல் வேண்டும். இல்லாவிட்டால் பெரும் நஷ்டமேற்படும். அனுபவமுள்ள உங்களுக்கு நான் இதைச் சொல்லத் தேவையில்லை. தொழிலாளர்களை மதித்து நடவுங்கள்” என்றார். நான் அதைக்கேட்கவில்லை. தொழிற்சாலை எரிந்து நட்ட மேற்பட்ட பின்பு எனக்கு ஆறுதல் சொல்ல விநாயகரத்தினம் வந்தார்.

“பரமேஸ், துன்பம் வருவதற்குக் காரணம் அறியாமை தான். மற்றவர்கள்” கூறுவதை அமைதியுடன் கேட்டுச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். எம்மை விட எல்லா வகையிலும் பெரியவர்களை எமக்குச் சொந்தமாகக் கொண்டு அவர்களின் சொற்படி நடப்பது வல்லமைகளுக்கெல்லாம் பெரிய வல்லமையாகும். வல்லமை உள்ளவன் பெரியவர்களின் சொல்லைக்கேட்டு நடப்பான். அப்படி நடக்க மிகுந்த வல்லமை வேண்டும். எமக்கு இளையவன், இல்லாவிட்டால் கற்காதவன் கூறும் வார்த்தைகளுக்கும் மதிப்பளித்தல் வேண்டும்.

இதைக் கேட்காததால் தான் உனக்கு இப் பெருந் துன்பம் வந்தது. இனியாவது, வல்லமையுடன் நடந்து கொள்'' என்றார் பரமேஸ்வரன்.

''பெற்றோரின் உதவியையே நாடி நிற்கும் ஒரு குழந்தையைப் போன்றவர்கள் தான் நாம். எமக்கு எப்பொழுதும் எம்மை விட எல்லா வகையிலும் அறிவுடைய பெரியவர்களைச் சொந்த மாக்கிக் கொள்ளும் வல்லமை வேண்டும். அந்த வல்லமை இல்லாதவன் எந்நாளும் துன்பத்தையே அடைவான். அவனை விட்டு ஒரு போதும் துன்பங்கள் நீங்க மாட்டாது. எனது வாழ்க்கையில் எத்தனையோ பிரச்சினைகள் வந்தன. சுவாமியாரும், அதிபரும் தான் எனது துன்பங்களைத் தீர்த்து வைத்தனர்.'' என்றார் தணிகாசலம்.

''கெடு குடி சொற்கேளாது, சாகிறவன் மருந்து குடிக்க மாட்டான்'' என்று பெரியவர்கள் கூறுவார்கள். பெரியவர்களை சார்ந்து நடக்கவும், அவர்கள் எம் மீது பிரியம் வைக்கவும், நாம் அவர்களுடன் நடந்து கொள்ளும் முறைகள் தான் காரணமாக அமைகின்றன. நான் பெரியவர்களை மதித்து நடப்பதில்லை. அப்படி மதித்து நடக்க வல்லமை வேண்டும். நான் தான் யாவும் அறிந்த அறிஞன் என்று நினைத்து எனது வாழ்க்கையைப் பாழாக்கி விட்டேன்'' என்று கூறிக் கலங்கினார் பரமேஸ்வரன்.

**444. தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்**
**வன்மையுள் எல்லாம் தலை.**

தம்மை விட அறிவில் சிறந்த பெரியவர்களைத் தமக்குச் சுற்றத்தவராக ஆக்கி அவரைப் பின்பற்றி நடத்தல், வல்லமை எல்லாவற்றிலும் சிறந்த வல்லமையாகும்.

## *கண்கள்*

''முன்னொருகாலத்தில் ஏரம்பன் என்ற அரசன் நகுலேஸ்வர புரி என்ற நாட்டை ஆண்டு வந்தான். ஏரம்பன் சிறந்த வீரன். மக்களுக்குச் சிறு குறைகள் கூட ஏற்படாமல் பாதுகாப்பவன். அரசவைக்கு இரப்பதற்கு யார் வந்தாலும் அவர்கள் மனம் மகிழும் அளவிற்குப் பொருட்களைக் கொடுப்பவன். நீதி தவறாது அவன் அரசாண்டு வந்தமையால் நகுலேஸ்வர புரி மக்கள் சொர்க்கத்தில் வாழ்வதைப் போல வாழ்ந்து வந்தனர். உலகில் உள்ள பெரும் வீரர்களுக்கு, அறிஞர்களுக்கு, தவசிகளுக்குக்கூட ஏதோ ஒரு பலவீனம் இருக்கும் என்று சொல்வார்கள். அந்தப் பலவீனம் ஏரம்பனுக்கும் இருந்தது. ஏரம்பன் சகல வித்தைகளையும் கற்றவன். வேத உபநிடதங்களையும், அரிய பல நூல்களையும் கற்றவன், அதனால் தான் எல்லாவற்றையும் அறிந்தவன் என்ற மமதையைக் கொண்டவன். அதனால். தனது அரச சபையில் அறிஞர்களை அவமதிப்பதை வழக்கமாகக் கொண்டவன். அதனால் கற்றவர்கள் அவனது அவைக்கு வருவதில்லை. ஆலோசனை செய்பவர்களை அவன் மட்டம் தட்டுவதால் மந்திரிகள் அவன் சொல்வதைக் கேட்பார்களே தவிர மறுத்துப் பேச மாட்டார்கள். அவன் தவறாகச் சொன்னாலும் அதைச் சரி யென்று சொல்லி விடுவார்கள். பொதுவாக ஏரம்பன் சொல்வதைச் சரியென்று சொன்னால் போதும். அதன் பின் அவன் கூறியதை நடை முறைப்படுத்த வேண்டியதில்லை. தனது

சொல்லுக்கு எல்லோரும் கட்டுப்பட்டு நடந்தால் சரி யென்று ஏரம்பன் நினைப்பான்.

ஒரு முறை அவன் கூறுவதைப் பொறுக்க முடியாத புலவர் ஒருவர் சொன்னார்; ‘‘மன்னா! தக்க வழிகளை ஆராய்ந்து சொல்பவர்கள் அரசனுக்கு ஒளி தரும் கண்களைப் போன்றவர்கள். அரசன் அத்தகையவர்களை ஆராய்ந்து தனக்குத் துணையாக்கிக் கொள்ளல் வேண்டும். தக்க வழிகளை ஆராய்ந்து சொல்பவர்களை ஒருவன் தேடிக் கொண்டானேயானால் மற்றவை அனைத்தும் தானாகவே வந்து சேரும். ஆனால் நீ அவர்களை ஒதுக்கித் தள்ளியுள்ளாய். அத்துடன் நீ நினைப்பவை யெல்லாம் நல்லவை யென்று நினைக்கிறாய். இது உனக்கு அழிவையே தரும். தயவு செய்து உனது அவையில் நல்லவர்களையும் அறிஞர்களையும் சேர்’’ என்றார்.

அவரது வார்த்தைகள் ஏரம்பனுக்கு கோபத்தை வரவழைத்தது; ‘‘புலவரே! கல்லாதவன் தான் மற்றவர்களிடம் ஆலோசனைகளைக் கேட்க வேண்டும். நான் மற்றவர்களுக்கு ஆலோசனைகள் கூறக் கூடியவனே தவிர ஆலோசனைகள் கேட்கக் கூடியவனல்ல. பெரும் பெரும் அறிஞர்களிளெல்லாம் இருக்கும் இந்நாட்டில், எனக்கு ஆலோசனைகள் கூற எவரும் முன் வந்ததில்லை. அதற்குக் காரணம் நான் முக்காலமும் உணர்ந்தவன் என்று அவர்கள் கருதுவது தான். உமக்கு எப்படி இந்தத் துணிவு வந்தது’’.

புலவருக்குப் பயமாக இருந்தது. ஏரம்பன் உயிர் நண்பனெனக் கருதிப் பழகும் சேனாதிபதி சுந்தரசேனன் அயல் நாட்டு மன்னனுடன் சேர்ந்து நகுலேஸ்வரபுரியைக் கைப்பற்றத் திட்டமிட்டுள்ளான். அது படைத்தளபதிகளுக்கும் முதல் அமைச்சருக்கும் தெரியும். படைத்தளபதிகளும் முதலமைச்சரும் ஏரம்பனுக்கு அதைச் சொல்லப் பயப்பட்டனர். தாம் கூறிய பின்பு ஏரம்பன் சுந்தரசேனனின் மேலுள்ள நம்பிக்கை மிகுதியால் அவனை அழைத்துக் கேட்டால் சுந்தரசேனன் உடனே தனது நிலையை மாற்றி ஏரம்பனுடன் சேர்ந்து கொள்வான். முன்பு ஒரு முறை ‘‘நந்தினி’’ என்ற அரசவைப் புலவரின் மனைவி மீது ஏரம்பன் மோகங் கொண்டான். அவள் ஏரம்பனை உயிருக்குயிராகக் காதலிப்பதாக நடித்தாள். ஏரம்பன் அவளுக்கு முத்து மாலைகள் பரிசளித்தால் அதை அவனை தனக்கு அணிவித்து விடும்படி கூறுவாள். ஏரம்பனும் அணிந்து விடுவான். காலப்போக்கில் நந்தினி சுந்தரசேனன் மீதும் ஆசைப்பட்டாள். அவனுடன் பலரறியக் கூடியிருந்தாள். இதை நந்தினியின் பணிப்பெண்ணொருத்தி ஏரம்பனுக்குக் கூறினாள். நந்தினி மாயவித்தைகள் தெரிந்தவள். கண்ணிர் விட்டு அழுது நடித்து அவனை நம்பப் பண்ணி விட்டாள். அதனால் அப்பணிப் பெண் பாதாளச் சிறையில் அடைக்கப்பட்டாள். அதனால் படைத்தளபதிகளும் முதலமைச்சரும் சுந்தரசேனனின் விஷயத்தைச் சொல்லப் பயப்பட்டனர்.

‘‘சில நாட்கள் செல்ல சுந்தரசேனன் ஏரம்பனைத் தந்திரமாக வேட்டையாடக் காட்டுக்கு அழைத்துச் சென்றான். அங்கு தயாராக இருந்த அயல் நாட்டுப் படையினர் அவனைக் கைது செய்தனர். ஏரம்பன், சுந்தரசேனனை உதவிக்கு அழைத்தான். அப்போது சுந்தரசேனன் சொன்னான்; ‘‘ ஏரம்பா, மனிதனாகப் பிறந்தவன் தக்கவழிகளை ஆராய்ந்து சொல்பவர்களைத் தனது கண்களாகக் கருதி, அவர்களைத் தனது துணையாக்கிக் கொள்ளல் வேண்டும். அரசர்கள் அவர்களைத் தமது கண்களாகக் கருதிப் போற்ற வேண்டும். ஆனால் நீ எல்லாம் அறிந்தவன் போல நடந்து கொண்டமையால் இவ்விஷயம் தெரிந்தவர்கள் கூட

உனக்கு சொல்லவில்லை. அதனால் தான் உனக்கு இந்த நிலைமை ஏற்பட்டது” என்றான் என்று நிறுத்திய தணிகாசலம் சில நிமிடங்களுக்குப் பின் சொன்னார்; “இதே நிலை தான் உங்களுக்கும் ஏற்பட்டது. மனிதன் ஒரு சமூகப் பிராணி. அவனால் தனித்து இயங்க முடியாது. சேர்ந்து தான் இயங்குதல் வேண்டும்” என்றார்.

பரமேஸ்வரன் தனது தவறுக்காக வருந்தினார்.

**445. சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்**
**சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.**

தக்க வழிமுறைகளை ஆராய்ந்து சொல்லும் அறிஞர்களே உலகின் கண்களாதலால், மன்னவன் அத்தகையவர்களை ஆராய்ந்து நட்புக் கொள்ளல் வேண்டும்.

## *செய்ய முடியாது*

பரமேஸ்வரன் வந்து சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்து கடந்த காலத்தை நினைத்துப் பார்த்தார். அவரது கண்களுக்குள் அமிர்தினி தோன்றிச் சிரித்தாள். அவரது நிறுவனத்தில் வேலை செய்பவள் அவள். இளமையானவள்; அழகானவள்; வசீகரமாகப் பேசிச் சிரிப்பவள்; சுறுசுறுப்பானவள். அந்த நிறுவனத்தின் வேலைகள் அனைத்தையும் முன் நின்று செய்பவள். தொழிலாளர்கள் அனைவரோடும் அன்பாகப் பழகுபவள். அதனால் அவளை தனது உதவியாளராகப் பதவி உயர்த்தினார் பரமேஸ்வரன்.

அங்கங்கள் தெரிய உடை அணிய மாட்டாள். சேலைக்கும் மேற்சட்டைக்கும் இடையில் இடைவெளி இருக்க மாட்டாது. மேற்சட்டை கழுத்து வரை உயர்ந்திருக்கும். தெய்வீகக் களை பொருந்திய சிரிப்பு. பார்த்தால் கை கூப்பித் தொழ வேண்டு மென்ற நினைப்புத்தான் எல்லோர் மத்தியும் எழும்.

அவள் பரமேஸ்வரனின் உதவியாளானதும் நடத்தையில் சில மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டாள். பரமேஸ்வரனிடம் கோவைகளை ஒப்படைக்கும் போது அவரது விரல்கள் அவரின் விரல்களுடன் உரசின. நடந்து வரும் வேளைகளில் அவளது தோள் அவரின் தோளை இடித்தது. ஆரம்பத்தில் அவர் அதைப் பெரிதாக எண்ணவில்லை. அன்று அங்கு வேலை செய்யும் ஒருவரின் மனைவியின் தங்கைக்குத் திருமணம். அன்று அவர் சபையில் அமர்ந்திருக்கும் போது அவருக்கருகில் ஒருவர் அமர்ந்திருந்து உண்ணக் கூடிய இடம் இருந்தது. அதில் அமிர்தினி வந்திருந்தாள். அவளது கால்கள் அவரது கால்களுடன் உரசின. பரமேஸ்வரன் விலகிய போதும் அவளது கால்கள் அருகே வந்தன.

மறு நாள் யாருமில்லாத வேளை அமிர்தினி அவரின் அருகில் வந்தாள். இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாக அவள் இருந்தும் அவளது இளமை குலையவில்லை. அவளின் பார்வை பரமேஸ்வரனைச் சுட்டெரித்தது. கோவைகளுடன் கையைப் பிடித்தார். அவள் எதுவும் பேசவில்லை. அதன் பின் அவளின் அணைப்பு அவருக்கு அடிக்கடி தேவைப்பட்டது. யாருமறியாது அவர்கள் சந்தித்து வந்தனர்.

அந்த நிறுவனத்திலுள்ள அனைவரைப் பற்றியும் அவள் சொல்வாள். அதை அப்படியே பரமேஸ்வரன் நம்பி விடுவார். அந்த நிறுவனத்தில் வேலை செய்யும் தொழில்நுட்பவியலாளரை அமிர்தினிக்குப் பிடிக்காது. ஆனால் அவருடன அவள் நல்ல முறையில் கதைத்துச் சிரிப்பாள். வீட்டாரின் சுக நலன்களை விசாரிப்பாள். வீட்டுக்குச் செல்வாள். அதனால் அவர் அமிர்தினியை மிகவும் நல்ல பெண் என்று நம்பியிருந்தார்.

அமிர்தினி பரமேஸ்வரனுக்கு அவரைப் பற்றி இல்லாதது பொல்லாத தெல்லாம் கூறுவாள். அதனால் பரமேஸ்வரன் அரைப் பதவி இறக்கி தனது இன்னொரு நிறுவனத்திற்கு இடம் மாற்றி விட்டார்.

தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடு பட்ட போது அவரது நண்பனான கணநாதன் வந்து தொழிலாளர்களுடன் சமாதானமாகப் போகும்படி பல முறை கூறினார். வேண்டுமானால் தானே முன்நின்று அப்பிரச்சினையைத் தீர்த்து விடுவதாகக் கூறினார். ஆனால் அமிர்தினி அவரைப் பற்றித் தவறாகக் கூறி அவருடன் சேரக் கூடாது என்று சொன்னாள். அதனால் தான் அவர் தொழிலாளர்களுடன் சமாதான மாகப் போக விரும்பவில்லை. கணநாதனைப் பற்றித் தவறாகச் சொன்ன அமிர்தினி, கணநாதனுடன் அன்னியோன்னியமாகப் பழகினாள். யாரோ ஒருவர் பரமேஸ்வரனுக்குத் தவறான பாதையைக் காட்டுகிறார்கள் என்று கணநாதனுக்கு தெரிந்தது. ஆனால் அது யார் என்பதைப் புரியாத கணநாதன் அமிர்தினியிடம் வந்து சொன்னார்; ‘‘அமிர்தினி நீ சொன்னால் பரமேஸ்வரன் கேட்பார். எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லு. பரமேஸ்வரன் மிகவும் திறமையானவர். தொழிற்சாலையின் உரிமையாளர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து ஒரு சங்கம் அமைக்க யோசிக்கிறோம். அதற்குப் பொருத்த மானவர் பரமேஸ்வரன் தான். ஆனால் அவர் யாரையும் மதிப்பதில்லை’’ என்றார். அதை அமிர்தினி பரமேஸ்வரனுக்குச் சொன்னாளே தவிர அதைக் கைக் கொள்ளும் படி கூறவில்லை.

‘‘தேநீர் குடியுங்கோ..’’ என்றவாறு பாக்கியலட்சுமி தேநீர்க் கோப்பையை நீட்டினாள். சுய நினைவடைந்த பரமேஸ்வரன் தேநீரை வாங்கிச் சுவைத்துக் குடித்ததார். இருந்த போதும் மனம் பழைய சம்பவங்களை இரை மீட்டது.

‘‘அறிவிற் சிறந்தவர்களை உறவாய்க் கொண்டு அவர்களின் ஆலோசனைப்படி செயலாற்றுகின்ற தலைவனுக்குப் பகைவர்களால் எந்தத் தீங்கும் ஏற்பட மாட்டாது. நீ நான் சொல்வதைக் கேளாமல் யாரோ ஒரு துட்டனின் போதனைகளைக் கேட்டமையால் தான் இந்தப் பெரும் நஷ்டமேற்பட்டது. இன்னும் காலம் போகவில்லை. நல்லவர்களோடு சேர்ந்து அவர்களது ஆலோசனைகளைக் கேட்டு நட. உனக்கு முன்னேற்ற மேற்படும்’’ கணநாதனின் வார்த்தைகள் காதில் ஒலித்தன.

‘‘இனிமேல் அமிர்தினியின் பேச்சைக் கேட்கக் கூடாது. அவளால் தான் எல்லாப் பிரச்சினைகளும் வந்தன’’. என்று முடிவெடுத்தார் பரமேஸ்வரன்.

**446. தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்**
**செற்றார் செயக்கிடந்தது இல்.**

தக்க பெரியாரைத் துணையாகக் கொண்டு வாழும் ஒருவனுக்கு, அவனது பகைவர்களால் ஒரு போதும் தீங்கு செய்ய முடியாது.

## *காக்கும் பெரியவர்*

பூரண நிலவு களங்கமற்ற வெண்வானில் உலாவிக் கொண்டிருந்தது. மேல்மாடியில் அமைந்த அறையில் சாய்வு நாற்காலியில் படுத்திருந்தார் பரமேஸ்வரன். அவருக்கு அருகில் இருந்த நாற்காலி யொன்றில் அமர்ந்திருந்தாள் காமாட்சியம்மாள்.

“இது நாள்வரை பார்க்காத ஒன்றைப் பார்த்த மாதிரி பார்த்துக் கொண்டிருக்கிறியள். காலி முகத்திடலில் பார்க்காத நிலவா?” என்று கேட்டாள் காமாட்சியம்மாள்.

பரமேஸ்வரன் திரும்பி மனைவியைப் பார்த்தார். என்று மில்லாதவாறு அவளது முகம் பூரித்திருந்தது. அதைப் பார்க்க அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அப்போது அங்கே வந்த தணிகாசலம்; “இது ஒரு அருமையான புத்தகம் சுவாமியாரின் புத்தக அலுமாரியில் இருந்தது. எடுத்து வந்து வாசித்தேன். நீங்களும் வாசித்துப் பாருங்கள்” என்றார் தணிகாசலம்.

பரமேஸ்வரன் புத்தகத்தை வாங்கிப் பார்த்தார்; “பரராஜ பாண்டியனின் மனம் என்றுமில்லாதவாறு அவதிப்பட்டுக் கொண்டிருந்தது. அன்று காலை கல்லாறு குறு நில மன்னனான நெடுமாறன் தான் இனித் திறை செலுத்த மாட்டேன் என்று அறிவித்ததாகத் தூதுவன் ஒருவன் வந்து சொன்னான். நெடுமாறனின் மகள் கயல்விழி நல்ல அழகி. பல நாட்டு மன்னர்கள் அவளைக் கண்டு அவளின் பேரெழிலில் மயங்கி அவள் கேட்பதைப் பரிசாகக் கொடுத்து அவளைத் திருமணஞ் செய்யப் போட்டி போட்டனர். ஆனால் கயல்விழி பரராஜபாண்டியனின் மகன் அருள் நேசத்தேவன் மீது காதல் கொண்டிருந்தாள். அதற்கு பரராஜ பாண்டியன் சம்மதித்திருந்தான். மக்கள் அறுவடையில் மும்முரமாக ஈடுபட்டிருந்ததால் அறுவடை முடிந்ததும் மகனின் திருமணத்தை பெரு விழாவாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தான். அப்படியான வேளையில் தான் ஒரு தூதுவன் வந்து சொன்னான்; “ அரசே குறுநில மன்னன் நெடுமாறன் தனது மகளை நாகர் கோயில் மன்னனின் மகனுக்குத் திருமணஞ் செய்து கொடுப்பதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டுள்ளார். ஏற்கனவே நாகர் கோயில் மன்னன் எம்மீது பகை கொண்டிருக்கிறான். அவன் எம்மிலும் பராக்கிரமம் கூடியவன். கல்லாறு மன்னன் நாகர் கோயில் மன்னனின் மகனைச் செய்தால் எமது நாட்டையும் கைப்பற்றி நாட்டை விஸ்தீகரிக்கலாமென நினைக்கிறார்.”

அந்தச் செய்தியைக் கேட்டதும் ஆடிப் போனான் பரராஜ பாண்டியன். நெடுமாறன் பொருளாசை பிடித்தவன். மகளின் விருப்பத்திற்கு மாறாகவும் நடப்பான். எனவே யாருமறியாது கல்லாறு மீது போர் தொடுத்து கயல்விழியை கவர்ந்து வருதல் வேண்டு மென்று நினைத்து முதல் அமைச்சரை அழைத்து விஷயத்தைச் சொன்னான். பின்; “அமைச்சரே முப்படைத் தளபதிகளையும் அழைத்துப் போருக்கான ஏற்பாடுகளைச் செய்யப் போகிறேன். இரகசியமாக யாரும் அறியாதபடி சென்று அவனுக்கு ஒரு பாடம் படிப்பித்தல் வேண்டும்” கர்ஜ்ஜித்தான் பரராஜ பாண்டியன்.

அதைக் கேட்ட முதலமைச்சருக்குக் கடுமையான சினம் வந்தது; “ நல்லது மன்னா நல்லது. உனது யோசனை மிகவும் நல்லது. நெடுமாறன் பெரும் வீரன்.

முப்படைகளும் மிகுந்த வீரமுடையன. பல போரில் அவை ஈடுபட்டு பெறுதற்கரிய வெற்றிகளைப் பெற்றன. அப்படியான வீரர்களைக் கொண்ட நாட்டை இரகசியமாகச் சென்று தான் கைப்பற்ற வேண்டும். இல்லாவிட்டால் எமது படையணிகளைச் சுக்கு நூறாக்கி விடுவார்கள்'' முதலமைச்சர் சொல்வதை கேட்ட பரராஜ பாண்டியனின் கோபம் அதிகரித்தது; ''அமைச்சரே'' என்று கா்ஜ்ஜித்தான். அவனது சினத்தை பொருட்படுத்தாத முதலமைச்சர் சொன்னார்; ''ஒரு கணத்தில் பொசுக்கி அழிக்கக் கூடிய வீரர்களையுடைய எமது படையை நீங்கள் கேவலமாகக் கருதுகிறீர்கள். உங்கள் பாட்டனார் காலத்திலிருந்தே நான் முதலமைச்சராக இருக்கிறேன். இப்படியொரு அவமானத்தை எமது படைக்கு இது வரை யாரும் ஏற்படுத்தியதில்லை. அப்படியான தொரு பழி எனது காலத்தில் இடம் பெற நான் விடமாட்டேன். வேண்டுமானால் நீங்கள் படையெடுத்துச் செல்லுங்கள். நான் எனது பதவியைத் துறக்கிறேன்'' முதலமைச்சரின் உடல் நடுங்கியது.

பரராஜபாண்டியன் எதுவும் பேசவில்லை. அதனால் முதலமைச்சர் சொன்னார்; ''இதெல்லாம் நாகர் கோயில் மன்னனது வேலை. நாகர் கோயில் மன்னனது தூதுவனை எமது வீரர்கள் கைது செய்துள்ளனர். அதை ஆராயாது அவசரப்பட்டு மகன் மீது கொண்ட அன்பின் நிமிர்த்தம் நாட்டிற்கும், குலத்திற்கும் அவமான மேற்படக் காரணமாகி விட்டீர்கள்''.

''அமைச்சரே, மன்னன் தவறு செய்யும் போது கடுமையாகக் கண்டித்துக் காக்கும் பெரியவர்களைத் துணையாக வைத்திருந்தால் எந்தப் பகைவனாலும் அவனை அழிக்க முடியாது. அத்துடன் அவனது குலமானமும் போகாது. நீர் அதைப் பரம்பரை பரம்பரையாகச் செய்து வருகிறீர். எனது தந்தையார் உம்மைக் கேளாமல் எதையும் செய்யக் கூடாதென்று கூறியிருக்கிறார்''. என்றான் பரராஜ பாண்டியன்.

''கண்டித்துச் சொல்லக் கூடிய பெரியவர்களை நட்புக் கொண்டிருந்தால் எனக்கு நஷ்டமேற்பட்டிராது'' என்று நினைத்தார் பரமேஸ்வரன்.

**447. இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே**
**கெடுக்கும் தகைமை யவர்?**

கண்டித்து அறிவுரை கூறவல்ல பெரியாரின் சொற்கேட்டு நடப்பவனைக் கெடுக்கவல்லவர்கள் எவரும் இல்லை.

### ***காவல் அற்றவன்***

தொடர்ந்து வாசித்தார் பரமேஸ்வரன்.

''கண்டித்து அறிவுரை கூறுகின்ற பெரியவர்களைப் பெறாத ஆட்சியாளனும், கண்டித்து அறிவுரைகளைக் கூறும் பெரியவர்களை அலட்சியம் செய்யும் ஆட்சியாளனும் காவலற்றவனாவான். அப்படிப் பட்டவனைக் கெடுக்க பகைவர்கள் தேவையில்லை. அவன் தன்னாலேயே கெடுவான். உனது தந்தையாருக்கு

விஜயன் என்றொரு சகோதரன் இருந்தான். அவன் மகாராஜாவின் இரண்டாவது மனைவிக்குப் பிறந்தவன். உனது தந்தையார் வேட்டைக்குச் சென்ற போது ஒரு முனிவரின் ஆச்சிரமத்தில் தங்கினார். வேட்டை முடிய நேரஞ் சென்றமையால் மன்னர் அன்று இரவு முனிவரின் ஆச்சிரமத்தில் தங்கினார். மன்னருக்குச் சேவகம் செய்ய முனிவர் தனது மகளான சுகுண சுந்தரியை அனுப்பி வைத்தார். சுகுண சுந்தரி நல்ல அழகி. அவளின் அழகு மன்னரைக் கவர்ந்தது. இருப்பினும் முனிவரின் புத்திரியின் மீது இச்சை கொள்ளக் கூடாதென்று நினைத்தார். ஆனால் சுகுணசுந்தரி மன்னன் மீது மோகங் கொண்டு தனது தந்தையான முனிவரிடஞ் சென்று தனது காதலை வெளிப்படுத்தினாள். காம இச்சை கொண்ட தனது மகளின் ஆசையைப் பூர்த்தி செய்யுமாறு முனிவர் மன்னனிடம் இரந்தார். அதனால் மன்னர் தனது இராஜ்ஜியத்தில் பங்கு கேட்கக் கூடாது என்ற நிபந்தனையுடன் அவளை மணம் புரிந்தார்.''

சுகுணசுந்தரிக்கு ஆதவன் என்ற மகன் பிறந்தான். அவன் வளர்ந்து உரிய வயதை அடைந்ததும் சுகுண சுந்தரி ஆதவனையும் அழைத்துக் கொண்டு நாகர் கோயில் மன்னனின் அரண்மனையை அடைந்தாள். அங்கிருந்து கொண்டு ஆதவன் மன்னரை அச்சுறுத்திக் கொண்டிருந்தான். "நாகர் கோயில் மன்னன் ஏற்கனவே எம்முடன் பகை கொண்டிருந்தான். அந்தப் பகையைத் தீர்க்க அவன் அடிக்கடி எமக்குக் கரைச்சல் கொடுத்துக் கொண்டிருந்தான்.'' என்று கூறி விட்டுப் பெருமூச்சு விட்டார் முதல் அமைச்சர்.

பரராஜபாண்டியன் எதுவும் பேசாமல் முதல் அமைச்சரின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தின் பின் முதலமைச்சர் சொன்னார்; ''மன்னா, ஆதவன் எமது நாட்டின் எல்லைப் புறத்தில் உள்ள கிராமங்களில் நாகர் கோயில் மன்னனின் வீரர்களுடன் புகுந்து கொள்ளையடிக்கத் தொடங்கினான்; எல்லைப் புறக் கிராமங்களில் உள்ள வீடுகளுக்குத் தீவைத்தான்; கால் நடைகளைக் கவர்ந்தான். கன்னிப் பெண்களைக் கற்பழித்தான். அச்செயல்கள் படிப்படியாக அதிகரித்தது. அத்துடன் அவர்களைச் சாட்டி நாட்டின் பல பகுதிகளில் அச்சம்பவங்கள் நடை பெற்றன. அதனால் வெகுண்டெழுந்த உனது தந்தையார் காலாட்படைத் தளபதி கணபதியின் தலைமையில் ஒரு படையணியை அனுப்பி வைத்தார். பல காலம் சென்றும் அவர்களைப் பிடிக்க முடியவில்லை. நாகர் கோயில் எமது நாட்டின் எல்லையாக உள்ளமையால் அவர்களைப் பிடிப்பது சிரமமாக இருந்தது. அதனால் மன்னரைச் சந்தித்து நான் சொன்னேன்; ''மன்னா, கொள்ளையர் நாகர் கோயிலுக்குள் இருந்து வந்து எல்லைக் கிராமங்களைக் கொள்ளையிடுவதால் நாம் எமது எல்லைப் புறக் கிராமங்களைத் தாண்டி நாகர் கோயிலின் எல்லைக்கு அப்பால் செல்ல வேண்டும்''.

''அப்படிச் செய்வது தர்மமாகாது.அதை நான் விரும்பவில்லை'' என்றார்.

''யுத்தத்தில் தான தர்மங்களைக் கடைப்பிடிக்க முடியாது. அதர்மமான முறையில் அவர்கள் கொள்ளையிடும் போது நாம் தர்மத்தைப் பார்க்க முடியாது. தர்மத்தைப் பார்த்தால் எமது மக்களின் துயரைப் போக்க முடியாது'' என்று கண்டிப்புடன் கூறினேன். மன்னர் ஏற்றுக் கொண்டார். மறுநாள் எமது படையணி நாகர் கோயிலுக்குள் நுழைந்து மறைந்திருந்தது. ஆதவனோடு வந்த நாகர் கோயில் நாட்டு வீரர்கள் ஐம்பது பேரையும் சிறைப்பிடித்தது. ஆதவனைக் கண்டதும் உனது தந்தையாரின் மனம் இழகி விட்டது. ஆதவனைத் தவிர மற்றவர்களைச் சிரச் சேதம் செய்யுமாறு உத்தரவிட்டார். ஆதவனைச்

சிறையிலடைக்கும் படி கூறினார். ஆனால் நான் சம்மதிக்கவில்லை; ''மன்னா! சட்டம் எல்லோருக்கும் சமமானதாக இருத்தல் வேண்டும். இந்த நாட்டில் எந்த ஒரு பிரஜை குற்றஞ் செய்தாலும் தண்டனை கொடுத்தே தீர வேண்டும். மன்னா, கொள்ளையர்களின் தலைவன் ஆதவன். அத்துடன் அவன் பலரைக் கொலை செய்துள்ளான், பல பெண்களைக் கற்பழித்துள்ளான்; மக்களின் இருப்பிடங்களைத் தீ வைத்து அழித்திருக்கிறான். அவன் உங்களது மகன் என்றமையால் அவை குற்றமில்லையா? அவனை விடுதலை செய்தால் மீண்டும் குற்றங்களைச் செய்வான். சிறையிலடைத்தால் தப்பிச் செல்ல முயற்சிப்பான். அத்துடன் மக்கள் உங்கள் செங்கோல் மீது வைத்த நம்பிக்கையை இழக்கக் கூடாது. எனவே அவனையும் சிரச்சேதம் செய்வது தான் முறையானது'' என்றேன். மன்னர் சரியென்று சொல்லி விட்டார். எனவே மன்னா! கண்டித்து அறிவுரை கூறும் பெரியவர்களை மன்னன் தனது உற்ற துணைவர்களாகக் கொள்ளல் வேண்டும்.''

''பரமேஸ்வரனுக்குத் தலையைச் சுற்றியது. உண்மையான நண்பன் எப்பொழுதும் உரிமையுடன் கண்டிப்பான். அதை நாம் ஏற்றுத் தான் ஆக வேண்டும். கணநாதன் இடித்துச் சொன்னவற்றை ஏற்றிருந்தால் நான் கெட்டிருக்க மாட்டன். என்னை நானே கெடுத்துக் கொண்டேன்'' என மனம் வருந்தினார்.

**448. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பார் இலானுங் கெடும்.**

கண்டித்து அறிவுரை கூறவல்ல பெரியாரின் துணையில்லாத காவலற்ற அரசன், தன்னைக் கெடுக்கும் பகைவர்கள் எவரும் இல்லா விட்டாலும் கெடுவான்.

### *ஆட்சி இல்லை*

கண்களால் வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டு தொடர்ந்து வாசித்தார் பரமேஸ்வரன்.

''மன்னா! மூலதனம் இல்லாத வியாபாரிக்கு வருவாய் இராது'' தணிகாசலம் கூறியது போல மிகவும் நல்ல நூல் அது. தனது ஆரம்ப காலத்தை நினைத்துப் பார்த்தார் பரமேஸ்வரன். இருபாலைச் சந்தியில் உள்ள சுவஸ்திகை பிடைவைக் கடைக்கு முன்னால் இருந்த வெளிப் பகுதியில் ஒரு தையல் இயந்திரம் வைத்துக் கொண்டிருந்தார் பரமேஸ்வரன். மூலதனமில்லாததால் அவரால் மேலும் சில தையல் இயந்திரங்களை வாங்கிக் கூலியாட்களை அமர்த்தித் தொழில் செய்ய முடியவில்லை. ஒரே ஒரு தையல் இயந்திரம் இருந்தமையால் வருவாய் மிகவும் குறைவாகவே இருந்தது. ஒரு நாள் கணநாதன் அவரது நிலைமையைப் பார்த்து விட்டுக் கடனாக ஓர் இலட்ச ரூபா கொடுத்துத் தனியாக ஒரு தையல் கடை வைத்து நடத்தமாறு கூறிவிட்டுச் சென்றார். அதன்படி பரமேஸ்வரன் பத்து தையல் இயந்திரங்களை வாங்கினார். பதினைந்து தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தினார். ஒரு வருட காலத்தில் கணநாதனின் பணத்தை வட்டியுடன் திருப்பிக் கொடுத்தார். அடுத்த வருடம் மேலும் இருபத்தைந்து தையல் இயந்திரங்களை வாங்கினார். ஐம்பது தொழிலாளர்களை வேலையில் அமர்த்தினார். அத்தொகை படிப்படியாக அதிகரித்து இப்போது அவரது

நிறுவனத்தில் பத்தாயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். மீண்டும் ஒரு முறை அந்த வாக்கியத்தை வாசித்துப் பார்த்தார்; ''மூலதனம் இல்லாத வியாபாரிக்கு வருவாய் இல்லை''.

சில கணங்கள் கண்களை மூடி ஆழ்ந்து சிந்தித்த பரமேஸ்வரன் மீண்டும் புத்தகத்தை வாசித்தார்; ''மூலதனம் இல்லாத வியாபாரிக்கு வருவாய் இல்லை. அதைப் போல தம்மைத் தக்க தருணத்தில் தாங்கிக் காப்பாற்றத் துணை இல்லாத அரசனுக்கு ஆட்சி நிலைக்காது. உனது பாட்டனார் மிகவும் நல்லவர். குறு நில மன்னர் எல்லோரிலும் அன்பு மிக்கவர். எமது நாடு சகல வளங்களையும் பெற்றிருந்தமையால் அவர் தனது ஆட்சிக்குட்பட்ட பத்துக் குறுநில மன்னர்களிடமிருந்து எந்த விதமான திறையையும் பெற்றதில்லை. எமது நாட்டில் விளைச்சல் அளவுக்கதிகமாக இருந்தமையால் எமது நாட்டில் விளையும் தானிங்களை அவர் குறு நில மன்னர்களுக்குக் கொடுப்பார். அத்துடன் தனது ஆட்சிக்குட்பட்ட பத்து குறுநிலப் பிரதேசங்களில் வாழும் மக்களைத் தனது குடி மக்களாகக் கருதி அவர்களுக்கு வேண்டிய உதவிகளை யெல்லாம் செய்வார். எமது நாடு மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டது. அதனால் கடலிலும் எமக்குப் பல பிரச்சினைகள் இருந்தன. எமது நாட்டின் வடக்குக் கடலுக்கப்பால் லிங்கபுரம் உள்ளது. லிங்க புரம் மிகவும் பெரிய நாடு பெருங்கடற்படை வீரரைக் கொண்ட நாடு பெரிய பெரிய கடற்படைக் கப்பல்கள் அவர்களிடமிருந்தன. உனது பாட்டனார் கடற்படை அமைப்பதில் அதிக கவனமெடுக்கவில்லை. வியாபாரஞ் செய்வதற்காகச் சில கப்பல்களை வைத்திருந்தார். லிங்கபுர மன்னன் சிவலோசனன் திடீரென்று கடற்படை வீரர்கள் பலரைக் கப்பலில் கொண்டு வந்து எமது கடற்கரையில் இறக்கி விட்டான். நாம் தயாராகு முன் லிங்கபுரப் படைகள் எமது நாட்டுக்குள் நுழைந்து விட்டன. மன்னர் எல்லையில் உள்ள அரனுக்குச் சென்று விட்டார். இரண்டு தினங்கள் எமது நாடு லிங்கபுரியின் படையின் கட்டுப் பாட்டில் இருந்தது. உனது பாட்டனார் குறுநில மன்னர்களின் உதவியை நாடினார். பத்துக் குறுநில மன்னர்களும் படையுடன் கடற்கரையோரமாகத் திரண்டு நின்று கடலிலிருந்து படைகள் உள்ளே நுழையாதவாறு காத்தனர். பத்துத் தினங்களில் லிங்க புரப் படைகள் அனைத்தும் கைது செய்யப்பட்டன. அன்று அக் குறுநில மன்னனும் படை களும் வராவிட்டால் இன்று நீ ஆட்சி செய்திருக்க முடியாது. தம்மைத் தக்க சமயத்தில் தாங்கிக் காப்பாற்றத் தகுந்த துணையில்லாத அரசனின் ஆடசி நிலைக்காது'' என்றார் முதலமைச்சர்.

''அமைச்சரே நீர் வயதில் மூத்தவர். எனது பாட்டனாரின் காலத்திலிருந்தே முதலமைச்சர் பதவியை வகிப்பவர்; அறிவாளி; சகலதும் அறிந்த பெரியவர். எனவே தாங்கள் சொல்வதனைத்தையும் நான் கேட்டு நடப்பேன்'' என்றான் பரராஜ பாண்டியன்.

''மன்னவர்களுக்கு மட்டுமல்ல சாதாரண மக்களுக்கும் தக்க தருணத்தில் காப்பாற்றத் தகுந்த துணையில்லா விட்டால் அவனது வாழ்வு கெட்டழிந்து விடும். அப்படியான துணைகள் பல விருந்தும், அவற்றை அசட்டை செய்தமையால் தான் எனது வாழ்வு அழிந்தது'' என்று நினைத்தார் பரமேஸ்வரன். அதை நினைக்க அவருக்கு வேதனையாக இருந்தது.

### 449. முதல்இலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்

**சார்புஇலார்க்கு இல்லை நிலை.**

முதல் இல்லாத வணிகர்க்கு அதனால் வரும் வருமானம் இல்லை. அதே போல் தம்மைத் தாங்கிக் காப்பாற்றத் துணையில்லாதவனுக்கு நிலைத்த வாழ்வு இல்லை.

## *பத்து மடங்கு தீமை*

மீண்டும் கதையை வாசிக்கத் தொடங்கினார் பரமேஸ்வரன்; நல்லவராகிய பெரியவர்களின் தொடர்பை விட்டு விடுவது, பலரது பகையைத் தேடிக் கொள்வதை விடப் பத்து மடங்கு தீமையைத் தரும்''.

அதற்கு மேல் அவரால் வாசிக்க முடியவில்லை. கண்கள் கலங்கி எழுத்துக்களை மறைத்தன. கணநாதன் கூறிய வார்த்தைகள் அவரது காதில் ஒலித்தன; ''பரமேஸ், நான் உனது நண்பன். உனது நலனில் அக்கறை கொண்டவன். பல வருடங்களுக்கு முன்பு நீ இருந்த நிலையை நினைத்துப் பார். நானும் நல்ல சில பெரியவர்களும் உனக்கு எவ்வளவு உதவிகள் செய்தோம். யாராவது ஏதாவது நலன் கருதிச் செய்தார்களா? உனது நலன் ஒன்றையே கருத்திற் கொண்டு செய்தோம். நான் வழி தவறும் போது நீங்கள் எனக்கு எடுத்துச் சொன்னீர்கள். உனக்கு ஞாபகம் இருக்கா எனது உற்பத்திப் பொருட்களைப் போல மணியம் செய்து போலி அட்டைகளை ஒட்டி விற்பனை செய்து கொண்டிருந்தான். அதை நீ கண்டு பிடித்து எனக்குச் சொன்னாய். அதைச் சிவகுருநாதன் மணியத்திற்குச் சொல்லிச் சட்ட நடவடிக்கை எடுக்கு முன் அத்தொழிலைக் கைவிடுமாறு சொன்னான். அதற்குப் பயந்து மணியம் கைவிட்டு விட்டு விட்டான். இல்லாவிட்டால் எனக்கு எவ்வளவு நட்ட மேற்பட்டிருக்கும்.''

பெருமூச்சு விட்டார் பரமேஸ்வரன் அவருக்கருகில் இருந்த முக்காலியில் வைக்கப்பட்டிருந்த தேநீரில் வீட்டு ஈ ஒன்று விழுந்து செத்திருந்தது. அப்போது அங்கே வந்த காமாட்சியம்மாள்; ''ஏன் தேநீர் குடிக்கவில்லை. ஈயொன்று விழுந்து செத்து மிதக்கிறது. வேறு தேநீர் கொண்டு வருகிறேன்'' என்றவாறு ஈமொய்த்த தேநீர்க் கோப்பையை எடுத்துச் சென்றாள்.

மீண்டும் புத்தகத்தைப் பார்த்தார் பரமேஸ்வரன்; ''நல்லவராகிய பெரியவர்களின் தொடர்பை விட்டு விடுவது, பலரது பகையைத் தேடிக் கொள்வதை விடப் பத்துப் பங்கு தீமையைத் தரும்..'' அதற்கு மேல் அவரால் வாசிக்க முடியவில்லை.

''நீ எதையுஞ் செய். ஆனால் இன்னொருவனின் மனைவி மீது ஆசை வைக்காதே. அமிர்தினி நல்லவளல்ல. தனது கணவனுக்கே துரோகம் செய்பவள் உனக்குத் துரோகஞ் செய்ய மாட்டாள் என்று நீ நம்பமுடியுமா? கணவனை மறந்து இன்னொருவருடன் உறவு வைக்கும் ஒரு பெண் பலருடன் தொடர்புடையவளாக இருப்பாள். குற்றஞ் செய்யாதவன் குற்றஞ் செய்யப்

பயப்படுவான். ஒரு முறை குற்றஞ் செய்தால் அது வழக்கமாகி விடும். எமது சமூகத்தைப் பார். உத்தமனாக உனது தொழிற்சாலையில் வேலை செய்த உருத்திரன் எப்படித் திருடனாக மாறினான். முதல் முறை தான் எதற்கும் அச்சம், பயம் என்பன வரும். ஒரு முறை பழக்கப்பட்டு விட்டால், அது நாளாந்த நடத்தையாகி விடும். ஒவ்வொருவரிலும் ஆசை, குரோதம், காமம், அழுக்காறு என்பன மறைந்திருக்கிறது. நீதி நியாயம் தர்மம் முதலியவற்றை நினைத்து மனதைக் கட்டுப்படுத்தி வாழ்வது தான் மனிதனது செயலாகும். உனது வீட்டில் இப்படியான ஒரு நிகழ்வு நடைபெற்றால் நீ என்ன செய்வாய்?''

பரமேஸ்வரன் கண்களை மூடினார். அவரது விழிகளுக்குள் அமிர்தினி தோன்றிச் சிரித்தாள்; '' உங்களுக்கும் எனக்கும் முற்பிறப்புத் தொடர்பிருக்கு. இல்லா விட்டால் இப்படியொரு தொடர்பிராது. உங்களைக் காணாவிட்டால் என்னால் நித்திரை கொள்ள முடியவில்லை; உணவை உண்ண முடியவில்லை. அதனால் தான் நோயென்றாலும் விடுப்பெடுக்காது வருகிறேன்.''

பரமேஸ்வரனுக்கு வெறுப்பாக இருந்தது; ''நீ தர்மமில்லாது பழிபாவங்களைச் செய்கிறாய். அது உன்னை அழித்து விடும். நீ அவளுடன் தொடர்பை வைத்துக் கொள்ளும் வரை நான் உன்னோடு கதைக்க மாட்டேன்''. கணநாதன் கூறியதை மனம் இரைமீட்டது.

அன்று சென்ற கணநாதன் தொழிற்சாலை தீப்பற்றி எரிந்தன்று வந்து சொன்னார்; ''ஒவ்வொருவனும் தான் நினைப்பது தான் சரியென்று நினைக்கிறான். அதைப் பெரியவர்கள் தவறு என்று சுட்டிக் காட்டும் போது சிறிதாவது யோசித்துப் பார்க்க வேண்டும். இப்படி நடக்குமென்று எனக்குத் தெரியும். நான் பல முறை உனக்கு எடுத்துச் சொன்னேன். இது நீ தேடிய துன்பம். உன்னால் தான் நீக்க முடியும். இனியாவது தொழிற்சாலை நிர்வாகத்தை நீ கவனி. ஒரு காலத்தில் நானும் உன்னைப் போலத் தான் பெண்களின் மீது மோகங் கொண்டு அழிந்தேன். எல்லாப் பெண்களும் உருவில் ஒரே மாதிரியானவர்கள் தான். ஆனால் மனைவி வித்தியாசமானவர். அதை நீ புரிந்து கொண்டால் சரி.''

''கணநாதனின் உறவை அறுத்தது தான் எனது அழிவுக்குக் காரணம். அமிர்தினி என்னை மயக்கி தனது கைப் பொம்மையாக்கியதோடு தனது விருப்பத்திற்கேற்ப என்னை ஆட்டிப் படைத்து விட்டாள். இனி யோசித்துப் பயன் இல்லை''

''தேநீரைப் பிடியுங்கோ. குடித்து விட்டுப் புத்தகத்தைப் படியுங்கோ''. என்றாள் காமாட்சியம்மாள்.

**450. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே**
**நல்லார் தொடர்கை விடல்.**

நல்லவர்களின் தொடர்பைக் கைவிடுதல், பலரது பகையைத் தேடிக் கொள்வதை விடப் பத்து மடங்கு தீமையைத் தரும்.

## *அஞ்சும் சுற்றம்*

அன்று தனது மகன் அங்குசனைப் பார்க்க விநாயகரத்தினம் வைத்தியசாலைக்கு வந்திருந்தார்; ‘‘நீங்கள் ஏனப்பா இங்கே வந்தீர்கள். உங்களுக்கு இரத்த அழுத்தம் இருக்கிறது. நெடுந்தூரம் பிரயாணஞ் செய்யக் கூடாது. கொழும்பில் இருந்து இந்த ஊர் முன்நூறு மைல் தொலைவில் உள்ளது. இரத்த அழுத்தம் உள்ளவர்கள் நெடுந்தூரம் பிரயாணஞ் செய்யக் கூடாது. தொலை பேசியில் சொல்லியிருந்தால் நான் அங்கே வந்திருப்பேன்..’’ அங்குசன் பேசிக் கொண்டிருந்தார்.

விநாயகரத்தினம் மகனின் கண்டிப்பான பேச்சைக் கேட்டு இரசித்துச் சிரித்துக் கொண்டிருந்தார். அவரது சிரிப்பு அங்குசனுக்குக் கோபத்தை உண்டாக்கியது; ‘‘ உங்களுக்கு எதுவும் சொல்ல முடியாது. நான் சொல்வதெல்லாம் உங்களுக்கு வேடிக்கையானதாகவே இருக்கிறது....’’ அங்குசன் பேசிக் கொண்டிருக்கும் போது விநாயகரத்தினம் குறுக்கிட்டுச் சொன்னார்; ‘‘நீ ஒரு வைத்தியன் என்ற முறையில் சொல்வது சரி’’ விநாயகரத்தினத்தைப் பேசவிடாது குறுக்கிட்டுச் சொன்னார் அங்குசன்; ‘‘ நான் வைத்தியன் என்ற முறையில் சொல்லவில்லை. மகன் என்ற முறையில் சொல்கிறேன். நோயாளியான தந்தையை அக்கறையுடன் கவனிப்பது பிள்ளைகளது கடமை, அதிலும் நான் ஒரு வைத்தியன்’’.

‘உண்மை தான் மகனே. நான் நடந்தா வந்தேன். ஆகாய விமானத்தில் பயணித்தேன். ஒரு மணி நேரம் குளிர்மையூட்டப்பட்ட அறையில் இருப்பதைப் போல இருந்தது. அத்துடன் அன்பான பிள்ளைகளைப் பார்த்தால் பெற்றோருக்கு நோய் முற்றாக மாறி விடும் என்பார்கள். ஒரு மாத காலமாக நீ எனது உடலைப் பரிசோதிக்கவில்லை. இங்கு வந்தால் பரிசோதனை செய்ததாகவும் இருக்கும்; உன்னைப் பார்த்ததாகவும் இருக்கும், இக்கிராமத்தின் எழிலை இரசித்ததாகவும் இருக்கும். அத்துடன் பெருமைக்குரிய குணங் கொண்ட பெரியவர்கள் பலர் இங்கு வாழ்வதாக நீ சொல்வாய். ஸ்ரீனிவாசன் சுவாமிகளைத் தரிசிக்க வேண்டும் என்று எனக்கு ஓர் ஆசை இருக்கு. நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியின் பெருமைகளைப் பற்றி நீ எழுதா விட்டால் அவரைத் தரிசிக்கும் எண்ணம் எனக்கு வந்திராது’’ விநாயகரத்தினம் சிரித்தார்.

‘‘உங்களைப் பேச்சில் வெல்ல முடியாது. இந்தக் கட்டிலில் ஏறிப்படுங்கோ...’’ என்றார் அங்குசன்.

‘‘வந்த எனக்கு குடிக்க ஒரு கோப்பை தேநீர் தந்தியா...? இல்லை அம்மா ஏன் வரவில்லை என்று கேட்டியா...? அம்மா சுகமாக இருக்கிறாவா என்று கேட்டாயா? என்னைப் பரிசோதிக்க நினைக்கிறாய்..?’’

அங்குசன் முகம் மலர்ந்து பெரிதாகச் சிரித்தார்; ‘‘காலையில் ஒரு மணித்தியாலம் நான் அம்மாவுடன் கதைத்தனான். நீங்கள் பயணச் சீட்டு

வாங்கியதே இன்று காலை தானாம் தனக்குத் தெரியும். அவர் வருவதாக இருந்தால் நானும் வந்திருப்பேன். அவர் தான் வருவதை நீ விரும்ப மாட்டாய் என்று தெரிந்து இரகசியமாக எல்லாவற்றையும் செய்திருக்கிறார். காலையில் தான் சொன்னவர் என்றா. அதனால் உங்களுக்கும் ஒரு செய்தியை நான் மறைத்து வைத்திருக்கிறேன்'' கண் சிமிட்டினார் அங்குசன்.

''அங்கு, என்னென்று சொல்லு குஞ்சு, உன் மேல் உள்ள பாசமிகுதியால் தானே நான் அப்படிச் செய்தனான். சொல்லடா..'' கெஞ்சினார் விநாயகரத்தினம்.

''ஒன்று மில்லையப்பா. உங்களை சிறிது நேரம் தவிக்கப் பண்ணச் சொன்னனான்''.

''அவ்வார்த்தைகளில் விநாயகரத்தினத்திற்கு நம்பிக்கை ஏற்படவில்லை. எனினும் நம்பியதாக நடித்தார். அவரைப் பரிசோதிக்கும் போது இடை இடையே, அவனின் உதடுகள் முறுவலிப்பதைப் பார்த்து விநாயகரத்தினத்தின் மனம் அவதிப்பட்டது..

''இப்ப எப்படி உடல் நிலை? நீ எதையோ மறைக்கிறாய்...''

''இல்லை அப்பா'' சிரித்தார் அங்குசன்; '' உடல் நிலை நன்றாக இருக்கு. நூறு வருஷம் வாழ்வியள்'' சிரித்தான்.

''உந்தச் சிரிப்புப் பிழை. நீ எதையோ மறைக்கிறாய்'' என்று விநாயகரத்தினம் கூறும் போது வாசலில் மோட்டார் வண்டி யொன்று வந்து நிற்கும் ஓசை கேட்டது. வெளியே வந்த அங்குசன் ''வாருங்கோ, வாருங்கோ....உள்ளே வாருங்கோ'' என்றான்.

''அப்பா இவர் தான் தணிகாசலம், இவர் அதிபர்....'' என்று அங்குசன் கூறும் போது; ''வணக்கம் அதிபர் ஐயா, தணிகாசலம் அண்ணை வா பரமேஸ், வாங்கோ அக்கா'' என்று வரவேற்றார் விநாயகரத்தினம்.

அனைவரும் நாற்காலியில் அமர்ந்தனர்; ''அப்பா வந்ததாக அறிந்தோம்...'' என்ற தணிகாசலம்; ''உமது அப்பா என்னிடம் தான் உமது வீட்டு விலாசத்தைக் காட்டி எங்கே உள்ளது என்று கேட்டவர்''.

விநாயகரத்தினம் நிமிர்ந்து அவரைப் பார்த்தார். கையில் மாட்டுடன், தலையில் கடகம் வைத்திருந்த அவரை உடனடியாக அவரால் இனம் காண முடியவில்லை.

''காலையில் தோட்டம் செல்லும் போது பார்த்தீர்கள்'' என்று சிரித்தார் தணிகாசலம்.

''நான் உங்கள் எல்லோரையும் சந்திக்க வென்று தான் வந்தேன்; ''பெருமைக்குரியவர்களைச் சந்திப்பது, கதைப்பது யாவும் பேரின்பம். அவர்களைச் சந்தித்துக் கதைத்தால் அமிழ்தத்தை உண்டது போல இருக்கும்...''

அப்போது பரமேஸ்வரனின் முகம் மாறுவதைத் தணிகாசலம் உணர்ந்தார். ‘‘என்ன பரமேஸ், நன்றாக இளைத்து விட்டீர்கள். அங்குசன், நீ அவனைப் பரிசோதிக்கவில்லையா?’’ அக்கறையுடன் கேட்டார் விநாயகரத்தினம்.

‘‘இரண்டு முறை பரமேஸ் மாமாவின் வீட்டுக்குச் சென்று கேட்டேன். அவர் தனக்கு ஒரு வருத்தமும் இல்லை என்று சொன்னார். அப்படித் தானே நீங்களும் சொல்லுறனீங்கள்’’.

‘‘உண்மையில் எனக்கொரு வருத்தமும் இல்லை. நல்ல மனிதர்களின் ஆலோசனைகளைக் கேளாததால் தான் நஷ்டமேற்பட்டது. அதனால் மன வருத்தம் தான்’’ என்றார் பரமேஸ்வரன்.

‘‘மனவருத்தம் தான் உடல் வருத்தத்திற்கான முதற்காரணி. பெருமையான குணம் கொண்ட பெரியவர்கள் இழிந்த குணம் படைத்தோரைக் கண்டு அஞ்ச வேண்டும். ஆனால் நான் அவர்களைச் சுற்றமாக்கிக் கொண்டமையால் தான் இவ்வளவு துன்பங்களும் வந்தது. இழிந்த குணங் கொண்டோர் தான் சிறுமதியாளர்களைச் சுற்றமாக வைத்துக் கொள்வர். நான் சிறுமதியாளன்’’ கலங்கினார் பரமேஸ்வரன்.

‘‘எட...டே... முடிந்ததைப் பற்றிக் கவலைப்படாதை. உனக்கு என்ன உதவி தேவை யென்றாலும் நான் செய்வன். வீணாகக் கவலைப்பட்டு நோயைத் தேடாதை’’ என்றார் விநாயகரத்தினம்.

**451. சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்**
**சுற்றமாச் சூழ்ந்து விடும்.**

சிற்றினத் தோரைப் பெரியவர்கள் அஞ்சி ஒதுக்கி வைப்பார்கள். சிறியோர்கள் அவர்களைத் தமது சுற்றமாக எண்ணி அணைத்துக் கொள்வார்கள்.

## *நீரின் தன்மை*

‘‘எவ்வளவு அறிவுள்ள பெரிய மனிதர்கள் எனக்குத் துணையாக இருந்தனர். அவர்களின் நல்ல வார்த்தைகளை யெல்லாம் கேளாது நான் அவர்களை அவமதித்து விட்டேன். இது எவ்வளவு பிழையென்று இப்பொழுது தான் தெரிகிறது’’ என்றார் பரமேஸ்வரன்.

‘‘பிறருடைய குற்றங்களைப் பற்றிக் குறை கூறுவதை விட்டு விட்டு அவற்றை விட்டு விடும் படி கூறுதல் வேண்டும். ஒருவனுடைய குற்றங்களைப் பற்றிப் பேசுவதால் நன்மையை விடத் தீமைகள் தான் அதிகமாக வரும். என்பதால் தான் நான் நீ செய்வது குற்றம் என்று தெரிந்தும் அதைக் குற்றமென உனக்குக் கூறவில்லை. நீ என்னை விட அறிவாளி. அதனால் எதிர்மறையாகக் கூறினேன்’’ என்றார் விநாயகரத்தினம்.

“நீரானது, சேரும் நிலத்தின் தன்மைக்கேற்பத் தன்நிலையை இழந்து மாறுபடும். அது போல மக்களினது அறிவும் சேரும் இனத்திற்கேற்ப மாறுபடும் என்பார்கள். நானும் அப்படித்தான் கெட்டவர்களோடு சேர்ந்து கெட்டழிந்து விட்டேன். பன்றியோடு சேர்ந்த கன்றும் மலம் தின்னும்; சந்தணமரத்திற்கருகில் நிற்கும் மரங்கள் யாவற்றிலும் சந்தணவாசம் வீசும் என்பது எவ்வளவு உண்மை. இப்பொழுது தான் எல்லாம் புரிகிறது” கலங்கினார் பரமேஸ்வரன்.

“அப்பா, அவர் மறந்ததை யெல்லாம் நீங்கள் நினைவுபடுத்தி அவரை வேதனைக்குள்ளாக்குகிறீர்கள். முடிந்த சம்பவங்களைப் பற்றிக் கதைக்காது வந்தவர்கடன் சந்தோஷமாக உறவாடுங்கள்” என்றான் அங்குசன்.

“தணிகாசலம் அண்ணையைப் பற்றியும் அதிபரைப்பற்றியும் சுவாமியாரைப் பற்றியும் தொலைபேசியில் பேசும் போது அதிகநேரம் பேசுவான் அங்குசன். அவனின் பேச்சைக் கேட்டதில் இருந்து உங்கள் மூவரையும் உடனே பார்க்க வேண்டு மென்ற எண்ணம் எனது மனதில் வரும்” விநாயகரத்தினம் பேசிக் கொண்டிருக்கும் போது அங்குசன் குறுக்கிட்டார்; “உங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையால் அம்மாவுக்குக் கூடச் சொல்லாது பயண ஆயத்தங்களைச் செய்திருக்கிறார். இன்று காலையில் புறப்படும் போது தான் அம்மாவுக்குச் சொல்லியிருக்கிறார். அம்மாவையும் கூட்டி வந்திருக்கலாம் தானே”.

“இப்ப இப்படிச் சொல்வர். முன்னுக்கு நான் சொன்னால்; “இரத்த அழுத்தம் பிரயாணஞ் செல்லக் கூடாது” என்பார்.

விக்னேஸ்வரமூர்த்தியும் தணிகாசலமும் பெரிதாகச் சிரித்தனர்; “ இப்பவும் இரத்தினண்ணை குழந்தைப் பிள்ளை தான். நோய் என்பதற்காக ஒதுக்கி வைக்கப்பட்ட தீண் பண்டங்களை மகாலட்சுமியக்கா கொடுக்க மாட்டா. ஆனால் அவர் களவாகக் கடையில் வாங்கி வந்து சாப்பிடுவார்..” என்றாள் காமாட்சியம்மாள்.

“அப்படியா சங்கதி....” அங்குசன் ஆச்சரியப்பட்டார்.

விநாயகரத்தினம் மகாலட்சுமியைப் பார்க்க, மகாலட்சுமி நாக்கைக் கடித்தாள்.

“காமாட்சி அம்மா கேலியாகச் சொன்னது” என்று விநாயகரத்தினம் கூறிக் கொண்டிருக்கையில் பரமேஸ்வரன் குறுக்கிட்டுச் சொன்னார்; “உனக்கு இரத்தினத்தைச் சீண்டாவிட்டால் சரிவராது”.

“மாமா, எனக்கு எல்லாம் தெரியும். மாமி சும்மாய் சொல்ல மாட்டா...?” என்றார் அங்குசன்.

“உண்மை, தூய்மை, சுயநலமின்மை என்பன எவனின் மனதில் இருக்கோ அவனை எந்த நோயும் நெருங்க மாட்டாது. என்னைப் பொறுத்தவரை விநாயகரத்தினம் ஐயாவுக்கு எந்த நோயும் இராது. அவரைப்பரிசோதித்தவர்களில் தான் ஏதோ ஒரு கோளாறு இருக்கு. எனது மகள் மருத்துவக் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்ட வரிசம் அவளுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. அதில் இனிப்பு வகைகளைக் கூடச் சாப்பிட்டு விட்டேன். அன்றிரவு எனக்கு நாரிப் பிடிப்பு வந்து விட்டது. எனக்கு ஏதாவது வருத்தமென்றால் அயலில்

உள்ளவர்கள் நண்பர்கள் எல்லோரும் துடித்துப் போவார்கள். எனது நண்பனான கணேசமூர்த்தி தனது மோட்டார் வண்டியில் என்னைத் தூக்கி ஏற்றிக் கொண்டு பாலகுமாரனின் வைத்தியசாலைக்குக் கொண்டு வந்து விட்டார்".

''நான் உங்கள் உடலை முழுமையாகப் பரிசோதனை செய்யக் காத்திருந்தனான். இன்று தான் அகப்பட்டீர்கள்'' என்று சொல்லி உடலைப் பரிசோதித் பாலகுமாரன் எனக்குச் சலரோகம் இருப்பதாகக் கூறினார்''. என்று கூறி நிறுத்தினார் தணிகாசலம்.

''பிறகு..... பிறகு....'' அவசரப்பட்டார் விநாயகரத்தினம்.

விக்னேஸ்வரமூர்த்தி சிரித்தார். பின்; ''தணிகாசலத்திற்கு நம்பிக்கை இல்லை. நாங்களெல்லாம் பயந்து போனம். கவனமாக இருக்கும் படி ஆலோசனை கூறினம். ஆனால் தணிகாசலம் அதை நம்பவில்லை; "ஐயா, எனக்கு சலரோகம் இல்லை. இன்று நான் அதிகம் இனிப்பை உண்டு விட்டேன். நாலைந்து தினங்களுக்குப் பின் வருகிறேன் சோதித்துச் சொல்லுங்கள்'' என்றார்.

''ஐந்தாம் நாள் நான் சென்று பரிசோதித்த போது சலரோகம் இல்லை என்றார்கள். அது போலத்தான் இவருக்கும் இருக்கும்'' என்றார் தணிகாசலம்.

''உண்மை தான், உண்மை தான்.... இவர்கள் தரும் மருந்துகள் எவற்றையும் நான் குடிப்பதில்லை'' என்றார் விநாயகரத்தினம்.

அங்குசன் எதுவும் பேசவில்லை. தகப்பனைப் பார்த்துச் சிரித்தார்.

**452. நிலத்துஇயல்பால் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு**
**இனத்துஇயல்பது ஆகும் அறிவு.**

சேர்ந்த நிலத்தின் இயல்பிற்கேற்ப நீர் வேறுபட்டு அந் நிலத்தின் தன்மையைப் பெறும்., அது போல மக்களின் அறிவும் சேரும் இனத்திற்கேற்ப மாறுபடும்.

## *மனமும் இனமும்*

அங்குசனின் வீட்டு வேலைக்காரனான கணபதி எல்லோருக்கும் தேநீர் கொண்டு வந்த கொடுத்தான். கணபதி மிகவும் ஏழை; ஐந்து பிள்ளைகளின் தந்தை. ஐந்து பிள்ளைகளும் திருமணம் செய்து விட்டனர். ஆனால் கணபதி ஒரு பிள்ளைகளோடும் ஒற்றுமையாக வாழ்ந்ததில்லை. ஊரில் கூலி வேலை செய்து உழைப்பான். உழைத்த பணத்தை விடகூடுதலான பணத்திற்கு மது அருந்துவான். மது அருந்தி விட்டு வீதிகளில் கலாட்டா செய்வான். வீட்டுக்கச் சென்றால் பிள்ளைகள் உணவு கொடுப்பார்கள். தினமும் மது அருந்தி விட்டுத்

தனது மனைவியான தெய்வானைக்கு அடிப்பதால், தெய்வானை பிள்ளைகளின் வீடொன்றில் இருப்பாள். கணபதி, தெய்வானையைத் தேடி ஐந்து பிள்ளைகளின் வீட்டிற்கும் செல்வான். ஆனால் பிள்ளைகள் ஒவ்வொருவரும் தாய் எங்கோ சென்று விட்டதாகச் சொல்வார்கள்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு கணபதி நன்றாகக் குடித்து விட்டு வீதியால் சென்ற இளைஞர்களுடன் சண்டைக்குச் சென்றான். அவர்கள் கணபதியைத் தாக்கி விட்டுச் சென்று விட்டனர். தலையில் காயத்துடன் மயங்கிக் கிடந்த கணபதியை வீதியால் சென்றோர் கொண்டு வந்து வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அங்குசன் தொழிலாளன் ஒருவனிடம் பிள்ளைகளுக்கு அறிவிக்குமாறு கூறினார். அத் தொழிலாளி சொன்னான்; ‘‘ஐயா, இந்த மனிசன் அந்த இடத்திலை செத்திந்தால் பிள்ளைகள் சந்தோசப்படும். ஐந்து பிள்ளைகள். ஐந்தும் நல்லாயிருக்கு. தெய்வானையக்காவை அந்தக் காலத்திலை இந்த மனிசன் படுத்திய கொடுமை கொஞ்ச நஞ்சமல்ல. மனிசீன்ரை கெட்டித்தனத்தாலை இண்டைக்கு ஐந்து பிள்ளைகளும் படிச்சு நல்லாயிருக்கு. அதுகளின்ரை மானத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றாவது இந்தாள் நினைக்கிறேல்லை. கஷ்டப்பட்டுத் தோட்டங்களிலை கூலி வேலை செய்து பிள்ளைகளைப் படிப்பிச்சது. இப்பெண்டாலும் அந்த மனிசியை நிம்மதியாக இருக்க விடுறானே. ஒழுங்கை தெருவிலை மனிசியைக் கண்டால் அடிக்கிறது. ஒரு மாதத்திற்கு முன்னம் மனிசியை ஒழுங்கைக்கை கண்டுட்டான். பெரியதொரு பொல்லாலை மனிசீன்ரை தலையிலை அடித்து மூன்று தையல் போட்டது. இவன் சாக வேண்டிய ஆள்...’’ தொழிலாளி சொன்னது அவரின் காதில் ஒலித்தது.

‘‘கணபதி இன்று இவை எல்லோரும் இங்கு தான் சாப்பிடுவினை. ஆறேழு பேருக்குச் சமை’’ என்றார் அங்குசன்.

‘‘கணபதி இப்ப இஞ்சையே வேலை....’’ என்று கேட்டார் தணிகாசலம்.

‘‘ஓம் தம்பீ....... ஐயா மகாராசா, இப்படியான ஒரு பெரியவர் பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்னம் நான் சந்தித்திருந்தால் எப்படி நான் இருந்திருப்பன். என்னோடு சேர்ந்தவங்களெல்லாம் கள்ளரும் குடிகாரரும் இழிந்தவர்களும் தான். அவர்களெல்லோரும் சேர்ந்திருந்து களவெடுப்பதைப் பற்றியும், கள்ளுக் குடிக்கிறத்தைப் பற்றியும் தான் பேசுவார்கள். கூலி வேலை செய்வது போல கூலிக்கு ஆட்களுக்கு அடிப்பம். நான் என்னுடைய மனைவி பிள்ளைகளுக்குக் கொடுத்த கஷ்டங்கள் எவ்வளவு தெரியுமா..’’ இப்ப ஐயாவோடை சேர்ந்தாப் பிறகு அதை நினைக்கக் கவலையாக இருக்கு’’ கலங்கினான் கணபதி.

‘‘நீ திருந்தினது பற்றி நான் மிகவும் சந்தோஷப்பர்றன். இனிமேல் ஐயாவை விட்டு விட்டுப் போகாதை. ஐயா கொழும்புக்குப் போனாலும் உன்னைக் கூட்டிக் கொண்டு தான் போவர்’’ என்றார் தணிகாசலம்.

கணபதி மகிழ்வுடன் சிரித்தான். வெற்றிலைக் கறள் பிடித்த பற்கள் அன்று முத்தாக ஒளிர்ந்தன; ‘‘இப்ப நான் குடிப்பதில்லை; வெற்றிலை சாப்பிடுவதில்லை. ஐயா எல்லாவற்றிற்கும் மருந்து தந்தவர். பற்களைச் சுத்தமாக்கியவர். இப்ப நான் வாழுற வாழ்க்கை சொர்க்கம். முன்பு வாழ்ந்ததை நினைக்க அருவருப்பாக

இருக்கு. ஐயா, ஒருவனுக்கு இயற்கை அறிவு மனத்தால் உண்டாகும். அது போல, இப்படிப்பட்டவன் என்று மக்கள் சொல்லும் சொல், அவன் சேர்ந்திருக்கும் இனத்தால் உண்டாகும் என்று தணிகாசலமண்ணை அடிக்கடி எனக்குச் சொல்வார். அது எனக்கு அப்ப விளங்கேல்லை. இப்ப விளங்கூது'' என்றான் கணபதி.

''இன்றைக்கு நீங்கள் இங்கிருந்து சாப்பிட்டு விட்டுப் போக வேண்டும்'' என்றார் அங்குசன்.

விக்னேஸ்வரமூர்த்தி எதையோ சொல்ல முயன்றார். அதைக் கண்ட அங்குசன் சொன்னார்; '' இன்று எனது அப்பாவின் பிறந்ததினம்'' அங்குசன் கூறும் போது விநாயகரத்தினம் அதிர்ச்சியுடன் குறுக்கிட்டார்; ''பங்குனி இருபத்தைந்தாம் திகதி என்ன? நான் மறந்து விட்டேன். லக்சுமி இல்லாமல்.... இப்ப எனக்கு ஞாபக மறதி.... தொலைபேசியில் கதைக்கலாம்''...

''அம்மா உங்கக்கு அர்ச்சனை செய்யக் கோவிலுக்குப் போட்டா. இன்னும் ஒரு மணி நேரங்கழித்துக் கதைக்கலாம்'' என்றார் அங்குசன்.

சரியாக ஒரு மணிக்கு கணபதி அங்கே வந்து சொன்னான்; ''ஐயா, எங்கை?, சாப்பாடு தயார்''.

''வைத்தியசாலையில் தன்னோடு வேலை செய்யும் ஒரு வரை அழைக்க ஐயா சென்று விட்டார்.'' என்றார் விநாயகரத்தினம்.

''அப்போது மோட்டார் வண்டி வந்து நிற்கும் ஓசை கேட்டது; "கணபதி, ஐயா வந்திட்டார். வாழையிலையில் சாதத்தை வை'' என்றவாறு வாசலுக்கு வந்த விநாயகரத்தினம் அதிர்ந்து நின்றார். மோட்டார் வண்டியிலிருந்து மகாலட்சுமி இறங்கி உள்ளே வந்து கொண்டிருந்தாள்.

**453. மனத்தான் ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி; இனத்தான் ஆம்<br>இன்னான் எனப்படும் சொல்.**

மக்களுக்கு இயற்கை அறிவு மனத்தால் ஏற்படும்; இவன் இப்படிப்பட்டவனென உலகத்தவர் சொல்லும் சொல், அவன் சேர்ந்த இனத்தால் ஏற்படும்.

## *இனத்தின் அறிவு*

''மகா, நீர் ஏன் எனது பிறந்ததினத்தை ஞாபகப்படுத்தவில்லை. எனது அன்றாடத் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யும் நீர் ஏன் எனக்குச் சொல்லவில்லை.'' விநாயகரத்தினத்தின் குரல் தழுதழுத்தது.

''நீங்கள் மகனிடம் வருவதைப் பற்றிச் சொன்னீர்களா...? நீங்கள் பயணத்திற்காக இருக்கையைப் பதிவு செய்யும் போதே எனக்குத் தெரியும். பயண முகவர் என்னுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு; ''ஐயா யாழ்ப்பாணத்திற்கு மகனைப் பார்ப்பதற்குச் செல்லப் பணச் சீட்டொன்றைப் பதிவு

செய்துள்ளார். நீங்கள் ஏன் போகவில்லை'' என்று கேட்டார். நான் அதை மகனுக்குச் சொன்னேன் அங்குசன் தான் உங்களுக்கு எதுவும் சொல்ல வேண்டா மென்று கூறி அடுத்த விமானத்தில் எனக்கு இருக்கையைப் பதிவு செய்தான். உங்களால் எப்படி எனக்கு மறைக்க முடிந்தது. நாம் வாழ்ந்த முப்பது வருட வாழ்க்கை போலியானதா..? நான் உங்களின் பிறந்த தினங்களின் போது வருடா வருடம் அன்று காலை தானே கூறி ஆசீர்வாதம் வாங்குறனான். முதல் நாள்ச் சொன்னால் எதையும் செய்ய விட மாட்டீர்கள். நான் வழக்கமாகச் செய்யும் தீன்பண்டங்கள் யாவும் செய்து கொண்டு தான் வந்துள்ளேன். வழக்கமாகச் செல்லும் பிள்ளையார் கோவிலுக்குப் போய் அர்ச்சனை செய்து பிரசாதமும் கொண்டு வந்துள்ளேன். குளித்து விட்டு வருகிறேன். பூஜை அறைக்கு வாங்கோ'' என்றாள் மகாலட்சுமி.

அங்குசன் சிரித்தார்; ''அப்பா நீங்கள் எமக்கு தெரியாமல் எதையும் செய்ய முடியாது. நீங்கள் ஆறு மாத காலமாக மருந்து வாங்கவில்லை என்று மருந்துவிற்கும் கடை உரிமையாளன் சொன்னான். அதனால் தான் நான் அடிக்கடி உங்கள் உடலைப் பரிசோதனை செய்தேன். இனி நீங்கள் மருந்து சாப்பிடத்தேவையில்லை.''

''மனிதன் மகிழ்வுடன் இருந்தால் எந்த நோயும் அவனை நெருங்காது. வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்'' என்று பெரியவர்கள் சொல்வார்கள். பெரியவர்களின் சொல்லைக் கடைப்பிடித்தால் நாம் துன்பப்பட வேண்டியதில்லை. அன்பான மனைவி, அக்கறையான பிள்ளைகள், இடித்துக் கண்டிக்கக் கூடிய பெரியவர்களின் தொடர்பு, நல்ல நண்பர்கள் என்றிருந்தால் நோய் வர இடமே இல்லை. நல்லவர்களின் உறவிருந்தால் கல்லாதவனும் மேதையாகி விடுவான். நான் ஐந்தாம் வகுப்பு வரை தான் கற்றேன். ஆனால் நான் நன்றாகக் கற்றவன் என்று மற்றவர்கள் நினைக்கிறார்கள். ஒருவனது சிறப்பான அறிவு அவனுடைய மனத்தின் அறிவு போலத் தோன்றும். ஆனால், அந்த அறிவு அவன் சேர்ந்த இனத்திலிருந்தே தோன்றிய தாகும். நான் அதிபருடன் சேர்ந்தால் பாடசாலையைப் பற்றிய முழுமையான அறிவையும் பெற்றிருக்கிறேன். சுவாமியாரோடு சேர்ந்தால் வேதம், உபநிடதம், ஆகமம் போன்றவற்றையும், இந்து சமய தத்துவங்களையும் அறிந்து வைத்துள்ளேன். அதே போல அங்குசனும் இச்சிறிய வயதில் பெரியவர்களுடன் சேர்ந்து பழகியமையால் பல திறப்பட்ட அறிவையும் பெற்றிருக்கிறார்.'' என்றார் தணிகாசலம்.

எல்லோரும் சாப்பாட்டு மேசையில் அமர்ந்தனர். விநாயகரத்தினத்திற்கு அருகில் அங்குசனும் மகாலட்சுமியும் அமர்ந்திருந்தனர். கணபதி உணவைப் பரிமாறினான்.

''மிகவும் சுவையாக இருக்கிறது. பெண்களைப் போலச் சுவையாகச் சமைத்திருக்கிறாய். லட்சுமி தினமும் மகனின் சாப்பாட்டைப் பற்றித் தான் மனவருத்தப்படுவாள். இப்ப திருப்தி தானே. உமது சமயலைப் போலுள்ளது'' என்றார் விநாயகரத்தினம்.

''திறமான சமையல். கணபதி மனம் மாறாமல் ஐயாவோடு இருந்து கொள். உனது மகன் கஜானன் என்னைக் காணும் போதெல்லாம் உன்னைப் பற்றிச் சொல்லிக் கவலைப்படுவான். உனது பிள்ளைகள் எல்லோரும் மதிப்பாக

வாழ்கிறார்கள். நீ அவர்களின் மதிப்பைக் குறைக்கலாமா?'' என்று கேட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

''நான் இனிப் பிழை விட மாட்டன் ஐயா. ஒருவனை நல்லவனாக்குவதும் தீயவனாக்குவதும் அவன் சேரும் நண்பர்கள் தான். ஒருவன் தனது மனதின் அறிவுக்கேற்றபடி நடந்தால் தீமைகள் செய்ய மாட்டான். அவன் சேரும் இனம் தான் அவனது நடத்தையைத் தீர்மானிக்கிறது. கெட்டவர்களோடு நான் சேர்ந்திருந்த போது அவர்களுடன் சேர்ந்து கெட்ட செயல்களையே செய்தேன். தற்பொழுது மிகவும் நல்லவரான அங்குசன் ஐயாவுடன் சேர்ந்திருக்கிறேன். அவரது நிழல் தீயவர்களைச் சுட்டெரித்து விடும். இனி நான் அவரை விட்டுச் செல்ல மாட்டேன்'' என்றான் கணபதி. அவனது குரல் கரகரத்தது.

''நான் கணபதியை நம்பித்தான் அங்குசனை விட்டு விட்டுச் செல்கிறேன். நேரத்திற்கு நேரம் சுவையாகச் சமைத்துக் கொடுக்க வேண்டும். பழைய நண்பர்களுடன் சேரக் கூடாது'' என்றாள் மகாலட்சுமி.

''சேரமாட்டன் அம்மா. ஐயா வாழும் இடம் கோயில். முன்பு நான் வாழ்ந்த இடம் சுடுகாடு. அங்கு பேய் பிசாசுகளுடன் தான் நான் வாழ்ந்தேன். இப்போது வீட்டுக்கே செல்வதில்லை. வீட்டாரை இங்கு வந்து சந்திக்கச் சொல்லியுள்ளேன். நான் தெருவால் சென்றால் சில சமயம் நான் முன்பு பழகிய பேய் பிசாசுகள் தெருவில் நிற்கும். அவற்றின் முகத்தில் விழிக்கவே எனக்கு விருப்பமில்லை. ஐயா எனது மனைவியை இங்கு அழைத்து வரச் சொல்கிறார். அவாவுக்குப் பிள்ளைகளின் பாசம். இரண்டொரு தினங்களுக்கொரு முறை வருவாள்'' கலங்கினான் கணபதி.

**454. மனத்து உளதுபோலக் காட்டி ஒருவற்கு**
**இனத்துஉள தாகும் அறிவு.**

ஒருவனுடைய சிறப்பறிவு அவனது மனத்தின் அறிவு போலத் தோன்றினாலும், உண்மையில் அந்த அறிவு அவன் சேர்ந்த இனத்திலிருந்து தோன்றியதே ஆகும்.

## *தூய்மையின் தன்மை*

''பெண்கள் திருமணமாகு முன் பெற்றோரில் பாசமாக இருப்பார்கள். திருமணமானால் பெற்றோரை மறந்து கணவன் மேல் பாசமாக இருப்பார்கள். பிள்ளைகள் பிறந்து விட்டால் பிள்ளைகள் மீது தான் பாசமாக இருப்பார்கள். கணவன் தன் மீது உயிரையே வைத்திருந்தாலும் பிள்ளைகள் மீது தான் அவர்களின் முழு அன்பும் இருக்கும். நீ, உனது மனைவியை அடித்துத் துன்புறுத்தி விட்டுத் திருந்தியதாகச் சொன்னால் அவள் வந்து விடுவாளா?'' என்றார் விநாயகரத்தினம்.

''தெய்வானைக்கு என்மீது பற்றும் பாசமும் அதிகம் ஐயா நான் இங்கு வந்து இருக்கும் படி கூறினால்; '' உன்னைப் போல நானும் ஐயாவுக்குப் பாரமாக இருக்கட்டா? நீ திருந்துவதாக எத்தனை ஆயிரம் தரம் மகா கணபதி ஆலயத்தில் சத்தியம் பண்ணிணனீ. அத்துடன் சுவாமியாரின் பாதங்களைப் பிடித்துச் சொன்னனீ. அதை மாதிரித்தான் இப்பவும் சொல்கிறாய். நாலைந்து தினங்கள் ஒழுங்காக இருப்பாய். அதன் பின் உனக்குப் பழைய புத்தி வந்து

விடும். அந்தக் கொலைகாரப் பாவியளிட்டைச் சென்றிடுவாய். ஒருவனின் மனதின் தூய்மையையும் அவனது செயலின் தூய்மையையும் அவன் சேர்ந்த இனத்தின் தூய்மையைப் பொறுத்தே அமையும். உன்னைத் திருத்த முடியாது. உன்னைத் திருந்த அவங்கள் விட மாட்டாங்கள். போன மாசம் ஆயிரம் தேங்காய் உரிப்பதாகக் கூறி எண்ணூற்று இருபத்தைந்து தேங்காய்களை உரித்து விட்டு மகா கணபதி கோயில் குருக்களிடம் காசு வாங்கினதாகக் கேள்விப்பட்டனான். குருக்களுக்கு இரண்டு நட்டம். தேங்காய் கொடுத்தவன் குறைத்துக் கொடுத்து விட்டான். அதைக் காட்டிக் கொடுப்பதை விட்டு விட்டு அவனிடம் காசு வாங்கிக் கொண்டு குருக்களுக்குத் துரோகம் செய்தனீங்கள். பிராமணப் பழி உங்களைச் சும்மாய் விடாது. வைத்தியர் நல்ல மனிதன்; புண்ணியவான், உன்னை நம்பி வீட்டில் வைத்திருக்க நீ களவெடுத்துக் கொண்டு போய்விடுவாய். நாளைக்கு நாங்கள் தான் மரியாதை கெட வேண்டும்'' என்று சொல்கிறாள். அது உண்மை ஐயா'' என்று அழுதான் கணபதி.

''தேங்காய் உரித்தாயா.....? உனது கதை எனக்கு விளங்கவில்லை'' என்றார் விநாயகரத்தினம்.

''ஓம் ஐயா, கோயில் கொடியேறினால் ஏராளமான தேங்காய்கள் தேவை. வண்டியில் உரியாத தேங்காய்களைக் கொண்டு வருவார்கள். இந்த முறைத் திருவிழாவின் போது குருக்கள் ஆயிரந் தேங்காய் பறிக்கச் சொன்னவர். வண்டிக்காரன் எண்ணூற்றி இருபத்தைந்து தேங்காய்களைப் பறித்து விட்டு ஆயிரந் தேங்காய்களுக்குக் காசு வாங்கிக் கொண்டு சென்று விட்டான். நாங்கள் தேங்காய்களை உரித்து விட்டு எண்ணிய போது நூற்றி எழுபத்தைந்து தேங்காய்கள் குறைவாக இருந்தன. நான் அதைக் குருக்களுக்குச் சொல்லலாமெனச் சொன்னேன். என்னுடன் கூட வேலை செய்த சிவராசனும் பொன்னுத்துரையும் விடவில்லை. பின்பு வண்டில்காரனைச் சந்தித்து குருக்களுக்குச் சொல்லப் போவதாக வெருட்டினோம். அவன் நூறு ரூபா தந்தான். அதனால் குருக்களுக்கு தேங்காயில் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும் உரிக்கிற காசில் ஐந்நூறு ரூபாவும் நட்டம்''.

'' கோயில் குருக்களுக்கு இப்படிச் செய்வதா? உன்னை நம்பி உனது மனைவி இங்கு வராததும் சரிதான். நாளைக்கு மகனையும் ஏமாற்றிக் களவு எடுத்துவிடுவாய். உனது மனைவி உன்னைப் பற்றிக் கணித்தது சரி. இனிமேல் இங்கு நீ வேலை செய்யக் கூடாது'' என்றார் விநாயகரத்தினம்.

'' நான் சகலவற்றையும் கேட்டு விட்டேன். இனிக் கணபதி குற்றஞ்செய்யாது. கணபதி ஓரளவு நல்லவன். சேர்ந்தவர்கள் தான் கெடுத்து விட்டார்கள். நான் கேள்விப்பட்டளவில் கணபதியை ஏவிப் பலர் தமது காரியங்கைளப் பார்த்திருக்கிறார்கள். கணபதி களவெடுத்த பல பொருட்களை வாங்கியவர்கள் சமூகத்தில் பெரியவர்களாக உலாவி வருகிறார்கள். கணபதியைக் களவெடுக்கச் சொல்லித் தூண்டுவது ஓர் ஆசிரியர். அவர் கணபதியிடம் மலிவாகப் பொருட்களை வாங்கி வெளியே நல்ல விலையில் விற்று வருகிறார். இது யாருக்கும் தெரியாது. கணபதி எனக்கு மட்டும் தான் சொன்னது'' என்றார் அங்குசன்.

''தீயவர்கள் என்று சமூகத்தால் ஒதுக்கப்படுவோர் ஒரு சமயம் இல்லாவிட்டாலும் இன்னொரு சமயம் திருந்தி நல்லவர்களாகி விடுவார்கள். தன்னைச் சேர்ந்தவர்களெல்லோரும் சொல்வதைச் சாதாரண மனிதர்கள் ஏற்றுக்

கொள்வார்கள். ஆனால் அதன் தார்ப்பரியம் தெரியும் போது தான் விடும் தவறுகள் அவனை உறுத்தத் தொடங்கும். அப்பொழுது அவனது மனச் சாட்சி விழித்துக் கொள்ளும். இப்பொழுது கணபதியின் மனச்சாட்சி விழித்து விட்டது. உத்தமரான அங்குசனின் நட்பு கணபதியை மாற்றியமைத்துள்ளது. அதனால் அவன் உண்மை பேசத் தொடங்கி விட்டான். எப்பொழுது ஒருவன் தான் செய்த தீய செயல்களைத் தன்னோடு சேர்ந்த நல்லவர்களுக்குச் சொல்லத் தொடங்குகிறானோ அப்போது அவன் திருந்தி விட்டானென்று நாம் கொள்ள முடியும். எனவே நீங்கள் பயப்படத் தேவை இல்லை'' என்றார் தணிகாசலம்.

''நீங்கள் பெரிய அறிவாளி'' என்றார் விநாயகரத்தினம்.

''நான் அறிவாளி இல்லை ஐயா, நான் சேர்ந்த இனத்தின் தன்மை'' என்று சிரித்தார் தணிகாசலம்.

**455. மனம்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்**
**இனம்தூய்மை தூவா வரும்.**

மனத்தின் தூய்மை, செய்யும் செயலின் தூய்மை ஆகிய இரண்டு தூய்மையும் அவன் சேர்ந்த இனத்தின் தூய்மையைப் பொறுத்தே அமையும்.

## *அனைத்தும் நன்மை*

விநாயகரத்தினமும் மகாலட்சுமியும் அங்குசனும் தணிகாசலமும் விக்னேஸ்வரமூர்த்தியும் நாவலர் ஸ்ரீ வித்தியா கணபதி ஆலயத்திற்கு வந்தனர் ஆலயச் சுற்றாடல் முழுவதும் பெரு விருட்சங்கள் செழித்து வளர்ந்திருந்தன. வேப்ப மரத்தில் நின்ற மயில்கள் இரண்டும் தணிகாசலத்தைக் கண்டதும் மரத்திலிருந்து பறந்து கீழே இறங்கி வந்து தணிகாசலத்தின் அருகில் நின்றன. கோயிலுக்கு வரும் போது மயில்கள் இரண்டிற்கும் தானியங்கள் கொண்டு வராமல் தணிகாசலம் வரமாட்டார். விநாயகரத்தினம் கோயிலுக்குச் செல்ல வேண்டும் என்று சொன்ன போது அவர் வெளியே வந்து வைத்தியசாலைக்கு முன்பாக இருந்த கடையில் அரிசி வாங்கி வந்திருந்தார். தணிகாசலம் அரிசியை நிலத்தில் காவியதும் பெண்மயில் அகவித் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டது.

விநாயகரத்தினமும் மகாலட்சுமியும் மயில்கள் இரண்டையும் ஆசையோடு பார்த்தனர். கோயில் பூசை தொடங்க வெகுநேரம் இருந்ததால் அவர்கள் கால்களைக் கழுவி விட்டுச் சுவாமியார் இருக்கும் அரசமரத்தடிக்கு வந்தனர். சுவாமியார் கண்களை மூடியபடி இருந்தார். மகாலட்சுமி சுவாமியாரைப் பார்த்தாள். அவரது முகத்திலிருந்து ஒரு திவ்விய ஒளி வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

''சுவாமி'' மெல்ல அழைத்தான் அங்குசன். சுவாமியாரின் விழிகள் மலர்ந்தன; ''அம்மாவும் அப்பாவும் வந்திருக்கிறார்கள். அப்பாவுக்கு இன்று பிறந்ததினம்''.

சுவாமியார் மெல்லச் சிரித்தார்; ‘‘அன்பனே! நல்லதொரு மகனை உலகிற்களித்த உத்தமியே! நீங்கள் பல்லாண்டு காலம் நோய் நொடியின்றி இன்புற்றிருப்பீர்கள்’’ என்றார்.

பூரித்துப் போனார் விநாயகரத்தினம். அவரால் மகிழ்ச்சியைத் தாங்க முடியவில்லை; ‘‘ என்னை ஆசிர்வதியுங்கள்’’ என்றவாறு அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினார்.

‘‘நல்லவர்களுக்குக் கடவுளின் ஆசீர்வாதம் என்றென்றும் இருக்கும் மனத்தூய்மை உடையவர்கள் என்றும் இன்பமாக வாழ்வர். அங்குசன் மனத்தூய்மை உள்ளவன். அந்த மனத்தூய்மை பெற்றாரான உங்களால் தான் அவனுக்கு வந்தது. பிள்ளைகள் பெற்றோருடனேயே அதிக நேரத்தைக் கழிக்கிறார்கள். பரம்பரையாக வரும் குணங்களைக் கூட சேரும் இனத்தின் தன்மை மாற்றி அமைத்து விடும். பெற்றோர் நல்லவர்களுடன் சேர்ந்தால் பிள்ளைகளும் நல்லவர்களுடன் சேர்வார்கள். பெரியவர்கள் மனத்தூய்மை உள்ளவர்களாக வாழ்ந்தால் அவர்களுடன் சேர்வோரும் அதைப் பின்பற்றி வாழ்வார்கள். விக்னேஸ்வரமூர்த்தி மாசு மறுவில்லாது வாழ்ந்தால் அவருடன் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழையமாணவர்கள், நண்பர்கள் எல்லோரும் நல்ல முறையில் வாழ்கிறார்கள். பெரியவர்கள் பெருந்தியாகங்களைச் செய்தால், அதன் மூலம் சமூகம் பல நன்மைகளை அனுபவிக்கும். மனத்தூய்மை உடையவர்களுக்கு அவருக்குப் பின் எஞ்சி நிற்கும் புகழ் முதலியன அனைத்தும் நல்லவையாக அமையும். நான் அறிந்தவரை நீங்களும் மனத்தூய்மை உடையவராகவும் நல்ல இனத்தோடு தொடர்பு கொண்டுள்ளவராகவும் இருக்கிறீர்கள். அப்படியான உங்களுக்கு அனைத்தும் நல்லவையாய் அமையும்’’ என்று கூறி விட்டு நிறுத்திய சுவாமியார் அங்குசனைப் பார்த்தார்.

‘‘அப்பாவவுக்கும் அம்மாவுக்கும் சொல்லி விட்டேன். நீங்கள் கூறலாம்’’ என்றார் அங்குசன்.

‘‘விக்கி’’ என்று அழைத்து விட்டு நிறுத்தினார் சுவாமியார். எல்லோரையும் முழுப்பெயர் சொல்லியே அழைப்பார். அன்று ‘விக்கி’ என்று அழைத்தமையால் சற்று ஆச்சரியப்பட்டார் விக்னேஸ்வரமூர்த்தி, ஆனால் தணிகாசலம் ஆச்சரியப்படவில்லை; ‘‘தணி’’ என்று சுவாமியார் அழைத்தால் பெரு நன்மை ஒன்று வரப்போகிறதென்று அர்த்தம். அதனால் தணிகாசலம் விக்னேஸ்வரமூர்த்தியின் பக்கம் திரும்பி; ‘‘உங்களுக்கு பெரிதொரு அதிஷ்டம் வரப் போகிறது. கல்விப்பணிப்பாளராகப் போகிறீர்கள் போலத் தெரிகிறது’’ என்றார்.

‘‘மகனே நல்ல இனத்தோடு தொடர்பு கொண்டவர்களுக்கு நடப்பதெல்லாம் நன்மையானதாகவே இருக்கும். தணிகாசலத்தின் குணவியல்புகளைப் பற்றிக் கேள்விப்பட்ட அங்குசன் நாமகளைக் கண்டதும் வெளி நாட்டில் வைத்தியராகப் பணிபுரியும் தனது தம்பிக்குப் பெண் கேட்க நினைத்தார். ஆனால் அவளுக்குத் திருமணம் நிட்சயமானதை அறிந்து வேதனைப்பட்டார். தணிகாசலம், நீ பெண்களைச் சுமையாகக் கருதினாயே இப்ப எப்படி...? அதன் பின் அங்குசன் விக்னேஸ்வரமூர்தியின் வீட்டுக்குச் சென்ற போது அவரது இரண்டாவது மகள்

அகல்யாவைக் கண்டு, அவளைத் தனது தம்பிக்குத் திருமணஞ் செய்து கொடுக்க விரும்பி விட்டார். அவளைச் செய்து கொடு''.

விக்னேஸ்வரமூர்த்தி திகைத்துப் போனார். ''பெரும் தொழிலதிபரின் மகனுக்கு எனது மகளா?'' என்று சிந்தித்தார்.

''நல்ல இனத்தோடு தொடர்புடையவர்களுக்கு அனைத்தும் நல்லவையாகவே அமையும். நல்ல நாள் ஒன்றில் திருமணத்தை முடியுங்கள்''.

''என்னிடம் சீதனமாகக் கொடுக்க பெரிதாக ஏதுவும் இல்லை'' என்று விக்னெஸ்வரமூர்த்தி சொல்லிக் கொண்டிருக்கும் போது விநாயகரத்தினம் சொன்னார்; ''எம்மிடம் போதியளவு சொத்திருக்கு. உங்கள் பொருள் எதுவும் தேவையில்லை''.

**456. மனம்தூயார்க்கு எச்சம்நன் றாகும்; இனம்தூயார்க்கு**
**இல்லைநன்று ஆகா வினை.**

மனம் தூய்மையானவர்களுக்கு அவருக்குப் பின் எஞ்சி நிற்கும் புகழ் முதலிய அனைத்தும் நன்மையானவைகளாக இருக்கும். நல்ல இனத்தோடு தொடர்புள்ளவர்களுக்கு நன்மைதராத செயல்கள் எதுவும் இல்லை.

### *ஆக்கமான புகழ்*

''வாழ்க்கையில் வெற்றி பெற்ற ஒவ்வொருவரையும் நினைத்துப் பார்த்தால் அவர்கள் மனத்தூய்மை உள்ளவர்களாக வாழ்ந்தமை எமக்குப் புரியவரும். மனத் தூய்மையின் அளவு தான் வெற்றியின் அளவாகும். மனத்தூய்மை உள்ளவர்களை நசுக்கக் கூடிய ஆற்றல் சாத்தானுக்குக் கூடக் கிடையாது. மனத்தூய்மை உள்ளவர்களைப் பிரபஞ்சமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து அழிக்கக் கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு. அத்துடன் அவனோடு சேர்ந்த இனத்தின் தன்மை ஆக்கத்தோடு எல்லாப் புகழையும் சேர்த்துக் கொடுக்கும். இதற்கு விக்னேஸ்வரமூர்த்தி சிறந்த உதாரணமாவார்'' என்றார் சுவாமியார்.

அப்போது காண்டாமணி ஒலித்தது; ''மகா கணபதியைச் சென்று தரிசியுங்கள்'' என்றார் சுவாமியார்.

குருக்கள் மகா கணபதிக்கு பஞ்சாலார்த்தி காட்டிக் கொண்டிருந்தார். ஆனால் விக்னேஸ்வரமூர்த்திக்கு அது தெரியவில்லை. அவரது மனம் முற்றாகக் குழம்பியிருந்தது. பஞ்சாலாத்தி காட்டும் போது பக்தர்கள் எல்லோரும் கைகூப்பித் தொழ, விக்னேஸ்வரமூர்த்தி மரம் போல நிற்பதைக் கண்டு தணிகாசலம் அவரின் அருகில் வந்து சொன்னார்; ''மகா கணபதிக்குக் குருக்கள் பஞ்சலார்த்தி காட்டுகிறார் கும்பிடுங்கோ.''

கைகூப்பிய விக்னேஸ்வரமூர்த்தி சொன்னார்; '' என்னால் சுவாமியார் சொன்னதை நம்ப முடியவில்லை. இப்பவும் தடுமாற்றமாக இருக்கிறது''.

“இதில் தடுமாறுவதற்கு என்ன இருக்கிறது. மனத்தூய்மையுடன் செயலாற்றுவோருக்கு மகா கணபதி பெரு வாழ்வைக் கொடுப்பதை நாம் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறோம். மனிதன் எந்தளவிற்குச் சேவை செய்கிறானோ அந்த அளவுக்கேற்ப உயர்சியடைவான். கடந்த காலங்களில் நீங்கள் ஆற்றிய தூய பணியின் சன்மானம் இப்பொழுது உங்களுக்குக் கிடைத்துள்ளது. பலர் நம் கண் முன்னால் தமதும், தமது பிள்ளைகளினதும் எதிர் காலஞ் சிறக்கக் கடமையை மறந்து மனத்தூய்மையில்லாமல் ஓடி ஓடி உழைத்தும் எதைக் கண்டார்கள். நீங்கள் தன்நலம் கருதாது இரவும் பகலும் உழைத்த உழைப்பிற்கு பலன் கிடைத்துள்ளது” என்றார் தணிகாசலம்.

பாடசாலைக்கு ஒழுங்காக வராது மேலதிக வகுப்புக்களைத் தனியார் கல்விக்கூடங்களில் நடத்திய பல ஆசிரியர்கள்; “அவர் பிழைக்கத் தெரியாதவர். தனது வாழ்க்கையைக் கெடுப்பதைப் போல எமது வாழ்க்கையையும் கெடுக்கிறார்”. என்று பகிரங்கமாகக் கூறிய அரவிந்தன் ஆசிரியரது ஒரே ஒரு மகளுக்கு முப்பத்தைந்து வயதாகியும் திருமணம் நடை பெறவில்லை. எனது பிள்ளைகளுக்கு நான் தேடிச் செல்லாமலே உரிய வயதுகளில் தேடி வருகிறார்கள்” என்று நினைக்க அவரது உடல் சிலிர்த்தது.

பூசை முடிந்ததும் குருக்கள் திருநீறு கொண்டு வந்து விக்னேஸ்வரமூர்த்திக்கு நீட்டினார். அவர் திக்குப் பிரமை பிடித்தவர் போல நின்றார். “அதிபருக்கு இன்று என்ன நடந்தது?” என்று கேட்டார் குருக்கள்.

திடுக்கிட்டுச் சுய நினைவடைந்த விக்னேஸ்வரமூர்த்தி; “ இன்று எதிர்பாரத ஒரு மிகப் பெரிய அதிர்ச்சியான மகிழ்வு என்றார்.”

“அப்படி யென்ன?” குருக்கள் கேட்டார்.

“சுவாமியார், அங்குசனின் தம்பிக்கு அகல்யாவைச் செய்து கொடுக்கட்டாம்” என்றார் தணிகாசலம்.

“இந்த மாதம் முடியுமுன் அகல்யாவுக்குத் திருமணம் முடியு மென்று சொன்னனான் தானே. இருபத்தொரு வயதிலை பலனிருக்கு. மாப்பிளை வலியத் தேடி வருவார். மிகப் பெரிய இட மென்றுசொன்னான் நினைவிருக்கா” குருக்கள் கேட்டார்.

“ஓம் குருக்கள். அகல்யா பிறந்தன்று சாதகத்தைக் குறித்துத் தரும்போதே சொன்னீங்கள்” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“அங்குசன் நல்லவர்; பண்பானவர்; வைத்தியர் நீங்கள் கொடுத்து வைத்த நீங்கள்” என்றார் குருக்கள்.

பிரசாதங்களைப் பெற்றுக் கொண்டு மக்கள் செல்லத் தொடங்கினர். விநாயகரத்தினம் விக்னேஸ்வரமூர்த்தியின் அருகில் வந்து சொன்னார்; “இன்று நல்ல நாள். அத்துடன் எனது பிறந்ததினம். எனக்கு மருமகளைப் பார்க்க ஆசையாக இருக்கு. இலட்சுமியும் விரும்புகிறா..”

‘‘வாருங்கோ; வந்து பாருங்கோ. தணிகாசலம் நீங்களும் வாருங்கோ’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

அவர்கள் வீட்டுக்கு வந்த போது அகல்யா முற்றத்தில் நின்றாள். அவர்களைக் கண்டதும் உள்ளே சென்றாள்.

அங்குசன் தகப்பனுக்கு; ‘‘இவா தான் அகல்யா’’ என்றான்.

‘‘நான் பார்க்கு முன் உள்ளே சென்று விட்டாள்’’ என்றார் விநாயகரத்தினம்.

விக்னேஸ்வரமூர்த்தி உள்ளே சென்று சில நிமிடங்கள் தாமதித்து வந்தார். மகாலட்சுமி விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுள் சென்றாள்.

ஒரு மணித்தியாலயத்தில் அகல்யா தேநீர்த் தட்டுடன் அவர்கள் இருக்குமிடத்திற்கு வந்தாள். விநாயகரத்தினம் ஆவலுடன் அகல்யாவைப் பார்த்தாள். அவருக்கு அவளைப் பிடித்திருந்தது. கருணை மிக்க அவளது கண்கள் மிரண்டு துடிதுடித்தன. அழகான அவளது முகம் அளவுக்கதிகமாகச் சிவந்திருந்தது.

**457. மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்; இனநலம்**
**எல்லாப் புகழும் தரும்.**

மனத்தின் நன்மை உயிர்களுக்கு ஆக்கத்தைக் கொடுக்கும். இனத்தின் நன்மை ஆக்கத்தோடு எல்லாப் புகழையும் கொடுக்கும்.

### *நல்ல காவல்*

அங்குசன் அகல்யாவைப் பார்த்தார். இனம் புரியாத ஓர் உணர்வு உடலெங்கும் சிலிர்த்தோடுவதைப் போல இருந்தது. ஒரே ஒரு முறை தான் அவர் அகல்யாவைக் கண்டார். அவர் வேலையைப் பொறுப்பேற்றுப் பதினைந்து நாட்கள் கூட ஆகவில்லை. தணிகாசலத்தின் வீட்டில் விக்னேஸ்வரமூர்த்தியைச் சந்தித்த மறு நாள் விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்குச்சென்றார் அங்குசன். அகல்யா முற்றம் பெருக்கிக் கொண்டு நின்றாள். அங்குசனைக் கண்டதும் அவளது விழிகள் மிரண்டன. ‘‘முன் பின் அறியாத புதியவர்; ஊரவருமல்லர். யாராக இருக்கும்’’ என்று யோசித்தவாறு தலை குனிந்தாள்.

‘‘நான் இவ்வூருக்குப் புதிதாக வந்திருக்கும் வைத்திய அதிகாரி. அதிபரைச் சந்திக்க வந்தேன். எனது பெயர் அங்குசன்’’ என்றார்.

‘‘அப்பா நேற்று உங்களைச் சந்தித்ததாகச் சொன்னவர். அப்பா பாடசாலைக்குச் சென்று விட்டார். உள்ளே வாங்கோ’’ என்றாள் அகல்யா.

‘‘இல்லை அப்பாவை..... என்று அங்குசன் வார்த்தைகளை முடிக்கு முன் அகல்யா சொன்னாள்; ‘‘வீட்டுக்கு முதன் முதலாக வந்திருக்கிறீர்கள். அப்பா இரவு எட்டுமணிக்குப் பிறகு தான் வருவார். தேநீர் குடித்து விட்டுச்

செல்லுங்கோ'' அவள் உள்ளே சென்றாள். அங்குசன் அவளின் பின்னால் சென்றார்.

''இருங்கோ'' என்று உள்ளே சென்ற அகல்யா தேநீர்க் கோப்பையுடன் திரும்பி வந்தாள்.

''சீக்கிரமாகத் தேநீர் தயாரித்து விட்டீர்கள்''.

''எமது வீட்டில் எந்நேரமும் சுடுநீர்ப் போத்தலில் தேநீர் தயாராக இருக்கும்.'' சிரித்தாள் அகல்யா.

உதடுகள் மெதுவாக அசைந்து முறுவலித்த போது அவளது வெண்மையான பற்கள் ஒளிர்ந்தன.

அப்பொழுது பரமேஸ்வரனும் காமாட்சியம்மாளும் விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தனர்.

''என்னடாப்பா எனக்குச் சொல்லாமல் பெண் பார்க்க வந்து விட்டீர்கள்'' என்றவாறு அங்குசனின் தோளைப் பற்றினார் பரமேஸ்வரன்.

திடுக்கிட்டுத் தடுமாறினார் அங்குசன். அவரின் உடல் லேசாக வியர்த்தது.

''எனக்கு எதுவும் தெரியாது. இன்று மகனைப் பார்க்க வேண்டு மென்று இலட்சுமிக்குத் தெரியாது புறப்பட்டு வந்தேன். அதைப் பயணச்சீட்டு முகவர் மூலம் அறிந்த இலட்சுமி மகனுக்குச் சொல்லி அடுத்த விமானத்தில் வந்து விட்டாள். இன்று எனது பிறந்ததினம். அது கூட எனக்குத் தெரியாது. தாயும் மகனும் எல்லாவற்றையும் இரகசியமாக வைத்திருந்தனர். அங்குசன் விக்னேஸ்வரமூர்த்தியின் மகளை எனது இரண்டாவது மகனுக்குத் திருமணஞ் செய்து வைக்க விரும்புவதாகத் தாய்க்குச் சொல்லியிக்கிறான். கோயிலுக்கு வந்த நாங்கள் மருமகளைப் பார்ப்போ மென்று வந்தோம். இதெல்லாம் ஏற்கனவே திட்டமிடப்பட்டதல்ல'' என்றார் விநாயகரத்தினம்.

''நல்ல மனமுடையவர்களுக்குக் கடவுள் ஒரு போதும் துன்பம் வரவிட மாட்டார். இயல்பாகவே நல்ல மனமுடைய விக்னேஸ்வரமூர்த்திக்குச் சான்றோர் பலரின் உறவு இருப்பதால் அது அவரது நல்வாழ்விற்குக் காவலாக அமைந்துள்ளது. மூத்த மகளின் திருமணமும் திடீரென்று சான்றோரின் உதவியுடன் கோலாகலமாக நடைபெற்றது. அதே போல அகல்யாவின் திருமணமும் நல்ல முறையில் ஒப்பேறியுள்ளது.'' என்றார் தணிகாசலம்.

''நல்ல மனம் கொண்டவர்களுக்குச் சான்றோரும் கடவுளும் சேர்ந்து நன்மை செய்வார்கள்'' என்றார் பரமேஸ்வரன்.

அகல்யாவின் அருகில் காமாட்சியம்மாள் வந்தமர்ந்தாள். மின்விசிறி வேகமாகச் சுற்றிக் கொண்டிருந்த போதும் அகல்யாவின் உடல் வியர்த்திருந்தது. எதுவித கற்பனையுமின்றிக் கதைப்புத்தகம் வாசித்துக் கொண்டிருந்த அகல்யாவின் அருகே வந்த விக்னேஸ்வரமூர்த்தி ''அகல்யா, உனக்கொரு

இனிமையான செய்தி. உன்னைப் பெண் பார்க்க வந்திருக்கிறாகள். விரைவாகச் சேலையைக் கட்டிக் கொண்டு வா''.

அகல்யா திகைத்துத் திகிலடைந்து போனாள். நாமகள் வந்து சேலையைக் கட்டி அழைத்து வந்த போதும் அவளால் அதிர்ச்சியிலிருந்து மீழ முடியவில்லை. நடைப்பவை யாவும் கனவு போல இருந்தது.

''நீ கொடுத்து வைத்தவளம்மா. நல்ல குணவணான கணவன். நல்ல மாமன் மாமி.... உனக்கு ஒரு குறையும் வராது'' அவளை அணைத்து முத்தமிட்டாள் காமாட்சியம்மாள்.

அகல்யா மிரள மிரள விழித்தாள். அவளுக்கு மேலும் வியர்த்தது; ''திடீரென்று எதிர்பாராத வகையில் அகல்யாவைப் பெண் பார்க்க வந்ததால் அவள் அதிர்ச்சியடைந்து விட்டாள்'' என்று சிரித்தாள் நாமகள்.

**458. மனநலம் நன்குஉடைய ராயினும் சான்றோர்க்கு**
**இனநலம் ஏமாப்பு உடைத்து.**

மனநலம் மிக்க உறுதி வாய்ந்த சான்றோராக இருந்தாலும், அவர்களுக்கு இனத்தின் நன்மை மேலும் நல்ல காவலாக அமையும்.

## *கூடுதலான சிறப்பு*

விநாயகரத்தினமும் மகாலட்சுமியும் அங்குசனும் வீட்டுக்கு வந்த போது கணபதியின் மனைவி தெய்வானை அவர்களது வீட்டில் இருந்தாள். மூவரையும் கண்டதும் அவள் எழுந்து நின்றாள். மகாலட்சுமி அம்மாவைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல இருந்தது. நல்ல சிவந்த நிறம். இடை இடையே நரைத்த தலைமுடி. ஒளிவீசும் கண்கள், வசீகரமான முகம். திருமகள் நேரில் வந்ததைப் போன்றிருந்தது.

''இவள் தான் எனது மனைவி தெய்வானை'' என்று மூவருக்கும் அறிமுகப் படுத்தினான் கணபதி.

மகாலட்சுமி நிமிர்ந்து தெய்வானையைப் பார்த்தாள். வசீகரமான தெய்வானையின் முகம் கலவரப்பட்டிருப்பதைப் போல இருந்தது. அவளது கண்கள் கலங்கின; ''ஐயா, இவரை அளவுக்கதிகமாக நம்பாதீர்கள். எனக்கு ஐந்து பிள்ளைகள். ஐந்தும் நன்றாக இருக்கிறார்கள். இவர் ஒரு மாதத்திற்கு முன்பு எனது மூத்தமகனின் வீட்டிற்கு வந்திருந்தார். பேரன் என்று நினைத்து மருமகள் தனது இளைய மகனைக் கொடுத்து விட்டு இவருக்கு தேநீர் தயாரிக்கச் சென்று விட்டாள். இவர் பேரனின் கையில் இருந்த அரைப்பவுண் காப்பைக் கழற்றிக் கொண்டு போய்விட்டார். நாங்கள் ஏழைகளென்றாலும் மரியாதையாக வாழ விரும்புகிறோம். நாளைக்கு இங்கு ஏதாவது செய்தால் அதனால் எமக்குத் தான் மானம் போகும்'' அழுதாள் தெய்வானை.

கணபதி எதுவும் பேசாமல் தலையைக் குனிந்து கொண்டு நின்றான். அங்குசன் கணபதியைப் பார்த்தார்.

“ஐயா நான் கெட்டவர்களோடு சேர்ந்து பல கெட்ட செயல்களைச் செய்தது உண்மை தான். நான் செய்த கெட்ட செயல்களை யெல்லாம் உங்களிடம் சொல்லி விட்டேன். இனி நான் தவறு செய்ய மாட்டேன்” அழுதான் கணபதி.

“ஐயா, இவர் மகா நடிகன். தனது தேவைக்காக எந்தப் பாதகமான செயல்களையும் செய்யத் தயங்க மாட்டார். தயவு செய்து இவரை நம்பாதீர்கள்” என்றாள் தெய்வானை.

“நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. தீயவர்கள் எப்பொழுதும் தீயவர்களாக இருக்க வேண்டுமா? அவர்கள் திருந்தக் கூடாதா?” என்று கேட்டார் அங்குசன்.

தெய்வானை சில கணங்கள் மௌனமாக நின்றாள். அவளால் பேசமுடியவில்லை. தடுமாறிய அவள் சிறிது நேரம் கழித்துச் சொன்னாள்; “ஐயா, இவர் திருந்தினால் முதல் சந்தோசப்படுவது நான் தான். இவரைக் கட்டிய முப்பத்தைந்து வருடங்களும் நான் அனுபவிக்காத சித்திரவதைகள் இல்லை. எத்தனை தரம் எனது மண்டையை உடைத்திருப்பார். எத்தனை தரம் எனது கையை முறித்திருப்பார். ஒரு முறை நான் உயிர் தப்பியது அதிசயமென்று வைத்தியர் சொன்னார்.” என்று நிறுத்திய தெய்வானை சில கணங்கள் பொறுத்துச் சொன்னாள்; “ஐயா, சுவாமியார் அடிக்கடி தனது போதனையில் சொல்வார்; “நல்லவர்களாக வாழ்பவர்கள் இப்பிறவியில் அல்ல, அவர்கள் எடுக்கும் பிறவிகள் தோறும் இன்பமாக வாழ்வார்கள், அவர்கள் இப்பிறவியில் நல்லவர்களோடு சேர்ந்திருந்தால் மேலும் சிறப்படைவார்கள். எனவே நல்லவர்களாக வாழுங்கள்; நல்லவர்களோடு உறவாடுங்கள்” என்பார். அதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. அதிபரும் தணிகாசலம் அண்ணையும் நல்லவர்கள்; நல்லவர்களோடு சேர்ந்திருப்பவர்கள் என்றும் நன்மையையே அடைகிறார்கள். இவர் தீயவர், தீயவர்களோடு சேர்ந்து தானும் தீமையை அனுபவிப்பதோடு எம்மையும் துன்பத்துக்குள்ளாக்குகிறார்” அழுதாள் தெய்வானை.

“ஒருவனைத் திருந்தச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். கணபதி எனது வீட்டில் எதைத் திருடினாலும் பரவயில்லை. அவருக்கு நான் ஒரு சந்தர்ப்பமளிக்க விரும்புகிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம். அவர் ஏதாவது எனக்குத் தீங்கு செய்தாலும் நான் அதை பெரிதாக எண்ணி யாருக்குஞ் சொல்ல மாட்டேன்” என்றார் அங்கசன்.

“தெய்வானை, நீ சில நாட்களுக்கு இங்கு வந்து கணபதியுடன் தங்கியிருந்தாலென்ன?” என்று கேட்டார் விநாயகரத்தினம்.

வெகுநெரம் தெய்வானை எதுவும் பேசவில்லை அழுதாள்; விம்மி விம்மி அழுதாள். அவள் அழுது முடிந்த பின் ஏதாவது சொல்லட்டும் என்று காத்திருந்தார் விநாயகரத்தினம். சிறிது நேரத்திற்கு பின் தெய்வானை சொன்னாள்; “ஐயா இவரின் கொடுமையால் எனது இதயம் கல்லாகி விட்டது. சில காலம் பார்ப்போம். இவர் திருந்தினால் இவருடன் வந்திருக்கிறேன்” என்றாள்.

விநாயகரத்தினம் எதுவும் பேசவில்லை. பொறுமையாக இருந்தார்; ‘‘சரி, உங்களது விருப்பப்படி செய்யுங்கள். கணபதி கட்டாயம் திருந்துவார்; இல்லைத் திருந்தி விட்டார். இனி அவர் தவறுகள் செய்ய மாட்டார்’’ என்றார் அங்குசன்.

‘‘கேட்க எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. கொஞ்ச நாள்ப் பொறுத்திருந்து பார்ப்போம்’’ என்றாள் தெய்வானை.

**459. மனநலத்தின் ஆகும் மறுமை; மற்ற∴தும்**
**இனநலத்தின் ஏமாப் புடைத்து.**

மனத்தின் நன்மையால் மறு பிறவியிலும் இன்பம் உண்டாகும்; அதுவும் இனத்தின் நன்மையால் மேலும் கூடுதலான சிறப்பைப் பெறும்.

## ***துணையும் துன்பமும்***

‘‘ஐயா எனது மனைவி சொல்வதில் நியாயம் இருக்கிறது. இவ்வளவு காலமும் நான் மனிதனாக வாழவே இல்லை. எனக்கொரு மனைவி இருக்கிறாள்; ஐந்து பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று நான் ஒரு கணங்கூடச் சிந்தித்ததில்லை. மிருகங்கள் மாதிரி வாழ்ந்து விட்டேன். இல்லை ஐயா மிருகங்கள் கூடத் தன் குட்டிகள் மீது அளவற்ற பாசத்தைக் காட்டும். ஆனால், நான் எனது பிள்ளைகள் மீது பாசங்காட்டவில்லை. எனது மனைவி கூறியதைப் போல எனது பேரப்பிள்ளையின் காப்பைக்கழற்றி விற்றேன். பிள்ளைகள் சிறியவர்களாக இருந்த போது நான் உழைத்து ஒரு துணி கூட வாங்கிக் கொடுத்ததில்லை. தாய் கூலி வேலை செய்து அவர்களுக்கு உடைகள் வாங்கினால் அவற்றைத் திருடிச் சென்று விற்று விடுவேன்’’ அழுதான் கணபதி. அங்குசன் எதுவும் பேசவில்லை நன்றாக அழட்டும் என்று விட்டார். அழுவதால் ஒருவனது மனச் சுமைகள் குறையும் என்று அவர் கற்றதோடு, அனுபவத்தாலும் உணர்ந்துள்ளார்.

தெய்வானைக்குக் கணபதி அழுவது பெரிதாகத் தோன்றவில்லை. தீய செயல்களைச் செய்து விட்டு கிராம சேவகர் அல்லது காவற்துறை அதிகாரிகளிடம் அகப்பட்டால் கணபதி தெரியாத்தனமாகத் தான் செய்து விட்டதைப் போலப் பெரிதாக துயரப்பட்டு அழுவான். அதைச் சில சமயம் கிராமசேவகரும், ஊரப்பிரமுகர்களும் நம்பிவிடுவர். அதனால் தெய்வானை மனதுக்குள் கறுவினாள்.

‘‘இவரது மாயக் கண்ணீரை ஊரவர்களும், பிள்ளைகளும் நம்பி இரக்கப்படுவார்கள். நாலைந்து தினங்கள் நல்லவரைப் போலத் திரியும் கணபதி பழைய படியும் தனது நண்பர்களோடு சேர்ந்து பழைய படி தனது குணத்தை மாற்றிக் கொள்வான். அதனால் தெய்வானை அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

‘‘கணபதி, நீ முன்பு எப்படி வாழ்ந்தாய் என்பதைப் பற்றி நான் ஆராய விரும்பவில்லை. இனி எப்படி வாழ வேண்டு மென்று நான் உனக்குச் சொல்லியிருக்கிறேன். எத்தனையோ அக்கிரமங்களைச் செய்தவர்கள். திருந்தி மக்கள் மதிக்கும் பெரியார்களாக மாறியுள்ளனர். அவர்கள் அனியாயங்கள் செய்தமைக்குக் காரணம் அவர்கள் சேர்ந்த இனம் தான். நல்லவர்களோடு சேர்ந்தால் நல்லவர்களாகவே இருப்பார்கள். கெட்டவர்களுடன் சேர்ந்தால் கெட்டவர்களாகி விடுவார்கள். அதன் மூலம் அவர்கள் பலரின் பகையைத் தேடிக் கொள்வார்கள். உனது மனைவி உன்னை நம்பவில்லை; உனது பிள்ளைகள் உன்னை நம்பவில்லை; ஊரவர்கள், அயலவர்கள், இனத்தவர்கள் எவரும் உன்னை நம்பவில்லை. ஆனால் நாம் நம்புகிறேன். என்னை ஏமாற்றி விடாதே’’ என்றார் அங்குசன்.

‘‘கடைசி வரையும் நான் உங்களை ஏமாற்ற மாட்டன். இது சத்தியம் ஐயா’’ என்றான் கணபதி அவனது கண்களில் அசாதாரண ஒளிவீசுவதை அங்குசன் கண்டு கொண்டார்.

தெய்வானை புறப்படும் போது சொன்னாள்; ‘‘ஐயா, உன்னைப் பூரணமாக நம்புகிறார். அவரின் நம்பிக்கையைக் கெடுத்து விடாதே. உலகில் ஒருவனுக்கு நல்ல இனத்தை விடச் சிறந்த துணை வேறு எதுவும் இல்லை நீ தீயவர்களுடன் சேர்ந்து திரிந்தமையால் உனக்கு அது புரியாது. நேற்று உனது நண்பர்களான பொன்னுத்துரையும் சிவராசாவும் நல்ல வெறியில் வீட்டுக்கு வந்து கஜானனைக் கண்ட படி பேசினார்கள். நீ சிவராசனிடம் ஆயிரம் ரூபா வாங்கினனியாம். ஆறுமாதஞ் சென்றும் திருப்பித் தரவில்லையாம். ஆஸ்பத்திரிக்குரிய வீட்டில் வைத்தியரோடு இருப்பதால் தம்மால் அங்கு செல்ல முடியவில்லையாம். என்று ஏசினார்கள். கஜானனன் ஆயிரம் ரூபாவைக் கொடுத்தவன்’’ என்ற தெய்வானை; ‘‘நான் வாறன் ஐயா’’ என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

அவள் சென்ற பின்பு கணபதியின் மகன் கஜானனன் அங்குசனின் வீட்டுக்கு வந்தான்; ‘‘நான் கணபதியின் மகன் கஜானனன்’’ என்றான்.

‘‘உள்ளே வந்திருங்கோ’’ என்றார் அங்குசன்.

சில கணங்கள் கஜானனன் எதுவும் பேசவில்லை. தயங்கினான். அதை உணர்ந்த அங்குசன் சொன்னார்; ‘‘கணபதி எனக்கு எல்லாவற்றையும் சொல்லி விட்டார். நீங்கள் தயக்கமில்லாமல் எதையும் சொல்லலாம். வெட்கப்படாதீர்கள். என்னை உங்களது நண்பனாகவோ, சகோதரனாகவோ நினைத்துச் சொல்லலாம்’’.

அதைக் கேட்டு கஜானனன் உருகிப் போனான்; ‘‘இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களா..?’’ என்று நினைத்தான்; ‘‘ஐயா, எனது தகப்பனாருக்கு எதிரிகள் பலர் இருக்கிறார்கள். இவர் சேரக் கூடாதவர்கள் பலருடன் சேர்ந்து பலதீமைகளைச் செய்தமையால் பாதிக்கப்பட்டவர்கள் இவரைத் தேடித் திரிகிறார்கள். நேற்றிரவு இனந்தெரியாத சிலர் இவரது நண்பர்களான சிவராஜனுக்கும் பொன்னுத்துரைக்கும் பொல்லுகளால் அடித்து விட்டார்கள். தயவு செய்து இவரை வெளியே விடாதீர்கள்’’ என்றான்.

அதைக் கேட்டுக் கொண்டு நின்ற கணபதிக்குப் பயமாக இருந்தது.

‘‘கேட்டியா கணபதி இனிமேல் வீட்டை விட்டு வெளியே செல்லாதே’’ என்றார் அங்குசன்.

‘‘சரி ஐயா’’ என்றான் கணபதி. அவனது குரலில் பயம் தெரிந்தது.

**460. நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல்.**

நல்ல இனத்தை விடச் சிறந்த துணையும் உலகத்தில் இல்லை; தீய இனத்தை விடத் துன்பந் தரும்பகையும் உலகத்தில் இல்லை.

### *அழிவு ஆக்கம் பயன்*

சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய ஆறுமுக நாவலரால் நிறுவப்பட்ட கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய அதிபரின் அலுவலகத்தில் அரிமாக்கழகத்தைச் சேர்ந்த பிரான்ஸிஸ் அன்ரன் சில்வெஸ்ரரும் வைத்தியக் கலாநிதி தியாகராசாவும் இருந்தனர். மிகவும் பிரசித்தி பெற்ற அப்பாடசாலை வளவுள் மாரிகாலம் தொடங்கினால் புரட்டாதி மாதத்தில் இருந்து மாசி மாதம் வரை இரண்டு அடி நீர்த்தேங்கி நிற்கும். மிகவும் பள்ளமான இடத்தில், வெள்ளம் கடலுக்குச் செல்லும் பெரு வாய்க்காலின் அருகே அப்பாடசாலை அமைந்திருப்பதால் பாடசாலை கட்டிய நாள் முதல் அங்கு வெள்ளம் நிற்கின்றது.

‘‘நானும் இப்பாடசாலையில் தான் கல்வி கற்றேன். எனது தாய், தந்தை, பாட்டனாரும் இப்பாடசாலையில் தான் கல்வி கற்றனர். நாம் படிக்கும் போது பலரை வெள்ளம் அடித்துச் சென்றுள்ளது. ஐந்தாம் வகுப்புப் படிக்கும் வரையும் என்னை எனது தந்தையார் மாரி காலங்களில் தூக்கி வந்து தான் விடுவார். நான் எல்லா அபிவிருத்தியையும் செய்து விட்டேன். ஆனால் இந்த வெள்ளத்தை அகற்ற மட்டும் என்னால் முடியவில்லை. அது எனக்குப் பெரியதொரு மன வருத்தம். இவ் வெள்ளத்தை அகற்றுவதனால் ஐந்நூறடி சுவர் கட்டுதல் வேண்டும். பாடசாலை வெள்ளம் செல்லும் வாய்காலுக்கருகில் இருப்பதால் மாரிகாலத்தில் பாடசாலைக்குள் வரும் நீர் திரும்பிச் செல்ல வழியில்லாமல் இருக்கிறது. வெள்ளம் உட்புகுவதைத் தடுக்க சுவர் கட்ட வேண்டும். பின் வாய்க்கால் மட்டத்திற்கு மண் போட்டு நிரப்புதல் வேண்டும். இதற்கு பத்து இலட்ச ரூபா செலவாகும்’’ என்றார் அதிபர்.

‘‘சுவர் கட்டுவதனால் அதனால் வரும் அழிவைப்பற்றி நாம் முதலில் சிந்திக்க வேண்டும். இப்பகுதியில் ஐம்பதிற்கு மேற்பட்ட குடும்பங்கள் இருக்கின்றன. வேகமாக வரும் வெள்ளம் சுவர் கட்டினால் வெளியே செல்ல முடியாது. அதனால் அருகில் இருக்கும் குடும்பங்கள் பாதிக்கப்படும். அத்துடன்

வெள்ள மட்டம் உயரும். அதனால் போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கும். அழிவைப் பற்றி நாம் சிந்தித்த பின்பு, அழிந்த பின் வரும் ஆக்கத்தையும், செய்து முடிந்த பின் வரும் பயன்களையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்'' என்றார் வைத்தியகலாநிதி வை. தியாகராசா.

''அழிவைப் பற்றிச் சொன்னீர்கள். ஐம்பது குடும்பத்திற்கும் அழிவு ஏற்பட்டாலும், உள்ளே புகுந்த வெள்ளம் வெளியேறாது மாதக் கணக்கில் உள்ளே குளம் போலத் தேங்கிப் பல மாதங்களுக்கு நிற்பதால் காதாரச் சீர்கேடுகள் பல உருவாகியுள்ளன. தினமும் மாணவர்கள் வெள்ளத்துக்குள்ளால் நடந்து செல்வதால் மாணவர்களுக்குப் பல நோய்கள் உண்டாகின்றன. நீர் துர்நாற்றம் வீசுகிறது. சுவரைக் கட்டி முடித்து விட்டால் நீர் உள்ளே நுழைய மாட்டாது. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அது பெரும் நன்மையைத் தரும். பெண் ஆசிரியர்கள் சேலைகளை மேலேதூக்க முடியாது அவதிப்படுகின்றனர். அதனால் அவர்கள் உடுத்தி வரும் சேலைகள் முழங்காலுக்கு மேல் வரை நனைந்து விடுகின்றன. பாடசாலை விடும் வரை அவர்கள் நனைந்த சேலைகளுடன் தான் தமது கடமைகளைச் செய்கிறார்கள்'' என்றார் அன்ரன் சில்வெஸ்ரர்.

தியாகராசா சிரித்தார்; ''உமது மனைவிக்கு அடிக்கடி வருத்தம் வருவது சேலை நனைவதாலா....?'' என்று கேட்டார்.

''நல்ல பாடசாலை, நல்ல அதிபர் அதனால் வேறுபாடசாலைக்குச் செல்ல எனது மனைவி விரும்புகிறா இல்லை. அதனால் எனது நண்பர் லயன் கவர்ணர் சிவானந்தன் இரண்டு இலட்ச ரூபா தருவதாகச் சொல்கிறார். முதலில் மதிலைக் கட்டுவோம். பின் லயன் டன்சன் உதவி செய்வதாகக் கூறுகிறார். வேலையைத் தொடங்கினால் முடித்து விடலாம்'' என்றார் அன்ரன் சில்வெஸ்ரர்.

''சரி'' என்றார் அதிபர் மறு நாள் சுவர் கட்டும் வேலை ஆரம்பமானது. கொத்தனார் செல்லத்துரையும் கொத்தனார் குணராசாவும் தமக்குரிய வேலைகள் அனைத்தையும் ஒதுக்கி வைத்து விட்டு இரண்டு வாரகாலம் பாடசாலையில் தமது சகாக்களுடன் வேலை செய்தனர். அதிபர் மாணவர்களையும் ஓய்வு நேரங்களில் ஈடுபடுத்தினார்.

''அன்ரன், உமது உதவியை நான் மறக்க மாட்டன். நூற்றைம்பது வருட காலமாக இருந்து வந்த பெரிய தொரு பிரச்சினையை உமது தாராள மனப்பான்மையால் நிறைவு செய்து விட்டீர். இது ஒரு பெரும் உதவி'' கண்கலங்கினார் அதிபர்.

''ஐயா, இது ஒரு பெரும் உதவியல்ல. மண்போடவும் நாம் உதவி செய்வோம்'' என்றார் அன்ரன் சில்வெஸ்ரர். அதிபர் பூரித்துப் போனார்.

### 461. அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
### ஊதியமும் சூழ்ந்து செயல்.

ஒரு செயலால் வரும் அழிவையும், ஆக்கத்தையும் நன்கு ஆராய்ந்து அறிந்த பின்பே செயலில் ஈடுபடல் வேண்டும்.

## *அரிதல்ல*

23.07.2005 சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு லயன் கவர்ணர் எஸ்.சிவானந்தன் அவர்களால் கட்டப்பட்ட மதில் சம்பிரதாய மூலம் பாடசாலை அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்நிகழ்வு பெரியதொரு விழாவாகக் கொண்டாடப்பட்டது. பாடசாலையில் கல்வி கற்கும் அறுநூற்றைம்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் அன்று லயன் சிவானந்தனுக்கும் லயன் அன்ரன் சில்வெஸ்ரருக்கும் லயன் தியாகராசாவுக்கும் மலர் மாலை சூடித் தமது நன்றியைத் தெரிவித்தனர். பிரபல மேள வாத்தியக் கலைஞரான யோகநாதன் குழுவினர் சிவானந்தனையும் அன்ரன் சில்வெஸ்ரரையும் தியாகராசாவையும் பருத்தித் துறை வீதி வழியாக அழைத்து வந்தனர்.

சுவரில் பொருத்தப்பட்ட பெயர்ப் பலகையை லயன் சிவானந்தன் திரைநீக்கம் செய்து வைத்தார். அதிபர் அவ்விழாவுக்குத் தலைமை தாங்கி உரையாற்றினார்; ‘‘அன்பான லயன் சில்வெஸ்ரர் அவர்களே, லயன் கவர்ணர் சிவானந்தன் அவர்களே, வைத்தியக் கலாநிதி லயன் தியாகராசா அவர்களே, பெற்றோர்களே, பழையமாணவர்களே, நலன் விரும்பிகளே, இன்று எமது பாடசாலைக்குப் பொன்னான ஒரு நாளாகும். நூற்றைம்பது வருடங்களாக இருந்து வந்த மிகப் பெரியதொரு குறைபாடு இன்று நிறைவேறியுள்ளது. ஒரு செயலை வெற்றிகரமாகச் செய்ய வேண்டுமானால் அச் செயலைச் செம்மையாகச் செய்யத் தெரிந்தவர்களோடு நன்கு ஆராய்ந்து, தாமும் நன்கு சிந்தித்துச் செயற்பட்டால் செய்ய முடியாத அரிய செயலென்று எதுவும் இல்லை யென்று தெரிந்த நான் சகலதும் அறிந்த சில்வெஸ்ரருடனும் தியாகராசாவுடனும் இந்தச்சுவரைக் கட்டுவது பற்றி ஆராய்ந்தேன். அதற்கான சகல ஆலோசனைகளையும் அவர்கள் எனக்கு வழங்கினார்கள். கொத்தனார்களான செல்லத்துரையும் குணராசாவையும் அழைத்து சுவர் கட்டுவதற்குத் தேவையான பொருட்களைப் பற்றியும் அதற்கான செலவுகள் பற்றியும் ஆராய்ந்தேன். லயன் சிவானந்தன் சில்வெஸ்ரரிடம் சுவர் கட்டுவதற்குத் தேவையான பணம் முழுவதையும் கொடுத்தார். மறுநாள் வேலை தொடங்கினோம். இரண்டு வார காலத்துள் வேலைகள் முழுவதும் முடிவடைந்து விட்டன. இனி மண் போட்டு நிரப்ப வேண்டியுள்ளது. பாடசாலைக்கு அருகில் உள்ள உச்சுவில் குளம் ஆழமாக்க வேண்டியுள்ளதால் அவ் மண்முழுவதையும் ஏற்றி வந்து பாடசாலை வளவிற்குள்ளே போடவுள்ளோம். மக்கட் பேற்றாலோ அல்லது செல்வத்தாலோ ஒருவன் பேரின்ப வாழ்வைப் பெற மாட்டான். தான தர்மங்கள் செய்வதன் மூலம் தான் என்றும் அமர நிலையைப் பெறும் பேரின்ப வாழ்வை அடைவான். இன்று லயன் சிவானந்தனால் கொடுக்கப்பட்ட கொடையானது நூற்றைம்பது வருட காலமாக மக்கள் அனுபவித்த கொடிய துன்பத்தைப் போக்கிப் பெரும் இன்ப நிலையை அடைய வைத்துள்ளது. இந்த இன்பநிலை இன்னும் பல வருடங்களுக்குத் தொடரும். இதற்கு வழிவகுத்துத் தந்த அன்ரன் சில்வெஸ்ரருக்கும் இப்பெருங்கொடையைத் தந்த லயன் சிவானந்தனுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து பெருங் கொடையாளியான லயன் சிவானந்தன் அவர்கள் உரையாற்றுவார்.

சிவானந்தன் உரையாற்றினார்; ‘‘பற்றுக்கள் இல்லாமல், உலகில் வாழும் நலிந்த உயிர்களுக்குச் சேவை செய்வதே எமது அரிமாக் கழகத்தின் உயரிய நோக்கமாகும். இவர்களுக்குச் சேவை செய்வதே உயர்ந்த அறம். அதை நினைத்து எம்மால் இயன்ற வரை நற்செயல்களைச் செய்கின்றோம். ஏழை எளியவர்கள், அனாதைகள் கல்வியறிவில்லாதவர்களுக்கு உதவி செய்வதே

எமது நோக்காகும். அதன்படி இப்பாடசாலையின் பெரியதொரு குறைபாட்டை நீங்குமாறு அன்ரன் சில்வெஸ்ரர் எமக்குக் கோரிக்கை விடுத்தார். மழை காலத்தில் ஒரு நாள் நானும் எனது நண்பர்களான டன்சனும் தியாகரசாவும் சில்வெஸ்ரரும் வந்து பார்வையிட்டோம். அந்தத் துன்ப நிலையைக் கண்டதும் உடனே அதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டு மென்று தீர்மானித்தேன். அந்தப் பணி நல்ல முறையில் நடந்து முடிந்துள்ளது. அந்தப் பணி முழுமை பெற வேண்டுமானால் பள்ளம் நிரப்பப்படல் வேண்டும். அதற்கான உதவிகளையும் நாம் சில்வெஸ்ரர் மூலம் செய்யவுள்ளோம். எல்லா விதமான செயல்களுக்குரிய சக்தியையும் இறைவன் மனிதனுக்குள்ளே படைத்துள்ளார். இந்தச் சக்தியை விழித்தெழச் செய்வது அறிவாகும். பணம் தான் எல்லாவற்றிற்கும் உயிர் நாடி பணத்தைச் சிறுகச் சிறுகச் சேர்த்து பல ஆக்கபூர்வமான பணிகளைச் செய்ய ஒவ்வொருவரும் முயல வேண்டும். அதிபர் கூறியதைப் போல; ''ஒரு செயலைச் செம்மையாகச் செய்யக்கூடியவர்களொடு நன்கு ஆலோசித்து, தாமும் சிந்தித்துச் செயற்பட்டால் செய்ய முடியாத அரிய செயல் எதுவுமில்லை'' அது உண்மை என்பதை எனது வாழ்வில் உணர்ந்துள்ளேன்.''

**462. தெரிந்த இனத்தொடு தேர்ந்து எண்ணிச் செய்வார்க்கு
அரும் பொருள் யாதொன்றும் இல்.**

ஒரு செயலைச் செய்யத் தெரிந்தவர்களோடு நன்கு ஆலோசித்து, தாமும் நன்கு சிந்தித்துச் செயற்பட்டால் செய்ய முடியாத செயல் என ஒன்றும் இல்லை.

## *அறிவுடையவர் செய்யாதவை*

''முன்நாள் லயன் கவர்ணர் டன்சன் கலாட்டும் அவரது மனைவியின் சகோதரியின் கணவர் லயன் சுரேசும் இன்று காலை ஆகாயவிமானத்தில் கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தைப் பார்வையிட வருகிறார்கள். அவர்கள் அன்றைய தினமே கொழும்புக்குத் திரும்புகிறார்கள். அதனால் அவர்களை நல்ல முறையில் வரவேற்றல் வேண்டும். அவர்கள் பாடசாலைக்கு நீங்கள் கேட்கும் பொருட்களையெல்லாம் தரவுள்ளனர். எனவே உங்களது பாடசாலைக்குத் தேவையான அத்தனை பொருட்களையும் பட்டியலிட்டு ஆயத்தமாக வைத்திருங்கள்'' என்றார் அன்ரன் சில்வெஸ்ரர்.

கோப்பாய் நாவலர் வித்தியாலய அதிபர் அதிர்ந்து போனார். பதினைந்து தினங்களுக்கு முன் வெள்ளம் உட்புகாமல் மதில் கட்டித்தந்த அரிமாக்கழகத்தைச் சேர்ந்த சிவானந்தன் வந்து போனதை மறக்க முடியாது நினைவில் வைத்து மகிழ்ந்து கொண்டிருந்த அதிபருக்கு அன்ரன் சில்வெஸ்ராரின் அந்த வார்த்தைகள் வியப்புடன் கூடிய அதிர்ச்சியைக் கொடுத்தன.

''எல்லாப் பொருட்களு மென்றால்'' வார்த்தைகளை அதிபர் முடிக்கு முன் அன்ரன் சில்வெஸ்ரர் சொன்னார்; ''உங்களுக்குத் தேவையான அத்தனை பொருட்களையும் பட்டியலிடுங்கள். சுரேஸ், ரொராண்டோ நகரில் இருந்து வந்திருக்கிறார். அவருக்கு நிறையச் செய்ய வேண்டு மென்ற விருப்பம் இருக்கிறது. கட்டிடம் தேவையென்றால் கட்டிடத்தையும் எழுதுங்கள். நாளைக்

காலையில் அவர்களை வரவேற்பதற்கு ஆயத்தங்களைச் செய்யுங்கள். பெற்றார், ஆசிரியர்கள், மாணவர்கள் அந்நிகழ்வில் கலந்து கொள்வது சிறப்பானது'' என்றார்.

மறுநாள் காலை ஒன்பது முப்பது மணிக்கு டன்சன் கலாட்டையும் சுரேசையும் அழைத்து கொண்டு அன்ரன் சில்வெஸ்ரர் பாடசாலைக்கு வந்தார். அவர்களை வைத்தியர் கலாநிதி தியாகராசாவும் அதிபரும் ஆசிரியர்களும் பெற்றோரும், மாணவர்களும் மாலை சூட்டிக் கௌரவித்து வரவேற்றனர்.

பாடசாலையைச் சுற்றிப் பார்வையிட்ட சுரேஸ், உரையாற்றினார்; ''அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் அனைவருக்கும் வணக்கம். நான் கனடா நகரில் உள்ள ரொராண்டோ நகரில் இருந்து வந்துள்ளேன். இப்பாடசாலையைப் பார்க்க எனக்குக் கவலையாக உள்ளது. அதிபர் கேட்ட இருநூறுகதிரைகள், ஐந்து அலுமாரிகள், மூன்று கோவையைப் பாதுகாக்கும் அலுமாரிகள், ஒரு தொலைக்காட்சிப் பெட்டி, ஒரு ரோணியோ இயந்திரம், ஒரு வானொலிப் பெட்டி ஆகியவற்றை உடனே நான் வாங்கிக் கொடுக்கிறேன். முன்பும் அரிமாக்கழகம் நாவலர் பாடசாலைக்குப் பெரும் நிதியுதவி செய்துள்ளது. அதனால் இவ்வுதவியை வேறு பாடசாலைக்குச் செய்யும்படி சொன்னார்கள். ஆனால் நாம் இப்பாடசாலையைத் தான் அபிவிருத்தி செய்யவுள்ளோம். எனது பிள்ளைகள் யாழ்ப்பாணத்திற்கு வரும்போது நான் கட்டிய கட்டிடத்தைப் பார்க்க வேண்டும். அதற்காக அதிபர் கேட்ட நூற்றிப்பத்து அடி நீளமும் இருபத்தைந்து அடி அகலமுமான மாடிக் கட்டிடத்தை அமைக்கவும் விம்புகிறேன். அது பற்றி நான் கனடாவுக்குச் சென்ற பின்பு தான் முடிவு சொல்லுவேன்'' என்றார்.

அதிபருக்குத் தாங்கிக் கொள்ள முடியாத மகிழ்ச்சி அவரால் தனது இருப்பை நம்ப முடியவில்லை. ''கனவு காண்கின்றேனா?'' என்று நினைத்தார்.

''இவ்வளவு உதவிகளுக்கும் காரணமானவர் அன்ரன் சில்வெஸ்ரர். அவரை எனக்குப் பிறந்தன்றிலிருந்து தெரியும். நான் படிக்கும் காலங்களில் அவர்களது குடும்பம் எமது வீட்டிற்கு அருகிலேயே இருந்தது. நல்லதொரு பண்பான குடும்பத்தவராகையால் தான் அவருக்கு உதவி செய்யும் மனப்பான்மை இருக்கிறது. அவரது உதவியை எமது பாடசாலைச் சமூகம் ஒரு போதும் மறக்க மாட்டாது'' என்றார் அதிபர்.

வந்தவர்கள் எல்லோரும் சென்று விட்டனர். ஆசிரியர்களும் சில பெற்றோர்களும் நின்றனர்; ''ஐயா, ஆறுமுகநாவலர் நூற்றைம்பது வருடங்களுக்கு முன்பு கட்டிய இக்கட்டிடத்தை இடித்து விட்டு இவ்விடத்தில் புதிய கட்டிடத்தை அமைக்கலாம்'' என்றார் ஒரு பெற்றார்.

அதிபர் சிரித்தார்; ''வரவிருக்கும் வருவாயை கருத்திற் கொண்டு, இப்போதுள்ள மூலதனத்தை இழந்து விடக்கூடிய செயலை நாம் செய்யக் கூடாது. எமது அயற் பாடசாலை அதிபர் முன் யோசனை இல்லாமல் உள்ள பழைய கட்டிடங்களை யெல்லாம் உடைத்ததால் பத்துப் பதினைந்து வருடங்களாக மாணவர்கள் ஓலைக் கொட்டில்களுக்குள் அவதிப்படுகிறார்கள். மழை காலங்களில் வகுப்புக்கள் நடைபெறுவதில்லை. கூரை வேயப்படுவதில்லை. பழைய கட்டிடமானாலும் நாம் இடிக்கக் கூடாது. நமது நாடு இப்போதுள்ள சூழ்நிலையில் கட்டிடம் கட்டப்படாமலும் விடப்படலாம்'' அத்துடன்

அவர்கள் கூறிய பொருட்கள் எமது கைக்கு வரும் வரை நம்பக்கூடாது'' என்றார் அதிபர்.

''எமது கிராம மக்கள், இங்கு படித்த பலர் நினைத்தால் எவ்வளவு செய்யலாம். யாரோ ஒரு அன்னியர், யாழ்ப்பாணத்தைப் பற்றியே தெரியாதவர் உதவி செய்ய முன்வரும் போது எமது பழைய மாணவர்கள் உதவி செய்யாமல் இருப்பது எவ்வளவு வேதனையானது'' என்றார் இன்னொரு பெற்றார்.

''பணமுள்ளவர்களுக்கு மனம் இருத்தல் வேண்டும். வெளிநாட்டில் இருந்து இங்கு வரும் பழைய மாணவர்கள் பாடசாலைப் பக்கமே வருவதில்லை. என்னைக் கண்டால் மறைந்து விடுகிறார்கள். கனடாவில் இருந்து வந்த ஒரு பழைய மாணவனால் நான் பட்ட துன்பங்கள் போதும். விளையாட்டு மைதானத்தைத் தான் வாங்கித் தருவதாகக் கூறியதால் நான் விளையாட்டு மைதானத்தை வாங்கினேன். அதனால் கோடேறி மானங் கெட்டது தான் மிச்சம்'' பெருமூச்சு விட்டார் அதிபர்.

''ஐந்து இலட்சம் அனுப்புவதாகச் சொன்ன சிவகுமாரன் ஐயாயிரம் ரூபா கூட அனுப்பவில்லை. ஊரவரும் உதவவில்லை. யரோ ஊர் பேர் தெரியாதவர்கள் தான் உதவினவை..'' என்றார் இன்னொரு பெற்றார்.

''வெளிநாட்டில் இருந்து வந்த இரண்டு பழைய மாணவர்களைப் பாடசாலை விளையாட்டுப் போட்டிக்கு வரும்படி அழைத்தேன். அவர்கள் ஏதாவது கொடுக்க வேண்டு மென்று நினைத்து வரவில்லை. அப்படியிருக்கும் போது கொழும்பில் பிறந்து வளர்ந்த சிவானந்தன் இலட்சக்கணக்கில் உதவியிருக்கிறார்கள். அவரைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை'' என்றார் அதிபர். அவரது கண்கள் கலங்கின. குரல் அடைத்தது.

**463. ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை**
**ஊக்கார் அறிவுடை யார்.**

பின்பு வரவிருக்கும் வருவாயைக் கருதித் தன்னிடமிருக்கும் மூலதனத்தை இழந்து விடக் கூடிய செயலை அறிடையவர்கள் செய்ய மாட்டார்கள்.

### *எச்சரிக்கையானோர்*

''இப்பொழுது பெற்றோர் சிலர் சொன்னதைக் கேட்டனீர்தானே. இந்தப் பாடசாலை மாவட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப் அளித்துக் கொண்டிருந்தாலும் பணக்காரப் பெற்றோர்கள் உதவுவது மிகமிகக் குறைவு. உதாரணத்திற்குச் சொல்லப் போனால் இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு பாடசாலை வளவை நிரப்புவதற்காக நாம் உச்சுவில் குளத்தில் இருந்து மண் வெட்டி வந்து போட நினைத்துக் கூட்டம் ஒன்றைக் கூட்டினோம். நூற்றுக்கு மேற்பட்ட பெற்றோர் அதில் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்திற்கு

வந்திருந்த பெற்றோரில் பெரும்பான்மையான பெற்றோரின் பிள்ளைகள் இங்கு கல்வி கற்றவர்கள். பெரிய பெரிய உத்தியோகங்களிலும் வெளிநாடுகளிலும் இருக்கிறார்கள். அவர்களுக்கு எமது பாடசாலையின் நிலைமை முழுவதும் தெரியும். இருந்தும் அவர்கள் கூட்டம் நடக்கும் போதே வெளியே சென்று விட்டார்கள். இதில் வேடிக்கை என்ன வென்றால், வெளியேறியவர்களில் அனேகமானோர் ஆசிரியர்களின் மனைவிமார். அவர்களும் ஆசிரியைகள் பொதுவாக யாழ்ப்பாணத்து உத்தியோககார ஆண்கள் கூட்டங்களுக்கு வருவது மிகமிகக் குறைவு. அவர்கள் தமது மனைவி மார்களை அனுப்பி விட்டு வீட்டில் இருந்து விடுவார்கள். கூட்டத்தில் முடிவெடுக்க முடியாத நிலை ஏற்படும். பெண்கள் தமது கணவன் மார்களைக் கேட்டுத் தான் சொல்ல வேண்டுமென்பார்கள். மறு நாள் பாடசாலைக்கு வந்து சொல்வதாகவும் சொல்வார்கள். ஆனால் வரமாட்டார்கள்'' சிறிது மூச்சு விட்டார் அதிபர்.

''இதெல்லாம் எனக்குத் தெரியும். நீங்கள் கூட்டத்தில் கூறியதாக எனது மனைவி கலா கூறினவா'' என்றார் அன்ரன்.

''உங்கள் மனைவியைப் போல புரிந்துணர்வுமிக்க ஆசிரியர்கள் இங்கு எவரும் இல்லை. இங்கு வரும் வெளிநாட்டவர்கள் பலர் அது செய்வோம் இது செய்வோம் என்று கூறிவிட்டுச் செல்கிறார்களே தவிர வேறெதுவும் செய்ததில்லை. தறுமுவின் மகன் நான்கு கதிரைகள் வாங்கித் தந்தான். சிவானந்தனின் மகன் பிரபாகரன் ஐயாயிரம் ரூபா தந்தான். தேவராஜேந்திரன் பாடசாலைப் பெயர்ப் பலகையைச் செய்து தந்தான். இது தவிர பாலசுப்பிரமணியம் என்ற பழைய மாணவன் நீர்தாங்கி அமைக்க உதவி செய்தவர். இவர்களைத் தவிர வெளிநாட்டிலுள்ள மாணவர்கள் உதவி செய்யவில்லை. கனடாவிலை உள்ள கோப்பாய்ச் சங்கம் அறுபதினாயிரம் ரூபா அனுப்பினது. பெருந்தொகையாக நீங்கள் தான் உதவி இருக்கிறீர்கள்.'' இங்கு கற்பித்த மதியழகன் ஆசிரியர் கனடாவிலிருந்து இருபத்தையாயிரம் ரூபாவும் வண்டி மணியண்ணை பத்தாயிரம் ரூபாவும் விளையாட்டு மைதானத்திற்குத் தந்தவை. ஒவ்வொரு வேலை செய்யும் போதும் எனக்குப் பத்துப் பதினையாயிரம் ரூபா பொறுக்கும். விளையாட்டுப் போட்டியில் வருடாவருடம் ஆறாயிரம் ஏழாயிரம் ரூபா நான் தான் மேலதிகமாகச் செலவு செய்வேன்''

''தமக்கு இழிவு ஏற்படக் கூடாது என்று நினைத்துக் கொள்கைக்காக வாழ்பவர்கள். தாம் தெளிவாகச் செய்ய முடியாத எந்தச் செயலையும் செய்யப் போவதாகச் சொல்ல மாட்டார்கள். டன்சன்கலாட் மிகவும் நேர்மையானவர். எத்தனையோ சமூகசேவைகளைச் செய்தவர். அவரது நண்பரான சிவானந்தனும் பல சமூக சேவைகளைச் செய்தவர். அதனால் தான் நான் துணிந்து உங்களுக்குப் பல இலட்சரூபா செலவில் சுவரைக்கட்டுவித்துத் தந்தேன். இப்பொழுது பல இலட்சரூபா பெறுமதியான பொருட்களைச் சுரேசிடமிருந்து பெற்றுத் தந்தேன். இன்னும் இப்பாடசாலைக்குத் தேவையான கட்டிடங்களையும் பொருட்களையும் பெற்றுத்தருவேன்''. என்றார் சில்வெஸ்ரர்.

''நீங்கள் எமக்குக் கிடைத்தது பெரும் பொக்கிஷம். நீங்கள் இங்கு படிக்கவில்லை. உங்களது சகோதரர்கள் தான் படித்தார்கள். தற்பொழுது உங்கள் மனைவி எமது பாடசாலையில் கற்பிக்கிறார் என்பதற்காக எமது பாடசாலைக்கு அளப்பரிய பல உதவிகளைச் செய்கிறீர்கள். நீங்கள் சகல வளங்களும் பெற்றுச் சிறப்பாக வாழ வேண்டும்'' என்றார் அதிபர்.

“நான் எல்லோருடனும் பழக மாட்டேன். நான் கற்ற பாடசாலைக்கு உதவிகள் செய்யவில்லை என்று எனது உறவினர்களும் நண்பர்களும் குறை கூறுகிறார்கள். ஒருவன் தனக்கு இழிவேற்படக் கூடாதென்று நினைத்து எச்சரிக்கையுடன் செயலாற்ற வேண்டும். தான் சரியாக அறியாதவற்றைக் கதைக்கக் கூடாது. கதைப்பதை நிதானத்துடன் கதைத்தல் வேண்டும். அப்படியல்லாதவர்களுடன் நான் தொடர்பு வைப்பதில்லை. டன்சன் கலாட்டும் சிவானந்தனும் சுரேசும் தமக்கு இழிவு ஏற்படக் கூடிய எந்தச் செயலையும் செய்ய மாட்டார்கள். மக்கள் கூடியுள்ள சபையில் தமது பெருமைக்காக தம்மால் செய்ய முடியாதவற்றைச் சொல்ல மாட்டார்கள். பொய்யான வாக்குறுதிகளைத் தரமாட்டார்கள். நீங்கள் கேட்ட பொருட்கள் அனைத்திற்கும் நான் பொறுப்பு” என்றார் அன்ரன் சில்வெஸ்ரர்.

கனடா, பிரான்ஸ், லண்டன், ஜேர்மனி, சுவிஸ் போன்ற நாடுகளில் வாழும் பழைய மாணவர்களை ஒரு கணம் நினைத்துப் பார்த்தார் அதிபர். அவர்களை நினைக்க அவருக்கு அருவருப்பாக இருந்தது. வயிற்றைப் புரட்டியது.

**464. தெளிவு இலதனைத் தொடங்கார் இளிவு என்னும்**
**ஏதப்பாடு அஞ்சு பவர்.**

தமக்கு இழிவு வரக்கூடாது என்று அஞ்சுபவர்கள், தாம் தெளிவாக அறிந்து கொள்ளாத எந்தச் செயலையும் செய்யத் தொடங்க மாட்டார்கள்.

## *நிலைபெறச் செய்யும்*

நாவலர் வித்தியாலய மாணவர்களுக்கு யப்பான் நாட்டு மூளைக் காய்ச்சல் நோய்க்கான தடுப்பூசி ஏற்றுவதற்காக வைத்தியர் அங்குசனும் தாதியர்கள் நால்வரும் அங்கு வந்தனர். அதிபருடன் அன்ரன் சில்வெஸ்ரர் உரையாடிக் கொண்டிருந்தார். அங்குசனைக் கண்டதும் எழுந்து வெளியே வந்தார். அதிபர் பிரதி அதிபர் திருமதி வாகீசனை அழைத்துத் தடுப்பூசி போடுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பணித்தார். அப்போது அங்குசனைத் தேடிக் கொண்டு தணிகாசலம் அங்கு வந்தார்.

“வாருங்கோ தணிகாசலம்அண்ணை பல நாட்களாக நான் உங்களைக் காணவில்லை. ஊர்த்தொண்டு துரவுகளுடன் மகளின் திருமணப் பிரச்சினைகளும் வந்ததாலை நேரமில்லாமல் திரிகிறதாகக் கேள்விப்பட்டேன். வெள்ளிக்கிமை மகா கணபதி கோயிலும் காணவில்லை” என்றார் அதிபர்.

“ஓம், சம்பந்தியவை கொழும்பிலிருந்து வந்திருக்கினை. அவையோடு ஒரு விஷயமாய் வெளியே சென்றுவர ஒன்பது மணிக்கு மேலாகி விட்டது. எனக்காகக் குருக்கள் காத்திருப்பர். அத்துடன் தினமும் மகா கணபதியைத் தரிசிக்கா விட்டால் அன்று எதையோ ஒன்றை இழந்து விட்டதைப் போல இருக்கும். ஒன்பதரை மணிக்குத் தான் அன்று கோயிலுக்கு வந்தனான். அப்பபூசைகள் எல்லாம் முடிந்து சனம் போயிட்டுது” என்றார் தணிகாசலம்.

“ அன்ரனைத் தெரியும் தானே., தனது நண்பர் ஒருவர் மூலம் எமக்கு ஏராளமான பொருட்களைத் தந்துள்ளார்” என்றார் அதிபர்.

“ஒரு காரியத்தைச் செய்வதற்கு மனப்பலம் அதிகம் தேவை; இடையறாத முயற்சி தேவை. முன்பு அவர் உங்களுக்கு வெள்ளம் பாடசாலையில் நுழையா வண்ணம் தமது நண்பனைக் கொண்டு தடுப்புச் சுவர் கட்டித் தந்தவர். இப்பொழுதும் கனாடாவில் வாழும் தனது நண்பரின் இனத்தவரைக் கொண்டு ஏராளமான உதவிகளைச் செய்ய விரும்புவதாக அறிந்து மகிழ்ந்தேன். எந்தவிதமான சுயநல நோக்கமும் இல்லாமல், பணத்தைச் சேமித்துப் புதைத்து வைத்து தாமும் தமது பிள்ளை குட்டிகளும் நன்றாக வாழ வேண்டும் என்றும் நினைக்காமல் தான தர்மங்களைச் செய்யும் சிலரால் தான் உலகம் வாழ்கிறது. தன்னைப் பற்றி மட்டும் நினைத்துக் கொள்வது தான் மிகப் பெரிய சுயநலம். அது மிகப்பெரிய பாவமும் கூட. நான் தான் மற்றவர்களை விடக் கல்விமான்; செல்வந்தன்; முன்மாதிரியானவன் என்று நினைப்பவர்கள் தான் அதிகம். ஆனால் எங்கோ இருப்பவர்கள் வசதிகளில்லாத பிள்ளைகளின் கல்வியில் அக்கறை செலுத்துவதென்பது ஆச்சரியமான செயல். ஆனால்.....” என்று கூறிவிட்டு நிறுத்தினார் தணிகாசலம்.

“நீங்கள் நினைப்பதைச் சொல்லுங்கள்” என்றார் அன்ரன்.

தணிகாசலம் சிரித்து விட்டுச் சொன்னார்; “நீங்கள் கற்ற பாடசாலைக்கு எதுவித உதவிகளையும் செய்வதில்லை என்று பலர் குறை கூறினார்கள். என்னைப் பொறுத்தவரை நீங்கள் செய்தது சரி. மதிப்பவனைத் தான் நாம் மதித்தல் வேண்டும். தினமும் காரணமின்றி வீண் வார்த்தைகள் பேசுபவர்களை நாம் மதிக்கவே கூடாது”.

அன்ரன் எதுவும் பேசவில்லை. மெதுவாக முறுவலித்தார்; “ ஒருவரின் செயலின் தன்மையை நன்கு ஆராயாமல் அவருக்கு உதவி செய்யத் தொடங்குவது என்பது பகைவரை வளரும் வழியில் மேலும் நிலை பெறச் செய்வதாக முடியும் என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். இரண்டு பாடசாலைகளும் அருகில் இருக்கின்றன. இப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் இடை நிலைக் கல்வியையும் கற்கும் மாணவர்கள் உயர் கல்வியைப் பெறுவதற்காக அங்கு தானே செல்கிறார்கள். அதனால் இப்பாடசாலைக்குச் செய்யும் உதவிகள் அப்பாடசாலையைச் சென்றடையும்” என்றார் அன்ரன்.

“உண்மை; நீங்கள் சொல்வது சரி, நாம் இன்பமாக வாழ வேண்டும். மற்றவர்களையும் இன்பமாக வாழ உதவி செய்தல் வேண்டும். எம்மால் ஒருவனின் உள்ளத்தில் சிறிதளவு மகிழ்ச்சியை உண்டு பண்ண முடியுமானால் அது இறைவனை மகிழ்வித்தமைக்கு ஒக்கும். நீங்கள் இங்கு கல்வி பயிலும் அறுநூறுக்கு மேற்பட்ட மாணவர்களினதும், அவர்களின் பெற்றோரினதும் மனதைக் காலம் பூராகவும் மகிழ்ச்சியடைய வைத்திருக்கிறீர்கள். இது ஒரு அரிய செய்ல், பலர் நீங்கள் செய்த உதவியைப் பற்றி அலட்டிக் கொள்வதில் தமது சக்தியைச் சிதற விடுகிறார்கள். அதை விட அமைதியாக உங்களது உதவிகளைப் பற்றிச் சிந்தித்துத் தமக்கும் உதவுமாறு கோருவது தான் சிறந்த பண்பு. நல்லவர்கள் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுபவர்கள் அடிக்கடி நன்மைகளைப் பெற்றுக் கொண்டே இருப்பார்கள்” என்றார் தணிகாசலம்.

அங்குசன் சிரித்தார்; " தணிகாசலமண்ணை ஒரு மேதை. அவரோடு கதைத்துக் கொண்டே இருக்கலாம்" என்றார்.

"அவர் படிக்காத மேதை. படித்துப் பட்டம் பெற்றவர்களுக்குக் கூட இவரிடம் உள்ள அறிவு இல்லை" என்றார் அதிபர்.

### 465. வகையறச் சூழாது எழுதல் பகைவரைப் பாத்திப் படுப்பதோர் ஆறு.

செயலின் வகைகளை முற்றாக அறிந்து கொள்ளாமல் செய்யத் தொடங்குவது, பகைவரை வளரும் வழியில் மேலும் நிலை பெறச் செய்வதாகவே முடியும்.

## *கேடுகள்*

அங்குசன் வைத்தியசாலைக்குத் திரும்பி வந்த போது வைத்தியசாலைத் தொழிலாளியான கந்தசாமி ஓடி வந்து சொன்னான்; "ஐயா, கணபதி கடைக்குச் சென்று காய்கறிகள் வாங்கி வரும் போது வழியில் யாரோ தாக்கி விட்டுச் சென்று விட்டனர். வீட்டார் கணபதியைத் தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்தனர். அவர்கள் கொண்டு வரும் போது கணபதி நினைவிழந்திருந்தார். நாங்கள் பயந்து விட்டோம். பாலகுமாரன் ஐயா சோதித்துப் பார்த்து விட்டுப் பயப்படத் தேவையில்லை என்றார். தலையில் ஐந்து தையல்களும் கையில் மூன்று தையல்களும் போட்டிருக்கிறார்".

"யார் அடித்தார்கள் என்று தெரியுமா?" என்று கேட்டார் அங்குசன்.

"யாரென்று தெரியவில்லை ஐயா, கணபதிக்கு உங்களைத் தவிர மற்றெல்லோரும் எதிரிகள். அவருக்கு அடித்து ஒரு மணித்தியாலம் வரை இரத்தப் பெருக்கோடை வீதியிலை கிடந்திருக்கிறார். ஒருத்தருக்கும் உதவி செய்ய வேண்டு மென்ற எண்ணம் வரவில்லை. பெரும்பான்மையான சனத்திற்குக் கணபதி இறப்பது தான் விருப்பம். கணபதியின் இளைய மகன் ஒரு நாள் சொன்னான்; "இந்தாள் செத்துப் போனால் கரைச்சல் இல்லை. செய்யக்கூடாத பல செயல்களைத் தினமும் செய்து எமது மானத்தைப் போக்குகிறார். இதை விடச் சாவது நல்லது" என்றவன். பாதையால் சென்ற யாரோ ஒருவர் கணபதியின் மூத்த மகனின் வீட்டுக்குச் சென்று சொன்ன பின் தான் அவர்கள் வந்து கணபதியைத் தூக்கிக் கொண்டு வந்தவை".

"கெட்டவர்களானாலும், அவர்கள் துன்பப்படும் போது உதவி செய்ய வேண்டும். தீமை செய்பவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டும். அப்படியான ஒரு மனிதர் இப்பகுதியில் இல்லையா?" என்று கேட்டார் அங்குசன்.

‘‘ஐயா, உங்களுக்குக் கணபதியைப் பற்றித் தெரியாது. ஒரு முறை கணபதி நன்றாகக் குடித்து விட்டு யாருடனோ சண்டைக்குப் போயிருக்கிறான். அவனை விலக்குப் பிடிக்கச் சென்ற ஊரவனொருவனைக் கணபதியும், கணபதியுடன் சண்டைக்குப் போனவனும் சேர்த்து; ‘‘நாம் நண்பர்கள் இப்ப சண்டை பிடிப்பம், பிறகு சேருவம் நீ யாரடா கேட்கிறது?’’ என்று சொல்லி அடித்தவர்கள். இவர்கள் சண்டை பிடித்தால் விலக்குப் பிடிக்கப் போக இந்த ஊரவை பயப்பிடுவினை, இன்னொரு நாள் இரவு கணபதி குடித்து விட்டு வீதியின் குறுக்கே விழுந்து கிடந்திருக்கிறான். அவனைத் தூக்கிவிட எவரும் முயலவில்லை. வாகனங்கள் ஓர் ஓரமாகச் சென்றன. வழியால் வந்த அயலூரவர் ஒருவர் கணபதியை தூக்கியிருக்கிறார். கணபதி கோபமாக அவரை ஏசி அவரது கையில் கடித்து விட்டான். அதனால் அவருக்கு மூன்று தையல் போடப்பட்டது. இதற்குப் பயந்து தான் மக்கள் இப்படியானவர்களுக்கு உதவி செய்வதில்லை. வேறு யாராவது ஒருவருக்கு ஏதாவது நடந்தால் விரைந்து உதவி செய்வார்கள்’’ என்றான் அந்தத் தொழிலாளி.

அங்குசனுக்கு அவன் கூறியது நியாயமாகப்பட்டது; ‘‘உதவி செய்யச் சென்று உபத்திரத்தை ஏன் விலைக்கு வாங்குவான் என்று மக்கள் நினைப்பது சரியெனப்பட்டது. யோசித்தபடி வைத்தியசாலைக்குச் சென்றார். கணபதி படுத்திருந்த கட்டிலைச் சுற்றி பலர் நின்றனர். கணபதி அங்குசனைக் கண்டதும் எழும்பி கட்டிலுக்கருகில் இருந்த நாற்காலியைப் பிடித்துக் கொண்டு நின்றான்.

‘‘இரு கணபதி’’ என்றார் அங்குசன்.

‘‘ஐயா, நான் யாருடனும் சண்டைக்குச் செல்லவில்லை. முன்பு செய்த பாவத்திற்கான தண்டனைகள் இப்போது கிடைக்கின்றன’’. அழுதான் கணபதி.

அங்குசன் எதுவும் பேசவில்லை. தெய்வானை சொன்னாள்; ‘‘ஐயா, இவர் முன்பு செய்ய வேண்டிய காரியங்கள் எதையும் செய்யவில்லை. செய்யக் கூடாத பல கெட்ட செயல்களைத் தீயவர்களுடன் சேர்ந்து செய்தவர். அதனால் வரும் கேட்டை ஏற்கத் தானே வேண்டும். இவரின் செயல்களால் நாம் முன்பு அவமானப்பட்டோம். இப்ப இவரின் கெட்ட செயல்களால் கஷ்டப்படுகிறோம். இவர் திருந்தி விட்டார் என்று நாம் எப்படிச் சந்தோசப்படுவது. இவர் திருந்தினாலும் முன்பு இவர் செய்த தீய செயல்களால் துன்பப் பட்டவர்கள் இவரைப் பழிவாங்கக் காத்திருக்கிறார்கள். இதனால் எமக்குக் கரைச்சலும், பணச் செலவும் ஏற்படும் தானே…’’ அழுதாள் தெய்வானை.

‘‘உண்மை தான் ஐயா, பொன்னுத்துரை சொன்னதற்காக நான் கதிரவேலுவுடைய வயலுக்குத் தீ வைத்தனான். நன்றாக முற்றி விளைந்து அறுவடைக்குத் தயாராக இருந்த நெல்லுக்குத் தீவைத்தால் நாலைந்து பேரின் வயல் எரிந்து சாம்பலானது. அவர்கள் தான் எனக்கு அடித்தவை’’ என்றான் கணபதி.

கணபதியின் மீது அங்குசனுக்கு இரக்கம் வரவில்லை. அவனது மகன் கூறியதைப் போல அன்று அவன் இறந்திருந்தால் கூட அவர் கவலைப்பட்டிருக்க மாட்டார்; ‘‘ஐயா, நான் இனித் தவறுகள் செய்ய மாட்டன்’’. என்று அழுதபடி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான் கணபதி. அவையொன்றும் அங்குசனுக்குக் கேட்கவில்லை.

**466. செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.**

ஒருவன் செய்யத் தகாத செயல்களைச் செய்வதாலும் கெடுவான்; செய்யத்தக்க செயல்களைச் செய்யாது விடுவதாலும் கெடுவான்.

## *தவறு*

விக்னேஸ்வரமூர்த்தி, தணிகாசலத்துடன் பாடசாலை அலுவலகத்தில் உரையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது அங்கே வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு.ஆ. சி. நடராசா தனது பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த சிலருடன் வந்தார். நடராசா சிறந்த ஓர் அதிபர். வயாவிழானில் இருந்து பத்து வருடங்களுக்கு முன்பு இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து சென்ற மக்களை ஒன்று திரட்டி ஓர் இடத்தில் குடியமர்த்தி பாடசாலையைக் கிடுகுகளால் அமைத்து நடத்துபவர். பலமுறை இடப் பெயர்வுகள் நிகழ்ந்த போதும் மனம் சலிப்படையாது புதிய புதிய இடங்களில் பெருஞ் செலவில் பாடசாலைக் கட்டடங்களை அமைத்துக் கல்விப்பணி புரிந்து பெரு வெற்றி கண்டவர்.

''வா நடா,'' என்று அன்புடன் நடராசாவை வரவேற்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''என்ன என்னைத் தேடி வந்திருக்கிறீர்கள்.''

''விக்கி, நான் களைத்துப் போனேன். பல இலட்சம் ரூபா செலவு செய்து பல இடங்களிலும் பாடசாலையை அமைக்க அமைக்க இடம் பெயர்வுகள் வந்து விடுகிறது. தென்மராட்சியால் திரும்பி வந்து இரண்டு இடத்தில் பாடசாலையை அமைத்து விட்டோம். இப்பொழுது பாடசாலையை உரும்பராயில் உள்ள ஒருவரின் வீட்டில் அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். இங்கு எமது ஊரவர்கள் பலர் வாழ்கிறார்கள். அவர்களைச் சந்திக்க வந்தோம். நண்பரான உங்களின் நினைவு வந்தது'' நடராசா சிரித்தார்.

''தணி, அவர் எனது நண்பர். உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்'' என்று தணிகாசலத்தைப் பார்த்துச் சொன்னார் விக்னேஸ்வரமூர்த்தி.

''இவரைத் தெரியாதவர்கள் இருக்கிறார்களா? சிறந்த அதிபர்; கல்வியாளர்; பரோபகாரி. தனக்குக் கொடுத்த ஓர் இலட்சரூபா பெறுமதியான மோட்டார் வாகனத்தை விற்று பாடசாலைக்குச் செலவு செய்தவர். அத்துடன் தானே நாடகம் எழுதி ஆசிரியர்களுடன் சேர்ந்து நடித்து மூன்றரை இலட்சம் ரூபா

சேர்த்துப் பாடசாலைக்குக் கொடுத்தவர். தென்னோலைகளை வீடு வீடாகச் சென்று சேர்த்து, அதை இடம் பெயர்ந்தவர்களைக் கொண்டு பின்னித் தானே கூரையில் ஏறி இருந்து வேய்ந்தவர். இடம் பெயர்வுகளின் போது நிரந்தரக் கட்டிடங்களையுடைய பாடசாலைகளை விடக் கூடுதலான வேலை செய்தவர்; அகதிமுகாங்களில் உள்ள பிள்ளைகளுக்கு மாலை நேர வகுப்புக்களை வைத்தவர். அகதி முகாம்களில் உள்ள பிள்ளைகளுக்கு எழுது கருவிகளும் அப்பியாசப் புத்தகங்களும் வழங்கியவர். அதை விடக் கொட்டில்கக்குள் வகுப்பு நடத்தி கா.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மாணவர்களைச் சிறந்த பெறுபேறுகள் எடுக்க உதவியவர். ஒவ்வொரு முறையும் ஒன்று இரண்டு மாணவர்கள் நான்கு பாடத்திலும் அதிவிசேட சித்தி பெற்று வந்துள்ளனர். கடமை உணர்ச்சி மிக்க கண்ணியமான நாட்டுப் பற்று மிக்க ஒரு கணவான்'' என்றார் தணிகாசலம்.

''நடராசாவின் விழிகள் கலங்கின. உணர்ச்சி மிகுதியால் சில கணங்கள் பேச முடியாது தடுமாறினார் நடராசா.

''ஒருவன் மற்றவர்களை நம்பாது, தன்னில் நம்பிக்கை வைத்தானேயானால் அவனால் செய்ய முடியாதது என்று எதுவும் இல்லை. தான் செய்யப் போகும் செயலை நன்கு சிந்தித்து, அதைச் செய்யும் வழிகளை நன்கு ஆலோசித்த பின்பு செயலைச் செய்ய தொடங்கினால் எதிலும் வெற்றி பெறலாம். அதை விட்டு விட்டுச் செயலைத் தொடங்குவோம், தொடங்கினால் செய்து முடிக்கலாம் என்று நினைப்பது தவறாகும். நடராசா செயல் வீரன். செயலைத் தொடங்கு முன்பே அதற்கான சகல திட்டங்களையும் உருவாக்கி விடுவார். அதனால் வெற்றியடைகிறார். அவர் செயல் வீரர்களை மதிப்பாரே தவிர பிரமுகர்களை மதிக்க மாட்டார். ஒரு முறை பெருந் தொகையான நிதியுதவி செய்த விவசாயி ஒருவரை மேடையில் ஏற்றிப் பொன்னாடை போர்த்தியவர்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''என்னைப் பற்றிச் சொல்கிறீர்கள். உங்களை விட நான் கூடுதலாக எதைச் செய்து விட்டேன்'' என்றார் நடராசா.

''நாம் இடம்பெயரவில்லை. இருந்த இடத்தில் இருந்து கொண்டே அபிவிருத்தி செய்து வருகிறோம். ஆனால் நீங்கள் அப்படியல்ல. பத்துப் பதினைந்து தரம் இடம் பொந்து கட்டிடம் கட்டிய தோடு மட்டு மல்லாமல் கல்வியையும் வரலாறு காணாத வகையில் முன்னேறியுள்ளீர்கள். உங்களைப் போன்றவர்கள் மற்றய பாடசாலைகளில் இல்லாததால் தான் இன்றைய யாழ்ப்பாணக் கல்வி மிகவும் மோசமான நிலைக்கு வந்துள்ளது'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''நொந்து போன எமது கிராம மக்களுக்கு சேவை செய்யவே இறைவன் என்னைப் படைத்துள்ளதாக நான் நினைக்கிறேன். ஆசிரியத் தொழில் எனக்குக் கிடைக்காவிட்டால் நான் இப்படிச் சேவை செய்ய முடியாது. யோசித்துப் பார்த்தால் நான் செய்வது கடமை என்றே நினைக்கிறேன். அதற்காக மாதா மாதம் எனக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. நான் கடமையைச் செய்ய ஊரவர்களும் மற்றவர்களும் அதைச் சேவை என்கிறார்கள்'' சிரித்தார் நடராசா.

**467. எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு.**

செய்யத்தக்க செயலைச் செய்யத் தொடங்கும் போது நன்றாக எண்ணி முடிவெடுத்த பின்பே துணிந்து தொடங்க வேண்டும். முடிவெடுத்துத் தொடங்கிய பின்பு எண்ணிப் பார்ப்பது தவறாகும்.

## *செய்யும் செயல்*

‘‘உண்மை தான் ஆனால் நீங்கள் சென்ற மாதம் கடுஞ்சுகவீன முற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனீங்கள். அத்துடன் பத்து நாட்கள் அவசர சிகிட்சைப் பிரிவில் இந்தனீங்கள். அந்த நாட்களில் உங்களுக்கேதாவது நடந்து விடுமோ என்று நாம் பயந்து கொண்டிருந்தோம். அத்துடன் உங்களது பாடசாலைச் சமூகம் கோயில்களில் பிரார்த்தனைகளில் ஈடுபட்டதை நான் அறிவேன். அப்படியிருக்க நீங்கள் வைத்தியசாலையால் வந்த இரண்டொரு தினங்களில் மேடையில் தோன்றி நாடகம் நடித்தீர்கள்’’. விக்னேஸ்வரமூர்த்தி பேசிக் கொண்டிருக்கும் போது நடராசா குறுக்கிட்டுச் சொன்னார்; ‘‘ அதனால் தான் ஓர் இலட்சரூபா சேர்ந்தது. அதனால் பத்து வருடகாலமாக ஓலையால் வேயப்பட்டிருந்த ஒரு தற்காலிக மண்டபத்திற்கு ஓடு போடக் கூடியதாக இந்தது. அதற்குள் மூன்று வகுப்புக்கள் நடைபெறுகின்றன. நூற்றியிருபது மாணவர்கள் கல்வி கற்கிறார்கள்’’.

‘‘எல்லாம் எனக்குத் தெரியும். உங்கள் உடல் நிலையைக் கவனிக்க வேண்டும். சுகவீனமான வேளைகளில் ஓய்வெடுப்பது அவசியம்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

நடராசா சிரித்தார்; ‘‘நடக்க வேண்டியவை நடக்க வேண்டிய நேரத்தில் நடந்தே தீரும். ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவற்றை ஒத்திவைக்கவோ முன்பு செய்யவோ முடியாது என்று நன்கு தெரிந்தவன் நான். அதனால் என்னால் செய்யக் கூடிய சேவைகளை விரைந்து செய்கிறேன். நடப்பது நடக்கட்டும்’’ என்றார் நடராசா.

விக்னேஸ்வரமூர்த்தி எதுவும் பேசாமல் சிரித்தார்; ‘‘உங்களின் சிரிப்பின் அர்த்தம் எனக்குப் புரிகிறது. நான் ஓய்ந்திருந்தால் பல நல்ல காரியங்கள் நடைபெறாமல் போயிருக்கும். ஒரு மாதகாலம் நான் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிட்சை பெற்ற போது பாடசாலையின் வேலைகள் யாவும் முடங்கி விட்டன. பாடசாலைத் தேவைக்கு இரும்புக் கம்பிகள் தேவை. வங்கியில் பணமில்லாததால் எனது உதவியாளர்கள் நான் எழுதிய காசோலையை இரும்புக் கடைக்காரனுக்குக் கொடுக்கவில்லை. வீட்டிலே வைத்திருந்து விட்டார்கள். ஆனால் நான் வைத்தியசாலைக்குச் செல்லுமுன் சொன்னதற்காக இரும்புக் கம்பிகளைக் கொண்டு வந்து பாடசாலையில் கொடுத்து விட்டான். வங்கியில் பணமில்லாத போது காசோலையைக் கொடுத்தால், குற்றக்காசு செலுத்த வேண்டும், இல்லாவிட்டால் கணக்கை மூடிவிடுவார்கள் எனப் பயந்து விட்டனர். நான் நோயாளியாக இருந்ததால் இரும்புக் கம்பி வந்ததை மட்டும் சொன்னார்கள். என்னில் உள்ள நம்பிக்கையில்

இன்று வரை கடைக்காரன் பணம் கேட்கவில்லை. நேற்றுத் தான் எனக்கு ஞாபகம் வந்தது. கேட்ட போது தான் விபரத்தைச் சொன்னார்கள். நான் கடைக்காரனை அழைத்து விபரத்தைச் சொல்லிக் காசோலையைக் கொடுத்தேன். அன்று கம்பிகள் கிடைத்ததால் எமக்கு எட்டு மடங்கு இலாபம் கிடைத்தது. அதை விட சென்ற வருடம் கா.பொ.த.சாதாரண வகுப்புப் படித்த ஒரு மாணவன் தற்பொழுது கா.பொ.த.உயர்தர வகுப்பில் கற்கிறான். சென்ற வாரம் பெறுபேறுகள் வந்த போது அவன் கணிதத்தில் சித்தியடையவில்லை. அதனால் அவன் பாடசாலைக்கு வருவதில்லை. இன்னொரு பாடசாலையில் அவனை கா.பொ.த.உயர்தர வகுப்பில் சேர்த்திருக்கிறார்கள். உங்களுக்குத் தெரியும் நான் அதைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. அனைவரும் கூறியும் அவன் வரவில்லை. அதனால் அவனது வீட்டிற்குச் சென்று புத்திமதிகள் கூறி கா.பொ.த.சாதாரண தரம் படிக்கச் சொல்லி விட்டு வருகிறேன். இப்படிப்பட்ட பல மாணவர்கள் கா.பொ.த.சாதாரண வகுப்பில் படித்துப் பொறியலாளராகவும் வைத்தியர்களாகவும் வந்துள்ளனர். அத்துடன் இருபத்தைந்து பனைகளை ஒருவர் தந்தவர். அதைத் தறித்து மரங்களாகச் சீவ வேண்டும். ஒரு மாத காலமாக பலரிடஞ் சொல்லியும் செய்யப்படவில்லை. நான் வருத்த மென்று படுத்திருந்தால் எதுவும் நடவாது. இன்று பனைகளைத் தறிக்கத் தொடங்கியுள்ளார்கள்.'' என்றார் நடராசா.

''செய்ய வேண்டிய முறைப்படி செய்யாத முயற்சி, பலர் சேர்ந்து செய்தாலும் ஒழுங்காக முடிவடைய மாட்டாது என்று பெரியவர்கள் சொல்வார்கள். அர்ப்பணிப்புத் தன்மையும் தியாக மனப்பாங்கும் இல்லாதவர்களால் ஒரு சிறு செயலைக் கூட நல்ல முறையில் செய்து முடிக்க முடியாது'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''சரியாகச் சொன்னீர்கள்'' என்றார் தணிகாசலம்.

**468. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.**

தக்க வழியில் செய்யப்படாத செயலுக்குப் பலர் துணையாக நின்றாலும் அது முடிவடையாது குறையாகவே இருக்கும்.

## *பண்பறிந்து செய்*

''பொதுச் சேவைகளில் ஈடுபடுவோர் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். எமக்கு இரு கண்களே உள்ளன. அவையும் கருணை மிக்க கண்களாக இருந்தால் தன்னிடம் உதவி கோரி வருவோர் அனைவரையும் மிகவும் நல்லவர்களென்று எண்ணி, அவர்களுக்கு உதவி செய்து உபத்திரவத்தைத் தேடிக் கொள்பவர்களும் உண்டு. சமூகத்திற்கு ஆயிரக்கணக்கான கண்கள் உண்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் நோக்கி ஒவ்வொரு தவறைக் கண்டு பிடிக்கும். நீங்கள் பல பிரமுகர்களிடம் பணத்தையும் பொருட்களையும் நன்கொடையாகப் பெறுகிறீர்கள். அவர்களில் ஒருவரால் தன்னும் உங்களுக்கு

உபத்திரவம் நேரவில்லையா..? எனக்கு நன்கொடைகளைப் பெறப் பயமாக உள்ளது. சிலர் வலிய வந்து உதவிகளைச் செய்து விட்டு சலுகைகளைக் கேட்கிறார்கள்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''அப்பனே... எத்தனை பிரச்சினைகள். அவற்றைத் தவிர்க்க முடியாது. அப்படியான உபத்திரவங்களுக்குப் பயந்தால் நாம் சேவை செய்யவே முடியாது. சமூகத்திற்கு ஆயிரக்கணக்கான கண்கள் இருப்பது உண்மை. அக்கண்களை நாம் விழிப்படையச் செய்தல் வேண்டும். மாணவர்களுக்கு நாம் வெறும் கல்வியை மட்டும் கற்பிப்பது போதாது. அவர்கள் பெறும் கல்வி எல்லா விடயங்களிலும் அவர்களின் கண்களைத் திறப்பதாக அமைதல் வேண்டும். எதையும் ஆராயாது கதைக்கக் கூடாது என்ற எண்ணத்தை மனதில் உருவாக்க வேண்டும். ஒவ்வொருவரது மனதிலும் நல்ல எண்ணங்கள் உருவாக விட்டால் நல்ல வார்த்தைகள் வெளிவரமாட்டாது. அதே போலச் சேவை செய்பவனின் மனம் தூய்மையானதாகவும் உறுதியானதாகவும் இருத்தல் வேண்டும். வெறும் ஆரவாரங்கள், சலசலப்புக்களுக்கு அஞ்சுபவர்களால் தொண்டு செய்ய முடியாது.'' சற்று உணர்ச்சி வசப்பட்டார் நடராசா.

''உண்மைதான் நானும் சிலருக்கு உதவி செய்யப்போய் உபத்திரவத்தில் மாட்டிக் கொண்டதுண்டு'' என்று விக்னேஸ்வரமூர்த்தி சொல்லிக் கொண்டிருக்கும் போது நடராசா குறுக்கிட்டுச் சொன்னார்; ''ஒவ்வொருவரினதும் பண்புகளை நன்கு அறியாது உதவி செய்யக்கூடாது. அவ் உதவி சில சமயங்களில் தவறாகி விடுவதும் உண்டு. அப்படித் தவறு ஏற்பட்ட போதும் நீங்கள் பிறருக்கு நன்மை செய்யாது இருக்கிறீர்களா.....? ஒரு நல்ல சேவையாளனால் சோம்பியிருக்க முடியாது. அவன் பிறரின் அவதூறுகளைக் கணக்கிலெடுக்க மாட்டான்''.

''அவரவரின் பண்புகளை அறியாமல் உதவி செய்வது தீமையைத் தரும் என்று எனக்குத் தெரியும். இருந்த போதும் சில நேரங்களில் நாம் ஏமாந்து விடுகிறோம். எம்முடன் பல வருட காலம் பழகிய ஒருவனை நம்பி அதிபரும் நானும் ஓர் இலட்சம் ரூபா கொடுத்துக் கொழும்பில் சில பொருட்கள் வாங்கி வருமாறு சொன்னோம் அவன் நாம் கூறிய பொருட்களை வாங்கிப் பொதியாகக் கட்டி பார ஊர்தி யொன்றில் அனுப்பி வைத்தான். பொருட்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள பெரிய கடை ஒன்றிற்கு வந்து விட்டது. அக்கடை உரிமையாளரின் மகன் எமது பாடசாலையில் கல்வி கற்கிறான். அத்துடன் அக்கடை உரிமையாளன் அதிபரின் மீது அளவுக்கதிகமான நம்பிக்கையும் அன்பும் வைத்துள்ளவன். நாம் பாடசாலைத் தேவைகளுக்காகப் பணத்திற்குச் சென்றால் மனங்கோணாமல் தருபவன். அத்துடன் பரிசளிப்புவிழா, விளையாட்டு போட்டி போன்ற விழாக்களுக்கு நாம் கேளாமலே பணம் அனுப்பி வைப்பவன். ''பேசுவதை நிறுத்திவிட்டு மூச்சு விட்டார் தணிகாசலம்.

''அந்த விடயத்தில் நாம் தப்பியது அருந்தப்பு. ஐயையோ இப்போது நினைத்தாலும் எனக்கு நெஞ்சு பதறுகிறது'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''அதிபரில் நம்பிக்கை வைத்திருந்த அக்கடை உரிமையாளன், பாடசாலையின் பெயருக்கு வந்த அந்தப் பொதியைத் தனது மோட்டார் வண்டியில் பாடசாலைக்குக் கொண்டு வந்து விட்டார். நாம் அதைப் பிரித்த போது அதற்குள் அரசால் தடை செய்யப்பட்ட பல பொருட்கள் இருந்தன. அப்பொழுது நாம் பணங் கொடுத்தவன் அங்கு பரபரப்புடன் வந்து விட்டான். அவனைக்

கண்டதும் கடை உரிமையாளன் அவனுக்கு அடித்து விட்டான்; ‘‘நான் உனக்கு எவ்வளவு உதவிகள் செய்தனான். அதற்குச் செய்யும் கைம்மாறா இது? இது காவல் துறையினரிடம் அகப்பட்டால் எனக்கும் அதிபருக்கும் எவ்வளவு பிரச்சினைகள் வருமென்று உனக்குத் தெரியுமா...? நாம் சிறை செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். இப்படித்தான் நீ ஒவ்வொரு முறையும் செய்திருப்பாய். இனி உனது உறவே வேண்டாம்’’ என்றான் கடை உரிமையாளன். அதிலிருந்த போதைப் பொருட்களை நாம் எடுத்துத் தீயிட்டு அழித்தோம்’’ என்றார் தணிகாசலம்.

‘‘பொதுச் சேவை செய்பவர்களுக்கு இப்படி எத்தனையோ சோதனைகள் வரும். ஆனால் அவர்களை அவர்கள் செய்த சேவை காப்பாற்றும்’’ என்றார் நடராசா.

**469. நன்றுஆற்ற லுள்ளும் தவறுஉண்டு அவரவர்**
**பண்பறிந்து ஆற்றாக் கடை.**

அவரவருடைய இயல்புகளை அறிந்து அவரவருக்கு ஏற்றபடி நன்மை செய்யா விட்டால், நன்மை செய்வதிலும் தவறு உண்டாகும்.

.

## *ஆராய்ந்து செய்*

‘‘விக்கி, நானும் நீயும் நன்கு திட்டமிட்டு, தம்நிலைக்குப் பொருத்தாதென மக்கள் நினைக்கும் எந்தக் காரியங்களையும் செய்யத் தீர்மானிப்பதில்லை. கனகசபாபதி வித்தியாலய அதிபர். நான் சொல்லச் சொல்லக் கேட்காமல் வெளிநாட்டில் இருந்து வந்த சில மாணவர்களின் ஆலோசனைப்படி பாடசாலைக்கு அருகில் இருந்த காணியை வாங்குவதற்காக ஓர் இலட்ச ரூபா முற்பணமாகவும் கொடுத்தவர். காணிச் சொந்தக் காரனான முருகேசு தனது முப்பத்திரண்டு வயது மகளுக்கு அந்தக் காணியை விற்றுத் தான் திருமணம் செய்ய நினைத்திருந்தான் பாவம் அவன். சொத்துப் பத்தில்லை. சொந்த வீடும் இல்லை. பள்ளிக் கூடத்திற்குப் பக்கத்தில் இருக்கிற காணியை வித்து வெளிநாட்டிலுள்ள ஒரு பெடியனுக்குச் சம்பந்தம் செய்ய நினைத்தான். அந்த வேளை வெளிநாட்டிலிருந்து விநாயகலிங்கம் விதானையின்ரை மகன் சிவகுமாரனும் விநாயகமூர்த்தியின்ரை மகன் சாரங்கனும் வரதராஜனின் மகன் பிரபாகரனும் வந்து நின்றாங்கள். சபாபதி வித்தியாலய அதிபர் குணபாலன் அவர்களைச் சந்தித்துக் காணியைப் பற்றிக் கதைக்க அவர்கள் சம்மதித்திட்டாங்கள். அவர்களையும் கூட்டிக் கொண்டு குணபாலன் என்னட்டை வந்தவர். அவங்களுக்கு முன்னால் நான் எப்பிடிச் சொல்லுறது. அதனால் நான் எதுவும் பேசவில்லை. விதானையார் ஊரில் வாழும் பொழுது ஒழுங்காக வாழவில்லை. பெற்றார் ஒழுங்காக வாழ்ந்தால் தான் பிள்ளைகளும் ஒழுங்காய் வாழும். ஊர் முழுக்கத் தில்லு முல்லுச் செய்தவன்’’ பெருமூச்சு விட்டார் நடராசா.

யாரும் எதுவும் பேசாததால் சிறிது நேரம் ஆறி இருந்து விட்டு நடராசா சொன்னார்; ‘‘ மற்ற நாள், நான் குணபாலன்ரை வீட்டை போனனான். முதல்

நாள் பின்நேரம் குணபாலனும் வெளிநாட்டிலிருந்து வந்தவா்களுமாகச் சோ்ந்து காணியைப் பத்து இலட்ச ரூபாவுக்கு விலைபேசி முற்பணமாகப் பாடசாலைக் கணக்கில் வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்த பணத்தை எடுத்துக் கொடுத்து ஒரு வருடகாலத் தவணை கேட்டு உறுதியும் எழுதி விட்டனா். அதற்குப் பின்பு நான் எதையும் கதைக்க விரும்பவில்லை. வெளிநாட்டில் உள்ள மாப்பிளை ஊருக்கு வந்து காணிக்காசை வாங்கித் தனது சகோதரிக்குக் கொடுத்துத் திருமணம் செய்யும் படி கூறிவிட்டு முருகேசுவின் மகளைத் திருமணம் செய்து கொண்டு போய்விட்டாா். இப்ப இரண்டு வரிசமாச்சு இன்னும் காணி எழுதுப்படவில்லை. முருகேசுவின் மாப்பிளையின் தகப்பன் கந்தவனம் ஒவ்வொரு நாளும் என்னிடம் வந்தபடி. கந்தவனத்தின்ரை மகளைக் கட்டினவன் அவளை விட்டு விட்டுப் போய் விட்டானாம். காசு தந்த பிறகு தான் குடும்பம் நடத்துவன் என்கிறானாம். அந்தப் பத்து லட்ச ரூபாவையும் முருகேசு தனது மகளின் திருமணத்திற்காகக் கந்தவனத்திடம் கொடுக்கக் கந்தவனம் அந்தக் காசை வாங்கித் தனது மகளுக்குச் சீதனமாகக் கொடுப்பதாகப் பேசி அவளுக்குத் திருமணம் செய்து வைத்துள்ளாா். இந்தப் பிரச்சினையாலை இப்ப நாலைந்து குடும்பங்களுக்குக்கிடையே பெரும் பிரச்சினை. மூன்று குடும்பம் பிரிஞ்சிருக்கு'' பெருமூச்சு விட்டாா் நடராசா.

''குணபாலன் வாறமாதம் ஓய்வெடுக்கப் போகிறாா். ஓய்வெடுக்க முன்பு பாடசாலைக் கணக்கு முடிக்க வேண்டும். கல்விப் பணிப்பாளா் ஓா் இலட்சமும் வட்டியும் கட்டினால் தான் ஓய்வூதியம் கொடுக்கலாம். இல்லாவிட்டால் தொகைக் காசில் கழித்துக் கொண்டு தான் தருவேன் என்கிறாா் என்று கவலைப்பட்டாா். மக்கள் இடம் பெயா்ந்து தாமே வாழக் கஷ்டப்படும் போது எப்படி இவ்வளவு தொகையைக் கட்ட முடியும்'' என்றாா் விக்னேஸ்வரமூா்த்தி.

''மக்கள், தம் நிலைக்குப் பொருந்தாதவற்றை, ஏற்றுக் கொள்ள முடியாதவற்றை ஏற்றுக் கொள்ள மாட்டாா்கள். எனவே அவா்கள் செய்யக் கூடியவற்றைத் தான் செய்யும்படி நாம் கேட்க வேண்டும். இல்லாவிட்டால் பலரது இகழ்ச்சிக்கு ஆழாக வேண்டும்; மானங் கெட வேண்டும்; நட்டமடைய வேண்டும். அதனால் தீராத துன்பங்கள் பல வந்து சேரும். இப்பொழுது நான் முருகேசுவைக் கண்டு கதைத்துக் காணியை வேறொருவருக்கு விற்க முயற்சி எடுத்துள்ளேன். இப்பொழுது நாடு உள்ள நிலையில் மக்கள் காணியை வாங்கப் பயப்படுகிறாா்கள். பாவம் குணபாலன், அவனுக்கு உதவி செய்தே தீர வேண்டும். இப்படி இருக்க நான் நோய் என்று படுத்திருக்க முடியுமா...?'' என்று கேட்டாா் நடராசா.

**470. எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு**
**கொள்ளாத கொள்ளாது உலகு.**

தமக்குப் பொருத்தமில்லாதவற்றை உலகத்தோா் ஏற்றுக் கொள்ள மாட்டாா்கள். ஆகையால் உலகத்தோா் இகழ்ந்து தவிா்க்காத செயல்களை ஆராய்ந்து செய்தல் வேண்டும்.

***வலிமை அறிந்து செய்***

கஜேந்திரன் எந்த ஒரு செயலைச் செய்வதாக இருந்தாலும் அந்தச் செயலைத் தன்னால் செய்ய முடியுமா என்று ஒரு தடவைக்குப் பல தடவைகள் சிந்தித்துத் தான் செயலாற்றுவான். அத்துடன் அச்செயலைப் பற்றித் தனது காதலியான வித்தியாவுடன் கலந்துரையாடுவான். அவள் பட்டதாரி. எதையும் நன்கு சிந்தித்துத் தான் சொல்வாள். சுவாமியார் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவை செய்ய அவனது தலைமையில் குழு வொன்றை நியமித்த போது அவன் தயங்கினான். அவனது குருவான விக்னேஸ்வரமூர்த்தியும் சமூகசேவகரான தணிகாசலமும் உற்சாகப் படுத்திய பின் அவன் தனது காதலியான வித்தியாவுக்குச் சகலவற்றையும் சொன்னான். அவள் அதற்குச் சொன்னாள்; ‘‘செய்து முடிக்கப்பட வேண்டிய பணிகள் எமது பிரதேசத்தில் ஏராளமாக உள்ளன. ஆனால் அவற்றைச் செய்து முடிப்பதற்கான வசதிகள் எவையும் எமது கிராமத்தில் இல்லை. அதற்காக நாம் செயலற்று இருக்கமுடியாது. உங்களிடம் அறிவும் திறமையும் நிறைய இருக்கிறது. அறிவு உள்ளவர்களிடம் செயற்திறமை இருப்பதில்லை. செயற்திறமை உள்ளவர்களிடம் வசதிகள் இல்லை. வசதிகள் உள்ளவர்களிடம் சேவைமனப்பான்மை இல்லை. ஆனால் உங்களிடம் அவையெல்லாம் இருக்கு. அதை எல்லாம் வல்ல சுவாமியார் கண்டு பிடித்துள்ளார். உங்கள் குருவினதும் சமூகத்தில் சேவை செய்பவர்களினதும் ஆதரவும் உங்களுக்கு நிறைய இருக்கிறது. அதனால் துணிவுடன் செயற்படுங்கள். உங்களது நாளாந்த நடவடிக்கைகளை சில நாட்களுக்குச் சமூக நன்மை கருதி ஒத்தி வையுங்கள். நான் சொல்வது உங்களுக்குப் புரியுமென்று நினைக்கின்றேன். என்னை ஒரு நாளைக்கு ஒரு தரமாவது சந்திக்காது விட்டால் உங்களுக்குச் சாப்பிட்ட மாதிரி இருக்காது. ஒரு மாதத்திற்கு என்னைச் சந்திக்காதீர்கள்’’.

‘‘அது ஒன்று தான் என்னால் செய்ய முடியாதகாரியம்..’’ என்றான் கஜேந்திரன்.

‘‘முயன்றால் யாவும் முடியும்’’ என்று கூறிவிட்டுச் சென்று விட்டாள் வித்தியா. வித்தியா கூறிய பின் செயற்படாமல் இருக்க முடியாது என்று நினைத்த கஜேந்திரன் சங்ககாலப் பாடல் ஒன்றை எடுத்துப் படித்தான். அவன் துயரம் ஏற்படும் வேளைகளிலும் சரி, மகிழ்வு ஏற்படும் வேளைகளிலும் சரி சங்ககால பாடல்களைத் தான் படிப்பான். சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகள் யாவற்றிற்கும் சங்க காலப் பாடல்கள் தீர்வை முன்வைக்கின்றன. என்ற எண்ணம் அவனது மனத்தில் நிலைத்திருந்தது.

செம்பருத்திச் சோலை என்ற நாட்டை ஏரம்பநாதன் என்ற மன்னன் ஆட்சி செய்து கொண்டிருந்தான். அப்பொழுது அயல் நாட்டரசனான குலோத்துங்கன் செம்பருத்திச் சோலையின் எல்லைப் புறக் கிராமங்களில் வாழும் மக்களைத் தனது நாட்டிற்கு அழைத்து அவர்களுக்குத் தேவையான பொன்னையும் பொருளையும் கொடுத்துக் கொண்டிருந்தான். அதனால் எல்லைக் கிராம மக்களோடு ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்களும் அங்கு சென்று பொருட்களைப் பெற்று வந்தனர். அதனால் செம்பருத்திச் சோலையில் குலோத்துங்கனது புகழ் மேலோங்கிக் கொண்டு வந்தது. அதனால் ஏரம்பநாதன் தனது மந்திரி பிரதானிகளை அழைத்து ஆலோசனை நடத்தினான். படைத்தளபதியான வீரசிம்மன்; ‘‘படையெடுத்துச் சென்று குலோத்துங்கனைக் கைது செய்ய வேண்டும்’’ என்று கூறினான்.

அதற்கு முதலமைச்சரான குலசேகர வித்தகர் கூறினார்; ‘‘அரசே, அயல் நாட்டரசனான குலோத்துங்கன் எமது நாட்டின் மக்களைக் கவர்வதற்கான

நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறானென்றால் அது ஏதோ ஒரு முக்கிய விடயத்திற்குரிய ஆரம்பச் செயலாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். அவன் எடுத்துக் கொண்ட அச்செயலின் வலிமையையும், அவனது வலிமையையும் அவனுக்குத் துணையாக உள்ளவர்களின் வலிமையையும் தற்பொழுது உள்ள எமது வலிமையையும் ஆராய்ந்த பின்பு தான் நாம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நாம் வலிமை உள்ளவர்களாக இருக்கிறோம். எமது சிற்றரசர்களும், எமது நண்பர்களான பேரரசர்களும் எம்மில் விசுவாசமுள்ளவர்களாக இருக்கிறார்கள். எனவே பேரரசனான சிவலிங்க மாறனோடு தொடர்பு கொண்ட பின்பு தான் நாம் செயற்பட முடியும். எமது ஒற்றர்களை அனுப்பி களநிலையை ஆராய்வது தான் நல்லது'' என்றார்.

அந்தப் பாடல் கஜேந்திரனுக்கு மிகவும் பிடித்த பாடல். உண்மையான நிலையை புலவர் அப்படியே எடுத்துக் கூறியுள்ளார். உண்மையில் சங்ககாலப் புலவனுக்கு ஒப்பானவர் எவருமில்லை'' என்று நினைத்தான்.

அப்பாடலுக்கும் தனது செயலுக்கும் இடையே ஒரு தொடர்பிருப்பதாக அவன் நினைத்தான். தான் தனது தெயலைத் தொடங்கு முன் தான் மேற்கொள்ளும் செயலின் வலிமையையும் அதைத் தன்னால் செய்ய முடியுமா என்ற நிலையையும் எண்ணிப் பார்த்தான். தன்னுடன் கூட வருபவர்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தான். நகுலன், இராகவேந்தன், சிவப்பிரியன் போன்றோர் செயல்வீரர்கள் என்று நினைத்தான். பகைவர்கள் என்று சொல்ல முடியாவிட்டாலும் அச்செயல்களைப் பலர் எதிர்பார்கள். கிராமத்தில் நல்லது செய்யும் போது எதிர்க்கும் சிவசுந்தரமூர்த்தி, சபாநாயகம், சின்னத்தம்பி போன்றவர்களை நினைத்துப் பார்த்தான். அவர்களிடம் கள்ளை வாங்கிக் குடித்து விட்டு அவர்களுக்காகப் பேசும் கிருஷ்ணன், நடராசா போன்றவர்களை நினைத்துப் பார்த்தான். எல்லோரும் செல்லாக் காசுகள். சுவாமியார், தணிகாசலம், வேலாயுதபிள்ளை ஆகியோர் இருக்கப் பயப்படத் தேவையில்லை என்று எண்ணினான் கஜேந்திரன். அவனது மனதில் உற்சாகம் பிறந்தது.

**471. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.**

செய்யும் செயலின் வலிமையையும், தனது வலிமையையும், பகைவனுடைய வலிமையையும், இருவருக்கும் துணையாக இருப்பவர்களின் வலிமையையும் ஆராய்ந்து செயற்படல் வேண்டும்.

## முடியாதது இல்லை

ஸ்ரீனிவாசன் சுவாமிகளுக்கு அருகில் கோப்பாய் நாவலர் வித்தியாலய அதிபர் அமர்ந்திருந்தார். வெகு நேரமாகச் சுவாமியார் கண் திறக்கவில்லை. மிகவும் பொறுமையாக அமர்ந்திருந்தார் அவர். அவருடன் சுவாமியாரைத் தரிசிப்பதற்காகக் காத்துக் கொண்டிருந்த சிலர், சுவாமியார் நெடு நேரமாகக் கண்திறக்காததால் புறப்பட்டுச் சென்றனர்.

நாவலர் வித்தியாலய அதிபர் சுவாமியாரைத் தரிசிக்க விரும்பினால் இரவில் தான் வருவார். இரவில் வந்தால் சுவாமியாரைத் தரிசிக்க வரும் அதிகமான

பிரமுகர்களைச் சந்திக்கலாம். இரவு ஒன்பது மணியாகி விட்டது. அதிபருக்குப் பசித்தது அப்பொழுது தணிகாசலமும் விக்னேஸ்வரமூர்த்தியும் அங்கே வந்தனர். தணிகாசலத்தின் கையில் ஓர் உணவுப் பொதி இருந்தது.

''நாவலர் வந்து நெடுநேரமாகச் சுவாமியாரின் தரிசனத்திற்காகக் காத்திருக்கிறார். அவருக்குப் பசிக்கும் என்று மகா கணிபதி உங்களுக்குப் பிரசாதம் தந்தவர்'' என்று நீட்டினார் தணிகாசலம்.

''இதென்ன.....?'' தடுமாறினார் நாவலர்.

''சாப்பிடப்பா. சுவாமியாரைப் பசியோடு சந்திக்கக் கூடாது என்று உங்களுக்குத் தெரியாதா..? இது சுவாமியாரின் உணவு'' என்றார் தணிகாசலம்.

நாவலர் எதுவும் பேசாது உணவுப் பொதியை வாங்கிச் சென்று உண்டு விட்டு வந்தார்.

''விக்னேஸ்வரமூர்த்தி ஐயா, நாவலர் வித்தியாலயத்திற்கு நான் பதினாறு வருடங்களுக்கு முன்பு நியமிக்கப்பட்டேன். காட்டுத் தரவையைப் போல இருந்த பாடசாலையை இன்று நவீன முறைக்கேற்ப மாற்றிவிட்டேன். ஒரு தனியார் பாடசாலைக்குரிய அத்தனை வசதிகளையும் உண்டாக்கி விட்டேன். மண்டபத்திற்கு நிரந்தரமாக வைப்பதற்கென இருநூறு நாற்காலிகளும் வாங்கி விட்டேன். நூற்றைம்பது வருட காலமாகப் பாடசாலை வளவில் இரண்டு அடி நீர் தேங்கி நிற்கிறது. இதனால் மாணவர்கள் சிரமப்படுகின்றனர். பாடசாலையின் இரண்டு பக்கங்களிலும் வெள்ளமோடு வடிகால் உள்ளது. வாய்க்கால் மேவிப் பாயும் போது வெள்ளம் பாடசாலையினுள் வந்து விடுகிறது. அதனால் மாரிகாலத்தில் கஷ்டப்பட வேண்டியிருக்கு. பாடசாலையில் எல்லா வேலைகளையும் முடித்த எனக்கு நீரை வெளியேற்ற முடியவில்லையே என்று கவலையாக இருக்கு'' பெருமூச்சு விட்டார் நாவலர்.

''எத்தனையோ பிரச்சினைகளுக்குள் விளையாட்டு மைதானம் வாங்கிய போது ஐந்து இலட்சம் ரூபா தருவதாக வெளிநாட்டில் இருந்து வந்த சிவகுமாரன் கூறியதை நம்பி ஏமாந்த போதும் நீங்கள் கவலைப்படவில்லை. அதுக்காகக் கோட்டுக்கும் போனனீங்கள். அப்போது படாத கவலை இப்பொழுது எப்படி வந்தது?'' ஆச்சரியப்பட்டார் தணிகாசலம்.

''அப்போதைய நிலை வேறு. நான் முதலாம் திகதி இடமாற்றலாகிச் செல்கிறேன்.

''என்ன உங்களுக்கு இடமாற்றமா...? எங்கு செல்கிறீர்கள்?'' அவசரமாகக் கேட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

''நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராகச் செல்கிறேன். பாடசாலையை விட்டுச் செல்ல எனக்கு விருப்பமில்லை. இருப்பினும் என்னுடைய சேவைக்கு இப்பாடசாலை போதாது. எல்லா வேலைகளையும் முடிந்தாயிற்று. மண்போடுவது ஒன்று தான் பூர்த்தியாகவுள்ளது. எவ்வளவோ முயன்றும் என்னால் அது முடியவில்லை. சென்றவாரம் பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம் வைத்தேன். வந்தவர்கள் எதுவும் பேசவில்லை. வசதியானவர்கள் தான் முதலில்

எழுந்து சென்றனர். எனது பதினாறு வருட சேவைக் காலத்தின் போது பெற்றோரிடம் பணம் எதுவும் கேட்டதில்லை. நான் இடமாற்றம் பெற்றதால் தான் கேட்டேன். அவர்கள் எழுந்து சென்றதும் எனக்கு மிகவும் கவலையைக் கொடுத்துள்ளது''.

சுவாமியார் கண் விழித்துப் புன்னகைத்தார்; ''மகனே முன்பு நீ முடியுமென உறுதியாக நம்பினாய்; அத்துடன் ஒரு செயலை எப்படிச் செய்ய வேண்டுமெனத் திட்டமிட்டுச் செயலாற்றினாய். அதனால் வெற்றி பெற்றாய். இப்பொழுது இடமாற்றம் கிடைத்தமையால் தடுமாறுகிறாய். உன்னால் செய்ய முடியுமென்று நம்பு. எப்படிச் செய்ய வேண்டு மென்று திட்டமிட்டு முயற்சி செய். முன்பு நீ நம்பிக்கையுடன் செயற்பட்டதால் காணி வாங்கினாய், பாடசாலையைச் சுற்றி மதில் கட்டினாய், கிணற்றைத் திருத்தி நீர்த்தாங்கியமைத்தாய், மின்சாரமெடுத்தாய். கணணியைப் பெற்றாய். அத்துடன் மண்டபத்தில் நூற்றாண்டு காலமாக வீற்றிருந்த மகா கணபதிக்குத் தனியாக ஒரு கோயில் கட்டினாய்.அதைவிடப்பெரிய காரியம் என்னென்றால் முத்துக்குமாரசுவாமிப் பிரக்கிராசியின் மகன் புனிதவதியின் துணையுடன் அவரது இனத்தவரான பேராசிரியர் சூரியகுமாரனிடம் இரண்டு இலட்ச ரூபா நிதி பெற்று அதை நிரந்தர வைப்பிலிட்டாய். இன்னும் ஆயிரம் வருடங்களுக்கு வருடாவருடம் அந்நிதியின் வட்டிக்காசு பிள்ளைகளுக்குப் பரிசளிக்க உதவும். இது ஓர் அற்புதமான செயல். செயற்கரிய பல செயல்களைச் செய்த நீயா பலவீனமடைந்து பேசுகிறாய். முயற்சி செய் மகனே'' கண்களை மூடினார் சுவாமியார்.

அப்பொழுது அங்கே பெற்றாரான சத்தியபாலன் வந்தான்; ''நான் உங்களது வீட்டுக்குச் சென்றேன். நீங்கள் அங்கு இல்லாமையால் சாந்தி ஆசிரியரிடம் சென்றேன். அங்கும் இல்லாததால் இங்கு வந்தேன். சிறுவர் பாதுகாப்பு நிறுவனப் பொறுப்பாளர் 'மகேந்திரன் ஐயா' வந்திருக்கிறார் வாருங்கோ'' என்றான்.

நாவலர் வித்தியாலய அதிபரைக் கண்டதும் மகேந்திரன் சொன்னார்; ''உங்களது கோரிக்கையை எமது நிறுவன ஊழியர் சொன்னார். அதை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். அதன்படி உங்கள் பாடசாலைக்கு ஐந்நூறு உழவு இயந்திரப் பெட்டி மண்போட முடிவெடுத்துள்ளோம். வாருங்கள் பாடசாலையைப் பார்ப்போம்''.

நாவலர் அதிர்ச்சியுடன் மகேந்திரனை நிமிர்ந்து பார்த்தார். மகா கணபதி குறுந்தாடியுடன் எதிரே நிற்பதைப் போலிருந்தது. இரண்டு தினங்களுக்குப் பின்பு நாவலர் வித்தியாலய அதிபர் சுவாமியாரைச் சந்தித்தார்; ''சுவாமி போதியளவு மண்ணை உச்சுவில் குளத்தில் ஏற்றிப் போட்டு விட்டோம். எனக்கு மகிழ்ச்சி மட்டுமல்ல பெரும் நிம்மதியும்கூட''

''மகனே நிறைந்த சேவையைச் செய்து விட்டுப் பதவி உயர்வுடன் செல்கிறாய். உனது வாழ்வு வழம் பெறும். ஒரு மனிதன் இறக்கிற போதும் கூட முடியாதென நினைக்கக் கூடாது'' என்று கூறி விட்டுக் கண்களை மூடினார் சுவாமியார்.

**472. ஒல்வது அறிவது அறிந்ததன் கண்தங்கிச்**
**செல்வார்க்குச் செல்லாதது இல்.**

தன்னால் செய்ய முடிந்த செயலையும், அதை எப்படிச் செய்ய வேண்டும். என்பதையும் அறிந்து செயற்படுபவனுக்கு முடியாத செயல் என ஒன்றும் இல்லை.

## இடையில் விடுவோர்

''நல்ல வேலை செய்து இருக்கிறியள். நான் முன்பு நாவலர் வித்தியாலயத்தில் கற்பித்தனான். அருமையான பாடசாலை. பிரச்சனையின் போது தான் வேலிகள் அழிக்கப்பட்டன. ஏழு வருடம் நான் அங்கு கற்பித்தனான். மழை வந்தால் பாடசாலையை விட்டு விடுவோம். முழங்கால் வரை வெள்ளம் நிற்கும். பெண் ஆசிரியர்கள் மழை காலத்தில் பெருஞ்சிரமப்படுவார்கள்'' என்றார் விக்கினேஸ்வரமூர்த்தி.

''நான் நினைக்காத வேளை இடமாற்றம் வந்து விட்டது. ஒவ்வொரு வேலையாகத் திட்டமிட்டு திட்டமிட்டு எல்லா வேலைகளையும் பூர்த்தி செய்திட்டன். சிலர் என்னைப் பழி வாங்க வேண்டு மென்று நினைத்து எனது பதவி உயர்வுகளைத் திட்டமிட்டுத் தடுத்து வந்தவை. அது எனக்குத்தான் நன்மை என்றதை அவை உணரேல்லை. பதினாறு வருடங்களுக்கு முன்பு இருநூறு பிள்ளைகளோடு சுடுகாடு மாதிரி இருந்த பாடசாலையை இன்று மாவட்டத்திலை உள்ள முன்னனிப் பாடசாலைகளுக்கு நிகராக்கி விட்டன். அதோடு இருந்த ஒரே ஒரு குறையான மண் போடுறத்தையும் போட்டுட்டன்.''

''அன்று நீங்கள் சுவாமியாருக்கு முன்னால் பேசும் போது துணிவு மிக்க நாவலர் அதிபரா இப்படிப் பேசுகிறார் என நினைத்தேன். பலவீனமானவர்கள் தான் கவலைப்படுவார்கள்.'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''தன்னால் எதைச் செய்ய முடியுமென்பதை அறிந்து தொடங்கிய செயலில் தளராமல் முயல்கின்றவர்களுக்கு முடியாத செயலென்று எதுவும் இல்லை. நான் இடமாற்றம் கிடைத்ததால் மண் போட முடியவில்லையே என்று கவலைப்பட்டேனே தவிர முயற்சி செய்யாமல் இருக்கவில்லை. பல நிறுவனங்களோடும், பல பிரமுகர்களுடனும் தொடர்பு கொண்ட படி இருந்தேன். அதனால் தான் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினர் இரவு வந்து சந்தித்தனர். நான் பதினாறு வருடங்கள் அப்பாடசாலையில் பணிபுரிந்தனான். இடமாற்றம் புரட்டாதி மாதம் வருமென்று எனது உள் மனம் சதா சொல்லிக் கொண்டே இருந்தது. அதனால் பிரதி அதிபரான சாந்தினி வாகீசனிடம் பாடசாலைத் திறப்பை ஆவணிமாதமே கொடுத்திட்டன். அன்று இரவு பிரதி அதிபரின் வீட்டுக்குச் சென்று அவரையும் அழைத்துக் கொண்டு பாடசாலைக்குச் சென்று பார்வையிட்டோம். புரட்டாதி மாதம் மழை தொடங்கிவிடும். அதனால் வேலையைத் தொடங்கவும் பயமாக இருந்தது. மகா கணபதி மீது நம்பிக்கை வைத்துக் கொண்டு வேலையைத் தொடங்கினேன். என்ரை நம்பிக்கை வீண் போகவில்லை. மழை காலம் என்பதால் மகா கணபதியிடம் வேண்டி நேர்த்தி வைத்துத் தான் வேலையைத் தொடங்கினோம். மூன்று நாட்களும் வானம் இருண்டிருந்தது. இடி இடித்தது மின்னலும் மின்னியது. ஆனால் மழை பெய்யவில்லை. பாடசாலைக்கு அரைமைல் தொலைவில் உள்ள இருபாலைச் சந்தியிலும் கோப்பாய் சந்தியிலும்

பெய்த மழை பாடசாலையிலும் குளத்தடியிலும் பெய்யாமல் விட்டது புதுமை'' என்றார் நாவலர்.

சுவாமியார் கண்களைத் திறந்தார்; ''நம்பிக்கையுடையவன் வானத்தையும் வில்லாக வளைப்பான். பலவீனமானவன் ஒரு தும்பைக்கூட அசைக்க மாட்டான். முன்பு நாவலர் வித்தியாலயத்தில் அதிபராக இருந்தவர்கள் எதைச் செய்தனர். பாடசாலையை மூடினால் காணி முழுவதையும் எடுக்கலாமெனத் திட்டமிட்டனர் மகா கணபதி ஆலய வீதியைத் துப்பரவு செய்வதனால் கூட முயற்சியுடையவனால் தான் முடியும். சென்ற வருடத் திருவிழாவின் போது தனபாலனும் சின்னத்தம்பியும் வீதியைத் துப்பரவு செய்யும் பணியை ஏற்றனர். பதினைந்து தினங்கள் கழித்துங்கூட அவர்களால் வேலையைத் தொடங்க முடியவில்லை. பின்பு தணிகாசலம் பொறுப்பேற்றான். இரண்டு தினங்களில் வேலை முடிந்து விட்டது. வேலை செய்வது பெரிதல்ல வேலை செய்வோரை அவ்வேலையில் நாட்டமுற வைப்பது தான் பெரிது. தன்னுடைய வலிமையை அறிதல் வேண்டும்; செய்யவிருக்கும் செயலின் தன்மை அறிதல் வேண்டும். இவற்றை அறியாமல் செயலில் ஈடுபடுபவர்களே தோல்வியடைகிறார்கள்; இல்லா விட்டால் தாம் தொடங்கிய செயல்களை இடையில் விட்டு விடுகிறார்கள். நீ செயல்திறன் மிக்கவன் அதனால் எதையுஞ் செய்வாய். நீ அதிகாரியாக இடமாற்றம் பெற்றுச் செல்கிறாய். அதனால் உன்னால் இப்பாடசாலைக்கு நிறைய உதவி செய்ய முடியும். அத்துடன் பாடசாலையில் உள்ள கணபதியை ஸ்தாபித்து கோயில் கட்டி கும்பாவிஷேகம் செய்த நீ அவரையும் பாடசாலையையும் கைவிட்டு விடாதே'' என்றார் சுவாமியார்.

''கைவிட மாட்டன் சுவாமி'' கோயிலையும் பாடசாலையையும் கைவிடக் கூடா தென்பதற்காகாத்தான் பல மூத்தவர்கள் இருக்கப் பாடசாலையைச் சாந்தினியிடம் ஒப்படைத்துள்ளேன். ஒரு செயலைச் செய்யக் கூடியவரிடம் தான் பொறுப்பை ஒப்படைத்தல் வேண்டும். தமது சுயநலத்திற்காக ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி நடிப்பார்கள். நான் யாரையும் நம்புவதில்லை. ஒரு விடயத்தை மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டுமென்றாலும் நான் சொல்ல மாட்டேன். அதற்கெனச்சில ஆசிரியர்கள் இருக்கிறார்கள் . அவர்களிடஞ் சொன்னால் நல்லபடி அதுபரவும். அதனால் எனக்கு எந்தப் பிரச்சினையுயும் வராது'' என்றார் நாவலர் அதிபர்.

**473. உடைத்தம் வலி அறியார் ஊக்கத்தின் ஊக்கி**
**இடைக்கண் முரிந்தார் பலர்.**

தன்னுடைய வலிமையைச் சரிவர அறியாது, செயலில் ஈடுபட்டு இடையிலே அதை முடிக்க முடியாமல் அழிந்தவர்கள் பலர்.

## கெட்டுப் போவோர்

பரமேஸ்வரன் தணிகாசலத்தின் வீட்டிற்கு வந்திருந்தார். அவரின் மனதில் பூரணமான மகிழ்ச்சி குடி கொண்டிருந்ததால் அவரது உடல் பூரித்துப் பளபளத்தது. அன்று மாலை அவர் மகா கணபதி ஆலயப் பூசையில் கலந்து கொண்டார். பூசை முடிந்த பின் பரமேஸ்வரனும் தணிகாசலமும் சுவாமியாரைத்

தரிசிக்க வந்தனர். அங்கு மணிவண்ணன் இருந்தான். பலர் சுவாமியாரைச் சுற்றியிருந்தனர்.

பரமேஸ்வரன் சுவாமியாரின் பாதங்களைத் தொட்டு வணங்கினார்; ‘‘மகனே மிகவும் மகிழ்வுடன் இருக்கிறாய். மகிழ்ச்சியுடையவனது உடலும் மனமும் பிரகாசமாக இருக்கும்’’ என்றார்.

‘‘ஆம் சுவாமி, ஆற்றல் உடையவர்களின் வார்த்தைகளை மதிக்காததாலும், அவர்களுடன் ஒத்துப் போகாததாலும், எனது வலிமையை பெரிதாக நினைத்துச் செயற்பட்டதாலும் தான் நான் துயரப்பட வேண்டி வந்தது. இப்பொழுது ஆற்றல் உள்ளவர்களுடன் ஒத்துப் போகிறேன். எனது வலிமையையும் அறிந்து வைத்திருக்கிறேன் அதனால் துன்பமே இல்லை; இன்பந்தான்’’ என்றார்.

மணிவண்ணன் பரமேஸ்வரனின் அருகே வந்தான்; ‘‘ஐயா இவர் எனது நண்பர். பெயர் கதிர்காமநாதன். பட்டணத்தில் புடைவைக் கடை வைத்திருந்தவர். நட்டப்பட்டுப் போனார். நான் உதவி செய்துள்ளேன். மிகவும் நேர்மையானவர். குறித்த தவணையில் சொல்வதைச் செய்வார். தங்கள் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் புடைவை வகைகளைக் கடனாகக் கொடுத்துதவல் வேண்டும்’’ என்றான். பரமேஸ்வரன் அவனை நிமிர்ந்து பார்த்தார் ‘‘நட்டமேற்படுமானால் வியாபாரத்தில் ஏதோ ஒரு தவறு நிகழ்ந்திருக்கிறது’’ என்று நினைத்தார்.

‘‘ எவ்வளவு காலமாக வியாபாரஞ் செய்கிறீர்’’ பரமேஸ்வரன் கேட்டார்.

‘‘பத்து வருடங்களாக’’ என்றான் கதிர்காமநாதன்.

‘‘ஏன் நட்ட மேற்பட்டது? மதுபான வகைகளைக் குடிப்பாயா? பெண்களுடன்....? பரமேஸ்வரன் கூறிக் கொண்டிருக்கும் போது அவசரமாகக் குறுக்கிட்டான் கதிர்காமநாதன்; ‘‘இல்லை ஐயா, நான் மதுபானம் குடிப்பதில்லை. பெண்களோடும் தொடர்புகள் இல்லை..’’.

‘‘அப்படியானால் நட்ட மேன் வர வேண்டும்? கடன் கொடுத்தாயா? இல்லாவிட்டால் ஆற்றல் உடையவர்களுடன் ஒத்துப் போகாமல் இருந்தாயா...? இல்லாவிட்டால் நீயே யாவும் அறிந்தவனெனத் தலைக்கனம் பிடித்திருந்தாயா?’’

கதிர்காமநாதன் தடுமாறினான். அவனது கண்கள் கலங்கின; ‘‘ஐயா எனது தந்தையார் ஒரு பெரிய வியாபாரி. அவர் சொல்வார்; ‘‘அதிகம் பேசாதே; அமைதியாக இரு. யார் எதைச் சொன்னாலும் கேள். சிந்தித்துப் பதில் சொல். உன்னிலும் பார்க்க வயது குறைந்தவனானாலும் அவனது வார்த்தைகளையும் கேள். சிந்தித்து முடிவெடு. குழந்தைப் பிள்ளையான முருகன் சிவனுக்குக் குருவாய் இருந்தவன் என்பதை மறந்து விடாதே’’ என்பார். நான் அவரின் சொல்லைப் பெரிதாக மதிப்பதில்லை. பட்டணத்தில் ஓர் இரும்பு வியாபார நிலையம் ஒன்று விற்பனைக்கு வந்தது. அதை எனது நண்பனான பஞ்சாட்சரத்துடன் சேர்ந்து வாங்க விரும்பினேன். அது தான் ஐயா நான் விட்ட மகா தவறு. ‘‘கதிர்காமநாதன் கலங்கினான். சில கணங்களுக்குப் பின் சொன்னான்; ‘‘ஐயா நான் வியாபாரத் தலத்தை வாங்கப் போவதாக அறிந்த மணிவண்ணன் வந்து சொன்னார்; ‘‘கதிர்காமு நீ என்னுடைய நண்பன் என்பதால்

சொல்கிறேன். உன்னிடம் பெரும் முதல் இல்லை. அதனால் அகலக்கால் வைக்காதே. வியாபாரத் தலத்தை பெருப்பிக்க விரும்பினால் நீ செய்யும் தொழிலை விஸ்தரி. முன் பின் தெரியாத தொழிலில் முதலிடுவது என்பது அம்முதலைக் கடலில் போடுவதற்குச் சமமானது. அத்துடன் பஞ்சாட்சரம் நல்லவன் அல்ல. அவன் பங்காக வியாபாரஞ் செய்து பலரைக் கெடுத்துள்ளான். அவனால் நட்டமடைந்த உருத்திரன் பைத்தியக் காரனைப் போலத் திரிகிறான். புதுத் தொழிலைத் தொடங்காதை'' என்றார். நான் அதைக் கேட்கவில்லை. என்னுடைய வலிமையை அறிந்து கொள்ளாமல், என்னை நானே பெரியவனாக நினைததேன். பலர் கூறிய ஆலோசனைகளையும் கேட்க மறுத்தேன். அதனால் இன்று நட்டமடைந்து நடுத்தெருவுக்கு வந்திட்டேன். ஆற்றல் உள்ள மணிவண்ணனின் பேச்சைக் கேட்டிருந்தால் இன்று இந்த நிலை எனக்கு வந்திராது. பஞ்சாட்சரம் என்னை ஏமாற்றி விட்டான். இரும்பு வியாபாரத்தைப் பற்றி எதுவும் தெரியாத நான் ஏமாந்திட்டன்'' அதற்கு மேல் பேசமுடியாது தடுமாறினான் கதிர்காமநாதன்.

''பலருக்குச் சொன்னால் விளங்காது. படிப்பினை ஏற்பட்டால் தான் விளங்கும். நான் என்னையுஞ் சேர்த்துத் தான் சொல்கிறேன்'' என்றார் பரமேஸ்வரன்.

**474. அமைந்தாங்கு ஒழுகான் அளவு அறியான் தன்னை**
**வியந்தான் விரைந்து கெடும்.**

மற்றவர்களுடன் ஒத்துப் போகாமல், தனது வலிமையின் அளவையும் அறியாமல், தன்னைப் பெரிதாக நினைப்பவன் விரைவில் கெட்டுப் போவான்.

## அளவு அறிந்து செய்

'' உண்மை தான் ஐயா, யார் எது எதுவெல்லாம் சொன்னாலும், நன்றாகக் கற்றாலும் மனம் சில வேளைகளில் ஆசையால் அவதியுறும். யோசிக்க வேண்டியவற்றை யோசிக்க விடாது. தன்னுடைய வலிமையைப் பெரிதாக எண்ணும். கற்றவன் கூட அனுபவத்தால் தான் பல விடையங்களைப் புரிந்து கொள்கிறான். நான் பெரிதாகப் படிக்கவில்லை. அப்பாவுடன் சேர்ந்து தொழில் செய்த அனுபவம் தான் என்னை இவ்வளவு காலமும் வாழ வைத்தது. மனிதனுக்கு பெரும்புதையல் கிடைத்தாலும் திருப்திப்பட மாட்டான். இன்னும் புதையல்கள் கிடைக்காதா என்று தான் ஆசைப்படுவான். அந்த மாதிரி ஆசைப்பட்டு எனது பொருளையும் நிம்மதியையும் தொலைத்து விட்டேன். பொருளை என்னால் தேடிக் கொள்ள முடியும். ஆனால் தொலைத்த நிம்மதியை என்னால் தேட முடியாது. நம்பியவன் ஏமாற்றியதை என்னால் சகிக்க முடியவில்லை'' என்றான் கதிர்காமநாதன்.

பரமேஸ்வரன் சிரித்தார்; ''தீமையை எதிர்த்துப் போராடினால் உனது சக்தியும் நேரமும் விணாகிவிடும். தீமை செய்பவனுக்குத் தீமை செய்தால் தீமை தான் பெருகும். நன்மை உண்டாகாது எதிரிகளையும் நேசித்தல் வேண்டும். நல்லவர்களை நேசிப்பதால் அவர்களுக்கு என்ன செய்ய முடியும். தீயவர்களை நேசித்து அவர்கள் செய்யும் தீமைகளை உணரப்பண்ணல் வேண்டும். தீயவர்களை அன்பான வார்த்தைகள் தான் திருத்தும்''.

‘‘உண்மைதான் ஐயா, ஆனால் பஞ்சாட்சரம் போன்றவர்கள் அன்பான வார்த்தைகளை மதிக்கவே மாட்டார்கள். அவன் அன்பாகக் கேட்டால் எனது பணத்தை தரமாட்டான். பாலத்காரமாகத் தான் கேட்டல் வேண்டும். எனக்கு அது தெரியாது. அவனிடம் ஏமாந்த பலா் பலாத்காரத்தின் மூலம் தான் நன்மை அடைந்திருக்கிறார்கள்’’ என்றான் கதிர்காமநாதன்.

‘‘செய்த தவறை மீண்டும் மீண்டும் செய்பவன் தனது வாழ்நாளைக் குறுக்கிக் கொள்கிறான். எந்நாளும் ஏமாற்றி வாழ முடியாது. இரவு பகலாக தீயவர்களைப் பற்றிச் சிந்தித்தால் அந்தக் குணங்கள் சிந்திப்பவனது மனதையும் சீர்குலைக்கும். சிந்திப்பவனது நல்ல குணங்களையும் கெடுத்து விடும். மணிவண்ணன் நீங்கள் நல்லவனென்று சொல்கிறார். ஆனால் நீங்கள் தீயகுணங்களால் தான் தீயவர்களை வெல்ல முடியுமென்கிறீர்கள். இதிலிருந்தே உங்களிடமிருந்து நல்ல குணங்கள் விலகியிருப்பது எனக்குத் தெரிகிறது’’ என்றார் பரமேஸ்வரன். கதிர்காமநாதனால் பேசமுடியவில்லை. தடுமாறியபடி நின்றான்.

‘‘மேன்மையான சொல் , கல்வியறிவு, ஆண்மை என்பன நல்லவர்களிடம் மட்டும் உள்ள குணங்கள் நல்லவர்களிடம் நட்புக் கொண்டுள்ளவனையும், சுயபுத்தியைக் கொண்டு காரியங்களைத் தீர்மானித்து அதன்படி நடப்பவனையும் யாரும் இலகுவில் வெற்றி கொள்ள முடியாது. எனவே நடந்தவற்றை மறந்து நல்லபடி வாழுங்கள். நான் உங்களுக்கு என்ன உதவி செய்ய வேண்டு மென்று எதிர்பார்க்கிறீர்கள்.’’

‘‘நான் பிடைவை வியாபாரஞ் செய்பவன். முன்பு என்னிடம் முதலிருந்ததால் கடன் பெறவில்லை இப்பொழுது என்னிடம் முதல் இல்லை. பிடைவை வகைகளைக் கடனாகத் தந்துதவல் வேண்டும்’’. என்றான் கதிர்காமநாதன்.

‘‘கதிர்காமநாதன் நல்லவன் நான் பொறுப்பு நிற்கிறேன்’’ என்றான் மணிவண்ணன்.

‘‘பரமேஸ்வரன் சிறிது நேரம் எதுவும் பேசவில்லை; ‘‘ அன்பனே கடன் ஓர் உயிரை மெல்ல மெல்ல விழுங்கும் மலைப்பாம்பைப் போன்றது. பொருட்களை நான் மணிவண்ணனுக்கு அனுப்புகிறேன். அவனிடம் வாங்கி வியபாரஞ் செய். பணத்தையும் அவனிடமே கொடு’’.

கதிர்காமநாதனின் உள்ளம் வாடிச் சேர்ந்தது; ‘‘இப்பொழுது நான் அவரிடந்தான் பிடைவைகளை வாங்கி விற்பனை செய்து வருகிறேன். நேரடியாக உங்களிடம் வாங்கினால் கூடுதலாகவும் வாங்கலாம், எனக்கு இலாபமுங் கூட வரும்’’.

‘‘தோல்விக்குப் பிறகு வெற்றியடைய வேண்டுமானால் பெரும் முயற்சி செய்ய வேண்டும். ஓரிரு நாட்களில் அம்முயற்சியைச் செய்ய முடியாது. படிப்படியாகத் தான் செய்தல் வேண்டும். தோற்றவன் சிரமப்பட்டுத்தான் வெற்றியடைதல் வேண்டும். தான் சுமக்கக் கூடியதைத்தான் தூக்குதல் வேண்டும். மிக மெல்லிய மயில் இறகே ஆனாலும் அளவுக்கதிகமாக வண்டியில் ஏற்றினால் வண்டியின் அச்சு முறிந்து விடும் என்று மூத்தோர் சொல்வார்கள். நீ இருக்கும் நிலையில் கடனை அதிகம் வாங்கக் கூடாது’’ என்றார் பரமேஸ்வரன்.

கதிர்காமநாதனது உள்ளம் வாடிச் சோர்ந்தது. மணிவண்ணனுக்கு பரமேஸ்வரனது குணம் தெரியும் இருப்பினும் கதிர்காமநாதனது கரைச்சலுக்காக அவனை அழைத்து வந்தான்.

‘‘தேவையான பொருட்களை மணிவண்ணனிடம் வாங்குங்கள் பயப்படாதீர்கள்’’ என்றார் பரமேஸ்வரன்.

**475. பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம்**
**சால மிகுத்துப் பெயின்.**

மிகவும் மெதுமையான மயிலிறகைத் தன்னும் அளவுக்கதிகமாக வண்டியில் ஏற்றினால் அதன் அச்சு முறியும்.

## ஆபத்து

‘‘முன்பு போல என்னால் முயற்சிகளில் ஈடுபட முடியவில்லை. நோய் அதிகரித்து விட்டதால் என்னால் எனது நிறுவனங்களை ஒழுங்காகக் கவனிக்க முடியவில்லை. தேவைக்கு அதிகமாக உழைப்பதும், தேவைக்கதிகமாக உண்பதும் நோயை உண்டாக்கும். தேவையிலும் பார்க்கக் குறைவாக உழைப்பதும் தேவையிலும் பார்க்கக் குறைவாக உண்பதும் நோயை உண்டுபண்ணும். எனவே அளவறிந்து செயலாற்றுவது தான் நோயைத் தவிர்ப்பதற்கான வழி. கடும் உழைப்பாளி உழைப்பில் கவனம் செலுத்துவதால் உண்ண மறக்கிறான். இது நோய்க்கு வித்தாகிறது. ‘‘கோடி கோடியாகப் பணத்தைச் சேர்த்தாலும் அதை அனுபவிக்க விதி இருத்தல் வேண்டும்’’ என்று சுவாமியார் அடிக்கடி சொல்வார். அதை நான் பின்பற்ற விரும்புகிறேன். அரச தொழில் பார்ப்போர் குறிப்பிட்ட வயதில் ஓய்வெடுக்கின்றனர். இப்பொழுது எனக்கு ஓய்வு பெறும் வயது. எனக்கு ஆண் பிள்ளைகள் இல்லை. அதனால் பொறுப்புக்களை ஒப்படைக்க ஆள் இல்லை. அதனால் எனது தொழிலைப் படிப்படியாகக் குறைக்க விரும்புகிறேன். தொழிலை விட்டு விட்டு சுவாமியாரோடு மடத்தில் இருக்கவே எனது மனம் விரும்புகிறது. நான் உச்சி வரை ஏறி விட்டேன் அதையும் கடந்து மேலே ஏறினால் அது எனது உயிருக்கு ஆபத்தாய் முடியும்’’ என்றான் மணிவண்ணன்.

பரமேஸ்வரன் யோசித்துப் பார்த்தார். மணிவண்ணன் கூறியது உண்மையெனப் புரிந்தது. தனக்கு எதிரே கண் மூடியபடி இருக்கும் சுவாமியாரின் முகத்தைப் பார்த்தார். அதில் ஒரு தெய்வீக ஒளி பிரகாசித்தது. அவருக்கு அருகில் அமர்ந்திருந்த தணிகாசலத்தைப் பார்த்தார். எதுவித சலனமோ கவலையோ அவரது முகத்தில் தென்படவில்லை; ‘‘மகிழ்ச்சியோடு இருப்பதுதான் வாழ்க்கை. பலர் மற்றவர்களைக் காட்டினும் பொருள் மிக்கவர்களாக இருக்க ஆசைப்பட்டு உள்ள மகிழ்ச்சியையும் தொலைத்து விடுகிறார்கள். ஒரு நாள் அவர் கோயிலுக்கு வந்த போது சுவாமியார் சொன்னார்; ‘‘அன்பானவர்களே வானத்தை

அண்ணாந்து பாருங்கள். எத்தனையாயிரம் பறவைகள் பறந்து கொண்டிருக்கின்றன. அவை விதைப்பதுமில்லை; அறுப்பதுமில்லை; சேமிப்பதுமில்லை, காடுகள் கரம்பைகள் குளக்கரைகள் ஆற்றங்கரைகளெல்லாம் படைக்கப்பட்டுள்ளன. அவை அவைக்காக மட்டுமல்ல உங்களுக்காகவும் தான். பறவைகள் தாம் உயிர் வாழ வேண்டுமென்பதற்காக உண்கின்றன. அதற்கு மேல் அவை ஆசைப்படாமையால் மகிழ்ச்சியாக வாழ்கின்றன. அதே போல நீங்களும் வாழப்பழகினால் நிம்மதியாக வாழ முடியும்'' தணிகாசலம் அப்படி வாழ்ந்தால் மகிழ்வுடன் வாழ்கிறார். அவர் முதல் நாள் கண்டபடியே இருக்கிறார். தோற்றத்திலோ உடை நடையிலோ எந்த வித்தியாசமும் இல்லை; ''ஆசைக்கேற்ப பொருளைத்தேடுவதல்ல வாழ்க்கை, தான் தேடும் பொருளுக்கேற்ப அமைத்துக் கொள்வதே வாழ்க்கையாகும்''. என்று தணிகாசலம் சொல்வது அவரது காதில் ஒலித்தது.

''என்ன யோசிக்கிறீர்கள்? பிறந்தது தொடக்கம் இறக்கும் வரைக்கும் பொருள் தேடுவது தான் வாழ்க்கையா? ஓய்வாக இருந்து சேர்த்த செல்வத்திற்கேற்ப வாழ்ந்து கொண்டு அறச் செயல்கள் செய்வது தான் வாழ்க்கை என்று பல பெரியவர்கள் எமக்கு உணர்த்தியுள்ளனர். இனிமேல் எனக்கு அனுப்பும் பொருட்கள் யாவற்றையும் நான் கதிர்காமநாதனிடம் கொடுக்கப் போகிறேன். எனது பெயரில் அவனுக்கு அனுப்புங்கள்'' என்ற மணிவண்ணன் கதிர்காமநாதனின் பக்கம் திரும்பிச் சொன்னான்; ''வாய்மை தான் வாழ்வு. தன் தேவைகளைக் குறைத்து அதற்கேற்ப வாழ்க்கை நடத்துவதனால் தான் பணக்காரனாக முடியும். நான் தேவைக்கதிகமாக உழைத்தமையால் எனது உடலும் மனமும் சோர்ந்து விட்டது. மரத்தின் உச்சிக் கொம்பு வரை ஏறியவன் அதையும் கடந்து மேலே ஏற முயன்றால் அது அவனுடைய உயிருக்கு ஆபத்தாய் முடியும். அந்த நிலையில் தான் நான் இருக்கிறேன். கடன் எனது பொறுப்பு என்று நினைக்காதே. அப்படி நினைத்தால் பஞ்சாட்சரத்திற்கும் உனக்கும் வித்தியாசமில்லாது போய்விடும். தான் வாழ்வது மட்டுமல்ல ஒருவனது கடமை, பிறரை வாழ்விப்பதும் அவனது கடமையாகும். எனவே கவனமாகத் தொழிலைச் செய்'' என்றான் மணிவண்ணன்.

கதிர்காமநாதன் நன்றிப் பெருக்குடன் மணிவண்ணனைப் பார்த்தான். அவனால் சில கணங்கள் பேசமுடியவில்லை; ''துன்பப்பட்டவனைக் கண்டு இரங்கி அன்பு செலுத்தி உதவி செய்பவர்கள் கடவுளுக்கு விருப்பமுள்ளவர்களாவார்கள் என்று பெரியவர்கள் கூறக் கேட்டுள்ளேன். ஆனால் நான் அப்படிச் சொல்ல மாட்டேன். அவர்கள் தான் கடவுள் என்று சொல்வேன்'' என்று கண்கலங்கினான் கதிர்காமநாதன்.

**476. நுனிக்கொம்பர் ஏறினார் அ∴துஇறந்து ஊக்கின்
உயிர்க்குஇறுதி யாகி விடும்.**

ஒரு மரத்தின் நுனிக் கொம்பில் ஏறியவர், மேலும் ஏற முனைந்தால் அவருடைய உயிருக்கு அது ஆபத்தாக முடியும்.

**உதவும் முறை**

தணிகாசலம் சாய்வு நாற்காலியில் படுத்திருந்தார். நேரம் ஐந்து மணியென மணி அடித்துக் கடிகாரம் சொன்னது. நம்பிக்கையில்லாமையால் அதைத் திரும்பிப் பார்த்தார். மணி ஐந்துதான். அவருக்குச் சிரிப்பு வந்தது. உடல் பலவீனப்பட்டால் நம்பிக்கை உள்ளவர்களையும் மனம் சந்தேகப்பட வைக்கும்.

நான்கு மணிக்கு இராமநாதன் காணிப்பிரச்சினை சம்பந்தமாக வரச் சொன்னான். அவனது காணிப்பிரச்சினை யொன்று பத்து வருடங்களாக நீதி கோரி நீதி மன்றத்தில் ஏங்கி நிற்கிறது. ஏகாம்பரமும் அவனும் நீதிமன்றத்திற்குச் சென்றும், நீதி மான்களுக்கு பணமும் கொடுத்துக் களைத்து விட்டார்கள். அதனால் ஊர் நீதிவானான தணிகாசலத்தின் உதவியை அவர்கள் இருவரும் நாடினர். முன்பு அவர் அவர்கள் இருவரையும் வலியச் சென்று சமதானமாகச் செல்லுமாறு கூறியும் அவர்கள் கேட்கவில்லை. தற்பொழுது இராமநாதனின் மகளுக்குத் திருமணம் பேசப்படுகிறது. அந்தக் காணியை விற்றுத் தான் பணங் கொடுக்க வேண்டும். அதனால் அவசரப்பட்டான் இராமநாதன். அந்த அவசரத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த ஏகாம்பரம் விரும்பினான். ஏகாம்பரம் மெல்ல எழும்ப முயற்சித்தார் தணிகாசலம். முடியவில்லை, ஐந்துமணிக்குப் பாடசாலையில் கூட்டம், ஏழுமணிக்கு கோயிலில் கூட்டம். அவற்றை நினைக்க அவருக்கு கவலையாக இருந்தது. காலையில் இருந்து உடல்லேசாகச் சுட்டது. நாரி கொதித்துக் கொண்டே இருந்தது. சாய்வு நாற்காலியால் எழுந்து; ''பிள்ளை, தலைவலிக்கிறது ஒரு கோப்பை கோப்பி தருவியா...?'' என்றார்.

''கொண்டு வாறன் அப்பா'' என்றாள் நாமகள்.

சிறிது நேரத்தில் கோப்பியுடன் வந்த நாமகள் கோப்பிக் கோப்பையை மேசை மீது வைத்து விட்டு அவரது நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். அது லேசாகச் சுட்டது.

''கொஞ்ச நாட்களுக்கு ஊர் வேலைகளை விட்டு விட்டு ஓய்வெடுங்கள். எல்லாப் பரிசோதனைகளும் செய்தாயிற்று. வருத்தம் எதுவும் இல்லை ஓய்வெடுத்தால் போதும்'' என்று கூறிய நாமகள் மேசையில் இருந்த கோப்பிக் கோப்பையை எடுத்துத் தணிகாசலத்தின் கையில் கொடுத்தாள். அப்பொழுது வாசலில்; ''அண்ணை'' என்று யாரோ அழைக்கும் சத்தம் கேட்டது.

''யாரது? உள்ளே வாருங்கள்....'' என்று தணிகாசலம் கூறி முடிக்கு முன் சிவபாதம் உள்ளே வந்தான். அவனது பிள்ளைகள் நால்வர் வெளிநாட்டில் வசிக்கின்றனர். அவர்கள் ஏராளமான பணத்தை அனுப்பிக் கொண்டிருந்தனர்.

''சொல்லு சிவா, நான் பாடசாலைக்குப் போக வேண்டும்'' என்றார் தணிகாசலம்.

''அண்ணை எனக்கோர் உதவி செய்ய வேண்டும்'' என்று கூறி விட்டு நிறுத்தினான் சிவபாதம்.

''சரி சொல்லு.... நாங்கள் கதைத்துக் கதைத்துப் பள்ளிக்கூடத்திற்குப் போவம்'' என்று எழுந்தார் தணிகாசலம்.

''எனக்கு அவசரமாய் இரண்டு இலட்சம் ரூபா தேவைப்படுகிறது...'

“இரண்டு இலட்சத்துக்கு நான் எங்கை போறது?”

“உங்களிட்டை இல்லாவிட்டால் யாரிடமாவது மாறித்தாருங்கோ?”

சிரித்தார் தணிகாசலம்; “மூன்று நான்கு பிள்ளைகள் வெளிநாடுகளிலை இருக்கு. நீயும் உழைக்கிறாய். தோட்டம் செய்யிற என்னட்டை கடன் கேட்டால்..” அவர் முடிக்கு முன் சிவபாதம் சொன்னான்; “யாரிடமாவது வாங்கித்தாருங்கோ..”

“பிள்ளைகள் நன்றாக அனுப்புவதாகக் கேள்விப்பட்டனான். போன கிழமையும் அஞ்சு இலட்சம் ரூபாய் மூத்தவன் அனுப்பியதாகச் சனம் கதைத்தது. அப்படி யென்ன செலவு உனக்கு? இஞ்சை நீயும் மனைவியும் தானே” என்றார் தணிகாசலம்.

“வீடு திருத்தினனான்; வீட்டுத் தளபாடங்கள் வாங்கினனான்; வீட்டோடை இருந்த காணி இரண்டு பரப்பு வாங்கினனான்; சாப்பாடுகள் அதுகள் இதுகளிலை செலவாய்ப் போயிட்டுது. நான் நாவலடிக் காணியைப் பொறுப்புக் கொடுத்து கனகசபாபதியிட்டை வட்டிக்கு இரண்டு இலட்சம் ரூபா வாங்கினனான். காலங்கடந்திட்டுது. அவன் சித்தாரிக்கப் போறானாம். நான் பிள்ளைகளுக்கு எழுத எங்களுக்குக் காணி பூமி யொன்றும் வேண்டாம். உங்களது சம்பளக்காசு சீவிக்கப் போதும். நாங்கள் அனுப்புற காசை கண்டபடி செலவு செய்ய வேண்டாம். நாங்கள் இங்கு கஷ்டப்பட்டுத்தான் உழைக்கிறம். என்ன செய்வது? பெற்றவர்கள் கேட்டதற்காக அனுப்புறம். வருவாய்க்கு மேலை செலவு செய்தால் நாங்கள் தூக்குத் தான் போட வேணுமென்கிறார்கள். அத்துடன் எமது வருவாய்க்குத் தக்கபடி நாம் வாழ்ந்து உங்களுக்கும் அனுப்ப முடியாது” என்று கடிதம் எழுதிவிட்டார்கள்” என்றான் சிவபாதம்.

“உண்மைதான் உனக்கேன் இப்ப காணி. குடியிருக்க நல்ல வீடும் போதிய நிலமும் இருக்கு. அப்படியிருக்க காணியை மீழாமல் ஏன் வாங்கினாய். நான் என்ன பெரும் வர்த்தகனா? இல்லைப் பணக்காரனா? தோட்டக்காரன் என்னுடைய வருமானத்திற்கேற்றபடி தான் செலவு செய்கிறேன். இது மருமகனின் வீடு. ஆடம்பரமாளிகையானாலும் அடுத்தவருடையது. நாளைக்கு நான் இந்த வீட்டை விட்டும் வெளியே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டாலும் ஏற்படும். பழைய வீட்டில் தான் எனக்கு இருக்க விருப்பம். மருமகனும் தகப்பனும் வற்புறுத்தியதால் வந்திருக்கிறேன். நான் பெரும் வர்த்தகனல்ல. மாடி வீட்டு ஏழை. என்ரை உழைப்புக் கேற்றளவு தான் நான் உதவி செய்ய முடியும். ஐந்நூறு ஆயிர மென்றால் பரவாயில்லை. இரண்டு இலட்ச ரூபாவுக்கு நான் எங்கே செல்வேன். எமது உழைப்புக்கேற்றளவு உதவியைத்தான் நான் செய்ய முடியும். அது தான் பொருளைப் போற்றி வாழும் முறை. கடன்படுவதாலும் அந்த முறையைத் தான் கைக் கொள்ளல் வேண்டும்” என்றார் தணிகாசலம்.

“அண்ணை ஒரு மாசத் தவணையில் திருப்பித் தந்து விடுகிறேன்” கெஞ்சினான் சிவபாதம்.

“நானென்ன உன்னிடம் நம்பிக் கையில்லாததாலா சொல்கிறேன். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. இவ்வளவு பணத்திற்குப் பொறுப்பு நிக்கவும் என்னால் முடியாது. வேண்டுமானால் கனகசபாபதிக்கு ஒரு மாதம் பொறுத்துக்

கொள்ளும்படி சொல்கிறேன்'' என்றார் தணிகாசலம். சிவபாதம் கவலையோடு எழுந்து சென்றான். தணிகாசலம் பாடசாலைக்குச் சென்று வேலாயுதபிள்ளையிடம் அதைச் சொன்னார்.

''நல்ல காலம் தப்பீட்டியள். அவனுக்கு உலகம் முழுக்கக் கடன். பிள்ளைகளும் இப்ப அனுப்புவதில்லை. தமது வருவாயை அறிந்து தான் செலவு செய்ய வேண்டும். பெற்றோருக்கும் உதவ வேண்டும் என்கிறார்களாம்'' என்றார் வேலாயுதபிள்ளை.

**477. ஆற்றின் அளவறிந்து ஈக; அதுபொருள்**
**போற்றி வழங்கும் நெறி.**

பிறருக்குக் கொடுக்கும் போது அளவு அறிந்து கொடுத்தல் வேண்டும்; அதுவே பொருளைப் போற்றி வாழும் வழியாகும்.

## *தீங்கில்லை*

கொழும்பில் உள்ள தொழிற்சாலையில் தனது வாடிக்கையாளர்களுடன் பேசிக் கொண்டிருந்தார் பரமேஸ்வரன். அக்கலந்துரையாடலுக்கு மணிவண்ணனுக்கு அழைப்பு அனுப்பியிருந்தும் அவன் வரவில்லை. அவனுக்காக கதிர்காமநாதன் வந்திருந்தான். அவனது வருகை பரமேஸ்வரனுக்குப் பிடிக்கவில்லை. முப்பது வருடங்களாக வாடிக்கையாளனாக இருந்து ஒவ்வொரு கலந்துரையாடல்களிலும் கலந்து கொண்ட மணிவண்ணன் வராதது பரமேஸ்வரனுக்குப் பெருங் கவலையைக் கொடுத்தது. தனது தொழிற்சாலை யொன்றின் கிளையை யாழ்ப்பாணத்தில் நிறுவி மணிவண்ணனின் பொறுப்பில் விட அவர் தீர்மானித்திருந்தார். அதைப்பற்றி மணிவண்ணனோடு கதைத்தும் இருந்தார்; ''ஐயா, நான் தேடியது போதும் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ விரும்புபவன் குறிப்பிட்ட வயதிற்குப் பிறகு ஓய்வாக இருக்கவே விரும்புவான். இளமையில் நான் எனது குடும்பத்தினருடன் கூடி இன்பம் அனுபவிக்கவில்லை. குதூகலமாக இருந்ததில்லை. வேலை; வேலை; பணம்; பணம்; என்று போய்ப் அலைந்து திரிந்தேன். எனக்கிருப்பது ஒரே ஒரு மகள். அவரும் மருத்துவக் கல்லூரியில் இருக்கிறாள். இனி உழைத்தது போதும். நிம்மதியாக வீட்டில் இருந்து குடும்பத்தை நேசிக்கப் போகிறேன். சமூகசேவை செய்யப் போகிறேன்; ஆத்மீக வாழ்வில் ஈடுபடப் போகிறேன். என்னைத் தயவு செய்து வற்புறுத்தாதீர்கள். எனது வியாபார நடவடிக்கைகளையும் படிப்படியாகக் குறைக்கப் போகிறேன்'' என்றான்.

கூட்டம் முடிவடைந்ததும் எல்லோரும் சென்று விட்டனர். கதிர்காமநாதன் பரமேஸ்வரனைச் சந்திப்பதற்காகத் தாமதித்து நின்றான். எல்லோரும் சென்ற பின்பு கதிர்காமநாதன் பரமேஸ்வரனின் அறைக்குள் வந்தான்.

''அமருங்கள்'' என்றார் பரமேஸ்வரன்.

''ஐயா, மணிவண்ணன் அண்ணா தொழிலைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டு வருகிறார். உங்களோடு உள்ள வியாபாரம் முழுவதையும் என்னைக் கவனிக்குமாறு கூறிவிட்டார். நான் முன்பை விட கூடுதலான இடங்களுக்குச் சென்று சிறு சிறு வியாபாரிகளை வாடிக்கையாளர்களாகத் தெரிந்

தெடுத்துள்ளேன். முன்பை விடக் கூடுதலான பொருட்கள் எனக்குத் தேவைப் படுகிறது. எனவே கூடுதலாகப் பொருட்களை அனுப்பி உதவி செய்யுங்கள். நான் மணிவண்ணனிடம் பொருட்களைப் பெற்று அவரிடம் கணக்கைத் தீர்கிறேன்''.

''ஆசனத்தில் அமர்ந்து கதையுங்கள்'' என்றார் பரமேஸ்வரன்.

''இல்லை ஐயா, கல்வி கற்பித்தவர்களையும் உதவி செய்பவர்களையும் மதித்தல் வேண்டும். அவர்களுக்குச் சமமாக உட்காரக்கூடாது. உங்களது பொருட்களை விற்கத் தொடங்கிய பின் நான் இலாபமடைந்து வருகிறேன். இன்னும் ஒரு சில வருடங்களில் பழைய நிலைக்கு வந்து விடுவேன்''.

''மிகவும் நல்லது. வருவாய் சிறிதாக இருந்தாலும் பரவாயில்லை செலவு அதிலும் குறைவாக இருந்தால் எந்த மனிதனும் விரைவில் பணக்காரனாகி விடுவான். எனவே இலாபம் அதிகம் வரவேண்டு மென்று நினைத்து நீதிக்குப் பிறம்பான செயல்களில் ஈடுபடக்கூடாது. மணிவண்ணன் மிகவும் நல்லவன்; ஒழுக்கமுள்ளவன்; நம்பிக்கைக்குப் பாத்திரமானவன். கடந்த முப்பது வருடங்களாக நேர்மையான ஒரு வாடிக்கையாளனாக எனக்கு இருக்கிறான். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவன் என்னை ஏமாற்றவில்லை. ஒரு முறை மற்றய முறைகளை விட பத்து மடங்கு பொருட்களை வாங்கி கப்பலில் ஏற்றிச் சென்ற போது கப்பல் தாண்டு விட்டது. நேர்மையான உழைப்பின் மூலம் அவன் எனது பணம் முழுவதையும் தந்து விட்டான். நான் சிறிய தொகையைத் திருப்பிக் கொடுத்தும் அவன் வாங்கவில்லை. அப்படியானதொரு வாடிக்கையாளனை இழப்பதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை'' கலங்கினார் பரமேஸ்வரன்.

''ஏன் ஐயா கலங்ககிறீர்கள். அவர் தொடர்ந்தும் உங்களிடம் பொருட்களைக் கொள்வனவு செய்வார். அவரின் பெயரில் தான் நான் வியாபாரஞ் செய்கிறேன். நீங்களாக அதை மாற்றித் தந்தாலும் நான் ஏற்கமாட்டன். மணிவண்ணன் கடவுளைப் போன்றவர். அவர் நான் முதன் முதலாகப் பொருட்களைப் பெறும் போது சொன்னவர்; ''கதிர்காமு எவ்வளவு வசதியுள்ளவனாக வாழ்ந்தாலும் ஆடம்பரமாகவும், தேவையில்லாத செலவுகள் செய்பவனாகவும் வாழக்கூடாது. ஒவ்வொரு சதத்தையும் தேவையை அறிந்து தான் செலவு செய்தல் வேண்டும். தேவையில்லாத செலவு சிறிய தொகையாக இருந்தாலும் அது நாளடைவில் எமது வாழ்வைக் கெடுத்து விடும்'' என்றவர். அதனால் நான் மிகவும் சிக்கனமாக வாழ்கிறேன். எனது வருவாயிலும் பார்க்கக் குறைவாகவே நான் செலவு செய்கிறேன். அதனால் நான் இழந்த பொருட்களில் ஒரு பகுதியைத் தேடி விட்டேன்'' என்றான் கதிர்காமநாதன்.

''எப்பொழுதும் உன்மீது எனக்கு அன்பிருக்கும். மணிவண்ணன் தீயவர்களோடு நட்புக் கொள்ள மாட்டான். அவனது நண்பனையும் நான் அவனைப் போலவே விசுவாசிப்பேன்'' என்றார் பரமேஸ்வரன்.

**478. ஆகுஆறு அளவுஇட்டிது ஆயினும் கேடுஇல்லை
போகுஆறு அகலாக் கடை.**

உழைப்பால் வரும் வருமானம் சிறிதாக இருந்தாலும், செலவு செய்யும் வழி பெரிதாக இல்லாவிட்டால் தீங்கு இல்லை.

### *இருப்பது போல மறையும்*

‘‘மிகவும் நன்றி ஐயா, மணிவண்ணனோடு என்னைத் தொடர்பு படுத்தி வைத்த தணிகாசலம் அண்ணையை எமது ஊர்மக்கள் நடமாடும் தெய்வமாகத் தான் போற்றுகின்றனர். நான் தொழில் செய்யும் போது அவருடன் பெரிதாகத் தொடர்பு கொண்டதில்லை. அத்துடன் சிலர் புகழையும் மதிப்பையும் பெறுவதற்காகவும் தனது காரியங்களைப் பார்ப்பதற்காகவும் பொதுத் தொண்டுகள் செய்வது போல நடிப்பார்கள். தணிகாசலம் அண்ணையும் அப்படித்தான் என்று தான் நினைத்தேன். நான் பஞ்சாட்சரத்துடன் பங்காகத் தொழிலை ஆரம்பிக்கப் போவதை அறிந்த தணிகாசலம் அண்ணை என்னைத் தேடி வந்து சொன்னார்; ‘‘தம்பி ஒரு தொழிலை ஆரம்பிக்கும் போது அவனுக்கு உற்சாகமளித்து அவனை வாழ்த்த வேண்டும். நீ புதிதாகத் தொழிலைத் தொடங்கப் போவதாக அறிந்தேன். தொழிலுக்கு முதல் தேவையில்லை. அத்தொழிலைப் பற்றிய அனுபவமும், நல்ல மனிதரின் நட்பும் தான் தேவை. உனக்குத் தொடங்கப் போகும் தொழிலில் அனுபவமில்லை. அத்துடன் நீ சேர்பவன் ஒழுக்கமானவனில்லை. யோசித்துச் செய்’’ என்றார். அதன் பின்பு எனது தகப்பனார் சொன்னார்; ‘‘தம்பீ தனது வருவாயின் அளவினை அறிந்து செலவு செய்யாதவனுடைய வாழ்க்கை பகட்டாக இருந்தாலும் காலப் போக்கில் அழிந்து விடும். பஞ்சாட்சரம் பல தொழில்களைச் செய்கிறான். ஊரெல்லாம் கடன்பட்டுத்தான் தொழில் செய்கிறான். அத்துடன் மோட்டார் வண்டிகள் பல உண்டு. எந்நேரமும் பல இலட்சரூபா பெறுமதியான தங்க நகைகளை அணிந்திருப்பான். அவனுடன் கூட பல நண்பர்கள் இருப்பார்கள். தேவையில்லாத செலவுகளைப் புகழுக்காகச் செய்பவன். அவனிடம் பெரும் முதல் இல்லை. வசதியுள்ளவர்களைக் கவர்வதற்காக வேடம் போடுகிறான். அவனது வேடத்தை நம்பி அவனுடன் சேர்ந்து வியாபாரஞ் செய்த பலர் அழிந்துள்ளனர். அப்படியிருக்க இந்த வியாபாரம் உனக்குத் தேவை தானா’’ என்று கேட்டவர் நான் தான் பிழை விட்டு விட்டேன்’’ பெருமூச்சு விட்டான் கதிர்காமநாதன்.

‘‘நானும் பலரின் பகட்டுத் தோற்றத்தை நம்பி ஏமாந்து விட்டேன். கண்டியைச் சேர்ந்த பாண்டியன் என்ற ஒரு வியபாரி என்னை ஏமாற்றி விட்டான். பெருந்தொகையாக நான் அவனிடம் ஏமாராவிட்டாலும் அவ்வூர் மக்கள் பலர் ஏமாந்து விட்டனர். அவன் கெட்டழிந்ததற்குக் காரணம் அவன் தனது வருவாயின் அளவு அறிந்து செலவ செய்யாமையே ஆகும். அந்த வாழ்க்கை பேரின்பமுள்ளதாகத் தோன்றும். அப்படிப் பழக்கப்பட்டவன் பின் திருந்த மாட்டான்’’ என்றார் பரமேஸ்வரன்.

‘‘ஐயா அறிவாளிகள் எதன் மீதும் ஆசை கொள்வதில்லை. இன்பங்கள் வந்த போதும் தடுமாறுவதும் இல்லை சுகமோ துக்கமோ எது வந்தாலும் கலங்குவதும் இல்லை. அதனால் அவர்கள் மனித மனங்களை மட்டும் தான் மதிக்கிறார்கள். பொருளுக்கு ஆசைப்பட்டு தீயவழிகளில் இலட்சக்கணக்காகச் சம்பாதிப்பதை விட நீதியான முறையில் ஒரு சில ரூபாக்களைச் சம்பாதித்து அதற்கேற்பச் சிக்கனமாக வாழ்வதையே மணிவண்ணனும் தணிகாசலமண்ணையும் விரும்புகின்றனர். எனக்கு மணிவண்ணனைத் தெரியாது நான் நட்டமடைந்ததும் தணிகாசலமண்ணையிடஞ் சென்றேன். நான் எதுவும் கதைக்கவில்லை. எனது முகத்தில் படர்ந்திருந்த ரேகைகள் மூலம் சகலவற்றையும் அறிந்து கொண்ட தணிகாசலம் அண்ணை சொன்னார்; ‘‘நீ நட்டமடைவாய் என்று தெரிந்து தான்

நான் உன்னிடம் வந்து புத்திமதிகள் சொன்னேன். இவ்வளவு கெதியாய் நட்டமடைவாயென நான் எதிர்பார்க்கவில்லை'' என்றார். அதன் பின் தொழில் செய்ய உதவுமாறு வேண்டினேன்''.

''உனது தந்தையார் எனக்குப் பல உதவிகளைச் செய்தவர். அவர் வியாபாரஞ் செய்யுங் காலத்தில் அவருக்கு நான் நிறையக் கடமைப்பட்டுள்ளேன். அதற்காகத் தான் உனக்குப் புத்திமதிகள் கூறினேன். நீ கேட்கவில்லை. இருப்பினும் உனக்கு நான் உதவி செய்ய வேண்டும். தயவு செய்து நான் சொல்வதைக் கேள். நன்கு ஆராயாமல் எவரையும் நம்பாதே. நாம் நல்லாய் இருந்தால் நல்லவர்களை விடக் கெட்டவர்கள் தான் எம்மை வந்தடைவார்கள். அதனால் வருமானம் வரும் போது அவதானமாக இருத்தல் வேண்டும். வருவாய்க்கு அதிகமாகச் செலவு செய்யக்கூடாது. ஆடம்பர வாழ்வு அழிவில் தான் முடிவடையும். படிப்பதை விட அனுபவம் தான் எமக்குச் சிறந்த கல்வியை ஊட்டும். எனவே அனுபவப்பட்ட நீ இனிமேல் தவறு செய்யமாட்டாய் என்பதால் தான் நான் உனக்கு உதவி செய்ய முன் வந்துள்ளேன்'' என்றார். அவர் உங்களது சம்மந்தி. எனவே அவருக்கு இழுக்கு ஏற்படும் படி நான் நடக்க மாட்டேன்'' என்றான் கதிர்காமநாதன். அவனது குரல் கரகரத்தது. கண்கள் கலங்கின.

**479. அளவுஅறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்.**

வருமானத்தின் அளவு அறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை, வளங்கள் பல இருப்பது போலத் தோன்றினாலும் இல்லாமல் அழிந்து விடும்.

அழியும் சொத்து

கதிர்காமநாதன் பரமேஸ்வரனிடம் விடை பெற்றுக் கொண்டு ஊர் திரும்பினான். அவன் தனது வீட்டுக்குச் செல்லாது மணிவண்ணனது வீட்டுக்குச் சென்றான். மணிவண்ணனது வீட்டில் தணிகாசலமும் வேலாயுதபிள்ளையும் ஏரம்பமூர்த்தியும் இருந்தனர். ஏரம்பமூர்த்தி மிகவும் நல்லவர். ஆசிரியராக கணபதி மத்திய மகாவித்தியாலயத்தில் கற்பித்து ஓய்வு பெற்றவர். அவருக்குப் பிள்ளைகள் இல்லை. நல்ல ஆசிரியர். அவர் தங்கியிருக்கும் வீட்டைத் தவிர அவரிடம் சொத்துக்கள் எவையுமில்லை. தனக்குப் பிற்காலத்தில் தேவையேற்படுமென அவர் சேமித்தும் வைத்ததில்லை யார் எதைக் கேட்டாலும் இல்லை என்று கூறாது உடனே கொடுத்து விடுவார். இழகிய மனங் கொண்ட அவரை, அவ்வூரில் உள்ள சிலர் ஏமாற்றி வாழ்க்கை நடத்தி வந்தனர். அவரின் வீட்டிற்கு அடுத்த வீட்டில் வாழ்பவன் கணேசகுமார். அவனுக்கு மூன்று பிள்ளைகள். அவனது மூன்று பிள்ளைகளும் ஏரம்பமூர்த்தியின் வீட்டிலேயே எந்நேரமும் இருப்பார்கள். அங்கேயே படித்து விட்டு உறங்கியும் விடுவார்கள். இரவு பத்துமணிக்கு கணேசகுமார் அவரது வீட்டுக்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்ல வருவான். அவர்கள் அங்கு நித்திரையாக இருப்பார்கள்; ''வாத்தியார் எமக்கெல்லாம் கடவுள் போன்றவர். எனது பிள்ளைகளின் குரு. அவரின் வழிகாட்டலில் தான் வளர வேண்டும். அவர்கள் படுக்கட்டும்'' என்பான். மறு நாள் காலையில் அவர்கள் எழுந்ததும் ஏரம்பமூர்த்தி ஆசிரியரின் மனைவி

அவர்களுக்கு உணவு கொடுப்பாள். அவர்கள் உண்டு விட்டுப் பாடசாலைக்குச் செல்வார்கள். பின்பு பாடசாலை விட்டதும் அங்கு வந்து விடுவார்கள்.

கணேசகுமாரைப் போல பலர் ஏரம்பமூர்த்தி ஆசிரியரை நம்பி வாழ்ந்து வந்தனர். அவர்களது தேவைகளையெல்லாம் அவர் நிறைவு செய்து வந்தார். இதனால் அவருக்கு எப்பொழுதும் பணத்தட்டுப்பாடு இருக்கும். அன்று மனைவி சுகவீனமுற்றதால் ஆஸ்பத்திரியில் அனுமதித்து விட்டு மணிவண்ணனிடம் பணம் கடனாகப் பெறுவதற்காக வந்திருந்தார்.

கதிர்காமநாதன் பரமேஸ்வரன் கொடுத்தனுப்பிய கடிதத்தையும் பொருட்களையும் கொடுத்து விட்டுச் சொன்னான்; ‘‘பரமேஸ்வரன் ஐயா உங்களில் நிறைய நம்பிக்கை வைத்திருக்கிறார். அவர் எனது தொழில் சிறக்கப் பல புத்திமதிகள் கூறினார்; ‘‘தன்னிடம் உள்ள பொருளின் அளவை ஆராயமல் மற்றவர்களுக்குக் கொடுத்து உதவும் கொடைவள்ளலின் பொருளும் விரைவில் அழிந்து விடும் என்றார். அதனால் உனது வருமானத்திற்கு ஏற்றபடி செலவு செய். வருமானத்திலும் பார்க்கக் கூடுதலாகச் செலவு செய்தால் மானம் இழந்து மதி கெட்டு சென்ற இடமெல்லாம் இடர் பட்டுத் திருடன் என்ற பெயரையும் பெறுவாய் என்றார். நான் முன்பு ஆராயமல் செலவு செய்து விட்டேன். நல்லவர்கள் யார் கெட்டவர்கள் யார் என்று தெரியாமல் உதவி செய்தமையால் தான் எனது சொத்து அழிந்தது நல்ல வேளை என்னைக் காப்பாற்றிக் கரை சேர்த்து விட்டீர்கள். அதை நான் மறக்க மாட்டன் என்றான்.

அதைத் தனக்காகத்தான் கதிர்காமநாதன் கூறுகிறான் என ஏரம்பமூர்த்தி நினைத்தார். ஏரம்பமூர்த்தியின் மைத்துனன் கதிர்காமநாதன். அதை அவன் அவருக்காகத் தான் கூறினான்.

மணிவண்ணன் ஏரம்பமூர்த்தி கேட்ட பணத்தைக் கொண்டு வந்து கொடுத்து விட்டுச் சொன்னான்; ‘‘வாத்தியார் நீங்கள் நிறையக் கற்றனீங்கள். நல்ல ஆசிரியர். ஓய்வெடுத்த பின்பும் மாணவர்களின் நன்மை கருதிக் கற்பிக்கிறீர்கள். நான் எதுவும் சொல்லக் கூடாது. சொல்லினால் புண்ணியங் குறையும் என்பார்கள். புண்ணியம் செய்பவனை தடுப்பதும் பாவம். ஆனால் நீங்கள் தகாத பலருக்குத் தானம் சொல்கிறீர்கள். நீங்கள் அப்படிக் கொடுப்பதால் புண்ணியம் வராது, பாவம் தான் வரும். பலர் உங்களிடம் பெற்ற பணத்தைத் தீயவழியில் செலவு செய்கிறார்கள். கணேசகுமார் உங்களுக்கு வட்டிக்குப் பணம் தருகிறான். தன்னிடம் உள்ள பொருளின் அளவை ஆராயமல் ஏழைகளுக்குக் கொடுக்கும் உபகாரியின் சொத்து விரைவில் அழிந்து விடும் என்று பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். தற்பொழுது உங்கள் மனைவிக்கு ஏற்பட்ட நோயைப் போல உங்களுக்கும் உண்டானால் செலவிற்கு என்ன செய்வீர்கள்’’ என்றான் மணிவண்ணன்.

ஏரம்மூர்த்தி சில கணங்கள் பேசாமலிருந்தார். அவரது மனம் சில கணம் விறைத்தது. பின்; ‘‘உண்மை தான் நான் இவற்றை யோசித்தாலும் செயற்பட முடியவில்லை. இனி அப்படி நடக்கத் தெண்டிக்கிறேன்’’ என்று கூறி விட்டு எழுந்து நடந்தார்.

**480. உளவரை தூக்காத ஒப்புரவு ஆண்மை**
**வளவரை வல்லைக் கெடும்.**

தன்னிடமுள்ள பொருளின் அளவை அறியாமல், மற்றவர்களுக்குக் கொடுப்பதால் ஒருவனது செல்வம் விரைவில் அழிந்து விடும்.